நீதிமுரசு '92

NEETHI MURASU

LAW STUDENTS' THAMIL MANTRAM, SRI LANKA LAW COLLEGE

Law Students' Tamil Mantram

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்,
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

... பாரதி ...

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு !"

நீதி முரசு '92

NAGURUNATHAN, M. A.
Attorney - at - Law
Justice of the Peace (All Islands)
23, Moor Road, Wellwatte,
COLOMBO - 6.
27/6/

படையல்

அன்னை தமிழே ! அவனி முதற்செல்வி !
கன்னி மகளாய்க் களைகொள் கலைத்தேவி !
உன்னினிய கைகோர்த்தோர் ஊழியுண வானாலும்,
புண்ணியம்நீ செய்ததனாற் புத்துயிர்த்துப் பொலிகின்றாய் -
மன்னவரின் மாளிகையில் மாண்புடனே வாழ்ந்தவளே !
விண்ணொளிரும் சூரியனை விரிமுகில்கள் மூடியபோற்
பண்ணிடினும், அவைவிலக்கிப் பகலெறிப்பாய் பணிவுடனுன்
வண்ணஎழிற் பாதத்தே வைக்கின்றோம் இம்முரசை.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
இ. துரைராசசிங்கம்
25203

ஆண்டு மலர் மலர் : 29 ... 1992

"எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே !"

இலங்கைச் சட்டக் கல்லூரி,
... ஹல்கீப்ஸ்டோஃப் வீதி,
கொழும்பு - 12.

Sri Lanka Law College
244, Hulftsdorp Street
Colombo - 12.

" ஏங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு ! "

நீதி முரசு '92



மலராசிரியர் :

இ. துரைராசசிங்கம்

ஆண்டு மலர் ★ மலர் : 29 ★ வெளியீடு : 06 - 09 1992

" எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே ! "

இலங்கைச் சட்டக் கல்லூரி,
244, ஹல்ஃப்ஸ்டோஃப் வீதி,
கொழும்பு – 12.

Sri Lanka Law College,
244, Hulftsdorp Street,
Colombo – 12.

18)	Taxation and the professionals	- Mr. P. Karalasingam
19)	மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்க ஐ. நா. வின் பாதுகாப்பு அவசியம்	—திரு. கண. சுபாஷ் சந்திரபோஸ்
20)	The legality of mixed marriages between muslims and non muslims	- Mr. T. C. Rajaratnam
21)	பிரித்தானியக் கம்பனிச் சட்டத்தில் பங்குகளும் வகுப்புரிமை மீறலும்	—சின்னத்துரை மயூரன்
22)	அசைவற்ற ஆதனமொன்றை வாங்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.	—திரு. எம். கிருஷ்ணபிள்ளை
23)	Human Rights or Fundamental Rights	—Mr. S. B. C. Halaldeen
24)	தாயின் கருப்பையிலுள்ள சேய்	—திரு. ஜீ. எம். சிவபாதம்
★	வெற்றிப்பதக்கம் பெற்றோர் (புகைப்படம்)	
25)	மனித உரிமைகள் சட்டமும் மனித நேயச் சட்டமும்	—செல்வி: வாசுகி நடராஜா
26)	தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும் (சிறுகதை)	—பெ. இராஜதுரை
★	The unassisted contract of minors in Shri Lanka	—Mrs. P. I. Samarasingha
27)	An Interview on matters relating to Labour Law	—Mr. V. C. Motilal Nehru (P. C.)
28)	வியாபாரத்தில் புலமைச் சொத்துரிமைகளை மீறுதலும், நேர்மையற்ற போட்டிகளும்	—திரு. கந்தையா நீலகண்டன்
★	The Rights and Duties of Illegitimate child	—Miss. Sharmila Gunanathan
★	எமது நிறைவணி	
29)	எதிர்காலம் (கவிதை)	—செல்வி: றுமைஷா தாஹிர்
30)	மனித உரிமைகளை அங்கீகரிக்கும் நாடுகளிலேயே 'சட்ட ஆட்சி' நிலவுகின்றது.	—திரு. கே. ஜீ. ஜோண்
★	வாழையடி வாழையென	
★	The annual report of the Thamil Mantram	
★	இந்து மகாசபை (புகைப்படம்)	
★	இந்து மகாசபை ஆண்டறிக்கை	
★	முஸ்லிம் மஜ்லிஸ் ஆண்டறிக்கை	
★	அகல் வாயில்	

உள்ளீடு

★ தலைவாசல் —தலைவர், மைக்கல் ஜோசன்

★ Message from the Chief Justice – Honourable, G P.S de Silva

★ Message from the Attorney General Honourable, Tilak Marapana (P.C.)

★ பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி —உயர்திரு: நீதியரசர், வி. இராமநாதன்

★ Message from our Principal - Mr. W. Laduwahetty

★ நுழைவாயில்

★ வாழியவே !

★ சட்டமாணவர் தமிழ்மன்றச்செயற் குழு '92 (புகைப்படம்)

1) உரோம டச்சுச் சட்டத்தில் உடைமை நிவாரணம் —மேல் நீதிமன்ற நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரன்

2) The Impact of 'Nandasena Vs The Republic' —Mr. G. L. M. De Silva

3) சட்ட உதவி ஆணைக்குழு —ஏ. எம். மொஹமட் ரஹீம்

4) இங்கிலாந்து குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் செயற்பாட்டு அமைப்பு முறை —திரு. எம். மார்க்கண்டன்

5) Child's Consent to contraception after 'Gillick' —Honourable, Ameer Ismail

6) நீதிமுறைக் கவனம் செல்வி: சந்திரகி சிவதாசன்

7) நிர்வாகச் சட்டம் – தோற்றமும் வளர்ச்சியும் —திரு. ஜே. எம். சுவாமிநாதன்

8) Cheques and Notice of dishonour —Mr. V. Ratnasabapathy

9) சாய்ந்துகொள்ள ஒரு தோள் வேண்டும் (கவிதை) —செல்வி: விஜித்தா சண்முகராஜா

10) முதலாளி தொழிலாளி உறவை ஓர் ஒப்பந்தம் கட்டுப்படுத்துமா? - திரு. எம். சி. எம். சலீம்

11) An Interview with former Attorney General —Mr. Sunil de Silva (P. C.)

12) அடிப்படை உரிமையும் அரசியல் யாப்பும் —கி. துரைராசசிங்கம்

13) கொலையும், குற்றத்திற்கிடமான மனித உயிர்போக்கலும் —செல்வி: பாஹிமா தாஹா

14) The Rights of man Swami Vipulananda

★ விவாத அணி (புகைப்படம்)

★ செயலாளரின் ஆண்டறிக்கை 1992

15) சட்டத்தால் என்ன பயன்? —கா. மகாலிங்கசிவம்

16) Appartment ownership Law —Mr. A. B. W. Jayasekera

17) முரண்வாதத் தடை —செல்வி: சுபோஜனா பாலசுப்பிரமணியம்

தலைவாசல்

தவழ்ந்தும், நடந்தும், உருண்டும், ஓடியும் ஓராண்டு காலத்தை நிறைவு செய்துவிட்ட நிம்மதியோடு மன்றத்தின் தலைவாசலிலே நின்று, நிகழ்ந்தவற்றை யெல்லாம் நிமிர்ந்து பார்க்கின்றேன்.

மன்றமொன்றின் வரலாற்றில் நாற்பத்து மூன்று ஆண்டுகள் என்பது, ஒரு வரலாற்றுப் பாகமேயாகும்-இத்தகு சிறப்பினைக் கொண்ட சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் நாற் பத்து மூன்றாவது செயற்குழுவாய்ச் செயற்படக் கிடைத்த பாக்கியத்தையொட்டி; நானும், எனது செயற்குழுவினரும் பெருமகிழ்வடைகின்றோம்.

இவ்வாண்டின் 'கால்கோள்' விழாவின்போது பல்வேறு திட்டங்களை முன்வைத்த எனது செயற்குழு, அவற்றை நிறைவு செய்வதில் அக்கறையுடன் ஈடுபட்டது. போட்டி களை நடாத்தும் போதெல்லாம், 'போட்டியாளர்களுடன் எவ்விதத்திலும் அறிமுகமில்லா தவர்களை நடுவர்களாக வரவழைப்பதென்பது' எமக்கு மிகவும் சிரமத்தைக் கொடுத்த ஏற்பாடாகும்.

எனினும், தமிழ்த் தாயின் நல்லாசியால் அவ்விடயத்தைத் திட்டமிட்டபடியே செய்து முடித்தோம் – இதனால், போட்டியாளர்கள் முணு முணுப்பின்றியே முடிவுகளை ஏற்றுக் கொண்டார்கள். செயலாளரின் ஆண்டறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ள சகல அடைவு களையும் எய்துவதற்குப் பல வழிகளிலும் உதவிய சகலருக்கும் எனது நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

எமது, முயற்சிகளின் முத்தாய்ப்பாய் அமைவன 'நீதிமுரசு வெளியீடும் - கலைவிழா வுமாகும். பலரும் பாராட்டும் வகையில் அமைந்த இவ்விரு நிகழ்ச்சிகளையும் சிறப்புற நடாத்திமுடிக்க உதவிய அனைவருக்கும் எனது நன்றிகள்.

எமது, நீதிமுரசுக்கு ஆசிச்செய்திகள் வழங்கிய பெரியோர்கள், எமது மன்றத்தின் எல்லா நடவடிக்கைகட்கும் பல்வேறு வழிகளிலும் உதவிய, அதிபர், விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், விளம்பரதாரர்கள், தனவந்தர்கள் ஆகியோருக்கும்;மன்றத்தின் சகல உறுப்பினர்கட்கும் சட்டமாணவர் தமிழ்மன்றத்தின் மனப்பூர்வமான நன்றிகளைச் சமர்ப் பிக்கின்றேன்.

சட்டமாணவர் தமிழ்மன்றம் என்றும் குன்றாப் பொலிவோடு தொடர்ந்தும் நடை போட தமிழ்த்தாயின் நற்கருணை என்றும் பொழிவதாக.

நன்றி

மைக்கல் ஜோன்சன்
தலைவர்

Message for the Neethi Murasu

I consider it a privilege to send this message to the "Neethi Murasu" published by the Law Students' Thamil Mantram for the past several years. I find that the magazine contains a variety of articles on subjects which are of interest to practitioners and students alike. The only suggestion that I would like to make is that a summary of some of these articles be published in English so that it would be of benefit to a larger number of students.

The publication of a magazine of this kind involves much time and hard work. The office bearers of the Society deserve to be warmly congratulated on their praiseworthy efforts

G. P. S. de SILVA
Chief Justice.

Message for the Neethi Murasu

I am very happy to send this message to "NEETHI MURASU" the Magazine published by the Law Students' Thamil Mantram.

Anything that is intended to be read should be easily understood and be interesting. If it is to be nuderstood only by learned men the publication would not be helpful to impart knowledge to the less fortunate. If it is interesting only to the specialist the publieation would be nothing but an ornament for many

I have not had the privilege of perusing the contents of this publication and as a good portion of it is in the Tamil language I would in any event not be able to read nor understand much of it. But I hope the magazine meets with the criteria that I have set out above

I wish the publication all success.

Tilak Marapana
(Attorney General)

பிரதம விருந்தினரின் வாழ்த்து

நீதிமுரசு அதன் 29வது மலராக இன்று வெளிவந்துள்ளது. இதன் மலராசிரியரையும் அவர்தம் குழுவினரையும் பாராட்ட விரும்புகின்றேன். தமிழ் மன்றம் அதன் அயராத உழைப்பின் பயனாக வெளியிட்டு வைக்கும் இந்த மலர் உண்மையில் பாராட்டப்படுவதற்குரியதே.

இந்த மலரில் பிரபல்யம் வாய்ந்த பல சட்டத்தரணிகளின் கருத்தாழம் மிக்க கட்டுரைகள் காணப்படுகின்றன. இவை மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் மிகவும் பிரயோசனமானவையாக இருக்கும் என நம்புகின்றேன். அனைவரும் விரும்பிப் படிக்கும் பல அம்சங்கள் இதில் அடங்கியுள்ளன.

தமிழ் மன்றம் தொடர்ந்தும் அதன் பணியைச் செவ்வனே செய்து வெற்றிப்பாதையில் முன்னேறிச் செல்ல என் ஆசிகள் என்றும் உரித்தாகட்டும்.

ப. இராமநாதன்
Master of the Bench
of Grays Inn

Judge's Chambers,
Supreme Court,
Colombo–12.

Message for the Neethi Murasu

I am happy to send this message to be published in the 29th issue of 'Neethi Murasu' which is a publication of the Law Students' Thamil Mantram.

The primary focus of the activities of the Mantram is in promoting the language and cultural interests of its members An attempt has also been made to teach the Tamil Language to non Tamil Students. This is most laudable. particularly at a time when practising Attorneys-at-Law are having Tamil Language classes for non Tamil Attorneys while Tamil Attorneys are also learning the Sinhala Language at Law College. Thus the need to be trilingual is being increasingly realised in todays context.

The contribution made by the student shoud also help them to develop their writing skills and make them realise the importance of reading outside the immediate focus of their studies.

I wish the Tamil Mantram all success in their endeavours.

Walter Laduwahetty,
Principal,
Sri Lanka Law College.

நுழைவாயில்

வணக்கம்,... வாருங்கள்,

நீதிமுரசு மலரின் இதழ்களைப் பிரிக்கப் போகின்றீர்கள்-இது ஒரு மக்கள் இலக்கிய மலரல்ல, கடினம் மிக்க சட்டத்தின் சில காட்சி வடிவமைப்புகளின் தொகுப்பு-அறிவுத் துறைசார்ந்த, நுணுக்கங்கள் நிறைந்த இயல்பினைக் கொண்டதென்றாலும்; கட்டுரை யாளர்கள் கட்டுக்கோப்பின் முழுமை குலையாது ,இலகுபடுத்தித் தந்துள்ளார்கள்.

முப்பது ஆக்கங்களோடு இம் முரசு பொலிகின்றது.

இருபது தமிழ்மொழி ஆக்கங்களும், பத்து ஆங்கில ஆக்கங்களும் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. இரண்டு கவிதைகள், ஒரு சிறுகதை, இரு நேர்முகங்கள்போக – இருபத்தைந்து கட்டுரைகள் இங்குள்ளன. இரண்டு நீதியரசர்கள், ஆறு விரிவுரையா ளர்கள், ஏழு சட்டத்தரணிகள், பன்னிரண்டு மாணவர்கள் என்போர் ஆக்கங்களை ஆக்கி யுள்ளனர்—

விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டை யொட்டி அவரால் எழுதப்பட்டுப் பிரசுர மாகிய கட்டுரையொன்றை மீள்பதிப்புச் செய்துள்ளோம்.

தவறுகள், பிழைகள் இருக்கலாம், ''சிறியோர் செய்யும் சிறுபிழையெல்லாம் பெரி யோராயிற் பொறுத்தல் கடனே'' என்பதற்கிணங்க அவற்றைப் பொருட்படுத்தமாட் டீர்கள் என்பது எமது நம்பிக்கை.

நல்லது, உள்ளே செல்லுங்கள். அகல்வாயிலில் மீண்டும் சந்திக்கின்றேன்.

நன்றி

—மலராசிரியர்

வாழியவே!

எங்கள் தமிழ் மன்றம்,
இனிதாக, புகழ்வீச, நிறைவாக வாழியவே !

குறளொடு, காப்பியம், தொகை எட்டும்
திருமுறை, பத்தொடு, பதினெட்டும்
உமறொடு, தேம்பா, பிரபந்தம்
உயரெழுத் துடையாள் பதந்தொட்டு.

(எங்கள்)

நீதியுரைத்திடு நக்கீரன்,
நிறைவுடை இறைபுரி எல்லாளன்,
தீதொழி வாதுரை செய் செல்வி,
திகழ்மனுச் சோழனின் புகழ்சொல்லி.

(எங்கள்)

சட்ட முரைத்திடு நெறிகற்போம்.
சதுர்நெறி நின்றதை உயர்விப்போம்.
எட்டு நிலத்திலு மினமொன்றே.
இகமினி வுறுவழி யிதுநன்றே !

(எங்கள்)

---

* திருக்குறள்
* ஐம்பெருங்காப்பியம்
* எட்டுத்தொகை
* பன்னிரு திருமுறை
* பத்துப்பாட்டு
* பதினெண் கீழ்க்கணக்கு
* சீறாப்புராணம்
* தேம்பாவணி
* பிரபந்தங்கள்
* எழுத்து – இலக்கணம்
* ...செல்வி – கண்ணகி
* சதுர்நெறி – அறம், பொருள், இன்பம், வீடு.

சட்ட மாணவர் தமிழ் மன்றச் செயற்குழு '92



அமர்ந்துள்ளோர் (இடமிருந்து வலமாக):

யூ. அப்துல் மௌஜூத் (செயலாளர்), திரு. ஜி: பி. எஸ். டி. சில்வா (பிரதம நீதியரசர்), மைக்கல் ஜோன்சன் (தலைவர்), திரு. டபிள்யு. லடுவஹெட்டி (அதிபர்), கி. துரைராசசிங்கம் (மலராசிரியர்).

நிற்போர் (இடமிருந்து வலமாக):

பெ. ரவீந்திரன் (உதவிச்செயலாளர்), எம். லை. எம். சதுர்டீன் (பொருளாளர்) எம். வை. எம். இர்ஸாடீன் (உதவிப் பொருளாளர்), வி. தேவதாஸ் (உறுப்பினர்), எம். ஆர். எம். ரம்ஸீன் (உபதலைவர்), செல்வி இ. இராஜகோபாலன்) (உறுப்பினர்)

உரோமடச்சுச் சட்டத்தில் உடைமை நிவாரணம்

Possessory Remedies in Roman Dutch Law

Mr C. V. WICKNESWARAN *

This is one of the important areas in Law of property where the Roman Dutch Common Law is advocated even today. The auther has dealt with this topic in a Comprehensive manner to include all aspects of this remedy.

சட்டத்தில் 'உடைமை' என்ற சொல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சட்டக் கருத்துக்களில் புரிந்து கொள்ளுவதற்குக் கடினமானவற்றில் அதிகம் கடினம் மிக்கது 'உடைமை' என்ற கருத்தே என்று சமன் (Salmond) 'சட்டவியல்' என்ற நூலில் கூறியிருக்கிறார். முதலில் 'உடைமை' என்ற சொல்லைப் புரிந்து கொள்ளப் பார்ப்போம். எந்தச் சொத்தும் எமது உடைமையில் இருந்தால் தான் அதை நாம் அனுபவிக்க முடிகிறது. எமக்குச் சொந்தமில்லாத பொருள் கூட எமது உடைமையில் இருக்கலாம். அப்படியிருப்பின் அந்தப் பொருளை எமது உடைமையிலிருந்து அகற்றுவதற்கு அந்தப் பொருளின் சொந்தக்காரருக்குத் தான் அதிகாரம் உண்டு; வேறு எவருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. இதனால்த் தான் 'உடைமை' சொந்தத்தின் பத்தில் ஒன்பது பங்கு' என்று சட்டவல்லுநர்கள் கூறுகிறார்கள். இன்னொருவரது பொருள் நீண்டநாள் எமது உடைமையில் இருந்து விட்டால் நாளடைவில் அந்தப் பொருள் மீது எமக்குச் சொந்தம் ஏற்பட்டுவிடுகிறது. பொதுவாக ஒரு பொருளின் மீதுள்ள சொந்தம் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாறும்பொழுது அப்பொருளின் உடைமையும் அவருக்கு மாற்றப்படுகிறது. எவர்க்கும் சொந்தம் இல்லாத ஒரு பொருள் யாருடைய உடைமைக்கு முதன் முதலில் வருகின்றதோ அவருக்கே அது சொந்தமாகியும்விடுகிறது. ஆகவே, ஒரு பொருளின் மீதுள்ள உரிமை, சொந்தம் ஆகியவற்றை எடைபோடுவதற்கு, நிர்ணயிப்பதற்கு அல்லது, வரையறுப்பதற்கு உடைமை அடிப்படையாக இருக்கிறது.

ஒரு பொருள்மீது ஒருவருக்கு இருக்கும் உடைமையைச் சட்டம் உன்னிப்பாகப் பாதுகாக்கின்றது. ஒரு பொருளின் உடைமையை வைத்திருப்பவர் யாராக இருந்தாலும், அதாவது அப்பொருள் மீது சொத்துரிமை உள்ளவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட, அவரது உடைமையை சட்டம் சாப்பாற்றுகிறது. அதாவது சொந்தம் அல்லது உரிமை இல்லாத உடைமைகாரர், அந்தப் பொருளின்

* B.A. (Ceylon) LL.B. (London) - Judge of the High Court, Colombo.

சொந்தக்காரரைத் தவிர மற்றவர்களைப் பொறுத்தவரையிலும் அந்தப் பொருளின் உடைமைக்கு உரியவராகவே கருதப்படுகிறார். ஒருபொருளின் மீது உரிமை இல்லாது அதன் உடைமை மட்டும் உள்ளவர் தனது உடைமையை அதன் சொந்தக்காரரைத் தவிர மற்ற எல்லோரிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம். அவரது உடைமையைப் பிறர் பறித்துக் கொண்டால் இழந்த உடைமையைத் திரும்பப் பெறும் அதிகாரம் அவருக்கு உண்டு. பொருளின் சொந்தக்காரர் கூட அந்தப் பொருள் மீது உரிமை இல்லாதவரின் உடைமையை வன்முறையால் அகற்றிவிடமுடியாது. நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து அதன் மூலமாகவே அப் பொருளைத் தனது உடைமைக்குக் கொண்டுவர முடியும்.

உதாரணமாக, உடைமையில் இருக்கும் ஒரு வீட்டின் குடியிருப்பாளர் வீட்டைக் காலிசெய்து உரியவருக்குக் கொடுக்க மறுத்தால் வீட்டின் சொந்தக்காரர் அல்லது, வீட்டுக்கு உரிமையுடையவர் அவ்வீட்டின் உடைமையை வன்முறையில் கைப்பற்ற முடியாது. இந்த விதியை மீறிப் பலவந்தமாகஒருவர்வீட்டின்உடைமையைக்குடியிருப்பாளரிடம். இருந்து கைப்பற்றிக் கொண்டார் எனில் குடியிருப்பாளர் அவ்வாறு கைப்பற்றியவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து வீட்டின் உடைமையை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆகவே, சட்டப்படி ஒவ்வொரு உடைமைதாரருக்கும் தமது உடைமையைக் காப்பாற்றிக் கொள்ளும் உரிமை இருப்பதை இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு ஒவ்வொருவரின் உடைமையும் சட்டப்படி பாதுகாக்கப்படவில்லை எனில் வன்முறையில் ஒருவர் உடைமையை இன்னொருவர் பறிப்பது வழக்கமாகிவிடும். நல்லவர் உடைமை வல்லவர் செயலால் பறிபோய், விடலாம். இதைத் தடுக்கவும் அமைதிக்குப் பங்கம் வராமல் தடுப்பதற்கும் உடைமைதாரர்களின் உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் நிவரரணங்கள் சிலவற்றை அளித்துள்ளது. இந்த நிவாரணங்களின் மூலம் திறத்தவர்களின் உரிமைகள் யாவை எனஆராய்வதற்கு முன் உடைமையில் இருந்த நபர் எந்த ஆதனத்தில் இருந்து விரட்டப்பட்டாரோ அந்த ஆதனத்தில் அந்நபரை நீதிமன்றம் அமர்த்தும.

இந்த நிவாரணங்களின் தொடக்கத்தையும் வளர்ச்சியையும்ஆராய்ந்தோமானால், உரோமசட்டத்தில் உடைமை குழப்பப் பட்டதை சரிசெய்ய (Uti Possidatis) ஊடி ஃபெஸிடெடிஸ் என்ற நிவாரணமும்; பலாத்காரமாக உடைமை பறிபோவதைத் தடுக்க (Unde Vi) உண்டே வீ என்ற நிவாரணமும் இருந்தன. அதாவது, முதல் நிவாரணம் நடந்து முடிந்ததை சரிசெய்யவும் பின்னையது நடக்கப்போவதைத் தடுக்கவும் வழிகோலின. உரோம டச்சுச் சட்டத்தில் கிட்டத்தட்ட இவற்றிற்கொப்பான இரு நிவாரணங்களும மேலதிகமாக இரண்டு நிவாரணங்களுமாக உடைமை நிவாரணங்கள் நான்கு இருந்தன.

ஊட்டிஃ பொஸிடெடிஸ் நிவாரணத்திற்கு ஒப்பானது (Mandament Van Spolie) மண்டமென்ட்ஃவான் ஸ்பொலியே அல்லது, உடைமை பறிக்கப்பட்டவருக்கு உடைமை கொடுக்கவேண்டும் என்ற உரோம டச்சுச் சட்ட நிவாரணமாகும். உண்டே வீ என்ற உரோமச் சட்ட நிவாரணத்திற்கு ஒப்பான உரோம டச்சுச் சட்ட நிவாரணம் (Mandament Van Maintenue) ஃமண்டமென்ட் வான் மெயின்டெனியூ அல்லது, உடைமை குழப்பப்படுவதைத் தடுப்பது தொடர்பான நிவாரணம். உரோம டச்சுச் சட்டத்தில் காணப்பட்ட மற்றைய இரு நிவாரணங்கள் (i) (Mandment Van Emmissie) ஃமண்டமென்ட் வான் இமிசுசி அல்லது, மரபுரிமைச் சொத்தைப் பெறக் கேட்கும் நிவாரணம். (ii) (Mandament Van Complainte) ஃமண்டமென்ட் வான் கொம்ப்ளெயின்டே அல்லது இழந்த உடைமையை திருப்பிக் கொள்வது தொடர்பான நிவாரணம். ஃமண்டமென்ட் என்றால் ஆணை. ஆகவே இந்த நான்கு நிவாரணங்களும் நீதிமன்ற ஆணையொன்றிணை குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் பெறக் கோரும் விண்ணப்பங்களாக அமைந்தன.

இவற்றைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

1. ஃமண்டமென்ட் ஃவான் மெயின்டெனியு

உடைமை குழப்பப்பட்டவர் விண்ணப்பம் செய்து தன்னைப் பாதுகாத்து தமது உடைமையை வலுப்படுத்தக் கோரும் மன்ற ஆணை (Writ) இது. குழப்பியதற்கு நட்டஈடும் வருங்காலத்தில் குழப்பாதிருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இவ் விண்ணப்பத்தில் பொதுவாக அடங்குவன; விண்ணப்பதாரர் இரு விடயங்களை நிரூபிக்க வேண்டும்.

அவையாவன;- ஒன்று; உடைமை, மற்றையது; குழப்பப்பட்டமை.

குழப்பப்பட்டமை என்றால் உடைமையைப் பிறிதொருவர் இயங்கு செயல்களால் கைப்பற்றினார் என்ற அர்த்தமாகாது. அமைதியான உடைமையைக் குலைக்க எத்தனிப்பதும் குழப்பப்படுதலே.

2. ஃமண்டமென்ட் வான் கொம்ப்ளெயின்டே

இந்நீதிமன்ற ஆணையைப் பெற நான்கு விடயங்கள் நிரூபிக்கப்பட வேண்டும்.

அவையாவன:

1. உடைமை.
2. அவ்வுடைமை அமைதியாகவும்; சமாதானமானதாகவும் இருந்தது.
3. அவ்வுடைமை ஒரு வருடம் ஒரு நாள் வரை நீடித்தது.
4. வழக்குத் தொடர்ந்த நாளில் இருந்து பின் பக்கமாகக் கணித்து ஒரு வருட காலத்தினுள் அவ்டைமையானது பறிக்கப்பட்டது அல்லது, குழப்பப்பட்டது என்பது.

இந்நான்கு நிகழ்வுகளும் நிரூபிக்கப்பட்டாலேயே நீதிமன்றம் இவ்வாணையை வழங்கும். ஆனால் நிகழ்வுகள் நிரூபிக்கப்பட்ட உடனேயே சுருக்கமுறையில் தற்காலிகமாகவேனும் நிவாரணம் உடன் வழங்கப்படும். உடைமையில் இருந்து நீக்கப்படாது பாதுகாக்கப்பட வேண்டும் என்றோ பறிக்கப்பட்ட உடைமையைத் திரும்பப் பெற்றுத்தரவேண்டுமென்றோ மன்றினைக் கோரலாம். முன்னுள்ள நிலைக்குத் (Status quo ante) தரப்பார்களைத் திருப்பலே இவ் ஆணையின் குறிக்கோள்.

3. ஃமண்டமென்ட் ஃவான் ஸ்போலியே

இந் நிவாரணத்தைப் பெற உடைமையும், உடைமை பறிகொடுத்தமையும் நிரூபிக்கப்பட வேண்டும். வெறும் குழப்பம், தடை, அமைதிக்குப் பங்கம் ஆகியவை உடைமை பறிகொடுத்தமைக்கு ஒப்பாகாது. திரும்பவும் உடைமையில் இருத்தப்படவேண்டும். என்ற கோரிக்கையும் நடந்த வற்றிக்கான நட்டஈடும் நிவாரணங்களாகக் கோரப்படுவன.

4. ஃமண்டமென்ட் ஃலான் இமிஸ்

இது வரையறுக்கப்பட்ட நிவாரணமொன்று. மரபுரிமையாளர் ஒருவர் இறந்தவரின் சொத்துக்களின் உடைமையைக் கோருவதே இந் நிவாரணத்தின் நோக்கம். வழக்கமாக மெயின்ட்டெனியு வழக்குடன் சேர்த்தே இந் நிவாரணம் கோரப்படும்.

மேற்கண்டவற்றில் இருந்து மெயின்டெனியு வழக்கு நிவாரணமே தனியாகவோ மற்றைய நிவாரங்களுடன் சேர்ந்தோ கூடிய முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது எனலாம். வழக்கமாக இந்நிவாரணங்கள் நடைமுறையில் காணி சம்பந்தமான உடைமை பற்றியே வழங்கப்பட்டன.

பருப்பொருள் அக்கறை, அசையும் ஆதனத்தின் அக்கறை ஆகியன உடைமை நிவாரணத்தினால் பாதுகாக்கப்படுமா என்றால் தென் ஆபிரிக்காவில் 'ஆம்' என்றே விடை அளிக்கப்படும். ஆனால், இலங்கை நீதிமன்றங்கள் குறுகிய கருத்

தொன்றையே எடுத்துள்ளன. பொன்னம் பலம் எதிர் சின்னத்தம்பி (புதிய சட்ட அறிக்கை 15 பக்கம் 11) என்ற வழக்கில் மாடுகள் தொடர்பில் நிவாரணம் மறுக்கப்பட்டது. இந்த நிவாரணம் அசைவற்ற பொருள் தொடர்பில் தான் உண்டு என்றார் நீதியரசர் கிறனியர்.

இலங்கையில் உடைமை நிவாரணம் 1981ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஆட்சியுடைமை கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்பிரிவின் தமிழ் மொழி பெயர்ப்பு பின்வருமாறு;

''சட்ட வழியல்லாத வேறு வழியில், ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமை பறிக்கப்பட்ட ஒருவர் அவ்வாறு அவரிடமிருந்து உடைமையைப் பறித்த ஆளுக்கெதிராக அத்தகைய உடைமை பறிக்கப்பட்டதிலிருந்து ஓராண்டு காலத்தினுள் எந்நேரத்திலேனும் வழக்குத் தொடர்தல் சட்டப்படி செல்லுபடியாகும்.

அத்துடன் வழக்கு கொண்டுவரப்படுவதற்கு முன்னராக ஓராண்டுக்குள் அத்தகைய உடைமைபறிக்கப்பட்டதென நிரூபிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய வழக்கின் வழக்காளி காணியின் உரித்தினை நிரூபிக்காமலே அத்தகைய உடைமை மீளப்பெறும் விதத்தில் எதிராளிக்கு எதிராக தீர்ப்பாணை ஒன்றினைப் பெற உரித்துடையவர் ஆவார்.

ஆனால், இதில் அடங்கியுள்ளதெதுவும் உடைமை வழக்குகள் தொடர்பிலான சட்டத்தின் ஏனைய தேவைப்பாடுகளைப் பாதிக்குமெனத் தீர்மானிக்கப்படுதலாகாது.''

மேற்படி காப்பு வாசகத்தின் நிமித்தம் உடைமை நிவாரணம் தொடர்பான உரோம டச்சுச்சட்டத் தேவைப்பாடுகள் தொடர்ந்து இலங்கையில் வலுவில் இருக்கின்றன என்றே கருதப்படுகின்றது.

கடவுள் நீதி

சட்டம் கடவுள் நீதிக்கு மாறானதாயிருந்தால் நீதிபதி 'தனது' தீர்ப்பைக் கூறமுடியாது. ஏனெனில், அவரது உடமை நீதிமன்றமொன்றில் கடவுளின் நீதியைச் செலுத்துவதல்ல. நாட்டுச் சட்டங்களின்படி நீதியைச் செலுத்துவதே அவருடைய கடமையாகும்.

அத்தகைய சட்டங்களைத் திருத்த வேண்டியது பாராளுமன்றத்தின் கடமையாகும். அத்தகைய சட்டத்தைத் திருத்துமாறு கோரி மக்கள் கிளர்ச்சிசெய்ய வேண்டும்.

(நடேசன் Q. C.—1985 நீதிமுரசு)

The Impact of 'NANDASENA V. THE REPUBLIC'

(1983 SRISKANTHA LAW REPORTS P. 48)

on Section 27 of Evidence Ordinance

By : G. L. M. de SILVA*

Section 27 of the Evidence Ordinance is one legal provision which still permits a Police statement by an accused to incriminate himself, if a 'fact' is discovered in consequence of such a statement. Under the strict provisions of Section 110 (3) of the present Code of Criminal Producedure Act No. 15 of 1979, which came into operation from 2nd July 1979, the only uses that could be made of a statement by an accused to a Police Officer are:

(i) to contradict him if he gives evidence in the witness-box and that too with any non-confessionary material therein,

(ii) for purposes of section 27 of the Evidence Ordinance and,

(iii) in a charge under Section 180 of the Penal Code.

Prior to the operation of this code of Criminal Producedure Act, non-confessionary admissions by an accused in such a statement could be proved against him with drastic consequences to him as in the case of Anandagoda vs. Q (1962) 64 NLR 83, where no less than 14 such extracts from Anandagoda's statements to Police Officers were made good use of, by the Prosecution to prove the charge of murder against Anandagoda. But now under the present law of criminal procedure such admissions are not permissible.

However, the interpretation given by our Supreme Court in decided cases upto 1979 to the terms of section 27, till the case of Nandasena vs. The Republic. placed certain limitations to its interpretation. The terms "accused of an offence" and "in Police custody" in their ordinary literal meaning were then a *sine qua non* for the operation of section 27 but Nandasena's case gave a broader interpretation to those two terms with the result that persons who were not formally 'accused' of an offence and not in actual 'Police custody' also were liable under section 27.

Perhaps the facts of Nandasena's case, briefly recalled, will make matters more intelligible: The accused Nandasena was a 19 year-old youth resident in a colony at Kuda Oya and deceased Podiappuhamy was a 53 year-old man living in the same colony. On 7. 2. 74 the deceased accompanied by the accused had set out around noon, along a jungle path to Maturata for the deceased to buy rice. He had taken Rs 120 cash (in one Rs 100 note and two

---

* G. L. M. de Silva, B Sc (Spl. Maths, Lon.); LL.M (Colombo) was a former High Court Judge, Colombo and is presently the lecturer in Evidence at the Sri Lanka Law College.

Rs 10 notes) and two empty manure bags. Sometime later the accused had come back and shouted from a hill that the deceased was being cut by Tamils. A group of people from the colony had rushed with the accused to the spot where the deceased lay groaning, unconscious and unable to speak. He had been taken to the Nuwara Eliya hospital but was found dead on admission. It transpired in the evidence of the accused that the accused had the Rs 100 note which he said was given to him by the deceased for safe custody. After the deceased was taken to the hospital, the accused had gone to Nuwara Eliya Police Station and made a statement to the O.I.C. who had also taken charge of his shirt which had stains like blood. The O.I.C. had then informed the Maturata Police since the incident had taken place in that Police area. After the arrival of S.I. Chandradasa from Maturata at about 1 a.m. on 8. 2. 74, he had seen the accused seated in the verandah of the Nuwara Eliya Police Station. However he had not taken the accused into his custody at that time. But after questioning him S. I. Chandradasa had taken the accused to Maturata Police Station, where he had recorded the statement of the accused at about 3.30 a.m. and thereafter he had taken the accused into custody. After a short rest, he had gone to the scene of the incident with accused and two other Police Officers. In his statement to S. I. Chandradasa, the accused had stated: "I can show the Police where the knife is hiden" (XI); "I can show the place where the towel and the empty manure bags were hidden" (X2): Below that he had stated "I can show them to the Police" (X3). In consequence of these three extracts from the statement of the accused, S. I. Chandradasa had recovered a pruning knife (P 1), a towel (P 7), two empty manure bags (P 6), and two Rs 100 notes with stains like blood (P 2). P 1 had been under the roots of a tree about 20 feet from the path and about 500 feet away from the place of the incident, stains like blood has been observed on P 1, P 6 and P 7 had been recovered from under a stone which was like a cave about 40 feet from the road, and the two Rs 10 notes had been recovered about 1 1/2 miles from the place of the incident under a bush near a rock called Laula Gala. At the scene of the incident the S. I. had observed signs of a struggle.

The Government Analyst has confirmed the presence of human blood in thick stains in the above productions. The objects recovered by the S. I. in consequence of the above extracts from that statement of the accused, had all (except P 1) been identified as having been in the possession of the deceased (one of the two ten rupee notes had been torn and pasted with a stamp-hinge when the deceased set out).

The accused had given evidence at the trial and had denied making any statement at Maturata Police.

The main contents of the defence in appeal were that the statements X1, X2, Y3, of the deceased leading to the discovery of the productions should not have been admitted in evidence, because the accused had not been (a) accused of an offence and (b) in the custody of the Police, when the statement was recorded.

All three Judges of the Court of Appeal and all three Judges of the Supreme Court likewise, had given a wider interpretation to those essential terms in Section 27, basing their reasons on several decisions of the Indian Supreme Court and Appeal Court on the identical corresponding section in the Indian Evidence Act.

The Indian Authorities which were quoted with approval by our Appellate Courts were:

(1) Kottaya v. Emperor (A.I.R.) 1947 P. C. 67.

(2) State v. Memon (1959) A. I. R. Bombay 534.

(3) State of Uttar Pradesh v. Demon (AIR, 1960) S. C. 1105

(4) Narayana Swami v. Emperor (AIR, 1939) P. C. 47.

(5) Maharani v. Emperor (AIR), (1948, All. 7)

It was held by our Courts that:

(1) Section 27 of the Evidence Ordinance is a Proviso to sections 24, 25 and 26.

(2) "Person accused of any offence" in section 27 as in sections 25 is "descriptive of the person against whom evidence relating to information alleged to be given by him is made provable by section 27" and "it does not predicate a formal accusation against him at the time of making the statement sought to be proved as a condition of its applicability".

The Supreme Court (per Sharvanda.J) further observed: "The words cannot have one sense in section 25 and another in section 27. If the contention of the Counsel for the appellant is accepted and it is held that the person making the statement should have been accused of an offence at the time he made it, then on that construction of the words 'person accused of an offence', the embargo placed on section 25 on confessions to Police Officers, will not apply to confessions to Police Officers by a person prior to his being accused of any offence and such confessions will be admissible. Such a construction enables easy circumvention of the rule of exclusion embodied is Section 25 and the rationable of the rule will be made senseless.

(3) "For purposes of Section 27, Police custody does not necessarily mean detention or formal arrest. It includes Police surveillance and restriction of the movements of the persons concerned by the Police. It includes the state of affairs in which the accused can be said to have come into the hands of the Police Officer or can be said to have been under some sort of surveillance or restriction. The term 'custody' has to be interpreted within wide limits."

In the case of Nandasena it was therefore held that from the time he made his first statement to the Nuwara

Eliya Police 6.30 p. m. on 7.2.74, he was in 'Police custody'; he was kept in that Police Station till the arrival of S. I. Chandradasa from Maturata at 1.00 a. m. on 8.2.74. Thereafter he was with S. I. Chadradasa till the recording of the impugned statements. Hence the accused could not break away from the company of the Police Officer and was, within the meaning of Section 27 in 'Police custody', at the time he made the relevant statements X1, X2 and X3, eventhough he was not formally arrested until after his statement was recorded.

The conviction of the accused Nandasena on the charges of murder and of robbery were affirmed in appeal.

With the above broad interpretation of the two essentials of Section 27, many of the criminal cases which failed prior to 1979, would now appear to have been wrongly decided, even though the only inference which a Court or Jury could arrive at, from 'a discovery of a fact' under section 27, is the knowledge that the accused had, that the object discovered was in the place where it was found and nothing more.

(A full analysis of the facts of the above case appears in the judgment of the Court of Appeal, per Colin-Thome. J in (1978-79) 2 S. L. R. 235)

★

With Best Compliments

from

LEADERS

Wholesale & Retail Dealers in Textiles

Aslam Trade Centre, 188/2, Keyzer Street, Colombo - 11.

சட்ட உதவி ஆணைக்குழு

- ஓர் அறிமுகம் -

LEGAL AID COMMISSION

We have all heard of the legal Aid Commission. Its history may not be known to many of us. This article gives a full picture to the reader about the Commission.

A. M. Mohamed Rauf
(Apprentice Year)

இன்றைய நவீன உலகம் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளதாக பறைசாற்றிடினும், மனிதர்கள் பொருளாதார ரீதியில் பல ரகங்களாகப் பிரிக்கப்படுகிறார்கள். செல்வந்தர்கள், நடுத்தரமானவர்கள், ஏழைகள், பரம ஏழைகள் என்பன அவற்றில் சில. சட்டங்கள் என்னதான் சமத்துவம் பேசினாலும், மதங்கள் ஈகை பற்றிப் பிரசங்கம் நடத்தினாலும், இவ்வேறுபாடு இல்லாதொழியப் போவதில்லை. மாறாக, புது உத்வேகத்தோடு உக்கிரமடைந்துகொண்டு செல்கிறது. ஏழைகள் மற்றைய துறைகளில்தான் தமக்குக் கிடைக்கவேண்டியவற்றைப் பெறாவிடினும், நீதியின்மூலம்கிடைக்கும் நிவாரணங்களையும் கூட இழக்கும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுவது எமது எல்லோரதும் துர்ப்பாக்கியமே.

ஏழைகளின் அவலம்

இன்று ஒரு ஏழை தனது உரிமைகள் மற்றவர்களால் பறிக்கப்படும்போது வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. ஏனெனில் அவ்வேழையிடம் இழந்த உரிமைகளைச் சட்டத்தின் மூலம் மீளப்பெற வழியில்லை. அதாவது, இன்றைய சூழ்நிலையில் சட்டத்தரணிகள் கேட்கும் பணத்தை அவனால் கொடுக்க முடியாதுள்ளது. சிறையில் வாழக்கூடிய குற்றவாளிகளிற் கூடப் பலர் தாம் புரிந்த குற்றம் சிறியதாயிருந்தாலும் அவற்றுக்கெதிராக செலுத்தக்கூடிய மிகக் குறைந்த தண்டப் பணத்தைக் கூடச் செலுத்த வசதியின்மையால் அக் குற்றத்திற்குரிய முழுத் தண்டனையையும் அனுபவிக்க நேரிடுகின்றது. மேலும், சிலர் தமக்கெதிராக உள்ள குற்றச்சாட்டினையே அறியாது தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் காரணம் அவர்கள் தாம் புரிந்துள்ள அல்லது புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குற்றத்தின் தன்மையைப் பற்றி விளக்கவோ அல்லது அதற்

கான நிவாரணத்தினைப் பெறவோ சட்டத்தரணிகளை அமர்த்த வசதியின்மையேயாகும். இவ் அவல நிலையை நீக்குமுகமாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை மனதிற்கு சிறிதளவு ஆறுதலளிக்கக் கூடியதாகவுள்ளது. அரசாங்கம் இவ்வாறான ஏழைகளின் அவலநிலைகளை நீக்குமுகமாக சட்ட உதவி ஆணைக்குழுவினை உருவாக்கியுள்ளமையே அந்த ஆறுதலுக்கான காரணமாகும்.

ஆணைக்குழுவின் அமைப்பு

''சட்ட உதவி ஆணைக்குழு'' என்பது உண்மையில் உதவி தேவையான, அதற்குத் தகுதியுள்ள, நபர்களுக்குச் சிறந்த முறையில் சட்ட உதவி வழங்கப்படுதலைக் கண்காணிக்கும் ஒரு ஆணைக்குழுவாகும். இச்சட்ட உதவி ஆணைக்குழு 1978-ம் ஆண்டின் 27-ம் இலக்க சட்ட உதவிச் சட்டத்தின் (Legal Aid law) கீழ் உருவாக்கப்பட்டது. இது நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரையும், Bar Association of Sri Lanka இனால் அவர்களது அங்கத்தவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அறுவரையும் உறுப்பினர்களாகக்கொண்டுள்ளது. இதன் பிரதான அலுவலராக நிர்வாகஅதிகாரி செயற்படுகிறார். அவருக்கு அடுத்தபடியாக பணிப்பாளர்பணி புரிகிறார். தற்போதைய நிர்வாக அதிகாரியாக திரு. சுவர்ணாதிபதியும், பணிப்பாளராக முன்னைய மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எலியட் குணசேகராவும் பணி புரிகிறார்கள். இவர்களுக்குதவியாக சட்ட அலுவலர்கள் சேவை புரிகின்றார்கள். நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு பணி புரிவர். ஏனைய ஆறு அங்கத்தவர்களில் இருவர் முதலாம் வருட முடிவிலும், இருவர் இரண்டாம் வருட முடிவிலும், மற்ற இருவரும் மூன்றாம் வருட முடிவிலும் பதவி விலகுவர். முதலில் பதவி விலகுபவர்கள் யார் என்பது திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படும்.

உதவும் சட்டத்தரணிகள்

சட்ட உதவி ஆணைக்குழுவில் பணி புரிய விரும்பும் சட்டத்தரணிகள் ஒவ்வொரு வருடமும் சட்ட உதவி ஆணைக்குழுவில் தம்மைப் பதிவுசெய்வர். இங்கு வரும் வழக்குகள் பற்றி இங்கு பதிவு செய்த சட்டத்தரணிகளுக்கு அறிவிக்கப்படும். விரும்பியவர்கள் அவற்றைப் பெற்று சம்பந்தப்பட்டவர்களுக்காக நீதிமன்றத்தில் தோன்றி வழக்காடலாம். இச் சட்டத்தரணிகளுக்கு சட்ட உதவி ஆணைக்குழுவே கட்டணம் வழங்குகிறது. அவர்களின் சேவையை நாடுபவர்களிடமிருந்து அவர்கள் எவ்விதக் கட்டணமும் பெறுவதில்லை. இச் சட்டத்தரணிகளுக்கான கட்டணம் (on a schedule of payments called Honarara) ஓர் அட்டவணையின் பிரகாரம் வழங்கப்படுகின்றது.

உதவி கோருவோர்

இங்கு சட்ட உதவி பெற விரும்புவோர் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியம். அதாவது, அவர் உண்மையில் உதவி தேவைப்படுபவராகவும், அதற்கான தகுதியுடையவராகவும் இருத்தல் அவசியம். தகுதி உடையவர்கள் எனும் போது, இவர்கள் பெரும்பாலும் ரூபா 1000/-க்குக் குறைவான மாதவருமானம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யின் இவர்கள் நேரடியாகவோ அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள சட்ட உதவி ஆணைக்குழுப் பிரதிநிதி மூலமாகவோ அல்லது, சட்டத்தரணிகள் வாயிலாகவோ சட்ட உதவி ஆணைக்குழுவிடம் செல்லலாம். இவர்கள் சட்ட உதவி ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட ஒரு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தபின்பு சட்ட உதவி ஆணைக்குழு அவற்றிற்கான நடவடிக்கைகளில் இறங்கும்.

சட்ட உதவி ஆணைக்குழுவானது அதன் செயற்பாடுகளைத் திறம்படச் செய்வதற்குத் தேவையான நிதியினை அரசாங்கத்திடமிருந்து பெறுகிறது. அரசாங்

கம் வருடாவருடம் இதற்காக 500,000/- ரூபாவினை வழங்குகிறது. மேலும் சட்ட உதவி ஆணைக்குழுவுக்கென வழங்கப்படும் அன்பளிப்புகள் மூலமும் இது நிதியினைப் பெறுகிறது.

பணிகள்

சட்ட உதவி ஆணைக்குழுவானது பின் வருவனவற்றை அதன் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. அவையாவன:-

நாடளாவிய ரீதியில் உதவி தேவையானவர்களுக்கும், தகுதியானவர்களுக்கும்,

(அ) தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

(ஆ) அவர்கள் சார்பில் சட்டத்தரணிகளை வழக்காடச் செய்தல்.

(இ) அவர்கள் சார்பில் வழக்கு நடவடிக்கைகளுக்கான கட்டணங்களை செலுத்துதல்.

(ஈ) அவ்வாறான நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் என்பனவாகும்.

இச் சட்ட உதவி ஆணைக்குழுவானது அதற்குத் தேவைப்படும் சட்ட ஆலோசனைகளை Bar Association of Sri Lanka விடமிருந்து பெறுகிறது. மேலும் பிரதம நீதியரசரின் தலைமையிலான சட்ட உதவி ஆலோசனைக் கழகமானது (Legal Aid Advisory Council) இச் சட்ட உதவி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளைக் கண்காணித்தும் அவ்வப்போது தேவைப்படும் ஆலோசனைகளை வழங்கியும் வருவதால் இதன் சேவை மேலும் சிறப்புற வழி வகுக்கிறது.

மருந்தில்லா நோய், சோம்பல்
அருந்தவம் ஊக்கம் – அன்பு மக்களே!

– பாரதிதாசன்

ஒரு கடவுள் தன் மதத்தைச் சேர்ந்தவர்கட்கு மட்டும் தான் கடவுளென்றால் அவர் குறைபாடுடையர் – எல்லோருக்கும் அவர்தான் கடவுளென்றால், ஏன் ஒருவர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாறவேண்டும்.

காஞ்சி சங்கராச்சரிய சுவாமிகள்

நூல்கள்

இருபது ஆண்டுகள் வாழ்ந்து பெறும் அனுபவத்தை விட ஒருவன் ஓராண்டு படிப்பதனால் அதிக அனுபவம் பெற்றுவிடுகின்றான்.

இதுவரை மனித இனம் ஆற்றிய செயல், பட்ட அனுபவம் என்பன நூல் உருவில் உள்ளன அவற்றை அறியாமையால் ஒருவன் குழந்தையாகவே இருப்பான்.

- செனோக்கா

இளைஞன் : தள்ளாத வயதில் ஏன் சட்டம் படிக்கின்றீர்கள்?
முதியவர் : இப்போதில்லாவிடில் எப்போது படிப்பது.

With Best Compliments

from

SUGUNA TRADERS

90, Second Cross Street,
Pettah,
Colombo - 11.

Phone : 422621, 23695
Fax : 440577

With Best Compliments

from

Mr. B. Nandakumar

Lecturer for AAT (Accounting)

IAS 34, JAYAH ROAD, P. V. C.

Cy' Pres (French) - As near as possible.

இங்கிலாந்து குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் செயற்பாட்டு அமைப்பு முறை

The Form and Procedure of Immigration and Emigration Laws of England

Mr. M. MARKANDAN *

The knowledge of the form and procedure of immigration and emigration laws of England is very useful for the law students in Sri Lanka. This article tells how one can get visa and other clearances to migrate to United Kingdom.

இங்கிலாந்து தேசத்தில் குடிவரவு-குடியகல்வு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை இலங்கைச் சட்ட மாணவர்கள் அறிந்திருப்பது தற்போதைய சூழ்நிலையில் இன்றியமையாததாகும். இக்கட்டுரையானது சட்ட நுட்பங்களை நுணுகி ஆராயாமல் சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடியவகையில் அமைந்துள்ளது. ஐக்கிய ராச்சியத்திற்குள் வெளிநாட்டவர்கள் பல்வகையில் உட்புகுவதற்கு வசதிகள் உண்டு. அதாவது உல்லாச பிரயாணிகளாகவோ, மாணவர்களாகவோ, வேலை வாய்ப்புப் பெற்றோ வர்த்தகர்களாகவோ, அல்லது, அகதிகளாகவோ உள்வர முடியும். அதிலும் சில நாட்டவர்கள் அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி இங்குள்ள விமான நிலையம் அல்லது கடல் இறங்குதுறையில் வந்து இறங்கி உட்புகுவதற்கு விண்ணப்பிக்கலாம். சாதாரணமாக மற்றைய நாட்டவர்கள் தத்தமது நாட்டில் உள்ள பிரித்தானிய தூதரகத்தில் Entry Clearance Certificate or Visa பெற்ற பின்பே தமது பிரயாணத்தை ஆரம்பிக்கலாம் Visa எடுப்பதற்கு அத்தியாவசியமான சில தேவைப்பாடுகள் பின்வருமாறு:

மாணவர்கள்-Student Visa

i. தமது நாட்டில் கற்பதற்கு வசதியில்லாத ஒரு பாடநெறியைக் கற்பதற்காக முழுப்பணமும் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

ii. இந்த நாட்டில் ஏற்படக்கூடிய செலவுகள் அனைத்திற்கும் உத்தரவாதம் செய்யும் ஒரு பிணைப் பொறுப்பு (Sponser) தேவை.

iii. வதிவிட வசதியை இலவசமாக வழங்க ஒரு வீட்டுச் சொந்தக்காரரின் அத்தாட்சி பத்திரம் தேவை.

iv. உத்தரவாதி (Sponser) – கல்வி முடிந்தவுடன் சொந்த நாட்டுக்கு திரும்புவார் என்ற ஒரு உத்தரவாதக கூற்று.

* LL. B. Attorney at Law, Solicitor, Retired District Land Officer, Thamil House, 720, Romford Road, Manor Park. London E 12 6BT.

பார்வையாளர்கள்-Visitors Visa

இவர்களை சில உப பிரிவுகளாக பிரிக்கலாம்.

i. உறவினர்கள், நண்பர்கள் சந்திக்க வருபவர்கள்.
ii. உல்லாசப் பயணிகள்.
iii. வர்த்தகம் சம்பந்தமாகப் பிரயாணஞ் செய்வோர்.
iv. வைத்தியம் செய்வதற்காக வருவோர்.

இவர்கள் இந்த நாட்டிற்குள் வருவதற்கான அனுமதியை பெறுவதற்கு – இந்த நாட்டில் இவருக்கு ஏற்படக்கூடிய அனைத்து செலவுகளையும் – வதிவிட வசதியையும் கொடுக்கக்கூடிய ஒரு உத்தரவாதி தேவையாகும். அதே நேரம் இவர் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டில் வேலை வாய்ப்பை பெறுவதற்கு முயற்சிக்க மாட்டேன் என்றும், தனது நோக்கம் – தாம் வந்த தேவை முடிந்தவுடன் தம் நாட்டிற்கு திரும்புவதாகும் என்றும் உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

தொழில்-வாய்ப்புப் பெற்று வருவோர்

இந்த நாட்டவருக்கு – அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற சில குறிப்பிட்ட வேலைகளுக்கு மாத்திரம் பிறநாட்டவருக்கு வேலை செய்யும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். தொழில் வழங்கும் நிறுவனமே அவர் இங்கு வதிவதற்கான வதிவிட வசதி, மற்றைய சில அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொடுக்கும். இப்படி வருவோருக்கு ஆரம்பத்தில் 12 மாத கால அனுமதி வழங்கப்பட்டு பின்னர் நான்கு வருடம் தொடர்ந்து இருந்தால் அவர் இங்கு நிரந்தரமாக வாழ்வதற்கு உரிமை வழங்கப்படும். முக்கியமாக வைத்தியர்கள், பல் வைத்தியர்கள், பிரத்தியேக வீட்டுப் பணியாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் போன்றவர்களே இப்படி வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இங்கிலாந்தில் இப்பொழுது உள்ள கறுப்பின மக்களின் மூதாதையர் ஆரம்பத்தில் சுரங்கத் தொழில் செய்வதற்காக ஆபிரிக்க நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களே ஆவர்.

வியாபாரமும் சுய தொழில் செய்வோரும்

200.000 பவுண் பணத்தை தம் நாட்டில் இருந்து கொண்டு வந்து இந்த நாட்டில் தொழிலை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். இத்தகைய அனுமதி தூதரங்களில் வழங்கப்படுவதில்லை. இங்கிலாந்தில் உள்ள Home Office இனால் வழங்கப்படும். ஆரம்பத்தில் 12 மாதங்களுக்கு வழங்கப்பட்டுப் பின்னர் நிரந்தரமாகவே அனுமதி வழங்கப்படும்.

குடும்பம் ஒன்று சேருதல் (Family - Re Union)

மேலே குறிப்பிட்ட Visitors தவிர்ந்த ஏனைய வகையினரின் துணைவர்களும் – தங்கிவாழ்பவர்களும் (dependents) இந்த நாட்டுக்கு தங்கள் துணைவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக வருவதற்கு அனுமதி வழங்கப்படுவார்கள். அவர்களுடைய அனுமதி (visa) துணைவரின் அனுமதி காலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். வழமையான Sponsorship and Accomodation தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

துணைவர்களுடன் நிரந்தரமாகக் குடியேறல்

இந்த நாட்டில் நிரந்தரமாக வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் துணைவர்கள் இந்த நாட்டிற்கு வந்து நிரந்தரமாக வசிப்பதற்கு பின்வரும் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

i. துணைவருக்கு நிரந்தர வசிப்புரிமை இருக்க வேண்டும்.

ii. இத் திருமணம் இந்த நாட்டிற்குள் வருவதற்கான ஒரு நோக்கத்தை கொண்டிருத்தல் ஆகாது. அத்துணைவர்கள் இருவரும் நிரந்தரமாக ஒன்று சேர்ந்து வாழும் எண்ணம் கொண்டிருக்க வேண்டும்.

iii. சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கனவே சந்தித்திருக்க வேண்டும்.

iv. குடியிருப்பு வசதி இருக்க வேண்டும்.

v. முழுக் குடும்பத்தையும் பராமரிக்கக் கூடிய வருவாய் இருக்க வேண்டும்.

இந்தத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தால் ஏற்கனவே திருமணம் முடிந்தவர்களுக்கும், இங்கு வந்து திருமணம்முடிக்க விண்ணப்பிப்பிப்போருக்கும் அனுமதி வழங்கப்படும். இந்தக் தலைப்பின் கீழ் அனுமதி பெறுவது கடினம், ஏற்கனவே திருமணமாகிப் பிள்ளைகள் உள்ளோருக்குப் பிரச்சினைகள் குறைவு, ஆனால். புதிதாக திருமணம் செய்தவருக்கும், இனிமேல் திருமணம் செய்வதற்கு விண்ணப்பிப்போருக்கும் அனுமதி கிடைப்பது வெகு அபூர்வம். ஏனெனில், இந் நாட்டு பல உபர் நீதிமன்ற தீர்ப்புக்களில் திருமணம் செய்தோரின் முதற்கண் நோக்கம் (Primary purpose) லண்டனிற்கு அனுமதி பெறுவதற்காகவே என்பது ஒரு சட்ட ஊகம் என்பதுவும் அதை எதிர் நிருபிக்கும் பொறுப்பு விண்ணப்பதாரியையே சாரும் என்றும் கூறப்பட்டுள்ளது- இதனால் இன்று எத்தனையோ இளம் குடும்பங்கள் ஒன்று சேர முடியாமல் தவிக்கின்றன.

மேன் முறையீடு (Appeal)

இந்த நாட்டில் மேன் முறையீடுசெய்வதற்கான வசதி உண்டு. இங்கு யாராவது Entry Clearance Certificate or Entry or Clearance Certificate எடுக்கத் தேவையில்லாதவர்கள் விமான நிலையத்தில் அனுமதி மறுக்கப்பட்டால் அவர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். தற்காலிக, தங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டு கீழ் வரும் படிமுறையில் அமைந்தமேன் முறையீட்டு உரிமைகள் உண்டு.

Adjudicator ⟶ Tribunal ⟶ Court of Appeal ⟶ European Court of Human Rights.

இந் நாட்டடிற்குள் உட்புகுவதற்கு அவர்கள் நாட்டிலே visa பெற்று வர வேண்டியவர்கள் (Visa Nationals) Visa or Entry Clearance Certificate பெறாமல் வரும் பட்சத்தில் தம் நாட்டிக்குத் திரும்பிச் சென்று அங்கிருந்துதான் மேன் முறையீடு செய்ய முடியும். அகதிகள் தமக்குரிய ஆதாரங்கள் (Document) இல்லாமல் வரும் காரணத்தால் அவர்களுக்கு மேன் முறையீட்டு உரிமை வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக Exceptional Leave வழங்கப்படும்.

அகதிகள் - (Refugees)

பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக இங்கு வருகிறார்கள். இவர்களுக்குச் சொந்த நாட்டில் அகதி அந்தஸ்துக் கோருவதற்கு அல்லது அந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இவர்கள் ஏதாவது ஒரு தவறான வழியில் முகவர்களின் உதவியுடன் இங்குள்ள விமான நிலையத்தில் அல்லது, துறைமுகத்தில் அகதி அந்தஸ்து கோருவது வழக்கம். விசா இல்லாது வருபவர்களைத் துறைமுகங்களில் வைத்தே குடிவரவு அதிகாரி ஒருவரின் கட்டளைப்படி திருப்பி அனுப்பி விடுவார்கள். ஆனால் அகதிகள் விடயத்தில் இது நடை முறைப்படுத்த முடியாததற்குக் காரணம் அகதி விண்ணப்பங்கள் உள்ளூர் திணைக்களச் செயலாளரால்மாத்திரம் தீர்மானிக்கப்பட வேண்டும். அதைவிட அனே

கமான அகதிகள் வரும்போது தமது கடவுச் சீட்டைக் கிழித்து விட்டிருப்பார்கள். இதன் காரணமாக இவர்களை எந்த நாட்டுக்கு அனுப்புவது என்பதில் பிரச்சனை இருக்கும்.

அகதிகள் பிரச்சினை இந்நாட்டு குடிவரவு சட்டத்தினால் மாத்திரமல்ல 1951 ஜெனிவா (Geneva) Convention, European Conventian of Human Rights, E.C.C Country தீர்மானங்கள் (UNHCR) ஐக்கிய நாட்டு அகதிகளுக்கான ஸ்தானம் ஆகிய வற்றால் ஆளப்படுகின்றது. அகதி எனப் படுபவர் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளார்:

"Owing to a well founded fear of being persecuted for reasons of race, religion, nationality, menbership of a particular socia! group or political openion is Unwilling to avail himself of the protection of his Country."

''தனது சாதி, இனம், ஒரு குறிப்பிட்ட குழுவில் அங்கத்துவம், அரசியல் அபிப்பிராயம் போன்ற காரணங்களினால் அவருக்கு தனது நாட்டின் அரசாங்கத்தின் பாதுகாப்பை கோர அல்லது பெற விருப்பமின்மை அல்லது முடியாத நிலையில் இருத்தல்:

உண்மையான பயம் என்பது ஒரு அகநிலை பரீட்சார்த்தத்திற்கு உட்பட்டதாகும். பொதுவாக ஒரு இனத்தவருக்கு கூட்டாக இருக்கும் பய உணர்வு போதாது. தனிப்பட்ட முறையில் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதை நிரூபிக்கவேண்டும். இப் பயமானது அகதி அந்தஸ்தை கோருவதற்கு முன்னர் அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். பயம் இருப்பதற்கு, உண்மையாக ஒருவர் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டிருக்கத் தேவையில்லை. இப்பிரச்சினை 'சிவகுமாரன்' என்ற வழக்கில் எடுக்கப்பட்டது. Lord Keith என்பவர் இதற்கு பின்வருமாறு விளக்கம் கூறினார்.

"In general the applicants fear should be considered well founded if he can establish to a reasonable degree that his continued stay in his country of origin has become intolerable to him for the reasons stated in the definition or would for the same reasons be intolerable if he returned there."

''பொதுவாக ஒருவர் தனது நாட்டில் தொடர்ந்திருத்தல் அல்லது, திரும்பிப் போதல் தாங்க முடியாத அளவிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று நியாயமான அளவிற்கு நிரூபிக்க வேண்டும்.''

சமயம், இனம், அரசியல் போன்ற வற்றிற்காக இருக்க வேண்டும். மேலும் இப்பயமானது அரச படைகளினால் ஏற்படுவதாக இருக்கவேண்டும். ஏனைய குழுக்களினால் ஏற்படும் பயம் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. ஒருவர் தான் இனிமேல் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகளுக்காக இருந்தலாகாது. இப் பிரச்சினை "Mendis" என்பவரது வழக்கில் மேல் நீதி மன்றத்தினால் ஆராயப்பட்டது. Mendis என்பவர் இந்நாட்டில் பல வருடங்களாக வசித்து வந்தவர். இங்கு இருக்கையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை பிரச்சாரம் செய்தவர். தான் திருப்பி இலங்கைக்கு அனுப்பப்பட்டாலும் அரசாங்கத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்ய வேண்டிவரும். அது தனக்கு ஆபத்தானது எனவும் வாதிட்டார். நீதிமன்றம் இதை நிராகரித்தது.

சில செயல்களுக்கு பயத்தை ஏற்படுத்தினாலும் அதற்காக அகதி அந்தஸ்து வழங்கப்படமாட்டாது. உதாரணமாக போர் குற்றங்கள் புரிந்தவர்கள், மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் செய்தவர்கள், கொலை குற்றங்கள் புரிந்தவர்கள், ஆகியோருக்கு அகதி அந்தஸ்து மறுக்கப்படும். அகதி அந்தஸ்த்தை பெற்ற ஒருவர் பின்பு தனது நாட்டிற்குள் சென்றால் அல்லது தொடர்புகளை ஏற்படுத்தினால் வழங்கப்பட்ட அகதி அந்தஸ்த்து முடிவுக்கு கொண்டு வரப்படும்.

அகதி அந்தஸ்து பெற்றவருக்கான உரிமைகள்

அகதி அந்தஸ்து பெற்ற ஒருவர் இந்த நாட்டில் பிறந்தவர்களைப்போல வீட்டு வாடகைக்கான பண உதவிகளை கூட பெறமுடியும். அவருக்கு இந்த நாட்டு பிரயாண அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்; அப்பத்திரம் அவருடைய சொந்த நாடு தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு சென்று வரக்கூடிய வசதிகளை அளிக்கின்றது. இங்கும் தாம் விரும்பிய வேலை செய்யவோ, வர்த்தகத்தில் ஈடுபடவோ முடியும்; இவருக்கு முதல் நான்கு வருடம் தற்காலிக வதிவுரிமையும் பின்பு நிரந்தர வதிவுரிமையும் வழங்கப்படும். இவர் உடனடியாக குடும்பத்தவர்களை அழைத்துக்கொள்ளலாம். நிரந்தர வதிவிட உரிமை கிடைத்தவர்கள் பிரித்தானிய பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிக்கலாம். பிரித்தானியாவில் ஏராளமானோர் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்தாலும் மிகக் குறைந்த தொகையினருக்கே பூரண அகதி அந்தஸ்து வழங்கப்படுகிறது. எஞ்சிய அனைவருக்கும் Exceptional leave என்ற அந்தஸ்து வழங்கப்படுகிறது. இவ் அந்தஸ்து வழங்கப்பட்டோர் நான்கு வருடங்கள் கடந்த பின்பே தமது குடும்பத்தை அழைக்க முடியும். 7 வருடங்கள் கடந்த பின்பு நிரந்தர வதிவிட உரிமை பெறமுடியும். இதைவிட களவாக இந்த நாட்டிற்குள் புகுந்த எவராவது 14 வருடங்கள் தலைமறைவாக இருந்து விட்டால் நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படும்.

மனித நலன் கருதிய உதவிகள்
Welfare Benefits

அகதிகளாக இந்த நாட்டிற்குள் வருபவர்கள் முதல் ஆறு மாத காலத்துக்கு வேலை செய்யும் தகுதி அற்றவர்கள்; இதன் காரணத்தால் அவர்களுக்கு அவர்களுடைய உணவுத்தேவைக்காகவும், இருப்பிடத்திற்காகவும் Income Support, Housing Benefit போன்ற உதவித் தொகையை வழங்குகின்றது. 6 மாதகாலத்தின் பின்னர் இவர்கள் வேலை செய்வதற்கான பயிற்சியை Employment Training பல நிறுவனங்கள் அளிக்கின்றன.

புகலிடம் கோருபவர்களுக்கு உதவும் நிறுவனங்கள்
(Organisations Helping to Asylum Seekers)

இந்நாட்டில் புகலிடம் கோருபவர்களுக்கு அவர்களுடைய பிரச்சினைகளை எடுத்து கூறுவதற்கும் அவர்களுக்குரிய உரிமைகளை பெறுவதற்கும், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய உதவிகளை பெறுவதற்கும் பல நிறுவனங்கள் உதவுகின்றன. அவற்றுள் சில

1. B. R. C. - Britsh Refugee Council
2. U. K. I. A. S. - United Kingdom Immigrants Advisory Service.
3. T. R. A. C. – Tamil Refugee Action Group
4. Solicitors.
5. Medical Foundations.
6. Inter National Amnesty.
7. Red Cross.

With Best Compliments

from



Colombo Gold House

BAZAAR, MAIN STREET,

KALMUNAI.

Child's Consent to Contraception after 'Gillick'

Hon. AMEER ISMAIL
Jndge of the Court of Appeal.

The Central issue in the case of Gillick v West Norfolk Area Healh Authority[1] was whether a doctor can ever, in any circumstances, lawfully give contraceptive advice or treatment to a girl under the age of 16 without her parents' consent.

There is no previous authority of the Courts whether a child under 16 can consent to medical treatment. So far as minors over the age 16 are concerned the Family Law Reform Act 1969, provided in section 8 as follows :

> "(1) The consent of minor who has attained the age of sixteen years to any surgical, medical or dental treatment which, in the absence of consent, would constitute a trespass to his person, shall be as effective as it would be if he were of full age; and where a minor has by virtue of this section given an effective consent to any treatment it shall not be necessary to obtain any consent for it from his parent or guardian".

This Act was passed in consequence of a Report of the Committee of the Age of Majority (the Latey Committee)[2] in which the relevant paragraph[3] stated; "incressingly at the present time it is becoming customary to accept the consent of minors aged 16 and over. There is no rigid rule of English Law which renders a minor incapable of giving his consent to an operatioa but there seems to be no direct authority establishing that the consent of such person is valid".

Mrs. Victoria Gillick instituted action in consequence of her failure to obtain an assurance from the Health Authority that in no circumstances would any of her five daugters when under the age of 16, would be given contraceptive or abortion treatment without her consent in any of the family planning clinics under its control. In the absence of any binding authority Woolf, J. in the Queen's Bench Division[4] took the view that the fact that a child is under the age of 16 does not mean automatically that she cannot give consent to any treatment. Whether or not the child is capable of giving the necessary consent will depend on the child's maturity and understanding and the nature of the consent which is required. The child must be capable of making a reasonable assessment of the advantages and disadvantages of the treatment proposed, so that the consent if given can be properly and fairly be described as true consent.

---

1. (1985) 3 All E. R. (HL) 402.
2. Cmnd 3342 (1967).
3. Para 479
4. (1984) 1 All E. R. 365 at 373

Woolf, J. did not advert to the possibility that there was a parental right to control the child in the context of medical treatment. His view was that a parents' interest in his or her child did not amount to a 'right' but was more accurately described as a responsibility or duty and accordingly, giving advice to a girl under 16 on contraception without her parents' consent was not an unlawful interference with parental 'r i g h t s'. Victoria Gillick lost in the High Court but won an unanimous decision in the Court of Appeal and lost 3 – 2 in the House of Lords.

In the Court of Appeal[5] there was a significant difference of approach. Eveleigh, LJ. regarded the substance of the case as the protection of Mrs. Gillick's own children. He refused to treat the problem in general terms but instead considered the children individually. He specifically stated that he did "not intend to lay down a rule that in every case, no matter what the question is, no matter who the child is, the parent must be consulted before any important decision can even be arrived at in relation to the child"[6]. The other two Judges in the Court of Appeal, Parker, LJ. and Fox, LJ. treated the case as a matter of principle not to be governed by the welfare of Mrs. Gillick's children but by law. They rejected the orthodox approach of Woolf, J. decisively. In the words of Parker, LJ. "There is no decided case that, prior to the (Family Law Reform) Act the consent of the minor would have been effective and there are many indications that it would not".[7] However, in the original Court Woolf, J. in propounding his approach relied on a passage expressed on this point in a volume on Medical Negligence (1975) by Lord Nathan[8] "It is suggested that the most satisfactory solution of the problem is to rule that an infant who is capable of fully appreciating the nature and consequences of a particular operation or of a particular treatment can give effective consent thereto, and in such cases the consent of the guardian is unnecessary; but that where the infant is without that capacity, any apparent consent by him or her will be a nullity, the sole right to consent being vested in the guardian".

In the Court of Appeal Parker, LJ. attached importance to section 85 and 86 of the Children Act 1975. Section 85(1) provides that, the expression the "parental rights and duties" means rights and duties which by law the mother and father have in relation to a legitimate child and his property. Section 86 defines "legal custody" as meaning so much of the parental rights and duties as relate to the person of the child "including the place and the manner in which his time is spent". He stated therefore, if there is a right and duty to determine the place and manner in which a child's time is spent, such right and duty must cover the right and duty completely to control the child subject always to the intervention of the Court. He went on to say thus :[9] "Indeed there must, it seems to me, be such a right from birth to a fixed age unless wherever, short of majority a question arises it must be determined, in relation to a particular child and a particular matter whether he or she is of sufficient understanding to make a responsible decision." Fox, LJ. stated that the central feature of legal custody is control and that giving contraceptive advice to a girl under 16 without informing the child's parents constituted a serious interference with parental responsibility and the rights involved in custody.

5. (1985) 1 All E.R. (CA) 533.
6. (1985) 1 All E. R. (CA) at 533 at 539,
7. (1985) 1 All E. R. (CA) 533 at 539.
8. At Pape 176.
9. (1985) 1 All E. R. (CA) 533 at 540.

The Court of Appeal favoured a fixed age limit of 16 below which a child lacks capacity to consent to medical treatment. Parker, LJ. found assistance in certain passages of the judgements in the earlier cases as in R v Howes,[10] where the question was whether a father was, entitled by habeas corpus, to recover the custody of a child between 15 and 16, notwithstanding that the child not desire to be in his custody. Cockburn, CJ. said;

"Although a father is entitled to the custody of his children till they attain the age of 21, this Court will not grant a habeas corpus to hand a child which is below that age to its father, provided that it has attained an age of sufficient discretion to enable it to exercise a wise choice of its own interests. The whole question is, what is the age of discretion? We repudiate utterly, as most dangerous, the notion that any intellectual precocity in an individual female ehild can hasten the period which appears to have been fixed by statute for the arrival of the age of of discretion; for that very precocity, if uncontrolled, might very probably lead to her irreparable injury. The legislature has given us a guide, which we may safely follow, in pointing out sixteen as the age upto which the father's right to the custody of his female child is to continue; and short of which such a child has no discretion to consent to leaving him".

In Re Agar-Ellis,[11] a father put restrictions on his 17 year old daughter's intercourse with her mother. Brett, LJ. said, 'the father has the control over the person, education and conduct of his children until they are twenty one years of age. That is the law". Cotton, LJ. having quoted the passage above said "Therefore the Lord Chief Justice there most distinctly recognises what having regard to thc Act, I should have thought was beyond dispute, that during infancy and over sixteen the right of the father still continues". Bowen, LJ. said; "The strict common law gave to the father the guardianship of his children during the age of nurture and until the age of discretion. The limit was fixed at fourteen years in the case of a boy, and sixteen years in the case of a girl.....To neglect the natural jurisdiction of the father over the child until the age of twenty one would be really to set aside the whole course and order of nature and it seems to be it would disturb the very foundation of family life".

The principle enunciated in Re Agar-Ellis came in for trenchant criticism by Lord Denning in Hewer v Bryant[12]. He said, "I would get rid of the rule in Re Agar-Ellis.....That case was decided in 1883. It reflects the attitude of a Victorian parent towards his children. He expected unquestioning obedience to his commands. If a son disobeyed a father he would cut him off with 18. If a daughter had an illegitimate child he would tern her out of the house. His power only ceased when the child became 21. I decline to accept a view so much out of date". His disapproval of absolute parental authority is consistent with the views expressed in J v C[13] where the Court ruled as out of place the assertion in Re Agar-Ellis of a father's power bordering on patria potestas.

10. (1860) 3 E & E 332.
11. (1883) 24 Ch.D 317.
12. (1969) 3 A. E. R. 578 at 582.
13. (1969) 1 All E. R. 788.

It is also consistent with the opinions expressed by Lord Parker, CJ. in R v Howard[14] where he held in a prosecution charging rape of a girl under 16 that it must be proved that there was either lack of her consent or that she was not in a position to decide whether to consent or to resist and added the comment that "there are many girls who know fully well what it is all about and can properly consent". Lord Scarman has termed the decision in Re Agar-Ellis as being "horrendous".

The approach of the House of Lords to the issues in 'Gillick' on appeal was significantly different. From the provisions of the several statutes relied upon in the Court of Appeal it found no encouragement nor any compelling reason for holding that parliament has accepted that a child under 16 cannot consent to medical treatment. Lord Scarman's approach was to find the true principle by a search in the judge made law. There was much to be discarded in the common law except its principle. His goal was to search the overfull and cluttered shelves of law reports for a principle or a set of principles recognised by the judges over the years but stripped of the detail which, appropriate perhaps in earlier times would, if applied today, lay the judges open to criticism for failing to to keep the law abreast of the society in which they live and work. He endeavoured to show the principle of the law that parental rights are derived from parental duty and exist only so long as they are needed for the protection of the person and property of the child. The parental right yields to the child's right to make his own decisions when he reaches a sufficient understanding and intelligence to be capable of making up his own mind on the matter requiring decision. Much reliance was placed on the discussion of parental rights in Blackstone's commentaries where it was declared that the power of the parents over their children is derived from their duty and exists to enable the parent to more effectually to perform his duty and partly as a recompense for his care and trouble in the faithful discharge of it. Lord Scarman set out a theory of parental rights which is defined by their purpose. He said; "the common law has never treated such rights as sovereign or beyond control. Nor has our law treated the child as other than a person with capacities and rights recognised by law.....(rights) exists only so long as they are needed for the protection for the person and property of the child"[15].

A similar selective approach is found in R v D[16] where a father was accused of kidnapping his own child. It expressed the modern approach to the law governing parental right and child's capacity to make his own decisions. The view of the House was that, save where a statute otherwise provides, a minor's capacity to make his or her own decision depends on the minor having sufficient understanding and intelligence to make the decision and is not to be determined by reference to any judicially fixed age limit. It held "the common law, however, while generally immutable in its principles, unless different principles are laid down by statute is not immutable in the way in which it adapts, develops and applies

14. (1965) 3 All E. R. 684 at 685.
15. (1985) 3 All E. R. 402 at 420.
16. (1984) 2 All E. R, 449 at 456.

those principles in a radically changing world and against the radically changed social conventions and conditions".

Lord Denning's view in Hewer v Bryant[17] was that the common law can and should keep pace with the times.

In the 'Gillick' case Lord Fraser in the House of Lords stated the problem before the Court thus; "Once the rule of the parents absolute authority over minor children is abandoned, the solution to the problem in this appeal can no longer be found by referring to rigid parental rights at any particular age. The solution depends upon a judgement of what is best for the child[18]".

Lord Scarman made several attempts to articulate principle in the course of a long judgement. He captured the spirit of the guidelines in the pre - existing common law and finally said; "I would hold that as a matter of law the parental right to determine whether or not their minor child below the age of 16 will have medical treatment terminates if and when the child achieves a sufficient understanding and intelligence to enable him or her to understand fully what is proposed. It will be a question of fact whether a child seeking advice has sufficient understanding of what is involved to give a valid consent in law Until the child achieves the capacity to consent, the parental right to make the decision continues[19]".

Lord Scarman's several formulations of the identical principle extracted from the common law led him to the same destination by various routes He has controlled the concept of consent, using the idea as a technique to explain and justify his conclusions. The speeches of Lord Fraser and Lord Scarman reflect a confidence in autonomy and the welfare principle as the ultimate value which the law must promote.

However, the decision of the House of Lords is open to the comment that it has failed to determine exactly what is it that the child must understand. Lord Fraser said the girl must understand the doctors's advice without explaining this further. Does this mean that she must understand the physical nature of the treatment and its side effects or the wider implications of the situation? Lord Scarman took a broader view; "there is much to be...understood It is not enough that she should have understood the nature of the advice... she must also have sufficient maturity to understand what is involved. There are moral and family questions, especially her relationship with her parents.....the emotional impact of pregnancy and its termination.....the risks to health of intercourse at her age.....".[20]

Lord Templeman took the view that the minor must understand the emotional significance of intercourse and this is the basis of his discenting opinion that girls under 16 cannot be capable of forming such an understanding. He was of the view that it would be a question of fact whether the child seeking advice has sufficient understanding of what is involved to give valid consent in law. Until the child achieves the capacity to consent the parental right to make the decision continues save in exceptional circumstances. He was further of the

17. (1969) 3 All E. R. 578 at 582.
18. (1985) 3 All E. R. 402 at 412.
19. (1985) 3 A. E. R. 402 at 423.
20. (1985) 3 All E, R. 402 at 424.

view that girls would be best protected by the absence of contraceptive facilities. "Some girls would came under pressure if contraceptive facilities were known to be available".

The House of Lords held in 'Gillick', that, providing the girl in question has given a valid consent, the provision of contraceptive advice and treatment without parental consent need not be unlawful, and that there exists no parental right of control to be interfered with by such action. Thus it is apparent that the dominant holder of this power to consent is the child but while she is legally incapable of exercising it the parents hold it, as if on trust.

The judgement in 'Gillick' has focussed on parental rights in relation to countervailing rights in children. The modern function of parental rights is to prepare children and adolescents for maturity and in practice wise parents relax their control gradually as the child develops and encourage him or her to become increasingly independent. As children mature they will receive corresponding emancipation from parental power in accordance with the dwindling justification for paternalism. Parental right "is a dwindling right which the Courts will hesitate to enforce against the wishes of the child, the older he is. It starts with the right of control and ends with little more than advice"[21].

Considering whether juvenile self determination should be allowed in the field of religious belief, Amy Gutman has written, "The justification for defining adolescents as legal minors is that their own capacities for free exercise are limited and can be more fully developed by paternalistic supervision. We assume that as these capacities gradually develop, the freedom to exercise them stimulates their further development. When a child is mature enough to distinguish his religious beliefs from those of his parents, his beliefs ought to be consulted"[22].

In the context of medical treatment while children are incapable of understanding the nature of the treatment and therefore in need of protection against receiving it against their interests only a parent may give a legally effective consent. In this respect the parent acts as an agent for the child rather than as an owner. The emancipation of a mature minor may be seen not as a defeat of parental control but as a successful discharge of parental responsibility. The general rule after 'Gillick' is when children understand what is going on they attain independence. Children's rights have thus acquired legal significance after 'Gillick'.

---

21. Lord Denning in (1969) 3 All E. R. 578 at 582.
22. Children, Paternalism and Education : A liberal argument. (1980) 9 Philosophy and Public Affairs 338 at 355.

With Best Compliments

from

Beauty Silk House

BAZAAR, MAIN STREET,

KALMUNAI.

With Best Compliments

from

Welcome Jewellery

MAIN STREET,

SAINTHAMARUTHU.

"நீதிமுறைக் கவனம்"

The Doctrine of Judicial Notice

எந்த ஒரு வழக்கிலும் ஆய்நிகழ்வு கூளா (fact in issue), இயைபான நிகழ்வுகளோ (relevant facts) நேரடிச்சான்று மூலம் (direct evidence) அல்லது ஏற்கத்தகு கேள்விச் சான்றின் மூலம் (admissible hearsay) அல்லது, அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மூலம் எண்பிக்கப்படல் வேண்டும் என்பது பொதுவிதி, ஆனால் ஏனைய பொது விதிகளைப் போலவே இதற்கும் விதிவிலக்குகள் இருக்கத்தான் செய்கின்றன. அவையாவன.

1) நீதிமுறைக் கவனத்திற்குட்படும் நிகழ்வுகள் (judicial notice)

2) விசாரணைக்காக ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்கள் (formal admissions) இவற்றை எண்பிப்பதற்கு வழக்கு விளக்கத்தின் போது சாட்சிகள் அழைக்கப்படத் தேவையில்லை.

இவற்றிலே நீதிமுறைக் கவனம் என்னும் கோட்பாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. Thayer நீதிமுறைக் கவனம் பற்றித் தனது கருத்தைத் தெரிவிக்கும் போது "நீதிமுறைக் கவனமானது நிகழ்வுகளின் எண்பிப்புடன் சம்பந்தப்பட்டதல்ல, மாறாக, நீதிமுறை நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்டது" என்கிறார். Stephen தனது கருத்தில் இவற்றை எண்பிக்கப்படத் தேவையில்லா நிகழ்வுகள் என்றும், சான்றுகள் அல்லாத வேறு நிகழ்வுகளால் எண்பிக்கப்படுபவை என்றும் விபரித்துள்ளார்.

நீதி சார்பான விளக்கங்கள் அல்லது விசாரணைகளின் போது இக்கோட்பாடானது முக்கிய இடம் பெறுதற்கான காரணங்களாக இரண்டு காரணங்களை நாம் முன்வைக்கலாம். ஒன்று, சில நிகழ்வுகள் எல்லோராலும் அறியப்பட்டதாகவும், பகிரங்கமானதாகவும் இருக்கும். இவ்வாறான நிகழ்வுகளுக்கு எண்பிப்பைத் தேவைப்படுத்தல் வீண் பண நேரச் செலவுகளை ஏற்படுத்துவதோடு இல்லாமல் வெளிப்படையான நிதர்சனங்களைப் (obvious realities) புறக்கணிப்பதுமாகும். மற்றையது தீர்ப்புக்களின் ஒரு சீர்த்தன்மை

செல்வி : சந்திரகி சிவதாசன்
இறுதி நிலை ஆண்டு

(uniformity) சட்டத்துறையில் ஒரு பிரதான கொள்கை ஆகும். நீதிமுறைக் கருத்துக்களில் ஏற்படும் கருத்து வேறுபாடு அபாயம் விளைவிப்பதாகும் எனவே, சட்டமானது சில நிகழ்வுகளை நீதிமுறைக் கவனம் என்ற கோட்பாட்டினுள் வரையறுத்து, அவற்றை எண்பித்தல் தேவையில்லாதது என விதிப்பதால் அச்சுறுத்தப்பட்ட நிகழ்வு கள்சம்பந்தமாக வேறுபட்ட முடிவுகள் எழுவது தவிர்க்கப்படுகின்றது.

எமது சான்றியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 56 நீதி முறைக் கவனத்திற்குட்படுத்தப்படும் நிகழ்வுகளுக்கு எண்பிப்பானது அவசியமில்லை எனவும், பிரிவு 57 அந்நிகழ்வுகள் யாவை எனவும் விபரித்துக் கூறுகிறது. பிரிவு 57, 14 உப பிரிவு

கள் மூலம் நீதிமுறைக்கவனத்திற்குட்படும் நிகழ்வுகளை வகைப்படுத்துகிறது.

இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கின்ற அல்லது அமுல்படுத்தப்படப் போகின்ற அல்லது, எதிர்காலத்தில் வரவிருக்கும் எல்லாச் சட்டங்களும், சட்ட வலுக் கொண்ட நியதிகளும் அந்நியதி அல்லது சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து நீதிமுறைக் கவனத்தின் படற் பாலன. மேலும்,[1] சட்டவாக்கத்துடன் சம்பந்தப்பட்ட வேறு நிகழ்வுகளும் நீதிமுறைக் கவனத்தின் பாற்பட்டன எனக் கடந்த காலத் தீர்ப்புக்களில் தீர்க்கப்பட்டுள்ளன. எனவேஅதன்படி, ஒரு சட்டமானது நடைமுறைக்கு வரும் திகதியும் நீதிமுறைக் கவனம் எனும் கோட்பாட்டினுள் அமையும் எனவும் கூறப்பட்டது. (இது சம்பந்தமாக) Jayakodi Vs Silva [2] எனும் வழக்கில் ஆராயப்பட்டது. இவ்வழக்கில் 1939 ம் ஆண்டின் 52 ம் இலக்கக் கட்டளைச் சட்டமாகிய Petrol (Control of Supplies) Ordinance இன் கீழான அட்டவணைப்படி, தமது விற்பனை, விநியோகங்கள் பற்றிய பதிவுகளை அக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 11(b)ல் தேவைப்படுத்தப்பட்டவாறு செய்யத் தவறிவிட்டதால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 16(1) ன் கீழ் குற்றமிழைத்தவராகிறார்கள் என்ற குற்றச் சாட்டிலிருந்து குற்றஞ் சாட்டப்பட்டவர்களை விடுவித்தற்கான காரணங்களுள் ஒன்றாக நீதவான் குறிப்பிட்ட ஒரு காரணமாவது, அதாவது வழக்குத் தொடுனர் இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வருவதான ஒரு திகதியை ஆளுநர் நிர்ணயித்திருக்கிறார் என்பதை எண்பிக்கத் தவறிவிட்டார் என்பதாகும். ஆனால், மேன்முறையீட்டின் போது, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி இவ்வாதத்தை ஏற்காது, குறித்த அக் கட்டளைச் சட்டமானது நடைமுறைக்கு வருவதான ஆளுநரால் நிர்ணயிக்கப்பட்ட திகதி வர்த்தமானி அறிக்கையில் வெளியிடப்பட்டதற்கேற்ப, அத்திகதியிலிருந்து அச்சட்டம் நடைமுறைக்கு வரும் என்றும், எமது சான்றியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 57 ன் படி, குறித்த கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து அது நீதி நெறிக் கவனத்துக்குட்பட்டதாகக் கொள்ளப்படவேண்டும் எனவும் கூறினார். அவ்வாறே சட்டவலு கொண்ட அறிவுறுத்தல்களும் நீதி நெறிக் கவனத்தின் பாற்பட வேண்டும் எனவும் கூறினார்.

மேலும் நீதிமுறைக் கவனம் என்ற இக்கொள்கையின் வரையறைகள் உயர் நீதிமன்ற வழக்காகிய Romams Singho Vs Abeyasinghe [3] வழக்கில் எடுத்துக் கூறப்பட்டன. இது ''இத்தீவுக்கான கூட்டுறவுச் சங்கங்களுக்கான பதிவாளர் அல்லது உதவி அல்லது பிரதி பதிவாளரை, அமைச்சர் அவசியமெனப்படுமிடத்து நியமிக்கலாம் என்றும், அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட கட்டளை மூலம் பதிவாளரின் எல்லா அதிகாரங்களையும் அல்லது குறித்த சில அதிகாரங்களை மட்டும் இவ்வாறான பிரதி அல்லது உதவிப் பதிவாளர்களுக்கு வழங்கலாம்'' என்ற சட்ட ஏற்பாடு பற்றியது. Pulle J அவர்கள் தனது தீர்ப்பில், ''பதிவாளரின் அதிகாரங்களை உதவி அல்லது பிரதிப் பதிவாளர்களுக்கு வழங்குவதான அமைச்சரின் கட்டளை எமது சான்றியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 57(1) இன் ''நோக்கெல்லையினுள் வராது என்றும், பிரதிப் பதிவாளரின் பதவி நியமனமும், அப்பதவிக்கே உரித்தான பணிகளும் மட்டுமே நீதி முறைக் கவனத்தின் பாற்படும் என்றும், விரிவுபடுத்தப்படக்கூடிய அவரது பணிகள் பற்றிய அமைச்சரின் கட்டளை நீதிமுறைக் கவனம் என்ற கோட்பாட்டின் கீழ் அமையாது என்றும் கூறினார்.

அத்துடன்,

1) எமது பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட அல்லது கொண்டுவரப்படும் பகிரங்க, உள்ளூராட்சி, தனியார் சட்டங்கள்;[4]

2) முப்படைகளுக்குமான உறுப்புரைகள்;[5]

3) இலங்கைப் பாராளுமன்றச் சட்ட வாக்க நடவடிக்கைகள்; [6]

4) இலங்கையின் பகிரங்க இலச்சனை[7];

5) இலங்கை நீதி மன்றங்களினதும், பிரசித்த நொத்தாரிசுகளினதும் இலச்சினைகள்;[8]

6) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அந்நேரத்தில் நடைமுறையிலிருக்கும் அரச அலுவலகப்பதவி ஏற்பு அப்பதவிக்கான பெயர்கள், தொழிற்பாடுகள், ஒப்பங்கள்;[9]

7) இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாடு அல்லது இறைமையின் இருப்பு, பெயர், தேசியக்கொடி; [10]

8) உலக நிலப்பிரிவுகள், தமிழ், சிங்கள, ஆங்கிலச், சொற்களின் அர்த்தங்கள், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொது உற்சவங்கள், பொதுவிடுமுறைகள்; [11]

9) இலங்கையின் ஆள்புல நிலப்பரப்பெல்லையும், அதன்பிரிவுகளும்,[12]

10) இலங்கைக்கும் வேறொரு அரசுக்கும் அல்லது, இலங்கைக்கும் ஏதாவது ஒரு குழுவுக்கும் இடையிலான யுத்த ஆரம்பம், தொடர்ந்து நடத்தல்; யுத்தமுடிவு சம்பந்தமான விடயங்கள்; [13]

11) நீதிமன்ற அலுவலர்கள், உறுப்பினர்கள், நீதிமன்றத்தில் தோற்றமளிக்கச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட சட்டத்தரணிகள்; [14]

12) பெருந்தெருக்கள், நிலம், கடல் பற்றிய விதிப்புகள்; [15]

13) மேலும், சட்டத்தால் நீதிமுறைக் கவனத்துக்குட்படுத்தப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட வேறு விடயங்கள்; [16]

என்பனவே பிரிவு 57 க்கான உபபிரிவுகளின் கீழ் நீதிமுறைக் கவனத்துக்குட்படுத்தப்பட வேண்டிய நிகழ்வுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

அடுத்து, எமது சான்றியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 57 ன் கீழான நீதிமுறைக் கவனத்தின் பாற்படலான விடயங்கள் பூரணமானதா? நிச்சயமாக மேற்குறிப்பிட்ட விடயங்கள் மட்டுமா நீதிமுறைக் கவனத்தின்பாற்படலாம்? எனும் ஒருவினா எழுமாயின், நிச்சயமாக இல்லை எனும் ஒரு பதிலையே எமது நீதிமன்றங்கள் தமது தீர்ப்புக்கள் மூலம் எமக்கு அளித்துள்ளன மேற்குறிப்பிடப்பட்ட 14 உப பிரிவுகளுக்கும் மேலாக நீதிமன்றமானது பொதுச் சரித்திரம், இலக்கியம், விஞ்ஞானம், கலை சம்பந்தமான விடயங்கள் எழும் போது அதற்குரிய பொருத்தமான புத்தகங்களை அல்லது ஆவணங்களை நாடலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. Kishanlal Vs Sohaslal[17] எனும் இந்திய வழக்கில், "ஒரு கிராமமானது ஒருவருக்கு முன்னைய அரசரால் வழங்கப்பட்டதா? இல்லையா என்பது சரித்திரம் சம்பந்தப்பட்ட விடயமல்ல எனக் கூறப்பட்டது. Bogstra Vs Co-operative Condensed Fabrik[18] வழக்கில் Jayatilleke J கூறியதாவது : பிரிவு 57 ன் மூலம் ஒரு குறித்த தொகுதி நிகழ்வுகள் நீதிமுறைக் கவனத்தின் பாற்படும் எனத் தரப்பட்டிருப்பினும். அவை பூரணமானவையோ, வரையறுக்கப்பட்டனவோ அல்ல. வேறும் விடயங்களை இக்கோட்பாட்டினுள் கொண்டு வரலாமா இல்லையா என்பது நீதிமன்றத்தின் தற்றுணிபு அதிகாரத்தில் (discretionary power) தங்கியுள்ளது எனக் கூறினார் மேலும், Food and Price Control Inspector Vs Piyasena [19] வழக்கில், பிரிவு 57 ல் கூறப்பட்ட விடயங்களை நீதிமுறைக் கவனத்தில் எடுப்பதற்கு நீதிமன்றங்கள் கட்டுப்பட்டவை ஆயினும், வேறும்பல விடயங்களையும் நீதிமன்றங்கள் நீதிமுறைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்றும், எனினும் அவ்விடயங்களைக் கட்டாயமாக நீதிமுறைக் கவனத்தில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறான விடயங்கள் நீதிமன்றத்தின் தற்றுணிபு அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்படலாம்?

1) எல்லாராலும் அறியப்பட்ட, நியாயமான, சர்ச்சைக்குட்படாத நிகழ்வுகள்;

2) உடனடியாகத், திட்டவட்டமாக, கேள்விக்கு இடமற்ற முறையில் தெளிவாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படக்கூடிய விடயங்கள் என்பன நீதிமன்றங்கள் நீதிமுறைக்கவனம் எனும் விடயம் தொடர்பில் தற்றுணிபைப் பாவிக்கும் போது மேற்படி இருசோட் பாடுகளும் நீதிமன்றங்களை வழிப்படுத்த வேண்டும் என கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலி வீதியானது ஒரு பெருந்தெரு என்பதும், [20] ஓட்டப்பந்தயங்கள் பொதுவாகக் குறித்த இடத்தில், குறித்த நாட்களில் நடப்பன என்பதும் [21] எமது நீதிமன்றங்களால் நீதி முறைக்கவனத்துக்குட்படுத்தப்பட்ட நிகழ்வுகளாகும். தற்கால கோட்பாடுகளின் படி நீதி முறைக்கவனத்தின் பாற்படலான நிகழ்வுகளின் செயற்பரப்பை அதிகரிக்கலாம். என்ற கருத்தை ஆங்கில நீதிமன்றங்கள் மட்டுமல்ல எமது நீதி மன்றங்களும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவே தெரியவருகிறது. [22]

மேலும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் நீதிமுறைக் கவனம் எனும் கோட்பாட்டின் வரையறைகளைத் தீர்மானிப்பதற்கு நீதிபதிகள் தமது தனிப்பட்ட அறிவைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என இலங்கை முச்சுகளில் தீர்க்கப்பட்டுள்ளது. Commonwealth Shipping Representative Vs P & O Branch Services [23] எனும் ஆங்கில வழக்கில் Lord Sumner கருத்துத் தெரிவிக்கையில், நீதி முறைக் கவனம் பற்றித் தீர்மானிக்கும் போது நீதிபதிகள் தமது பொது, தனிப்பட்ட அறிவைப் பயன்படுத்திக் கொள்ளவும், அது தொடர்பாக சம்பந்தப்பட்ட இடங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் விசாரணைகளை நடத்தவும் தகுதி உடையவர்கள் எனக் கூறினார் Menon Vs Lantine [24] வழக்கில், Mosley SPJ கூறுகையில், ஒரு நீதிபதியானவர் தனது தனிப்பட்ட அறிவைக் கூட நீதிமுறைக் கவனம் சார்பில் உபயோகிக்கத் தகுதி உடையர் என்றும், எனினும் தனது கருத்தை அவர் கட்சிக்காரர்களுக்குக் கூறி அவர்கள் அதை ஆட்சேபியாத சந்தர்ப்பத்திலேயே இது சாத்தியமானது என்றும், மேலும், பொது சரித்திர, விஞ்ஞான, அரசியல் விடயங்களில் கூட அவர் தனது தனிப்பட்ட பொது அறிவைப் பாவிக்கலாம் எனவும் கூறப்பட்டது. ஆனால், இதற்கு மாறாக மாவட்டப் பிரிவுகள் சம்பந்தப்பட்ட விடயத்திலும் [25] சிங்கள மொழியிலான ஒரு சொல்லின் கருத்து சம்பந்தப்பட்ட விடயத்திலும் [26] நீதிபதி தனது தனிப்பட்ட அறிவைப் பாவிக்கும் உரிமை உடையவரல்லர் எனவும் கூறப்பட்டது.

இத்தோடல்லாமல், நீதிபதி தேவைப்பட்ட விடயங்களில் தனது அறிவைக் குறை நிரப்புவதற்காக அது தொடர்பான நூல்களையும், ஆவணங்களையும் கலந்தாலோசிக்கும் உரிமை உடையவர் இதற்கான ஏற்பாட்டையும் பிரிவு 57 கொண்டுள்ளது. ஆனால் இங்கு நீதிமன்றமானது புத்தகங்களையும், ஆவணங்களையும், பார்வையிடும் செயலானது உண்மையில் வழக்கு விளக்கத்தின் போது ஒரு சான்றாகக் கவனத்தில் கொள்ளப்படுகிறதா அல்லது, வெறுமனே நீதிபதியின் அறிவைக் குறை நிரப்பி நீதிமுறைக்கவனம் சம்பந்தமான

முடிவை எடுக்க மட்டும் தான் பயன்படுத் தப்படுகிறதா என்பது கவனிக்கப்படவேண் டிய ஒரு முக்கிய விடயமாகும். இவ்வேறு பாடானது நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இச்செயல் சான்றை வரவழைக்கும் ஒரு செயலாக அமையின் அச்சான்றை மறுதலிக்கும் சந் தர்ப்பம் இச்சான்றை வரவழைப்பதினால் எக்கட்சியினர் பாதிப்படைகிறார்களோ அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். மேலும் விளக்கம் ஜூரியின் முன்னாக நடை பெற்றிருக்குமாயின் இவ்வாறாக வர வழைக்கப்பட்ட சான்றின் முழு விபரமும் ஜூரியின் கவனத்திற்கு கொண்டுவரவேண் டும். வெறும் குறைநிரப்பும் நோக்கத்து டன் மட்டும் இத்தகவல்கள் வரவழைகப் பட்டிருப்பின் இத்தேவைப்பாடுகள் பின் பற்றப்படத்தேவையில்லை.

எவரொருவர் ஒரு நிகழ்வை நீதி முறைக் கவனத்துக்குட்படுத்தும்படி நீதி மன்றைக் கோருகிறாரோ, அவரை அதற் குரிய புத்தகத்தை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்கும் படி கட்டளையிடலாம், அவ் வாறு அந்நபர் அதைச் சமர்ப்பிக்கத் தவ றுமிடத்து அவரது கோரிக்கையை நிரா கரித்து, அந்நிகழ்வை நீதிமுறைக் கவனத் தின் பால் சேர்க்க மறுக்கலாம் என்ற ஏற் பாடும் பிரிவு 57 ல் உள்ளது. இது Food and Price Control Inspector Vs Piyasena[27] எனும் வழக்கிலும Public Prosecutor Vs Thippayya[28] எனும் இந்திய வழக்கிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறாக நீதி முறைக் கவனம் எனும் கோட்பாடு காலம் செல்லச் செல்ல மிக விரிந்து செல்வதாகவும், அதன் நோக் கெல்லையானது மிகவும் பரந்தும் காணப் படுகின்றது. மேலும் இக்கோட்பாடானது நீதிமன்ற நடவடிகைகளில் சக்தியையும், பணவிரயத்தையும் தவிர்க்கும் ஒரு மூலமாக மட்டும பயன்படுத்தப்படாமல், நீதித்துறை நடவடி முறையின் சமகாலச் சிக்கலாகிய சட்ட தாமதத்தை (Law delay) ஓரளவுக் கேனும் நிவர்த்தி செய்யும் ஒரு காரணி யாகப் பிரயோகிக்கப்படல் வேண்டும் என் பது தெளிவு.

விளக்கக் குறிப்பு

1. Evidence Ordinance sec 57 (1)
2. (1943) 44 NLR 379
3. (1951) 54 NLR 261
4. Evidence Ordinance sec 57 (2)
5. ,, ,, sec 57 (3)
6. ,, ,, sec 57 (4)
7. ,, ,, sec 57 (5)
8. ,, ,, sec 57 (6)
9. ,, ,, sec 57 (7)
10. ,, ,, sec 57 (8)
11. ,, ,, sec 57 (9)
12. ,, ,, sec 57 (10)
13. ,, ,, sec 57 (11)
14. ,, ,, sec 57 (12)
15. ,, ,, sec 57 (13)
16. ,, ,, sec 57 (14)
17. (1955) 5 Raj 191
18. (1943) 44 NLR 272
19. (1955) 57 NLR 310
20. Menon Vs Lantine (1941) 43 NLR 34
21. Galatritiyawa Vs Inspector Joseph (1966) 69 NLR 152
22. Bogstra Vs Co-operative Condensed Fabrik (1943) 44 NLR 272 at p. 276
23. (1923) AC 191 at p. 212
24. (1941) 43 NLR 34
25. Hamsa Naina Vs Inspector of Police Gampaha (1968) 72 NLR 166
26. Perera Vs Veloe (1953) 54 NLR 551
27. (1955) 57 NLR 310
28. (1949) Mad 371

With Best Compliments

from

ESWARAN BROTHERS

267, Sea Street, Colombo - 11.
Tele : 422744, 432599, 422864, 431741

Importers of Sugar, Cement, Canned Fish and other Food Items

Wholesale Outlet at :
149 4th Cross Street,
Colombo - 11.

Tele : 26239, 28805

நிருவாகச் சட்டம் தோற்றமும் வளர்ச்சியும்

Administrative Law - Its Origin and Growth

Mr J. M. SWAMINATHAN *

This article traces the history of the development of new branch of Law - known as Administrative Law in the local system of Sri Lanka. This is a Comprehensive analysis of the area of Administrative Law.

நிருவாகச் சட்டம் கடந்த அரை நூற் றாண்டு காலத்தில் சட்ட அறிஞர், வழக் கறிஞர் ஆகியோரின் கவனத்தை ஈர்த்துள் ளது. 1964 ஆம் ஆண்டில் ரீட் பிரபு ஆங் கில சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''எம்மிடம் வளர்ச்சியுள்ள நிருவாகச்சட் டம் இல்லை – ஏனெனில் அண்மைக்காலம் வரை எமக்கு அப்படி ஒரு சட்டம் அவசி யமாகத் தென்படவில்லை'' – எனக் கூறி னார். (1)

1970 ஆம் ஆண்டில் டென்னிங் பிரபு ''ஆங்கில சட்டத்தில் நிருவாக உத்தியோ கத்தர் ஒருவர் 'droit administratif' எனப் படும் பிரெஞ்சு நிருவாகக் கோட்பாட்டை வரவழைக்கமுடியாது எனக் குறிப்பிட் டார். (2)

1971 இல் டெனிங் பிரபு இங்கிலாந் தில் இன்று வளர்ச்சியுற்ற நிருவாகச் சட் டம் உண்டு எனக் கூறினார். (3)

1975 இல் ரீட் பிரபு தமது பதவியிலி ருந்து இளைப்பாறியபொழுது தமது இரு பத்து இரண்டு வருடம் பிரபுக்கள் சபை நீதியரசராக கடமையாற்றிய காலத்தில் தமக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்த தீர்ப்பு Ridge Vs Baldwin எனக் கூறியுள் ளார். (4)

1970 – 1990 ஆம் காலப் பகுதியில் நிருவாகச் சட்டம் வளர்ச்சியுற்றது எனக் கூற இயலாது என நீதியரசர் வுல்ப் குறிப் பிட்டுள்ளார். (5) இங்கிலாந்திலும் ஆங்கில சட்டம், இந்த நூற்றாண்டின், முதல் அரைப் பகுதியில் வளர்ச்சி அடையாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் பேராசிரி யர் ஏ. வி. டைசியின் கருத்துக்கள் என லாம். (6) டைசியின் கருத்துப்படி பிரித் தானியாவில் பிரான்ஸ் நிருவாகச்சட்டம் என ஒன்று இல்லை எனக் கூறினார்: இதற்கு பிரான்சில் நிருவாகச் சட்ட வழக் குகளை விசாரிப்பதற்கு விசேட நீதிமன் றங்கள் இருக்கின்றது எனவும் அவை இங் கிலாந்தில் இல்லை எனவும் குறிப்பிட் டார். (7) ஆனால் இக்காரணத்துக்காக மாத்திரம் இங்கிலாந்தில் டைசியின் காலத் தில் நிருவாகச் சடடம் இருக்கவில்லை

*LL.B. (Cey.) LL.M. Phill (Colombo) Attorney-at-Law, Lecturer – Sri Lanka Law College

எனக் கூறுவது சரியென ஏற்றுக்கொள்ள முடியாது. (8) இன்றும் பிரான்சில் நிருவாகச் சட்டம் பற்றி விசாரிக்க விசேட நீதிமன்றங்கள் உள்ளன. அக்காரணத்துக்காக ஆங்கில சட்டத்தில் நிருவாகச் சட்டம் இன்று இல்லை என ஒருவரும் கூறமாட்டார்கள். (9)

இலங்கையில் 1931ல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்படமுன்னர் அரசாங்கம் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை மாத்திரம் அதன் முக்கிய பணிகளாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் அரசாங்கம் நாட்டின் பொருளாதார சமுதாய வளர்ச்சியில் முக்கிய பங்காற்ற வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இங்கிலாந்திலும் 1867க்கு முன்னர் இந்நிலைதான் இருந்து வந்தது. அவ்வாண்டில் Representation of Peoples Act என்னும் சட்டம் இயற்றிய பின்னர் அரசாங்கத்தின் கடமைகள் மேலும் விரிவானவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. (10)

1928 ஆம் ஆண்டு டொனமூர் ஆணையாளர்குழு இலங்கையில் சமூக நல சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதைக் குறிப்பிட்டது. (11) வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்க ஆணைக்குழு சிபார்சு செய்தது. இதன் காரணமாக பொது மக்கள் அரசாங்கத்தின் கொள்கைகளில் ஓரளவுக்கு பங்குகொள்ள முடிந்தது. எனவே சமூக நல சட்டங்கள் பல இயற்றப்பட்டன. (12) இரண்டாவது உலக யுத்தத்தின், பின்னர் அரசு வர்த்தகத்திலும் இறங்கியது. இதன் காரணமாக நிருவாக உத்தியோகத்தர், சபைகள் மீது சட்டம் கண்காணிக்க வேண்டிய நிலை உருவாகியது. நிருவாகத்தில் ஈடுபடுவோர் தமது கடமைகளையும் பணிகளையும் சரிவரப் புரிவதற்கு சட்டம் வழிவகுக்க வேண்டியதாகி இருந்தது.

ஆங்கில சட்டத்தில் நிருவாகச் சட்டம் வளர்ச்சி அடைவதற்கு டைசியின் கருத்துக்கள் தடையாக இருந்தது என ஏற்கனவே பார்த்தோம். அவரின் கருத்துப் படி 'சட்டவாட்சிக் கோட்பாட்டின்' கீழ் எல்லோரும் சாதாரண சட்டத்தின் கீழ் சாதாரண நீதிமன்றங்களில் விளங்கப்படவேண்டும்' எனக் கூறினார். (13) மேலும் பிரான்சில் வழங்கும் Droit Administratif என்னும் நிருவாகச் சட்டம் ஆங்கிலபொதுச் சட்டத்துக்கு முழுதும் மாறானது என அவர் கருதினார். (14) இக் கருத்து டைசியின் காலத்திலும் முற்றிலும் சரியெனக் கொள்ள இயலாது. அரசுக்கு இருந்த சலுகைகளை இவர் கருத்தில் கொள்ளவில்லை. 'உதாரணமாக பொதுச் சட்டத்தின் கீழ் அரசு பிழை செய்ய இயலாது' என்ற நிலை ஆங்கில சட்டத்தில் 1947 வரை இருந்தது. டைசியின் காலத்திலும்பல உத்தியோகத்தர்களும் திணைக்களங்களும் அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினைகளை விசாரிக்க விசேட நீதிமன்றங்கள் தேவையா என்பது கேள்வி அல்ல, இத்தகைய பிரச்சினைகளை தீர்க்க சட்டத்தில் வழிமுறைகள் உண்டா என்பதே ஆராய வேண்டிய விடயம். இங்ஙனம் நோக்கினால் டைசியின் கருத்து அவர் வாழ்ந்த காலத்திலும் சரியென கொள்ள முடியாது என்றே கூற வேண்டும். (15)

டைசியின் காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த பேராசிரியர் மெயிட்லன்ட் இங்கிலாந்தில் நிருவாகச் சட்டம் வளர்ச்சி அடைவதற்கான அறிகுறிகள் இருப்பதாகக் குறிப்பிட்டார். (16) 1915 ஆம் ஆண்டில் டைசியும் தமது முன்னைய கருத்தை Board of Education Vs Rice (17) Local Government Board Vs Arlidge (18) ஆகிய தீர்ப்புகளுக்குப் பிறகு ஓரளவு மாற்றி அமைத்தார். இங்கிலாந்திலும் Droit Administratif போன்ற சட்டம் புகுத்துவது பற்றி அவர் குறிப்பிட்டார். எனினும் இங்கிலாந்தில் சட்டவாட்சி கோட்பாடு இருப்பதை மீண்டும் வலியுறுத்தினார் (19)

சட்டவாட்சி கோட்பாட்டின் முக்கிய நோக்கம் நிருவாகம் சட்டத்துக்குட்பட்டு நடக்க வேண்டும் என்பதாகும். (20) நீதிமன்றம் நிருவாகத்தின் தீர்ப்புகளை கண்காணிப்பதால் மக்களின் சுதந்திரம்,

உரிமைகள் ஆகியவை சட்டப்படி பாது காக்கப்படுகின்றன. மேலும் இன்றைய சூழ்நிலையில் நிருவாகத்தில் தற்றுணிபு அதிகாரம் தேவை. அதனைச் சரிவர கட் டுப்படுத்த நீதிமன்றம் துணைபுரிகின் றது. (21) எனவே நீதிமன்றங்கள் நிரு வாகத்தின் மீது நியாயாதிக்கம் செலுத்தி அதன் தீர்ப்புகளை மீளாய்வு செய்வதால் சட்டவாட்சி கோட்பாடு மேலும் வலுவ டைகின்றது என கூறவேண்டும். (22) பிரான்சு நாட்டின் நிருவாகச் சட்டத்தின் detournement de pouvoir (abuse of power) யையும் ஆங்கிலச் சட்ட ultravires கோட் பாட்டையும் பற்றி ஒப்பு நோக்கும்போது சில விடயங்களில் பிரான்ஸ், சட்டம் ஆங் கில சட்டத்தை விடச்சிறந்தது என்ற கருத்தை பேராசிரியர்கள் பிரவுண், கார் னர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். அவர் கள் droit administratif, ஆங்கில சட்டத் தையும் பார்க்க பலம் வாய்ந்தது என கூறுகின்றார்கள். (23) பேராசிரியர் ஜே. எச். மோர்கன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் நிலவும் நிருவாகச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, இவ்விரு நாடுகளிலும் இங்கிலாந்தில் சில சமயம், சட்டப்படி கடப்பாடு அற்றவரும் கடப்பாடுள்ளவ ராகக் கருதப்படுபவர் எனக் கூறுகின் றார். (24) பிரிட்மனின் கருத்துப்படி பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிலவும் நிருவாகச் சட்டமுறை ஆங்கிலேய நிருவாகச் சட்டமுறையிலும் பார்க்கச் சிறந்தது (25) என்றாலும் பிரான்ஸ் சட் டத்திலும் குறைகள் இல்லை எனக் கூற இயலாது, பிரான்ஸ் சட்டத்தில் மிகுந்த கால தாமதம் ஏற்படுவதாக பேராசிரியர் ஹரோல் ஹார்லோ காட்டியுள்ளார் (26)

இங்கிலாந்தில் 1929 ஆம் ஆண்டு கலா நிதி ஈ. ஜே. போர்ட் நிருவாக சட்டம் பற்றி முதன்முதல் நூல் வெளியிட்டார். (27) அடுத்த ஆண்டு பேராசிரியர் றொப் சன் தமது நூலை வெளியிட்டார். (28) டைசி ஒரு முறை ஒரு பிரெஞ்சு வழக்க றிஞரைப் பார்த்து ''இங்கிலாந்தில் நிரு வாகச் சட்டம் என்று ஒன்று இல்லை, அது பற்றி நாம்அறியவும் தேவை இல்லை'' என்று கூறினார். எனப்படுகின்றது. (29) 1935 இல் ஆங்கிலேய நீதியரசர் ஹீவார்ட் பிரபு 'நிருவாகச் சட்டம் என்பது ஐரோப் பியர் கண்ட சொற்றொடர்' எனக் குறிப் பிட்டார். (30) சில வருடங்களுக்கு முன் னர் ஆங்கிலேய நிருவாகச் சட்டம் திருப் திகரமான நிலையில் உள்ளதா என்பது பற்றி அறிஞர் சந்தேகம் எழுப்பினார்.(31)

நிருவாகச் சட்டத்தின் வரைவிலக் கணம், அது எவ்விடயங்களை உள்ளடக் கும் என்பதைப் பற்றியும் பலவித கருத் துக்களை வழங்கியுள்ளனர். (32) இருப தாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நீதி மன்றங்கள் நிருவாக அதிகாரிகள் தமது அதிகாரங்களை எங்ஙனம் பிரயோகிக்கின் றனர் என்பது பற்றி அதிக கவனம் எடுக்க வில்லை. (33) பல அறிஞர் அரசின் நிரு வாக பரவல்பற்றி அச்சம் தெரிவித் தனர். (34) பொதுச்சட்ட நிருவாகச் சட் டம் வெற்றியளிக்கவில்லை என பிரிட்மன் கூறுகின்றார். (35) இக் காலப்பகுதியில் நீதிமன்றங்கள் அரசின் தீர்ப்புகள் பற்றி சர்ச்சை எழுப்ப விரும்பவில்லை. (36) எனினும், 1963ல் ஆங்கில நிருவாகச் சட் டத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. Ridge Vs Baldwin தீர்ப்பைத் தொடர்ந்து ஆங்கில நிருவாகச் சட்டத்தில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது.

ஹீவார்ட் பிரபு 1929 ஆம் ஆண்டில் New Despotism என்னும் நூலை வெளி யிட்டார். இந்நூலில் அவர் நிருவாகத் துக்கு அதிகமான செல்வாக்கு இருப்பதா

கவும் அதன் அதிகாரங்களைத் துஷ்பிர யோகம் செய்யச் சந்தர்ப்பம் இருப்பதா கவும் அவர் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அமைச்சர்களின் அதிகாரம் பற்றி ஆராய இங்கிலாந்தில் ஒரு ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. (37) இவ் வாணைக்குழு ஆங்கில சட்டம் டைசியின் சோடபாடுகளில் இருந்து விலகிப்போகின் றதா என ஆராய வேண்டியிருந்தது. (38) 1932இல் வெளியிட்ட தமது அறிக்கையில் ஆணைக் குழு, ஆங்கிலச் சட்டத்தில் பிழை இருப்பதாகக் கூறவில்லை. எனினும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யச் சந்தர்ப்பம் இருபபதாக ஏற்றுக்கொண்டு, அதை நிவர்த்தி செய்ய பல முறைகளை சிபார்சு செய்தது. (39) இதனைத் தொடர்ந்து இங்கிலாந்தில் நிருவாகசபை கள் பற்றி விசாரணைக் குழு ஒன்றுநிய மிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்துநிரு வாக சபைகள் செயற்படும் முறைபற்றிபல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. (40) 1958இல் இங்கிலாந்தில் இச்சபைகளின் அதிகாரத்தைக் கண்காணிக்க நடவடிக் கையைச் சீரமைக்கவும் சட்டம் இயற்றப் பட்டது. (41) இம்முயற்சிகளால் ஆங்கில நிருவாகச் சட்டத்தில் பெரிய முன்னேற் றம் ஏற்பட்டது.

1960இல் இங்கிலாந்தில் சர்வதேச சட்ட அறிஞர் ஆணைக்குழுவின் இங்கி லாந்து கிளை ஆங்கிலேய (Justice) நிருவா கச் சட்டத்தைப் பற்றி அறிக்கை ஒன் றைச் சமர்ப்பித்தது. (42) நிருவாகத்துக் கான பாராளுமன்ற ஆணையாளரை நிய மிக்க சிபார்சு செய்தது. இவ் அறிக்கை யைத் தொடர்ந்து 1962 இல் நியூசிலாந்தில் இவ் அதிகாரி நியமிக்கப்பட்டார். (43) 1969 இல் ஆங்கிலேய சட்ட ஆணைக் குழு இங்கிலாந்தின் நிருவாகச் சட்டத்தை மேலும் சீரமைக்க விரும்பியது. எனவே, சான்சிலர் பிரபுவுக்கு இதனைப் பற்றி சிபார்சு செய்தனர். (44) 1976 இல் இவ் அறிக்கை வெளியிடப்பட்டது. (45) எழுத் தாணைகள் பற்றி மிக முக்கியமான திருத் தங்கள் இன்று கொண்டுவரப்பட்டிருக்கின் றன. (46)

ஆங்கில சட்டத்தில் ஏற்பட்ட வளர்ச் சியால் மற்றும் பொது நல நாடுகளிலும் நிருவாகச் சட்டம் பற்றி அக்கறை ஏற் பட்டது. அவுஸ்திரேலியாவில் நிருவாகச் சட்ட திருத்தங்களை ஆராய பல குழுக் கள் நியமிக்கப்பட்டன. (47) லிபொட் குழு, ஆங்கில சட்டத்தைப்போல் எழுத் தாணை பெறுவதுபற்றி திருத்தங்களை சிபார்சு செய்தது. இதனால், ஒருவர் பிழை யான எழுத்தாணைக்கு விண்ணப்பித்தார் என்ற காரணத்துக்காக தமது உரிமையை இழக்கமாட்டார். (48) அவுஸ்திரேலியாவில் 1975 இல் நிருவாகத்துக்கான பாராளு மன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டார். பின்னர் 1976 இல் நிருவாக சபை மேன் முறையீட்டு சபைசட்டம் இயற்றப்பட்டது. (49) இச்சபைநிருவாகத் தீர்ப்புகளை மேன் முறையீட்டுவிசாரணை செய்கின்றது.எழுத் தாணை பெறும் சந்தர்ப்பங்களும் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. (50) நியூ சிலாந்திலும் நிருவாக சட்ட வழக்குகளை விசாரிக்கஉயர் நீதிமன்றத்தில்விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. (51) கனடாவிலும் பாரிய சீர்திருத்த முயற்சிகள் நடைபெறுகின்றன.

இன்று பொதுச் சட்ட நாடுகளில் நிரு வாகச் சட்டம் பற்றி புதியதொரு ஆர்வம் தென்படுகின்றது. டைசியின் கருத்துக் களின் தாக்கம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. இன்றைய சமுதாய வளர்ச் சிக்கு ஏற்ப நிருவாக அதிகாரிகளின் தீர்ப் புக்களை பரிசீலித்து நீதிமன்றங்கள் உற் சாகத்துடன் தீர்ப்பளிக்கத் தயாராக இருக்கின்றன.

NOTES

01. Ridge Vs Baldwin (1964) AC 40 at 72

02. Ministry of Housing and Local Govt. Vs. Sharp. (1976) 2 QB 223 at 226.

03. Breen Vs AmalgamatedUnion (1971) 2 QB 175 at 189.

04. The Times 14 January 1975, quoted in H W R. Wade Administrative Law 5ed Oxford(1982) at Pg 461.

05. Lord Justice Wolf, Private Law – Public Law; Why the Divide- The Harry Street, Lecture (1986) PL 220.

06. A. V. Dicey, The Introduction to Law of the Constitution Lord 1885.

07. A. V. Dicey Introduction to The Study of the Law of the Constitution 10 ed by E C S Wade Land 1961.

08. DCM Yardley Principles of Administration Law 2ed Land (1986) pg. 1.

09. அவுஸ்திரேலியாவில் நிருவாக சட்டம் பற்றி விசாரிக்க விசேட மன்றங்கள் உண்டு. உதாரணமாக The Administrative Decisions (Judicial) Review Act 1977; The Administrative Appeals Tribunals Act 1975.

10. Joseph A. L. Cooray, Constitutional and Administrative Law of Sri Lanka (Ceylon) Colombo 1973 pg. 273.

11. Report of the Special Donoughmore Commission the Constitution (1928) Cmd 3131 pg. 43.

12. Report of the Soulbury Commission to Constituional Reform (1945) Cmd 6677 ch VI.

13. Dicey Law of the Constitution (1965) pg. 202

14. Dicey ibid pg. 329.

15. Brown and Garner, French Administrative Law (1983) Hamson, Executive Discretion and Judicial Contract; (1954). Carol Harlow, Remedies in French Administrative Law (1977) PL 227.

16. Maitland, Constitutional History of England (1908) 505

17. (1911) AC 179

18. (1915) AC 120

19. Dicey: The Development of Administrative Law in England (1915) 31 LQR 148.

20. K. M.P Jain Administrative Law of Malasia & Singapore 2 ed (1989) (III).

21. D. J. Galligan : Discretionary Power Oxford

22. H. W. Jones. The Rule of Law and the Welfare State [1958] 58 Col. L.R. 143.

23. French Administrative Law 3 ed pg. 9

24. J. H. Morgan. Introduction to Gleeson E Robinson's Public Authorities and Legal Liability XI quoted in J. A. C. Cooray oput p 277.

25. Freedman. American Administrative Law (1962) pg. 21.

26. Card Harlow, Remedies in French Administrative Law (1977) PL 227: DCM Yardley oput 46.

27. E. J. port Justice and Administrative Law.

28. Robson Justice and Administrative Law.

29. RobsonAdministrative Law in England 1910 - 48 pg. 85-86.

30. Lord Hewart of Bury, Not without prejudice p 96,

31. J. D. B. Mitchell. The causes and Consequences of the Absence of a System of public Lawin the United Kingdom(1965) P L95, Id. The State of public aw in the United Kingdom (1966) 15 ICLQ 133; K C Davie English Administrative Law - An American View (1962) PL 139 L. L. Jaffe English Admi nistrative Law - A Reply to prf Davis (1962) PL 40.

32. Ivor Jennings. The Law and the Constitution (1959) pg. 217. Wade and Phillips Constitutional Law (1977) pg. 547, Griffith Street, Principles of Administrative Law (1973) pg. 3-4.

33. Liversidge VS. Anderson(1942) AC206;Nakkuda AliVs Jeyaratne (1950) 51NLR 457. Vidyodya University Vs Silva (1968) 1WLR 77.

34. Lo rd Hewart The New Despalism (1929) CK Allen Bureaucracy Truimphant (1931) and law andOrder(1948) Hayek Road to Serfdem (.944)

35. Freedman Law in a Changing Society (1959) pg. 3523-3 (1972) pp. 381-182.

36. J. A. G. Griffith Adinistrative Law and the Judges, The Pritt Memorial lecture (1978) K C Davis Judge Made Law in England (1961) 61 COL LR 209, Lord Devlin (1956),Current Legal Problems 1, 14

37. Report of the Committee on Minister power CMD I932 also referred to as Donoughmore Report after its Second Chairman.

38. Cecil Carre, Concerning English Adminstrative Law 1941,

39. Williams - The Donoughmore Report of Retrospect (1982) 60 Public Administration 273

40. Report of the Committee on Administrative Tribunals and Enquiries (I951) CMd 218 also Known Frank Report. For Comment see; E C S Wade Administration Under the Law (I957) 73 LQR 470;

J. A. G. Griffith Tribunals and Inquiries (1959) 22 NLR 125; H. W. R. Wade Tribunals and Inquiries Act (1958) C L J 129.

41. Tribunals and Inquiries Act 1958 Now replaced by Tribunals and Inquiries Act. 1971.

42. The Citizen and the Administration Redress of grievences 1961. Also Known as Whyath Committees.

43, parliamentary Commission Act. 1967.

44. Law Commission Paper No. 20 Cmnd 4059; see Also (1967) pL 185.

45. Law x No 73 Cmnd 6407 (1976)

46. S 31 of Supreme Court Act. 1981.

47. Kerr Committee (Report of the Comonwealth Administrative Review Committee (1971), Bla nd Committee (Report of the Committee on Administrative Discretions Interim and Final Reports 1973, and Ellicott Committee.

(Report of the Committee on Review of prerogative Writ Procedure (1973)

48. M. P. Jain Reform of Admini strative Law in Australia (1973) 15 J I L I 185; Katz Australia Federal Administrative Law Refotms (1980) 58 Can L R 341. Fluk Federal Administrative Law. Griffiths Legislative Reforms of Judicial Review of Commonweatlh Administrtive Action (1978) 9 F L Rev. 42.

49. Administrative Tribunals Act 1975 - see generally Administrative Review before Administrative Appeals Tribunals – A. Fresh Approach to Dispute Resolution.

Part I (1981) 1981 12 F L Rev. 71; Part II (Todd) 12 FL Rev. 95; Hall Aspects of Federal Jurisdiction; The Administrative Appeals Tribunals (Cth) 1983 57 ALJ 389.

50. Australian Administrative Act 1977.

51. Public and Administrative Law Reforms; Committee Reports, see also Peterson First Report of the Public and Administrative Law Reform Committee (1968) 3 N Z U L R 358 J. F. Northey, A Decade of Change in Adminiative Law (1974) 6 N Z U L R 25.

52. For Alberta see Judicial Rev eiw of Administrative Action Application for Judicial Review (Report No. 40 March 1984) For Ontario– McReuer Commissions Inquiry into Civil Rights and statutory Procedure Act RSO 1980 C 484. J.M. Evans Judicial Reveiw in Ontario-Some problems of Pouring old Wine into New Bottles 1977/55 Can Bar Rev. 148.

For British Columbia see British Columbia Law Reform Commissioner Report 18 A Proccdure for Jndcial Review of Action of Statutory Ageneics (1974) see also Law Reform Commission of Canada Report No. 14. Judicial Review and the Federal Court (1980)

With Best Compliments

from

●

Sri Devi Chemicals

125, Bankshall Street,

Colombo - 11.

With Best Compliments

from

●

DIPLOMAT

(Dealers in Textiles)

Fashion Super Market,
133/15, Keyzer Street,
COLOMBO - 11,

Phone : 23394

Ad comparendum, ad standum juri - To appear and to stand to the law, or abide the judgement of the court.

Cheques and Notice of Dishonour

V. RATNASABAPATHY*

(All the sections referred to in this article are Sections of the Bills of Exchange Ordinance Cap. 82 Vol. III Legislative Enactments)

Four decisions of the Supreme Court Kulasuriya vs. Lissie Nona Perera 66 N. L. R. 188, Ranasinghe vs. De Silva 69 N. L. R. 278, Ceylon Estate Agency and Warehousing Co Ltd. vs. de Alwis 70 N. L. R. 31 and Wijesundera vs. Kunjimoosa 70 N L. R. 64 serve as reminders that not only must prompt notice of dishonour be given when a cheque is dishonoured by non-payment, but also that such notice is a condition precedent to a right of action on the cheque.

What is notice of dishonour:

Notice of dishonour is notice that when the cheque was presented to the Bank for payment the Bank refused to pay it. 47 (1)

By whom must notice be given:

Notice must be given by the holder of the cheque. He is the person in possession of it as payee or as indorsee or as bearer. Sec. 49 (1) and Section 2. Thus A draws a cheque in favour of B and delivers it to him. B is the payee as well as the holder. But if B indorses it to C. C is the indorsee as well as the holder. Again if A draws a cheque payable to bearer, any person in possession of it is the holder.

Notice must be given by an indorser if and only if he is liable on the cheque. Section 49(1). An indorser becomes liable only when he has himself received notice from the holder. Sec. 48. If he has received such notice he has an immediate right of recourse against indorsers prior to himself as well as against the drawer, and must give them notice of dishonour. If he has not received such notice he is discharged of liability to the holder. Sec. 48. and cannot himself give a valid notice Sec. 49 (1). Thus A draw a cheque in favour of B who indorses it to C who indorses it to D. D gives notice of dishonour to C. C may give notice to both A and B.

Notice given by the holder enures for the benefit of indorsers

Notice given by the holder enures for the benefit of all prior indorsers who have a right of recourse against the party to whom notice is given. Section 49 (3). A draws a cheque in favour of B who indorses it to C who indorses it to D. Notice given by D to A will operate as a notice from B and C to A.

Notice given by the indorser enures for the benefit of the holder

Notice given by an indorser entitled to give notice enures for the benefit of the holder and all indorsers subsequent to the party to whom notice is given. A draws a cheque in favour of B, who indorses it to C who indorses it to D.

* B. A. (Ceylon). LL.B. (London). Lecturer in Delict, Ceylon Law College (1959 - 1979).

D gives notice to C. C gives notice to A. The notice given by C to A will operate as a notice from D as well as B. If D sues A he may in his plaint describe C's notice to A as a notice from himself - Jameson vs. Swinton (1809) 2 Campbells Reports 373.

To whom must notice be given:

Notice must be given to the drawer and to each indorser of the cheque. Sec. 48. The holder by giving them notice indicates that he looks to each of them for payment of the amount on it Sec. 47 (2).

Why Notice is necessary:

Every drawer by drawing a cheque and every indorser by indorsing it says in effect "if any person holding this cheque presents it for payment to the bank on which it is drawn, and it is not paid, I will pay". By the Law Merchant, as codified in the Bills of Exchange Ordinance, their liability does not arise unless and until they receive due notice that the Bank has not paid the cheque Secs. 55, 47 and 48.

What happens if notice is not given:

If due and timely notice is not given, the drawer and each indorser to whow notice is not given are discharged of their liability on the cheque to the person who ought to have given notice. A draws a cheque in favour of B who indorses it to C who indorses it to D. If D does not give notice to A, B and C, he cannot look to them for payment as they have been discharged of their liability to him by his failure to give them due notice. If he sues them on the cheque he will lose his action, because notice of dsihonour is a condition precedent to a right of action, on the cheque. Ranasinghe vs. De Silva 69 N. L R. 278.

How may notice be given:

No particular form of notice is necessary. It may be given in writing or in person or by telepeone. It may be posted. The return of the dishonoured cheque to the drawer or to an indorser is deemed a sufficient notice to that person. Whatever the form of the notice it must identify the cheque and say clearly that it has been dishonoured. Sec. 49 (5) (6) A notice duly addressed and posted is deemed to have been duly given notwithstanding any miscarriage by the post office. Sec. 49 (15).

Time within which notice must be given:

Where the person giving and the person to receive notice reside in the same place notice must be given to reach the latter on the day after the dishonour of the cheque. When the person giving and the person to receive notice reside in different places, the notice must be sent off on the day after the dishonour of the cheque. Sec. 49 (12). 'A' drew a cheque in favour of B and B indorsed it to C. C presented it for payment and it was dishonoured on 11.5.62. C gave B notice of dishonour on 11.6.62. Held that in the absence of special circumstances to excuse the delay in giving notice, the notice was bad and C could not sue B on the Cheque. Wijesundera vs. Kunji Moosa 70 N.L.R. 65.

When delay in giving notice is excused:

Delay in giving notice is excused when it is caused by circumstances beyond the control of the party giving notice

and not due to his default misconduct or negligence. When the cause of delay ceases to operate notice must be given with reasonable diligence. Sec. 50 (1). A cheque was dishonoured on 12.2.60. The plaintiff gave notice on 11 . 1 . 61. She urged that there were special circumstances to excuse her delay in giving notice, namely that she had gone away on pilgrimage to India and returned on 10.1.61. Held that in the absence of evidence as to when she left for India no special circumstances had been made out to excuse the delay in giving notice of dishonour. Kulasuriya vs. Lissie Nona Perera 66 N. L. R. 188.

It would be prudent to aver in the plaint the fact of delay in giving notice as well as the excuse for the delay in giving due notice. Perhaps it must be pleaded. Ceylon Estate Agency and Warahousing Co. Ltd. vs. de Alvis 70 N. L. R. 31 at 39. But the better view is that an excuse for delay in giving notice need not be expressly pleaded as proof of it is admissible under the general averment that the defendant had "due notice" of dishonour. Bullen and Leake Precedents of Pleadings 11th Ed. 135.

When Notice is dispensed with:

Notice to the drawer is dispensed with (1) when he has countermanded payment i. e. ordered his bank not to pay the cheque (2) when as between the drawer and the bank, the bank is under no obligation to pay the cheque at all Sect. 50 (2) (c). Thus the drawer has a balance of Rs. 10/- at the bank, and having no authority to overdraw, draws a cheque for Rs. 50/- Notice to the drawer is dispensed with.

Notice to the indorser is dispensed with where the cheque was drawn for his accommodation. Sec. 50 (2) (d). Thus A draws a cheque for Rs. 1,000/- in favour of B without receiving consideration for it and in order to accommodate B. B borrows Rs. 1,000/- from C and indorses the cheque to C as security. C presents the cheque for payment and it is dishonoured. Notice of dishonour to B. is dispensed with.

Notice is dispensed with by waiver expressed or implied, either before the time of giving notice has arrived, or after the omission to give due notice Sec. 50 (2) (b). A promise made after dishonour to pay the holder may be regarded either as a subsequent waiver of notice or as a evidence that due notice was given Byles on Bills of Exchange 21st Ed. 278. Thus a promise made by an indorser after dishonour to pay the amount of the cheque was treated as evidence of an admission by him that he had received due notice of dishonour Charlotte Javasekera vs. Sinna Karuppan 69 N. L. R. 88. It could also have been treated as evidence that he had waived due notice. " A (subsequent) promise to pay may operate either as evidence of notice of dishonour, or as a prior dispensation, or as a subsepuent waiver of notice' Per Byles, J. Cordery vs. Colville (1863) 32 L. J. C. P. 210 at 211

In these instances notice is dispensed with in the sense that failure to give notice is not fatal to a right of action on the cheque.

Pleading of Notice of dishonour:

In an action on a cheque the plaintiff must aver that the cheque was duly presented for payment and that it was dishonoured. He must further aver either

that notice of dishonour was given or that notice of dishonour was dispensed with and the reason for that dispensation, such as for instance that the drawer had no funds, or that he countermanded payment. Bullen and Leake Precedents of Pleadings 11th Ed. Page 135.

If the plaintiff avers that he gave due notice of dishonour, but the defendant denies it in his answer, and it transpires in evidence that no notice was in fact given, the plaintiff may adopt one of two courses. If there is evidence on record to prove that notice was dispensed with, as for instance that the drawer had no funds, the plaintiff must raise an issue on it. If there is no such evidence he should lead it on record. If the defendant objects to this evidence on the ground that dispensation of notice has not been pleaded, the plaintiff must amend his plaint. "If necessary the the Court is not only able but is bound to amend in such a Case" Cordery vs. Colvin (1863) 14 C.B. (N.S.) 374. Ceylon Estate Agency vs. de Alvis 70 N.L.R. 31 at 39. This matter came up for decision in Perera vs. Perera (1968) 74 C.L.W. 72. The bank returned the cheque with the indorsement "Not Arranged for." The plaintiff sued the drawer averring in his plaint that he had given due notice of dishonour. The defendant in his answer denied that plaintiff had given notice. It transpired in evidence that notice had not in fact been given. The District Court inferred from this indorsement that the drawer had no funds at the time the cheque was presented, and that therefore notice to him was dispensed with. Accordingly the District Court gave judgment for the plaintiff.

The drawer appealed to the Supreme Court and urged that the action should have been dismissed for two reasons.

(1) That there was no, evidence as to what was meant by the indorsement.

(2) That there was no issue that notice had been dispensed with.

The first argument appears to have been accepted by the Supreme Court because the plaintiff asked for an opportunity on terms to lead evidence that the indorsement meant that the drawer had no funds at the time the cheque was presented for payment. The Supreme Court did not give the plaintiff this opportunity and, allowing the drawer's appeal, dismissed the plaintiff's action.

On the question as to what the indorsement meant, the view taken by the District Court, it is submitted, is correct The indorsement meant that the drawer, had no funds and had not arranged to keep his account in credit. It was not incumbent on the plaintiff to lead evidence on this point. On the question whether dispensation of notice ought to have been pleaded, it is submitted that the District Court ought to have itself raised the issue and decided it in favour of the plaintiff. In the face of the evidence presented by the indorsement, it is further submitted that the Supreme Court was not precluded from itself raising the issue and deciding it in favour of the plaintiff. Jayawickrema vs. Amarasuriya 20 N.L.R. 289 (P.C.)

Even if evidence was necessary to prove the meaning of the indorsement, with respect, there was no reason at all why the Supreme Court should have refused the plaintiff's application to be allowed on terms to lead such evidence:

Apart from the intrinsic merits of that application, the case of Burgh vs. Legge (1839) 5 M and W 418 does not appear to have been brought to the Court's notice. In that case, in a similar situation, the Court of Exchequer gave the plaintiff leave on terms to amend his plaint in order to enable him to aver that notice had been dispensed with.

The drawer of a bill of exchange requires notice of dishonour because his liability is secondary, arising only on the failure of the acceptor to pay. The drawer of a cheque on the other hand is the person primarily liable on it and notice to the drawer is rarely necessary. "It is anomalous that the drawer of a cheque should be entitled to notice of dishonour seeing that he is the party primarily liable, and has no remedy over against any one. In most cases however it would be excused. The dishonour of a cheque is generally caused either by there not being sufficient funds to meet it or by payment having been stopped. In both these cases Section (50) (2) (c) dispenses with notice of dishonour." Paget Law of Banking 7th Ed. 217. Notice of dishonour is necessary only in order to protect the interests of the drawer and the indorser. It was never intended to be used as a convenient technical device by which a drawer is enable to evade an obligation to make good his own dishonoured cheque.

FREEDOM OF SPEECH

Freedom of speech is the foundation of free government, for, it is only through free debate and the free exchange of ideas that the government remains responsive to the will of the people and peaceful change is effected. Of this freedom "one may say that it is the matrise, the indispensable condition of nearly every other freedom"

— **Palko vs Connecticut (1397) 302 U.S. 319)**

FREEDOM OF ASSOCIATION

Freedom of association is a recognised legal right on the part of all persons to combine for the formation of purposes in which they are interested.

— **Laski**

With Best Compliments

from

O. Meera Saibo & Sons

IMPORTERS & GENERAL MERCHANTS

ENAMELWARE - ALUMINIUMWARE - BRASSWARE

PLASTICWARE & HARDWARE ITEMS.

16, DAM STREET,
COLOMBO 12.

Tele : 431851

Actore non probate reus abosolvitur - When the plaintiff does not prove his case, the defendant is acquitled.

சாய்ந்து கொள்ள ஒரு தோள் வேண்டும்...

வாழ்க்கைப் பிடியில் சிக்கித் தவித்து
அனுபவ மடியில் புரண்டு எழுந்து
வெற்றிக் கம்பம் தொட்ட விநாடியில்
போற்றிக் களித்து இணைந்து பகிர்ந்து
சாய்ந்து கொள்ள ஒரு தோள் வேண்டும்!

பிரிவின் வலியும், இழப்பின் ரணமும்
பிளந்து மனதைச் சுட்டுப் பொசுக்கி
சோர்ந்து நிலத்தில் வீழ்கின்ற போது
தாங்கிப் பிடித்து, தலையைக் கோதி
சாய்ந்து கொள்ள ஒருதோள் வேண்டும்!

உணர்வில் தனித்து, உறவில் தயங்கி
மனதினைச் சிறையாய் பூட்டி வைத்து
தனிமை இருளில் தவித்துப் போகையில்
அன்பாய் அணைத்து, தனிமை கலைத்து
சாய்ந்து கொள்ள ஒருதோள் வேண்டும்!

கூடிக் குலாவி, தேகம் சிலிர்த்து
பொங்கும் உணர்வில் கனவுகள் பொதிந்து
காதலில் இதயம் இளகிப் போகையில்
இருகரம் கோர்த்து, இதமாய் இணைந்து
சாய்ந்து கொள்ள ஒருதோள் வேண்டும்!

உலகினில் வாழும் ஒவ்வொரு மனிதனும்
உயர்வின் படியில் உயரப் பறக்கினும்,
வாழும் வாழ்வில் தளர்ந்திடும் போதும்,
இதயம் மகிழ்வில் சிலிர்த்திடும் போதும்
சாய்ந்து கொள்ள ஒருதோள் வேண்டும்!

விஜித்தா சண்முகராஜா
இறுதி நிலை ஆண்டு

With Best Compliments

from

ALLI CO (PVT) LTD.

Factory :
Nambuluwa,
Pasyala.

Tele : 033-2798

Sales Centre :
Central Road,
Colombo - 11.

Tele : 423428

ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய் வஃதே முறை —திருக்குறள்

With Best Compliments From

Sri Ganeshan Press

26, Abdul Jabbar Mawatha,

COLOMBO-12.

Masters in Fine Printing

முதலாளி - தொழிலாளி உறவை ஓர் ஒப்பந்தம் கட்டுப்படுத்துமா ?

M. C. M. சலீம் *

A brief analysis of the effect of the decisions in the United Engineering Workers Union Vs Devanayagam and National Union of Workers Vs Scottish Ceylon Tea Co. Ltd On the Law of Contract of Employment leading to the Conclusion that the Contract of Employment today. is more a matter of status than a matter of Contract and that the right of the Worker to claim .relief derives from that status and not from the Contract of Employment.

ஆளும் சட்டங்கள்

இலங்கையில் வேலை தருநருக்கும் வேலையாளுக்குமிடையிலான உறவைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் முதலாளி, தொழிலாளி(Master,servant) தொடர்பான பொதுச் சட்டம், நியதிச்சட்டம், பெருந் தொழிற் பிணக்குகள் சம்பந்தமான தீர்ப் புச்சட்டம், கூட்டு உடன்படிக்கைகள் என் பவற்றிலிருந்து பெறப்படுகின்றன. பொதுச் சட்டம் ஒப்பந்தத்துக்கு முக்கிய இடம் கொடுத்தது. விரும்பியவாறு ஒப்பந்தம் செய்து கொள்ளச் சுதந்திரம் இருந்தமை யால் முதலாளி தனக்குச் சாதகமான முறையில் ஒப்பந்தத்தைச் செய்துகொண் டார். முதலாளியுடன சமமாகநிறை ஒப் பந்தஞ் செய்துகொள்ள வேலையாளுக்கு முடியவில்லை. ஆயின், பெருந்தொழில் (இச்சொற் பிரயோகத்துக்கான காரணம் இக்கட்டுரையின் அடியிற்கூறப்பட்டுள்ளது.) வளர்ச்சி கண்டபோது உண்டான பல்வேறு பிரச்சினைகளுக்கு ஈடு கொடுக்கப் பொதுச் சட்டத்தால் முடியவில்லை.

1950 இன் முன்னும் பின்னும்

1950 ஆம் ஆண்டுக்கு முன் வேலையி லிருந்து நீக்கப்பட்ட வேலையாள் ஒருவர் ஒப்பந்தம் மீறப்பட்டமைக்காக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தொடரக் கூடிய தாயிருந்தது. மாவட்ட நீதிமன்றம் பொதுச் சட்ட அடிப்படையில் ஒப்பந் தத்தை மீறியதற்காக நட்டஈடு வழங்கக் கூடியதாயிருந்ததேயன்றி வேறு ஒன்றும் செய்யமுடியாதிருந்தது. மீளவேலைக் கமர்த்துப்படி கூறும் அதிகாரம் அதற்கு இருக்கவில்லை. 1950ஆம் ஆண்டு பெருந்

* BA. LL. B. (Cey)சட்டத்தரணி, விரிவுரையாளர், சட்டக்கல்லூரி.

தொழிற் பிணக்கு விதிப்பு[1] ஆக்கப்பட்ட பின், தொழிற் பீரச்சினை ஒன்றைப் பெரும் தொழில் நீதிமன்றத்துக்கு[2] அல்லது, நடு வருக்கு[3] அனுப்பத் தொழில் அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தால் தொழில் நியாய சபைகள்[4] உதயமா கின. ஒரு வேலையாள் அல்லது தொழிற் சங்கம், அமைச்சர் அல்லது, ஆணையாளரின் தலையீடின்றி நேரடி யாகவே, நியாய சபைகளுக்குச் செல்லக் கூடியநிலை ஏற்பட்டது.

தொழில் நியாய சபைகளின் தத்துவம்

இத்தொழில் நியாய சபைகள் நீதியா யனதும், நெறிமுறையானதுமான[5] தீர்ப்பை வழங்கலாம். பெருந்தொழிற் பிணக்கு விதிப்பின் 31 ஆ (4) ஆம் பிரிவு தொழில் நியாய சபைகள வேலை தருநருக்கும் வேலையாளுக்குமிடையிலான ஒப்பந் தத்தைப் பொருட்படுத்தாது நிவாரணம் வழங்கலாம் என்று கூறுகின்றது. எனவே, தற்பொழுது வேலையாள் ஒருவர் சட்டத் துக்கு மாறான வேலை நீக்கம் என்ற அடிப்படையிலல்லாது நியாயமற்ற அல் லது, பிழையான வேலை நீக்கம் என்ற அடிப்படையிற் தொழில் நியாய சபையின் முன் வரலாம். முன்னர் மாவட்ட நீதிமன் றத்துக்குச் செல்லும்போது வேலை நீக்கம் சட்டத்துக்கு மாறானது என்ற அடிப் படையில் மட்டுமே சொல்ல முடியும். ஒரு வேலையாள் சட்டத்துக்கமைய ஒப்பந்தத் துக்குட்பட்ட வேலை நீக்கம் செய்யப்பட் டிருந்த போதும் அவ்வேலை நீக்கம் நியாய மற்றது; அல்லது, நெறிமுறைக்கு ஒவ்வா தது என்ற அடிப்படையிற் தொழில் நியாய சபைக்குச் செல்ல முடியும்.

உரிமையியல் நீதிமன்றங்கள் ஒப்பந் தத்துக்குட்பட அவற்றின் வாசகங்களுக் கமையவே தமது தீர்ப்பை வழங்கலாம். அவற்றை மீறிச் செல்ல அவற்றிற்கு அதி காரமில்லை. ஆயின், பெருந்தொழிற் பிணக்கு விதிப்பில் ஆக்கப்பட்டுள்ள சபை களுக்கு இக்கட்டுப்பாடு இல்லை - அவை ஒப்பந்த வாசகங்களுக்கப்பாற் சென்று தீர்ப்பை வழங்கலாம். (The Ceylon workers Congress Vs. Superintendent, Kellabokke Estate) (63 N.L.R. 536).

SHELL Co Vs Pathirana (64 N L R. 71) வழக்கில் நீதியரசர் அபயசுந்தர அவர்கள் "வேலை நீக்கம் சட்டத்துக்க மையச் செய்யப்பட்டிருப்பினும் நிவாரணம் வழங்க நியாய சபைகளுக்கு அதிகாரம் உண்டு. சட்டவாக்கசபை அவ்விடயத்தில் எதுவித சட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. ஒரேயொரு கட்டுப்பாடு மட்டும் விதிக்கப் பட்டுள்ளது. அது 31 ஆ பிரிவின் (1) ஆம் உபபிரிவிற் காணப்படுகின்றது. அதாவது நிவாரணம் நீதியானதும், நெறிமுறையா னதுமாயிருத்தல் வேண்டும்" என்று கூறி னார்.

தொ - நி - சபையின் தத்துவம் மட்டுப்பாடற்றதா?

தொழில் நியாய சபைகள் நிவாரணம் வழங்குவதில் மட்டற்ற அதிகாரமுடைய வையா? என்ற விடயம் Walker Sons & Co. Ltd. Vs. Fry (68 N. L. R. 73) வழக்கில் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்தால் ஆராயப்பட்டது. அதிகப் படியான நீதியரசர்கள், நியாய சபைகள் நீதியதிகாரஞ் செலுத்துவதால் அவற்றின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது எனக் கொண்டனர், 31 (ஆ) பிரிவின்கீழ் விசா ரணை நடாத்தும் போது ஒப்பந்தத்திற் காணப்படும் கடினமான நிபந்தனைகளைக் கவனியாது விடலாமேயன்றி ஒப்பந்தத்தை முற்றாகக் கவனியாது விடலாகாது என்ற போக்கில் அத்தீர்ப்பு அமைந்திருந்தது.

இத்தீர்ப்பு சரியானதா என்னும் விட யம் The United Engineering Workers Union Vs K W. Devanayagam (69 N.L.R 289) வழக்கிற் கோமறைக் கழகத்தினால்

1. Industrial Dispute Act.
2. Industrial Court.
3. Arbitration.
4. Labour Tribunal.
5. Just and Equity.

ஆராயப்பட்டது. கோமறைக்கழத்தில் அதிகப்படியானோரின் தீர்ப்பு ''நியாயசபையின் தீர்ப்பு நீதியானதும்நெறிமுறையானதுமாயிருத்தல் வேண்டும் என்பதே அளவுகோலாகும். நீதிநியாயமான தீர்ப்பைவழங்குவதில் எதுவித கட்டுப்பாடும் இல்லை 31 (ஆ) (4) ஆம் பிரிவின்படி ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் நியாய சபையைக் கட்டுப்படுத்த மாட்டா'' என்றவாறு - அமைந்திருந்தது. மாறான தீர்ப்பை வழங்கிய பிரபுக்களும் ஒப்பந்தம் நியாய சபைகளைக் கட்டுப்படுத்த மாட்டாது என்பதை ஏற்றுக்கொண்டனர். இத்தீர்ப்பிலிருந்து பின்வரும் விடயங்கள் தெளிவாகின்றன:

1. வேலை தருநருக்கும், வேலையாளுக்குமிடையிலான ஒப்பந்தம் ஏற்புடையதாயினும் அது தொழில் நியாய சபையைக் கட்டுப்படுத்தமாட்டாது.

2. வேலை நீக்கம் சட்டத்துக்கமையச் செய்யப்பட்டிருப்பினும், ஒப்பந்த வாசகங்களுக்கு மாறாக நிவாரணம் வழங்கப்படலாம்.

3. முதலாளி-தொழிலாளிக்குரிய பொதுச் சட்ட விதிகள் தொழில் நியாய சபையைக் கட்டுப்படுத்தமாட்டா.

எனவே, வேலை தருநருக்கும் வேலையாளுக்குமிடையிலான உறவு; ஒப்பந்தத்தில் மூலம் உண்டான போதும், அது அவர்களைக் கட்டுப்படுத்த மாட்டாது; அவ்வொப்பந்தத்திற் கூறப்படாத நிவாரணங்களை வேலையாள் பெறக்கூடியதாயிருக்கின்றது. அவர்களுக்கிடையே உள்ள தொடர்பு ஒருவித உறவு நிலையிற் தங்கியிருக்கின்றதேயன்றி ஒப்பந்தத்திலன்று. தொழிலாளி நிவாரணங் கோருவதற்கு அவ்வுறவு நிலையே காரணமாயமைகின்றது.

ஒப்பந்தங்களின் பெறுமதி

Independent Industrial and Commercial Employee's Union Vs Board of Directors, Cooperative Whole Sale Establishment (75 N. L. R. 344) வழக்கில் 'நீதியரசர் அலஸ்' அவர்கள் ''பெருந்தொழிற் பிணக்குச் சட்டம் ஒப்பந்தம் முடிவுறுவதைப் பற்றிப் பேசவில்லை, வேலையாளின் சேவை நிறுத்தப்படுவதைப் பற்றியே பேசுகின்றது. ஏனெனில், விதிப்பு ஒப்பந்தத்தில் அதிக அக்கறை செலுத்துவதில்லை. வேலை தருநருக்கும்,வேலையாளுக்குமிடையிலுள்ள விசேட உறவையே அது முக்கியமாகக் கருத்திற் கொள்ளும்'' என்று கூறியுள்ளார்கள். ஆகவே, முன்னர் முதலாளி, தொழிலாளி உறவு காணப்பட்ட போது செய்தது போன்று வேலை தருநர் தான் விரும்பிய போது வேலை நீக்கம் செய்யவோ, தனக்குசாதகமான முறையில் ஒப்பந்தத்தை அமைத்துக் கொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் National Union of workers vs Scottish Ceylon Tea Co. Ltd. (74 N.L.R 133) வழக்கில் அதிகப்படியானோரின் தீர்ப்பு தேவநாயகம் வழக்கின் தீர்ப்பிலிருந்து சற்று வேறுபட்டதாகக் காணப்படுகிறது. அதில் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பான கூட்டு உடன்படிக்கை ஒன்று இருப்பின் அது நியாய சபையைக் கட்டுப்படுத்தும் என்றும், அதை மீறித் தொழில் நியாயசபைகள் தீர்ப்பு வழங்குதல் முடியாது என்றும் கூறப்பட்டது.

ஆயின், நீதியரசர் சமரவிக் கிரமாவும் மாறான தீர்ப்பை வழங்கினார் நீதியரசர் சர்வானந்தா அவர்கள் தேவநாயகம் வழக்கைப் பின்பற்றித் தனது தீர்ப்பை வழங்கியுள்ளார்கள்.

அவர்கள், கூட்டு உடன்படிக்கையின் வாசகங்கள் ஒப்பந்தத்தின் வாசகங்களான போதும் அவை நீதியும் நெறிமுறையுமற்றவை எனக்காணின் அவற்றைப் புறக்கணிக்கத் தொழில் நியாய சபைகளுக்கு அதிகாரமுண்டு எனக் கூறியிருப்பது நோக்கற்பாலது. அத்துடன் 31 (ஆ) (4) ம் பிரிவு தொழில் நியாய சபைகள் ஒப்பப்தத்தின் வாசகங்களைக் கருத்திற் கொள்ளாது நிவாரணம் வழங்கலாம் என வெளிப்படையாகக் கூறியிருப்பது இந்நிலைப் பாட்டிற்கு ஆதாரமாயமைகின்றது.

நீதியானதும் - நெறிமுறையானதும் எனில் யாது?

தொழில் நியாயசபைகள் நீதியானதும், நெறிமுறையானதுமான தீர்ப்பை வழங்குதற்கு எதுவித சட்டுப்பாடும் இல்லை எனப் பல வழக்குகளிற் கூறப்பட்டுள்ளபோதும் அவை பலம் போன போக்கிற் தீர்ப்பு வழங்கலாமா? என்பது முக்கிய வினாவாகும். அவை அவ்வாறு செய்தல் முடியாது எனவும், அவை நீதியானதும் நெறிமுறையானதுமான தீர்ப்பை வழங்குதற்காகக் கருத்திற் கொள்ளவேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டும் பல வழக்குகள் தீர்ப்பளித்துள்ளன. Walker Sons & Co. Ltd. Vs Fry வழக்கில் நீதியரசர் H. N. G. பொனான்டோ அவர்கள் "தொழில் நியாய சபைகளுக்குக் காட்டுக் கழுதையின் சுதந்திரம் வழங்கப்படவில்லை" என்று கூறினார்கள். அண்மையில் Bata Shoe Co. of Jathike Sevakeya Sangamaya (2 CALR 28) வழக்கிற் தொழில் நியாய சபைகளுக்குப் பரந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளபோதும் அவ்வதிகாரம் மட்டற்றதன்று. தன்மதியப் பயன்படுத்தப்போது வேலை தருநர், வேலையாள், பொதுமக்கள் (அவசியமாயின்) ஆகியோரின் அக்கறைகள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டது. Ceylon Transport Board & Transport Board Workers Union (71 N.L.R. 158) Sithamparanathan & Peoples Bank (1986 1 SLR 411) போன்ற வழக்குகள் இவ்விடயத்திற் தொடர்புடையன.

குறிப்பு :

[Industrial Law என்பதற்குத் தற்பொழுது வழக்கிலுள்ள தமிழ் மொழி பெயர்ப்பு "கைத்தொழிற் சட்டம்" என்பதாகும். கைத்தொழில் என்பது கையினாற் செய்யப்படும தொழிலைக் குறிக்குமாதலின் Indursty என்பது கைத்தொழிலன்று என்பது தெளிவு. Industry என்பது பரப்பிலும், எல்லையிலும் பொருளிலும் விரிந்திருப்பதன் காரணத்தாற் 'பெருந்தொழில்' என்ற சொல் பிரயோகிக்கப்பட்டுள்ளது.]

பரீட்சையில் தோற்றவர்கள்

மூதறிஞர் இராஜாஜி : கலைமாணிப் பரீட்சையில் தமிழில் சித்தியடையாது பின்னர் எழுதிச் சித்தியடைந்தார்.

அறிஞர் அண்ணா : சணக்கில் சித்தியடையாமையால் மூன்று தடவை பத்தாம் வகுப்புப் பரீட்சை எழுதினார்.

வின்ஸ்டன் சேர்ச்சில் : இராணுவக் கல்லூரியிற் சேர்வதற்கான பரீட்சையில் மூன்று தடவை தோல்வியுற்றார்.

ஐன்ஸ்டைன் : பல்தொழில் நுட்ப நுழைவுப் பரீட்சையில் முதற் தடவை தோல்வி கண்டவர்.

கணிதமேதை இராமானுஜம் : எட்டாம் வகுப்புப் பரீட்சையில் தோல்வி கண்டு படிப்புக்கே முற்றுப்புள்ளி வைத்தார்.

An Interview with Retired Attorney General
Hon. Sunil C. De Silva
President's Counsel.

★

Guided by : **Mrs. F. R. C. Thalayasingham** LL. M.
Senior Assistant Legal Draftsman

★

Interviewed and Compiled by : **Michael Johnson**
U. A. Mawjooth
K. Thurairasasingham

Q.: 1 – What are the functions the Attorney General perform as being a representative of the State?

Ans. – The Attorney General's functions are broadly categorized into 3 groups: The first category are the functions not out in the Constitution: the second category are the functions set out in the Code of Criminal Procedure and other statutes and the third category are the functions which the A. G. performs traditionally.

Under the first category of constitutional functions, the most important one is that of giving a ruling on the constitutionality of legislation. That is, I have to give a certificate whether a particular matter is or is not within the constitution; whether it requires a 2/3 majority or a simple majority or a referendum. Out of the constitutional function there is the rationale that the party that disagrees has always the opportunity to ehallenge it in the Supreme Court and got the final verdict of the Supreme Court. Sometimes amendments are referred to us on the floor of the House and at that time the State Counsel present there would take a decision. Most of the time there are no problems because the facts are concerned with Government policy. But, now more and more difficult questions are coming up partly because of the devolution under 13th Amendment i.e. whether a particular matter falls within or outside the purview of devolution and taking a decision at short notice is very responsible one.

Then with regard to the other statutory function i.e. forwarding an indictment and presenting cases are not problematic because, those functions have been done for a very long time and, in any case, subject to review by Courts. For example, even when we charge on accused, it is the Court that takes the final decision.

Then the traditional area is that advice is given to all Government Departments from the President downwards. Now government owned business undertakings i.e. government corporations also seek advice.

Q. 2 (i) How can a person, who is taken into custody under Emergency Regulations be bailed out?

Ans. Regarding a person taken into custody under Emergency Regulations, the regulation itself specifies that he/she should be produced before a Magistrate within one month. and at that point he cannot be bailed out, but only the detention period is extended. Then after 90 days he shall be produced again and remanded by the Magistrate. During this entire period, bail can be granted with the Attorney General's permission. When I have to exercise my permission, what we do is, when there is a request, we refer the matter to the investigating officers and get a report from them. Having get that report, we consider whether bail should be granted or not.

Q. 2 (ii) What are the matters that are taken into consideration in such situations?

Ans. The main factor we consider is whether the person in remand, if given bail, would interfere with the witnesses or the investigation. Sometimes, we receive complaints from the injured party that the suspect in walking about threatening the witnesses, so he should not be granted bail. We consider these matters and take a decision. But the suspect party can go to the Court of Appeal and ask for bail. There the Court of Appeal would ask us to appear and show cause as to why we are opposing the grant of bail and if the Court thinks that we are right, it would refuse the application.

Q. 2 (iii) Under the Poisons, Opium, and Dangerous Drugs Ordinance, the High Court Judge has the power to grant bail only in exceptional circumstances. Can you please explain these circumstances?

Ans. The word "Exceptional Circumstances" has been defined in several judgements. Mainly it depends on something personal to the accused, as to his medical or physical condition or peculiar disorder

in his body, that keeping him in remand would cause him unnecessary harm. Normally, the reason of the case or the quantum of the Evidence does not fall into the category Exceptional Circumstances·

Q. 3 (i) Can you briefly explain the workability of the Provincial Council system?

Ans. Provincial Councils, I only look at its legal point of view, as to whether it is a good thing or bad thing, is a political point and it is out of my view. All I can understand is, the 13th Amendment tried to devolute a certain amount of functions that originally fall on the government. Provincial Councils, by the devolution of powers, make it more accessible to the people. Whether a particular provision is adequate or not is a matter for political comment. But I agree on the principle of devolution.

Q. 3 (ii) How can a dispute in respect of a matter which comes within the purview of two Provincial Councils be settled?

Ans. Most of the areas which involve more than one Provincial Council fall into reserve list and the authority is with the government.

Q. 3 (iii) The newly set up Provincial High Courts are designed with appellate and rivisionary powers in addition to their original powers. Whould this measure, in your idea, case the delay in litigation or make the machinery of Justice further complicated?

Ans. I personally think that gtving a right of appeal to a High Court functioning in a province is a good idea. Because there is no purpose compelling a person who lives in the interior of the country to come to Colombo every time he wants to correct an order of the tribunal in that area, specifically because there are time limits. So, if justice can be taken to the doorstep, it is much better and also it enables a larger number of counsels to appear in these cases and that would help the Court to finish the case in time.

Initially there are likely to be certain areas to be defined as to what should be done if there are two parties; one appeals to the Provincial High Court and the other to the Court of Appeal.

Q. 4 What would your opinion be, where there is a request by any of the Commenwealth Countries for the extradiction of persons from Sri Lanka?

Ans. This matter comes within the President's purview, because extradiction is mixed of political and legal consequences. It becomes a legal issue only when the Head of the State exercises its privilege of agreeing or not agreeging to a resolution. All Commo-

nwealth Countries are covered by Commonwealth Treaties plus bilateral agreements with regard to certain offences. We have a SAARC Convention and we also have certain offences which are mandatorily extradictable, i.e. Hijacking. So, it depends on the nature of the offence one hand and on the decision of the Presidtent on the other hand.

Legal issues arise only after political decision is taken.

Q.5 (1) What is meant by "Computerized Evidence"?

Anc. "Computerized Eviednce" is a Vague expression because it can either refer to items of evidence normally recorded in computer which are recorded in computer memory like for e. g. take a book of accounts, instead of having many ledgers, we may have the principle entered in the memory of the computer, then to verify that transaction we would not have what we call a 'paper trail'. If they have been put to the computer, memory for e. g. salaryr the number of hours will be multiplied by the rate paid for the hour. The computer will contain the information with regard to the rate in its memory. The operator will only input the number of hours given and the computer will give the final result. The operator may not know the way of calculation; because the deductions and alterations would be one by the computer memory. Then, if he is asked the normal question in the Court of law, as to how he got result calculated, he will not able to say it is so much per hour multiplied by so much of working hours. He can only be able to say I have scheduled the number of hours worked by the person and the computer said that his salary payable is so much. There the computer 'a part' only in mechanical teres. Then there can be so many cases where a computer can be used like a government analyst, to a sample of two personal material; to identify whether they come from the same person or not.

Then again computer evidence is relevant when there are international transfers of money or correspondence which are not on paper. There are very large areas such as shipping. In the future, it is likely that shipping transaction may be evidence will be added in the system of computer and proving them in the Court of law will be more a new logal thinking.

Q.5 (11) What in your view on the admissibility of Computerized Evidence?

Ans I think we have to come to grip with this question because, computers whether we like it or not, if we are going to be part of the international trade with other countries which already expanded the area, we would be left behind if we don't join. Of course, the admissibility raises a question since we cannot use the traditional Evidence Ordinance to define the admissibility of Computer Evidence. Many countries have enacted new legislation e. g. Data Processing Act of England. America and Australia have also brought new laws to make Computer Evidence admissible. I personally believe that we should also introduce such measure in our Evidence Ordinance. Then again, there are the offences which we are normally familiar with, like fraud or cheating etc. When a Computer is used as a tool for committing such offences, the admissibility of that evidence for a Criminal case, for example may have to be listed and formally produced. A draft has been prepared for which I have assisted and that draft has been taken by the authorities and looked at. I think before long we would also join the rest of the world in making Computer Evidence admissible.

Q.6 (i) Does the existence of multitudes of laws for the prevention of offences and crimes, in any way help to achieve the real objectives for which they were enacted?

Ans. If you look at the Penal Code, it defines basic offences which were relevant at the time of the enactment. From time to time new offences have broken out, then comes the area which is not covered by the Penal Code and to cover these new offences, new laws have to be promulgated. Promulgating new laws is absolutely the Parliament's conern when it deems it necessary. Unless the laws are conflicting one with the other there is no reason why many laws will cause more problems.

Q.6 (ii) Can there be any other remedial measure to prevent the commission of offences?

Ans. Certainly, Punishment of an offender by a trial Court should be a final resort. Society has to ensure, that people do not turn to crime. For example, out of the 17 million people in our country, if 10% take to crime, all the laws and Courts in the country will not be able to tackle the situation. It essentially means that 99.99 percentage of the population has to be law abiding, while only a small percentage take to crime. Even those people,

one has to analyze; why a man commits a crime is it due to social or economical need or is it due to the basic law in its character. Having analyzed those we have to analyze how to deal with that aspect. Basically if it is a social need. we have to deal with that aspect. The detention; investigation and punishment should be in any way the last resort to deal with that very small percentage.

Q. 7 (i) The provisions for "Nolle Prosequi'' emphasize on the official nature and the function of the Attorney General. What are the circumustances in which Nolle Prosequi is exercised?

Ans. "Nolle Prosequi" is a traditional power of the Attorney General which is very rarely exercised. It is to be exercised when the conviction of the offender would lead to more harm to the society than not charging the offender. For example, if a very high dignitary while visiting this country committed a traffic offence, I think it would be foolish to prosecute; the harm done is small and the harm done by the prosecution would be so large, From time to time where the government of the day which is satisfied that a particular offender would be better left uncharged, request the Attorney General to consider nolle prosequi, then the Attorney General exercise such power. Nolle Prosequi is one of the few powers only the Attorney General can exercise, and it is very rarely exercised. I don't think during my tenure as Attorney General I exercised this power more than a couple of times.

Q. 7 (ii) Do you think that the exercise of such power would not interfere with the independent function of the Courts?

Ans. Certainly, the exercise of nolle prosequi is a decision where by a person who should be tried in the Court and convicted or acquitted is taken out of the Court system by a special procedure. It should not be exercised except in a necessary situation in the interest of the State.

Q. 8 As a measure to tackle the high cost of litigation, how would you favour the setting up of a "Free Legal Aid Scheme'' by the State?

Ans. Very useful system, that is, I know many countries have Public Defender System'' or they have access to free legal aid. The question here is, we don't reduce the cost of litigation by the free legal aid. The other question is whether the State can afford such a burden. In some countries, persons who are wrongly prosecuted or brought

to Court are given compensation. That may be another measure given to a person who had to defend himself unnecessarily. The set up of a free legal aid will not reduce the cost of litigation since, it is between the Court and the litigant.

Q. 9 What would your advice be for the "Budding Lawyers?"

Ans. To study the law. I think more and more people are seem to be taking to the legal profession with the idea that once they pass out of Law College, they can burn the law books and forget about learning the law. That is absolutely a wrong idea. Law is an ever changing field, where nobody knows the answer. What is considered right today may be considered wrong tomorrow. If you look at the New Law Reports you will find that a particular case overruled an old judgement. That means a man who lost the case was right in his contention, the man who argued the case which was won may also be correct, that shows you, there can be no definite answer. The only way you can keep on is knowing the law and applying what it is now and try to contend what it would be in the future. The lawyer should know his brief before he goes to the Court. All too often people contact clients and take short notes and go to Court without probably knowing the number of the case. This type of thing should be avoided if you want to be really a successful lawyer. Here successful means successful as a lawyer and not in the money making process.

Only the actions of the just smell sweet blossom in their dust.

— **Jemes Sherley**

Only the just man enjoys peace of mind.

— **Epicurus**

Where there is an incometax, the just man will pay more and the unjust less on the same income.

— **Plato**

No law or ordinance is mighter than understanding.

— **Plato**

With the best Compliments
from

Sadalla Tourist Hotel

85, Station Road,
Mt. Lavinia.

Phone 71-3857

தரமான தங்க நகைகளுக்கு
தலை சிறந்த ஸ்தாபனம்

ஜெயா ஜுவலர்ஸ்

தங்க நகை மாளிகை

97, மெயின் வீதி, அட்டன்.

தொலைபேசி: 475

Jaya Jewellers

97, Main Street, HATTON.

With Best Compliments From

New Nifayas Tex
No. 94 2nd Cross Street,
Colombo-11.
Tele: 449508

WITH BEST COMPLIMENTS
FROM

A S. MANIE
Sana Jewellery
Dealers in: 22 K. T. Jewellers
138/2, Sea Street, COLOMBO-11
සනා ජුවලරි
138/2, හෙට්ටි වීදිය, කොළඹ-11.
சனா ஜுவலரி
138/2, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Res intergra — new or unopened thing

அடிப்படை உரிமையும் அரசியல் யாப்பும்

It is a Significant feature that the fundamental rights are enshrined in the Constitution of the Republic of Sri Lanka and that the Supreme Court has the power to enforce these rights. This paves the way for the People to enjoy better opportunity to enforce their inherent rights.

இ. துரைராசசிங்கம்
இறுதிநிலை ஆண்டு

உத்தரவாதப் படுத்தப்படாத வரையிலே 'உரிமை' என்பது வெற்றுச் சொல்லாகி விடுகின்றது. இன்று அனைவராலும் உச்சரிக்கப்படும் 'அடிப்படை உரிமையும்' இக்கோட்பாட்டுக்கு விதிவிலக்கானதல்ல. எமது நாட்டைப் பொறுத்தவரையிலே நமது அரசியலமைப்பால் உத்தரவாதமளிக்கப்பட்ட அளவுக்கு அடிப்படை உரிமைகள் உயிர்ப்புள்ளனவாய் அமைகின்றன. அவற்றுக்கு நீதிமன்றம் வழங்கும் பொருள் கோடலே அதன் உண்மையான பரிமாணத்தை வரைந்து காட்டமுடியும்.

இலங்கைக்கு அடிப்படை உரிமையை அறிமுகப் படுத்திய பெருமை 1972–ம் ஆண்டின் அரசியல் யாப்புக்கே உண்டு.[1] ஆனால், அது வெறும் ஏட்டுச் சுரக்காயாகத்தான் இருந்தது. எனினும் 1978–ம் ஆண்டின் அரசியல் யாப்பு உயர் நீதிமன்றத்துக்கு வழங்கியுள்ள அதிகாரம்,[2] அடிப்படை உரிமையினை நிலைநாட்டுவதற்கான வலுவானதொரு அடித்தளமாகும்.

உயர் நீதிமன்றத்தின் பங்களிப்பு

1978ம் ஆண்டின் அரசியல் யாப்பை நோக்குகையில்; அடிப்படை உரிமை பாதிக்கப்பட்ட அல்லது, உடனடியாகப் பாதிக்கப்படவுள்ள நிலையில் இருக்கும் ஒருவர் தானாக அல்லது, சட்டத்தரணி ஒருவர் மூலம் உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ் செய்து பரிகாரம் தேடலாம்.[3] அடிப்படை உரிமை மீறல் என்பது ஆட்சித்துறை நடவடிக்கை அல்லது, நிர்வாகத் துறையின் நடவடிக்கையால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது நோக்கத் தக்கது - எனவே, தனியார்துறை நடவடிக்கைகட்கு இவ்விடயம் விரிவுபடுத்தப்பட முடியாதுள்ளமை வெளிப்படை.

எழுத்தாணைகள் வழங்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், இவ் ஆணைகளுக்கான விண்ணப்பங்கள் முகத்தோற்ற அளவிலாவது அடிப்படை உரிமைகளைக் சுட்டி நின்றதென வைத்துக்கொள்வோம். அவ்வேளை, அவ்விண்ணப்பத்தை உயர் நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்த வேண்டிய கடப்பாடு மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு உண்டு.[4]

1. அத்தியாயம் (VI) உறுப் 18
2. உறுப் 126 (I)
3. உறுப் 126 (2)
4. உறுப் 126 (3)

இவ்விடத்திலே, உயர்நீதி மன்றின் தனியானதும், பிரத்தியேகமானதுமான இத்தத்துவம் தொடர்பில், எழுப்பப்படுகின்ற கருத்துக்கள் நோக்கத்தக்கவை.

சாட்சிகளை அழைக்க முடியாமை, ஆவணங்களைக் கொணருமாறு பணிக்க முடியாமை, குறுக்கு விசாரணை செய்ய முடியாமை, மேன்முறையீட்டு வாய்ப்பின்மை, நீதியரசர்கள் செய்யும் இறுக்கமான பொருள் கோடல்,[5] தலைநகருக்கு வந்தேயாகவேண்டுமென்ற அவசியம், அதிக செலவேற்படுமென்ற அச்சம் என்பன உயர்நீதிமன்றின் பிரத்தியேக அதிகாரத்தை வரவேற்காதோர் காட்டும் காரணங்களாகும்.

உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் தொடர்பில் விரிவான பொருள் கோடல் வழங்க முற்பட்டுள்ளதை அண்மைக் கால, அதன் தீர்ப்புகள் காட்டுகின்றன.[6] முதற்சந்தர்ப்பத்திலேயே அதியுயர் நீதிமன்றின் முன் வருவதற்கான சந்தர்ப்பம் மேன்முறையீடின்மையைக் குறைபாடெனச் சொல்லமுடியாதபடி செய்கின்றது. இலங்கையின் போக்குவரத்து வசதி-பரப்பளவு என்பவற்றை நோக்குகையில், தலைநகருக்கு வருதல் சிரமத்தை ஏற்படுத்தாது; விண்ணப்பித்தலில் உள்ள இலகுத் தன்மை, வழக்குக்கான முத்திரைக் கட்டணம் போன்றவை குறைவாயுள்ளமை என்பவற்றைச் சுட்டிக்காட்டி மேற்கூறிய வாதங்களை வேறு சிலர் நிராகரிக்கின்றனர்.

காலவரையறை

அடிப்படை உரிமை மீறல் தொடர்பான விண்ப்பமானது, ... மீறுப்பட்ட அல்லது, மிக விரைவில் மீறப்படவுள்ளதெனத் தெரிய வந்த தினத்திலிருந்து ஒரு மாத காலத்துக்குட் செய்யப்பட வேண்டும்.[7] சட்டம் வழங்கியுள்ள இப்பத்திரத்தை நாடாது வேறு பரிகாரங்களை நாடிக் களைப்படைந்து, அதன் பின் காலதாமதமாகி செய்யப்படுகின்ற விண்ணப்பங்கள் உயர் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.[8]

ஆனால் சட்ட உதவியை நாட முடியாத நிலையில்[9] உள்ள ஒருவரைப் பொறுத்த மட்டிலே, அத்தகு தடைகளைத் தாண்டிச் சட்ட உதவியைப் பெறக் கூடிய நிலையை எய்திய அன்றிலிருந்துதான் ஒரு மாத காலம் கணக்கிடப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.[10]

வழக்கிடு தகைமை

''அடிப்படை உரிமை மீறலாற் பாதிக்கம்பட்ட ஒருவர்; தானாக அல்லது சட்டத்தரணி மூலமாக ..... விண்ணப்பிக்கலாம்''.[11] எனவே, இங்கு குறிப்பிட்டவாறின்றி ஒருவருக்காக இன்னொருவர் விண்ணப்பிக்க முடியாது. தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் 'அ' என்பவர் பாதிக்கப்பட்டால் அவருடன் எவ்வித தொடர்புமற்ற 'ஆ' என்பவர் இவ்விடயத்தை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவருக்குப் பரிகாரம் பெற்றுக்கொடுக்கலாம்.

ஐக்கிய அமெரிக்காவைப் பொறுத்தமட்டிலே; இவ் விடயம் தொடர்பாகத் தீர்ப்பளிக்கும் தத்துவமுள்ள நீதியரசர் அத்தகையதொரு செய்தியைப் பத்திரிகையிற் கண்ணுற்றாற் கூட உரிய அதிகாரிகள் மூலம் இவ் விடயத்தைத் தனது கவனத்துக்கு எடுத்துத் தீர்ப்பு வழங்கலாமென ஏற்பாடுண்டு.[12]

---

5. Mooter *84* Vol *1 – 14–15*
6. Colombo Law Review 1984 Page: 164
7. *உறுப் 126 (2)*
8. Gamaethige Vs Sriwardena 1988 1 SLR 348.
9. ''Lex non cogit a impossibilia''
10. Saman Ve Leeladasa and another 1989 1 SLR 1
11. உறுப் 126 (2)
12. Colombo Law Review 1984

இலங்கையில் இவ்வித ஏற்பாடுகள் இல்லை; தன் மகளின் அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் தாய் கொண்டுவந்த வழக்கு உயர்நீதிமன்றினால் ஏற்கப்பட்டது. இவ் வழக்கின் நிகழ்வுகட்கு மட்டுமே இது பொருந்துமாதலால், இது ஒரு விதியாக நிலைநாட்டப்பட முடியாதெனலாம். இக் குறைபாட்டை நீதிமன்றம் தன் பொருள் கோடல் அதிகாரத்தின் மூலமா? பாராளுமன்றம் அரசியலமைப்புக்குத் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் மட்டும்தானா தீர்க்க முடியும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அத்துடன், மக்கள், அமைப்புகளாயும் (Organization) தெழிற்சங்கமாயும் இயங்கும் இக்காலகட்டத்தில் இவற்றின் பிரதிநிதித்துவத் தன்மையை நீதிமன்றம் அங்கீகரிக்குமா? என்ற வினாவும் எழுகின்றது. இவ்வினா எழக் காரணம் "Person" என்ற பதம் பொதுவாகச் சட்ட நபரையும் குறித்து நிற்பினும், "தானாக அல்லது..." என்ற வாசகத்தினுள்சட்ட நபரையும் உட் புகுத்திப் பொருள் கோடல் செய்யமுடியாதிருப்பதேயாகும்.

'பிரசை' என்ற பிரயோகம்

வெளியிடல், கருத்து வெளியிடல், பேசுதல், ஒன்று கூடல் – ஒருங்கு சேர்தல்– தொழிற்சங்கம் அமைத்தல் உறுப்புரிமை பெறல் – மதமொன்றைப் பின்பற்றல், போதித்தல் – மொழி, கலாசாரத்தைப் மேம்படுத்துதல்; பயன்படுத்துதல் – தொழில் செய்தல் – தீவெங்கணும் பிரயாணம் செய்தல், விரும்பிய இடத்தில் வசித்தல் – வேறு நாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்புதல் என்னும் சுதந்திரங்கள் பிரசைகளுக்கு மட்டும் உரித்தாக்கப்பட்டுள்ன.[13]

இவ் ஏற்பாடு நாடற்றவர் என்று குறிப்பிடப்பட்ட இந்திய வம்சாவழியினரையும் கருத்திற் கொண்டு ஆக்கப்பட்டதென்பது, இதனைத் தொடர்ந்து வரும் ஏற்பாட்டால் வெளிப்படுத்தப்படுகின்றது.[14] இன்று அத்தகையதொரு பிரிவினர் இல்லைபென்பதால் 'பிரசை' என்ற பதம், இந்நாட்டுப் பிரசைகளல்லாத வெளிநாட்டினரையே குறிக்கின்றது எனலாம்.

பணிப்புறுத்தும், நெறிப்படுத்தும் வாசகங்கள்[15]

பணிப்புறுத்தும் வாசகமென்பது சட்டத்திற் குறிப்பிடப்பட்ட படியே செய்ய வேண்டும் எனப் பிணிக்கும் வாசகமாகும். நெறிப்படுத்தும் வாசகமென்பது சில தளர்த்துதல்களைச் செய்ய அனுமதிக்கும் வாசகமாகும். ஒரு மாத காலத்தினுள் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும், என்ற வாசகம் பணிப்புறுத்தும் வாசகமே எனத் தீர்க்கப்பட்டுள்ளது.[16] எனவே, விதிவிலக்கான சந்தர்ப்பங்களிற் தவிர;[17] ஒரு மாத காலத்தினுட் தாக்கல் செய்யப்படாத வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஆனால், நீதிமன்றம் தனது தீர்ப்பை இரண்டு மாதங்களுக்குள் வழங்க வேண்டும்.[18] என்ற ஏற்பாடு நீதிமன்றினைக் கட்டாயப்படுத்துகின்ற வாக்கியமல்ல வென்றும்; அது – நெறிப்படுத்தும் வாசகமே என்றும் தீர்க்கப்பட்டுள்ளது. எனவே, நீதிமன்றம் தன் தீர்ப்பை இரண்டு மாதத்தினுள் வழங்கித்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமில்லை.

---

13. உறுப் 14 (1) அ – ஐ
14. உறுப் 14 (2)
15. Mendatory and Directory words
16. Edirisooriya Vs Navaretnam 1985 1 SLR 100
17. Lase egit ad impossibila
18. உறுப் 126 (5)

உயிர் வாழ்வதற்கான உரிமை

அரசியல் யாப்பில் சித்திரவதைக்கு' கொடூரமான அல்லது, இழிவான நடாத்துகைக்கு எதிராக வழக்கிடும் உரிமை உண்டு.[18] ஆனால், ஒருவர் கொல்லப் பட்டு விட்டால் இது தொடர்பாகப் பரிகாரம் பெற்றுக்கொள்ள எவ்வித ஏற்பாடும் இல்லை. காரணம், பாதிக்கப் பட்டவரே பரிகாரம் தேடி நீதிமன்றுக்கு வரவேண்டும் ஒன்ற ஏற்பாடே. இது மிகவும் கரிசனையுடன் நோக்கப்பட்டுப் பரிகாரம் வழங்கப்பட வேண்டிய விடயமாகும்.

மட்டுப்பாடுகள்

அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கில் ஆட்சித் துறைக்குப் பாதுகாப்பு வழங்கும் ஒரு கேடயமாக அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப் பாடுகள் அமைகின்றன. குறித்த அடிப்படை உரிமை மீறலானது தேசிய பாதுகாப்பு,-இன, மதச் சுமுகவாழ்வு-நீதிமன்ற அவமதிப்பு, பாராளுமன்றச் சிறப்புரிமை, அவதூறு சம்பந்தமான சட்டம் - தேசியப் பொருளாதார நலன் - தொழில், தொழில் முயற்சி தொடர்பிற் தேவையான தகைமை - பிரஜைகளை நீக்கிவிட்டு அரச துறை அல்லது, கூட்டுத்தாபனத்தொழில் களைக் கொண்டு நடாத்துதல் – பொதுச் சுகாதாரம் – பொதுமக்கள் ஒழுக்கம் என்னும் காரணங்களால் ஏற்படுமாயின் இவை தொடர்பில் நீதிமன்றிற் கேள்வியெழுப்ப முடியாது.[19]

இன்று, இலங்கை மக்களிடையே அடிப்படை உரிமை தொடர்பான வழக்குகள் அதிக பிரபல்யமடைந்து வருகின்றன. இதே உரிமைகள் முன்பு எழுத்தாணைகள் மூலம் வலியுறுத்தப்படக்கூடியனவாய் இருந்தன. எனினும் அவற்றால் மக்கள் அதிகம் வசீகரிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் இது அரசியலமைப்பால் உத்தரவாதப்படுத்தப்பட்டமையா? அல்லது, உயர்நீதிமன்றின் பொருள் கோடலில் அமைந்துள்ள சிறப்புத் தன்மையா? அல்லது, இரண்டுமா? என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான ஏற்பாடுகளைப் புகுத்தியமை சட்டத்துறையில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மை. இதனால் சமூக விழிப்புணர்வொன்று ஏற்பட்டுள்ளமையை, இது தொடர்பாக உயர்நீதிமன்றுக்கு வரும் வழக்குகள் சுட்டிக் காட்டுகின்றன.

---

19. உறுப் 15 (1) – (8)

அடிக்கடி தொந்தரவு செய்பவன் ஏழையெனில் கடன்கொடு. பணக்காரனெனில் கடன் கேள்.

\+ + +

இளமை என்பது வாழ்வின் ஒரு கட்டமல்ல, அது ஒரு மனநிலை. புதுமை காணும் ஆர்வமும், வியப்புக் கொள்ளும் திறனும், வாழ்வின் சோதனையை விரும்பி ஏற்கும உறுதியும், செயலிலே இன்பத் துடிப்பும் இருக்கும் வரை நாம் இளைஞர்கள் தான்.

– தாகூர்

கொலையும், குற்றத்திற்கிடமான மனித உயிர்போக்கலும்

Murder and Culpable Homicide not amounting to Murder

உயிர்வாழ்வது மனிதனின் ஒப்பற்ற உரிமையாகும். அந்த உரிமைக்கு ஊறு விளைவிப்பது பெருங்குற்றமாகிறது. எவ் வுயிரையும் கொல்லாது இருத்தலே நன் னெறி, நல்லொழுக்கம் என்பது வள்ளுவர் வாய்மொழியாகும்.

குற்றமல்லாத; மரணம் விளைவித்தல்

ஒருவர் பிறருக்கு மரணம் விளைவிப் பதைச் சட்டம் பெருங்குற்றம் எனக் கொள்கிறது. ஆயினும், எல்லாச் சூழ்நிலை களிலும் ஒருவர் நீதிமன்றத்தில் மரண தண்டனை பெற்ற குற்றமாவதில்லை. உதாரணமாக:- நீதிமன்றத்தில் மரண தண்டனை பெற்ற குற்றவாளியைத் தூக் கிலிட்டுக் கொல்லும் அதிகாரி குற்றவாளி யின் மரணத்தை விளைவிக்கின்றார். இந் நிலையில் அந்த செயல் குற்றமாவதில்லை. ஏனெனில், இது நீதியை நிறைவேற்றும் செயல் ஆகும். (execution of public Justice) மேலும், எளால் தன்னை வெட்ட வந்த வனை ஒருவர் தற்காப்பிற்காக கொன்று விடுகிறார். இது காப்புரிமைச் செயலாத லால் குற்றமன்று மேலும், கொள்ளைக் கூட்டத்தினைக் கலைப்பதற்காக முறைப் படி பொலிஸ் அதிகாரி அந்தக் கூட்டத் தில் நின்ற ஒருவனைச் சுட்டுக் கொல் கிறார். இது நீதியை நிலைநாட்டும் செய லாதலால் குற்றமாகாது மேலும், போரில் ஒரு படை வீரனை எதிர்ப்படை வீர னைக் கொல்லுகிறான். இது போர்ச் செயலேயன்றி கொலைச் செயலன்று ஆனால், ஒருவர் போர்க் கைதிகளை எவ்வித நியாயமுமின்றிக் கொல்வாராயின், அது குற்றமாகும். காரணம், அச் செயல் சர்வதேச சட்டத்திற்கு முரணானதாகும். எனவே, மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளில் ஒருவர் பிறருக்கு மரணத்தை விளைவித் தல் குற்றமாவதில்லை. இவையெல்லாம் சட்டத்திற்கு இயைந்த முறையில் மர

ணம் விளைவிக்கும் செயல்களாகின்றன. (Justifiable homicide)

குற்றப் பொறுப்புள்ள மரணம் விளைவித்தல்

சட்டத்திற்கு இயைந்த முறையிலன்றி வேறு வகையில் மரணம விளைவிக்கும் செயல்கள் ''குற்றத்திற்கிடமான மனித உயிர்போக்கல்'' (Culpable homicide) எனப்படும் இதன் வரைவிலக்கணம் தண் டனைச் சட்டக் கோவையின் (Penalcode) பிரிவு 293 இல் கூறப்பட்டுள்ளது இது இருவகைப்படும்.

(1) கொலை - இதன் வரைவிலக்கணம் பிரிவு 294 இல் கூறப்பட்டுள்ளது.

(2) கொலையாகாத குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கல் – இதற்கு வரைவிலக்கணம் எமது சட்டத்தில் இல்லை. எனினும், இரண்டு சந்தர்ப் பங்களில் இது ஏற்படலாம். முதலா வது பிரிவு 294 இன் கீழ் காணப்படும் விசேட விதிவிலக்குகளின் கீழ் வரும் சந்தர்ப்பங்களில் மரணம் ஏற்படல்– இங்கு, குற்றம் சாட்டப்பட்டவர் இதனை எதிர்காப்பாக பயன்படுத் தலாம். இரண்டாவதாக ஒருவர் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு அவ ருடைய செயல் பிரிவு 294 -ல் காணப் படும் கொலைக்குரிய வரைவிலக் கணத்தைப் பூர்த்தி செய்யாமலும், ஆனால், செயல் மரணதைத ஏற் படுத்தியிருக்கும் சந்தர்ப்பங்கள். எனினும், K. Vs Solamon (38 NLR 113) என்ற வழக்கில் சில சந்தர்ப் பங்களில் கொலையோ அல்லது, கொலையாகாத குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கலோ இன்றி மரணம் ஏற்படும் சந்தர்ப்பங்களில், ஒருவர் கடுங்காயம் விளைவித்தற்கு குற்றம் சாட்டப்படலாம் என்று கூறப்பட்டது.

மேற்கூறப்பட்ட இரண்டு குற்றங்களி லும் கொலைசெய்தல் கூடிய குற்றமுள்ள தாகவும், கொலையாகாத குற்றத்திற் கிடமான மனித உயிர்ப்போக்கல் அதனை விடக் குறைந்த குற்றமுள்ளதாகவும் தண் டனைச் சட்டக் கோவை கருதுகின்றது. (பிரிவுகள் 296, 297 இல் கூறப்பட்டிருக் கும் தண்டனையின் அளவிலிருந்து அதனை அறிந்து கொள்ளலாம்) இவை இரண்டி லும் உயிரை உடலில் இருந்து அகற்றிய செயல் அதாவது, மரணத்தை விளைவிக் கும் செயல் நடைபெறுகின்றது. ஆனால், குற்றமனதைப் பொறுத்தவரையில் (Mens-rea) இவை வேறுபடுகின்றன. இவ்வேறு பாட்டை பிரிவுகள் 293, 294 களுக்கிடை யில் காணப்படும் வித்தியாசத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கல்

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 293 இன்டடி மரணத்தை ஏற்படுத்தும் கருத் துடன் அல்லது மரணம் ஏற்படக்கூடிய முறையிலான உடற்காயத்தை ஏற்படுத் தும் கருத்துடன் அல்லது, தான் செய்யும் செயலினால் மரணம் ஏற்படுவதற்கு இடம் இருப்பதாக அறிந்து கொண்டு அச்செயலைச் செய்வதன் மூலம் மர ணத்தை விளைவிக்கும் ஒருவன் குற்றத் தைச் செய்தவன் ஆகின்றான்.

பிரிவு 293 இன் முதலாவது எடுத்துக் காட்டு நேரடிச் செயலால் மரணம் ஏற் படாவிட்டாலும், ஒருவர் மீது குற்றப் பொறுப்பு சுமத்தப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இதில் ''A'' மர ணம் விளையும் எனத் தெரிந்து கொண்டு ''B'' நடக்கும் பாதையில் குழியைத் தோண்டி அதனை மூடி மறைக்கிறார்.

அவரது கருத்து 'B' இறக்க வேண்டும் என்பதாகும். ''B'' அதில் விழுந்து மர ணம் அடைகிறான். இங்கு ''A'' பிரிவு 293 இன் கீழ் குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றத்தைச் செய்தவன் ஆகின்றான் இவ்வெடுத்துக்காட்டில் ''B'' இறக்க வேண்டும் என்ற கருத்தும், தன் செயலால் மரணம் ஏற்படும் என்ற அறி வும் முக்கியத்துவம் வகிக்கின்றன. இப் பிரிவின் இரண்டாவது எடுத்துக்காட்டு, தன்னால் செய்யப்படாத செயலாக இருப் பினும் அவர்மீது குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றத்திற்கான குற்றப்பொறுப்பைச் சுமத்த முடியும் என் பதைச் சுட்டிக்காட்டுகின்றது. உதாரண மாக 'A', 'B' புதரில் மறைந்துள் ளார் என அறிந்தும் அதனை Cக்குக் கூறாமல் 'C' ஐ அப்புதரை நோக்கிச் சுடும்படி கூறுகின்றான். இதனால் ''B'' இறக்கின்றான் இங்கு ''C'' இக் குற்றத்திற்கு குற்றவாளி ஆகமாட் டான். ஆனால் ''A'' குற்றத்திற் கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றத் திற்கு பொறுப்பாளி ஆவான். எனவே ஒரு நிகழ்ச்சியின் உண்மையான நிலையை அறி யாத ஒருவரை அதனைச் செய்யும்படி தூண்டுவதனால், அச் செயலை செய்தவர் அக்குற்றத்திற்கு குற்றவாளியாகாவிட்டா லும் தூண்டியவர் அக்குற்றத்திற்குக் குற்

றவாளி ஆகலாம். இதன்படி செயலைச் செய்யும் அவசியம் இல்லாது வசனங்களினால் ஒருவரைத் தூண்டுவதனாலும் அவர் குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றத்திற்குக் குற்றவாளியாகலாம்.

இப் பிரிவின் விளக்கம் I இன்படி, உடல் நோயால் வருந்தும் ஒருவருக்கு காயம் ஏற்படுத்தி, அதனால் நோய் கடுமையாகி மரணம் ஏற்பட்டாலும் அங்கு குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றம் புரியப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட K Vs Solamon வழக்கில் 4 எதிரிகள் இறந்தவரை கையினால் தாக்க, அவர் மரணமடைந்தார் வைத்தியச்சாட்சி அவரது மண்ணீரல் பாதிக்கப்பட்டிருந்ததனால் மரணம் விளைந்தது என்றிருந்தது. இங்கு முடிவு மரணமாக இருந்த காரணத்தினால் மாத்திரம், மரணம் ஏற்படும் என எதிரிகள் தெரிந்திருக்க வேண்டும் என்று கருதுதல் தவறு என்ற அடிப்படையில் அவர்கள் குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றப் பொறுப்பிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

விளக்கம் II இன்படி, காயம் ஏற்பட்ட ஒருவருக்குத் தகுந்த நேரத்தில் சிகிச்சை செய்யாமையால் மரணம் ஏற்பட்டாலும், காயத்தை ஏற்படுத்தியவர் குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றத்தினைப் புரிந்தவர் ஆவார்.

விளக்கம் III இன்படி, தாயின் கருவிலுள்ள சிசுவிற்கு மரணம் ஏற்படுத்தினால் அது பிரிவு 293 இன் கீழ் குற்றத்திற்கிடமான மனித உயிர்போக்கல் குற்றமாகாது. ஆனால், முழுமையாகப் பிரசவிக்காமலோ அல்லது மூச்சு விடாமலோ வெளிக்கொணரப்பட்ட உயிர்ச்சிசுவிற்கு மரணத்தை விளைவித்தால் அது குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் குற்றம் எனப்படும்.

கொலை

பிரிவு 294 இன்படி, குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக்கல் பின்வரும் முறையில் ஏற்பட்டால் அக்குற்றம் கொலை எனப்படும்:

இதன்படி,

1) மரணத்தை ஏற்படுத்தும் கருத்துடன், ஒரு செயலைச் செய்து மரணத்தை ஏற்படுத்தல்

2) மரணத்தை ஏற்படுத்தும் உடற் காயம் இன்னதென்றறிந்து, அக் காயத்தை ஏற்படுத்தும் கருத்துடன், ஒரு செயலைச் செய்து, மரணத்தை ஏற்படுத்தல்.

3) இயல்பான நோக்கில் மரணத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்ட உடற் காயத்தை ஏற்படுத்தும் கருத்துடன், ஒரு செயலைச் செய்து, மரணத்தை ஏற்படுத்தல்

4) ஒரு செயல் மரணத்தை அல்லது, மரணத்தை ஏற்படுத்தும் உடற் காயத்தை தவறாது தோற்றுவிக்கும் உடனடி ஆபத்தைக் கொண்டது என்றறிந்தும், மரணத்தை அல்லது, அக்காயத்தை தோற்றுவிக்கும் இன்னலை ஏற்படுத்துவதற்கான இயைந்த காரணம் எதுவுமின்றி, அச்செயலைச் செய்து மரணத்தை ஏற்படுத்தல்

பிரிவு 293 ம் 294 ம் ஒப்பீடு

மேற் கூறப்பட்ட கொலைக்கான வரைவிலக்கணத்தைக் கூர்ந்து கவனிப்போமாயின், அதில் குற்ற மனதினை உள்ளடக்கும் முதல் 3 கூறுகளில் காணப்படும் கருத்தும், 4வது கூறில் காணப்படும் அறிவும், பிரிவு 293 இன் முதல் 2 கூறுகளின் கருத்துகளிலிருந்தும், 3 வது கூறின் அறிவிலிருந்தும் வித்தியாசப்படுவதைக் காணலாம். பிரிவு 294 இல் காணப்படும் கருத்தும், அறிவும் சில குறிப்பிட்ட விசேட சந்தர்ப்பங்களில் காணப்படுவதோடு அது பிரிவு 293 ஐ விட கடுமையான கருத்தும், அறிவும் காணப்படும் சந்தர்ப்பங்களிலேயே உருவாகிறது. இத்தகைய விசேட கருத்தும் அறிவுமில்லாத சந்தர்ப்பங்களில் உருவாகும் குற்றம் கொலையாகாது. இது பல தீர்க்கப்பட்ட வழக்குகளில் கூறப்பட்டுள்ளது.

Bastian Silva Vs Appuhamy (4 NLR 47) என்ற வழக்கில் பிரிவு 294 இன் 1ம் கூறில் காணப்படும் சருத்து கொலைக் கான கருத்து (Murderous Intention) என் றும், இது பிரிவு 293 இன் 1 ம் கூறின் கருத்தினை விட கடுமையானது என்றும், அது ஒரு செயலின் தன்பையிலிருந்து புலப்படும் என்றும் கூறப்பட்டது.

மேலும் Fernando Vs K (30 CLW 22) என்ற வழச்கில் மரணத்தை ஏற்படுத்து வதற்குப் பயன்படுத்திய ஆயுதமும், காயம் ஏற்படுத்தப்பட்ட உடலின் பாகமும், குற் றம் சாட்டப்பட்டவரின் கொலைக் கருத் தைப் புலப்படுத்தும் என்று கூறப்பட்டது.

பிரிவு 294 இன், 2ம் கூறில் காணப் படும் கருத்தானது, பிரிவு 293 இன் 2ம் கூறில் காணப்படும் மரணம் ஏற்படக் கூடிய முறையிலான உடற்காயத்தை ஏற்படுத்தும் சருத்திலிருந்து வேறுபடுகிறது. பிரிவு 294 இன் 2ம் கூறில் காணப்படும் சருத்தானது இறந்தவருக்குக் குறிப்பிட்ட காயத்தை ஏற்படுத்தினால் அவருக்கு மரணம் ஏற்படும் எனத் தெரிந்து, அக்காயத்தை ஏற்படுத்தும் சருத்து டன் ஒரு செயலைச் செய்து மரணம் ஏற்படுத்தலாகும். உதாரணமாக, இறந் தவருக்குப் பலவீனமான இருதய நோய் இருப்பதாக அறிந்த குற்றம் சாட்டப்பட் டவர், அவரைத் தாக்கி மரணத்தை ஏற் படுத்தினால் அவர் கொலைக்குற்றவாளி யாகலாம். இங்கு அத்தாக்குதலினால் நல்ல உடல் நிலையிலுள்ள ஒருவருக்கு மர ணத்தை ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும். எனவே பிரிவு 294, 2ம் கூறில் காணப் படும் கருத்தானது குறிப்பிட்ட ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்துவதோடு அவருடைய பலவீனமான உடற்தன்மை பற்றிய அறி வையும் உள்ளடக்குகிறது.

பிரிவு 294 இன், 3ம் கூறில் காணப் படும் உடற்காயத்தை ஏற்படுத்துவதற் கான கருத்து, பிரிவு 293 2ம் கூறில் காணப் படும் உடற்காயத்தை ஏற்படுத்துவதற் கான கருத்திலிருந்து வேறுபடுகின்றது. பிரிவு 294 இல் ஏற்படுத்தும் உடற்காயம் இயல்பான போக்கில் மரணத்தை ஏற்படுத் தும் தன்மை கொண்டதாக இருப்பதனால், அது பிரிவு 293 ஐ விட, நிச் சயமுள்ள தன்மையாகக் காணப் படுகிறது. Mendis and others Vs Queen (54 NLR 177) என்ற வழக்கில் Gratiaen J "இயல்பான போக்கில் மரணத்தை ஏற் படுத்தும் தன்மை கொண்ட" என்பது "மரணம் ஏற்படக்கூடிய முறையிலான" என்பதனை விட நிச்சயமானது என்பத னால் நிச்சயமான மரணத்தை அக்காயம் ஏற்படுத்தும் என்ற கருத்து இருக்க வேண் டும் என்று கூறினார். இவ்வழக்கில் 2 எதிரிகள் இறந்தவனை வாளினா லும், தடியினாலும தாக்கினர். இதனால் காலில் பலத்த முறிவு ஏற்பட்டு அவர் ஒரு ஓடையில் விழுந்தார். இதன் காரண மாக தசை அழுகியதனால் விஷம் ஏறி அவர் மரணமடைந்தார். மருத்துவ சான்றின்படி அவர் அருவியில் விழாது மண்ணில் விழுந் திருப்பதாயின் மரணமெய்தாதிருக்கலாம் என்று கூறப்பட்டது. எனவே இங்கு இயல் பான போக்கில் மரணமேற்பட வாய்ப் பில்லை என்ற காரணத்தினால் எதிரிகள் குற்றத்திற்கிடமான மனித உயிர்போக் கலுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டனர்.

பிரிவு 294 இன் 4ம் கூறில் காணப் படும் "மரணத்தை அல்லது மரணத்தை ஏற்படுத்தும் உடற்காயத்தைப்" பற்றிய அறிவு பிரிவு 293 இன் 3ம் கூறில் காணப் படும் "மரணம் ஏற்படுவதற்கு இடம் இருக்கின்றது என்ற அறிவை விட நிச்ச யத் தன்மை உடையது என்பதனால் அது கொலையாகின்றது. இந்த வேறுபாட்டை H N G. Fernando C J Somapala Vs K (72 NLR 121) என்ற வழக்கிலே விளக்கிக் கூறி, பிரிவு 294 இன் 4ம் கூறில் மரணம் நிச்சயம் என்ற அடிப்படையிலான கருத்து அமைந்துள்ளது என்று கூறினார்.

எனவே த. ச. கோவையின் 293,294 பிரிவுகளில் கூறப்பட்ட விடயங்களிலிருந்து முக்கியமாகத் தெரிவதாவது குற்றத் திற்கிடமான மனித உயிர்போக்கல் விரிந்த அத்திவாரமுடையதென்பதாகும். எனி னும், குற்றமனதைப் பொறுத்தவரையில், மிகக்கட்டுப்பட்ட சந்தர்ப்பங்களிலேயே அது கொலையாகின்றது. எனவேதான் கொலை எப்பொழுதும் குற்றத்திற்கிட மான மனித உயிர்பபோக்கல் ஆவதோடு, குற்றத்திற்கிடமான மனித உயிர்ப்போக் கல் எப்போதும் கொலையாவதில்லை.

THE RIGHTS OF MAN

SWAMI VIPULANANDA

Mr. H. G. Wells has initiated a world-debate on the above subject (1) The senctity of the human body. (2) the right of personal freedom, (3) the right to legislate, (4) the right to challenge misrepresentation, (5) the right to subsistence consequent upon the political and economic collectivization of the world's resources, (6) rights regarding education and freedom of worship, (7) the right to employment (8) the right to acquire property, (9) the right of protection of property and of property and, (10) the right of free movement, – are roughly the topics around which the debate is to be conducted. The draft submitted by Mr. Wells for discussion, his own contribution to the debate and the views of other thinkers appeared in the **Hindu** After the discussion is over, Mr. Wells propses to redraft the clauses, which would then form a sort of **Magna Carta** for all mankind irrespective of race, creed and nationality. We do not ptopose to enter into the debate or offer any comments on any of the ten clauses drafted by Mr. Wells; as Vedantists we are concerned with the philosophica, and spiritual issues involved in the present world[1] situation, which make it necessary for thinking man in certain parts of the world to initiate a symposium and formally discuss the Rights of Man.

Is the proposed debate a mere academic discussion which might probably form a chapter of a new Utopia that is going to be written; or is it something that can be and will be translated into practical politics, so as to enable humanity to open a new chapter in its progress towards the goal of universal freedom? This is the first qnestion that confronts us. We shall attempt to answer it by seeking out the parties who are concerned in the matter and trying to get at their points of view. In the English **Magna Catra** of personal and political liberties, the people of England formed the party that demanded the rights and the king of England. a single man, constituted the party that attempted to withhold the rights. The single man had perforce to yield to the united demand of a whole people, for the demand was irresistible. Who are the parties concerned in the proposed **Magna Carta** of the world, the charter of personal and political liberties for humanity as a whole? Who demand these rights; who withhold them and who again are merely indifferen to the whole question? This planet of ours is peopled by about two hundred crores of human beings of various pigments of skin – black, yellow, red, brown and white and other intermediate shades. They speak different languages, havc different religious beliefs, different customs and traditions, and different standards of wealth and knowledge. They enjoy different degrees of civil liberties. Some have submitted themselves to the unlimited svzerainty of individuals or groups who have inherited or acquired the power to curtail or withold their personal libertiea, Others have what are known as responsible governments which possess widely differing ideologies. The govern-

ments themselves are often not wholly emeancipated, for the men who form them oftentimes happen to be puppets in the hands of organized groups that possess the power of money and others that wield a mighty influence over the great propaganda machine known as the world's press. Then there are conficts between sections of humanity. From the dawn of history wars, great and small, have been a perpetual phenomenoa occurring in some parts or other of this world. Quarter of a century ago, the world witnessed a great war, by far greater than any that ever occurred before. We were then told that that was the war to end war. Disillusionment of our fond hopes for peace arrived in the shape of another great war in which the entire planet appears to be involved. The complexity of the world-situation makes it impossible to single out national, racial, political, economic or other well-defined groups that put forth a united demand for the fundamental rights of the whole of humanity. Each of the groups above referred to and other such groups have their own particular interests that millitate against the intersts of other groups and of humanity as a whole.

In the midst of this strife and confusion, isolated voices are heard speaking on bchalf of the human race. These cries in the wilderness often go unheeded. The men who utter these cries belong to all countries, all nations and all religious beliefs. Transcending the limitations of country, nation and religion, they speak for humanity; they are not bound down by political and econmic group-loyalties. They are rebels and often persecuted by normal people who stick to their limited interests and look askance at these other men who attempt to disturb the existing order of things. These rebels who speak on behalf of humanity as if they were the accredited representatives of the human race are variously konwn as prophets, poets and philosophers. They are all fashioned out of the same metal, the shining gold of idealism. To them ideals are more real than the the so-called real interests of work-a-day life They live for their ideal and are prepared to die for it. They are the finest flowers of the human race. Every age produces them; the Invisible King who presides over the destinies of the human race with infinite mercy and eternal alertness sends them as His messengers. They bear His mark on their foreheads. Theirs is the voice that pleads on behalf of humanity as a whole. Turning to the men in bondage they say: "Brothers! shake off the shackles that bind you and be free." To the tyrants who make bondsmen of their brethren they say: "Beware of the retribution that awaits you." The oppressed and the exploited of all nationalities are their chief concern.

Prophets, poets and philosophers are then the pary that demand the rights of man. Men in power whose loyalty is not directed to humanity as a whole but stands restricted to the group to which they belong form the party that withholds the inherent rights of man. As for the common people, they are incapable of taking either of these positions and consequently stand apart from the discussion. The solidarity of makind is a commonplace idea with prophets, poets and philosophers who are the unrecognised, nevertheless potent legislators of the wotld. The idea is new to statesmen and politicians whose interests are mainly confined to national frontiers. Philosopher - statesmen now and again appear and attempt to direct

the course of events, viewing the world as a whole. One doubts their survival value, for under present conditions their colleagues, most of whom are "practical" men, will throw them out as "idealistic dreamers", unfit to have any voice in the practical concerns of national life, The world may have outgrown the stag. in which it suppressed the voice of its prophets by stoning them or burning them or sending them to the stake. But it has not come any where near to entrusting them with national responsibililty. The philosopher-statesmen of Plato are yet to come.

welfare. The attainment of this stage by humanity as a whole is almost an impossible proposition. The intellectual and moral level of the whole race should be raised to such a high extent as to enable the rank and file to perceive the beauty of an ordered world in which each man will conserve his inherent rights by safe-guarding the rights of others. The three stages outlined above are applicable to individuals, nations and humanity as a whole. The struggle for survival blossoms into conscious co-operation for mutual welfare which ripens into the law of love.

This year we Commemorating the 100th Anniversary of Swami Vipulananda. He is acclaimed to be the First Professor in Tamil at the University of Ceylon and at tha University of Annamalai (India). We publish this article as a tribute to this Swami.

The human race as a whole, in the present stage of its evolution, is governed by the law of stuggle for existence and survival of the fittest formulated by Darwin. "Mutual devouring, hunger and conscious desire, the sense of a limited room and capacity and the struggle to increase to expand, to conquer and to possess" are the springs of action of notional, racial, poliical, econmic and such other groups. There are of course men and women whose lives are governed by the law of love, the working of which necessitates self-giving, self-denial and self - immolation. They find the fulfilment of their lives by denying their own inherent rights for the serviee of others. A society based upon the law of love will be guided more by Duty and Faith than by Right and Reason. Individuals in such a society will consider it their duty to surrender their own rights for safe-guarding the rights of others. There is a middle position of consciously co-operrting for mutual

"Precisely because the struggle for survival, the impulse towards permanence is contradicted by the law of death, the individual life is compelled and used to secure permanence rather for its species than for itself, and this it cannot do without the co-operation of others and the principle of co-operation and mutual help, the desire of others, the desire of the wife, the child, the friend and helper, the associated group, the practice of association of conscious joining and interchange are the seeds out of which flowers the principle of love." (Sri Aurobindo: **The Life Divine** Vol. I, Chap. XXI)

In the very nature of things the race as a whole laks behind the individual. Prophets, poets and philosophers who form the vanguard of humanity are guided by the law of love. Humbler men who are saintly are also guided by this law, Duty and Faith are the working principles for this group which

considers the Sermon on the Mount not as an unpractical ideal, but as a living doctrine applicable to the practical concerns of everyday life. They forego their own rights, but strongly uphold the rights of others. The foremost intellectuals of the race belong to the middle group of persoes who are ready for conscious co-operation leading to mutual welfare. Right and Reason are the working principles of this group. The best of them would not accept any particular advantage that they deny to others. In the third group we find militant nationalists and "so-called" men of action who despise thinkers and philosophers as mere dreamers. They are always prepared to fight for their rights regardless of the rights of other individuals and groups. This is the group that brings about world-wars and international conflicts. The above analysis has revealed to us the true parties concerned in the matter and has also given us some idea of their points of view We also note that in the vere nature of things, intellectuals will frame and put forward programmes for human justice and social amelioration, but will lack the necessary driving power to translate them into action.

As alreaby noted above, the governments of nations are at present dominated by men who are guided by the Darwinian law of struggle for existence and survival of the fittest. The voice that arose in Nazareth nineteen hundred years ago is not taken seriously by men who profess to be followers of the Nazarene. The human rrce that is so slow to catch the celestial fire brought down to the earth by the Great Teacher is not going to be caught in the finely spun cobwebs of programmes put for ward by intellectuals. Facing the bare facts, we see around us nations whose very principle of existence is self-assertion associated with the destruction or enslavement of others The passion for mutual destruction has reached such a degree that in the name of efficiency and national preparedness, statesmen curtail the civil liberties of their own nationals and pile up huge debts which would seriously restrict the liberties of generations yet unborn. True reason and higher self-interest appear to be altogether absent in this mad world. In this slate of affairs it is mere mockery to speak of fundamental human rights.

The League of Nations has disillusioned humanity of the possibility of achieving collective security by negotiation and mutual agreement. The fond hopes of a United States of Europe has receded into the background consequent upon the onslaught on the established religion by two of the major powers and complete indifference to religion by several others. Will Durant writing in the *Saturday Evening Post* of Philadelphia says: "Half of Europe has rejected Christianity-explicitly in Russia. implicitly in Germany. Two-thirds of Europe and half of South America have deposed democracy, have established martial law over life and industry, and have submitted to the rule of "supermen." Nearly all of Europe has put aside the ethics of Christ as incompatible with military vigour and has adopted the Nietzschean "master morality" of power. In Russia and Germany, and in less degree in Italy, men have accepted these developments not as passing tyrannies but as a new religion capable of stirring their hearts to sacrifice and heroic enterprise. Perhaps Christianity like democracy is doomed by the victory of force over persuasion, of efficiency over freedom,

of war over peace. The First World War did more harm to Christianity than all the Voltaires in history; the Second World War may complete its destruction. Possibly the age of Nietzsche has already begun.'

Is there no hope for Europe and the world? Will not true Christianity rise up again as a civilizing force? Has the Man of Sorrows irretrievably lost ground to the prophet of Superman? Will not the wails of the world reach the Throne of Mercy? Has God forsaken His world? These are the questions that engage the attention of lovers of humanity all over the world. They are not anxious to consider programmes of fundamental human rights. For they know that humanity is divided against itself, and the assertion of fundamental rights by one section is the surest way of driving the men of the other section to trample upon those rights, if they can possibly do it; or they may discard their own rights and take refuge under a Dictator, "a Superman" who would perform the ruthless work of destruction for them. In a divided house self-assertion by one side leads to self-assertion by the other and a conflict results. It is again a question of struggle for existence and survival of the fittest. We may sincerely wish that the whole of humanity should settle down as members of a united household, a large joint family such as we know in India, share the world's resources equally among themselves and live happily ever afterwards. The very laws guiding human evolution deny such a possibility.

In an individual human life the youth of strife and self-assertion is followed by the middle age of sweet reasonableness and conscious co-operation for mutual welfare and then the last stage of self-abnegation and law of love is reached. The movement takes place as if it were in a straight line. The analogy does not hold good for nations and for humanity as a whole. In these cases the course of movement is something like the swings of a pendulum: or if we credit nations and humanity with the wisdom of conserving accumulated experience, the movement may be said to take place in a spiral ever expanding in its radius nevertheless swining alternately from one direction to the other Self-assertion has in it the seeds of self-denial and self-denial in its turn has in it the seeds of self-assertion. Earlier in this discussion we quoted the words of Sri Aurobindo to testify to the first fact that the seeds of love are found in the principle of co-operation that arises from the struggle for survival. What about the other fact? The course of Christianity and the successive stages through which a monastic institution passes illustrate the fact of self-denial leading to self-assertion. By practice and precept Jesus enjoined upon His followers, the virtues of povery and humility. Early Christians and saintly founders of monastic sects such as St. Francis of Assisi strictly followed the teachings of the Master. As the community of monks grew, the extreme self-denial of the individual monk slowly gave place to accumulation of wealth under the convenient pretext of making provision for the permanence of the community or the house. The Evil One who is ever alert often starts his game by whispering into the ears of a wearied monk, "Well, austerities are all right for you, but what about the poor brethren? Should you not keep back some funds for them? Seeing your extreme self-denial the faithful are

bringing costly gifts to you; why should you distribute the whole of it to the poor in the streets? Are not the brethren also poor? Do keep back something for them; for after your demise the faithful may not respond so well as they do now." The poor monk succumbs to the temptation, never knowing that it was the Evil One that prompted him to take the decision. Accumulated property and along with it power and influence and other entanglements come. Self-denial thus swings on to self-assertion.

A nation that is down and out seeks avenues for strengthening itself and finds them. When it has achieved what is wanted, it does not stop short, it goes a step further and becomes a menace to neighbouring nations. They then pounce upon it and despoil it of its goods; thereafter they fall out among themselves in the act of sharing the loot, then form fresh combinations and start the game anew. This in short is the international game that we are witnessing before our eyes day after day. Taking humanity as a whole we may note that the age of Right and Reason alternates with the age of Duty and Faith. Self assertion alternates with self-denial. Science has ushered in new forces, and fresh experiences. Croesus of Lydia, if he were to return to the earth, will be dumb-founded to see the magnitude of the wealth owned by his successors, the modern multi-millionaires. What would strike him more than anything else is the ingenuity with which the present-day Croesuses are guarding their pile by hiring ministers of established religions, unscrupulous politicians and foremost intellectuals to do the job for them by poclaiming the fundamental rights of property. Property is the symbol of self-assertion. At a certain stage of progress of the individual and also a necessity. At a certain other stage the distribution of accumulated property is a virtue and a necessity. The mistake is not in accumulating property but in continuing to accumulate it ceaselessly and limitlessly. The ancient philosophy of India has solved this question once for all by laying down the *Pravritti Marga* of self-assertion and accumulation of property and the *Nivriti Marga* of self-denial and distribution of accumulated property. If Europe is suffering today from the evil results of extreme self-assertion and the over-accumulation of property, India is suffering from extreme self-denial and the poverty consequent upon it. As we have already pointed out, the cure is contained in the malady itself, and tendencies are not wanting to show that the rhythm of national life will soon re-adjust itself in both parts of the world.

Christianity will certainly persist as the higher doctrine of self-abnegation founded on the law of love. Let us also not forget that the teachings of Nietzsche will continue to persist as the lower doctrine of self-assertion founded on the Darwinian law of struggle for survival. Although apparently contradictory as night and day, fire and water, rest and activity, and so forth both the principles are necessary for the functioning of a well-ordered world. In the heat of temper, particularly in times of war, people are apt to forget the fact that Germans and Jews, Japs and Chins are all sons of the same Heavenly Father, no matter whether they fight among themselves or maintain an attitude of peace. Despair leads us to hope; darkness brings with it the expectation of light. "We need not despair, for life is a fountain of ever-lasting exhilaration. No creature of

earth has so tortured himself as Man, and none has raised a more exultant Alleluia. It would still be possible to erect places of refuge, cloisters wherein life would yet be full of joy for men and women determined by their vacation to care only for beauty and knowledge, and so to hand on to a future race the living torch of civilization. But of such ashes a new world might well arise. Sunset is the promise of dawn." (Havelock Ellis-quoted in the *Unity*.)

Now to come back to the proposed *Magna Carta* of the world. Although the practical realization of the proposal is extremely remote, it is very useful and of very great educative value to let people know that humanity has certain inherent fundamental rights which give men and women the necessary freedom for living a fuller life and sharing the world's resources as members of the same household. To achieve this the rich should be willing to give away some part of their property to the poor. We do not advocate for all men the extreme step contained in the advice. "If thou wilt be perfect, go *and* sell that thou hast, and give to the poor, and thou shalt have treasure in heaven; and come *and* follow me." There is one thing which the world can nationalise and also internationalise and that is education. All men who are capable of profiting by it have a right to knowledge and enlightenment. The universities of the world should open their doors to rich and poor alike. The wealthy men of the world should make such endowments as to provide the best facilities for learning and acquisition of knowledge open to all men and women who are able to prove by strict intellectual tests their capacity to derive profit from such facilities. The labours of scientists and philosophers and of all men who labour and reach the peaks of learning are beneficial to the whole world, regardless of colour, creed and nationality. Why shouldn't the world as a whole help them to acquire that knowledge? The propagation of the fundamental and universal principles of religion is another direction to which the collective resources of the world could be directed. Health work such as the eradication of malaria is still another direction. The League of Nations as the one institution founded to express the collective will of the nations can do much, in spite of its past failures. Let us hear what the League has to say of its own future: "The present century has seen remarkable developments in every field of physical science, but perhaps an even more striking feature of the past two decades has been the effort to apply the method of scientific investigation to problems of human personality and relations, and to employ the results of reach in physiology, medicine, chemistry and engineering for the betterment of the conditions of life. There is in every part of the world an effort to improve standards of living in the light of modern scientific and technological advance; there is growing a clearer conviction that really to serve mankind such techniques must be employed not merely to make enterprise more efficient and human existence more comfortable, but to minimise conflict between different elements of the population, to extend understanding and to build up and order based upon law whose sanction is free and common consent.

"If this may be said to be the desire of civilised people, the League of Nations has still much to do even in time of war. Court Carton de Wiart, who has for many years represented Belgium on League Committees dealing with legal problems and social questions, made this declaration of faith upon opening the recent (twentieth) session of the Assembly. It was in hours of darkness that men dreamt of the dawn, and that dawn, he was sure, would see the revival of the League, stronger and better adapted to the true possibilities of international life. The work of the League during this difficult period 'will be watched every where by men of good-will. With them, I believe in a Higher Power which, in the words of Maurice Maeterlinck, has pity on the heart of man I believe in human reason, which, where necessary, corrects its own shortcomings: and I believe with staunch faith in the dignity and freedom of mankind, which remain the condition and b a s i s of all true civilisation.'

Upon this faith was based Count Carton de Wiart's conviction that efforts must be made during wartime to keep in being the essential services of the League-the research and wide human contacts maintained by the League Secretariat, the study of conditions of work continued by the International Labour Office and the juridical activity of the Permanent Court of International Justice, which reminds the world of an essential standard at a time when law is being transgressed."

("Thank you, Prabutha Baratha")

LONG WORDS

AEQUEOSALINOCALCALINOSETACEOAL —
UMINOSOCUPREOVITRIOLIC — (52)
This word was produced by a Dr. Strother to devote the composition of the spa waters at Bristol.

HONORIFICABILETUDINITATIBUS — (27)
In 'Loves labour lost" was the best shakespeare could do -

HOW TO ACHIEVE

"I often wonder, whether we do not constitution, upon laws and upon courts. These are false hopes, believe me, these are false hopes; liberty lies in the hearts of men and women. When it dies there, no constitution, no law, no court can save it. While it lies there, it needs no constitution, no law, no court to save it.

— Judge Leonard Hand

அமர்ந்துள்ளோர் (இடமிருந்து வலமாக):

செல்வி மரீனா மன்சூர் (உப தலைவர்), திரு. ஜி. பி. எஸ். டி. சில்வா (பிரதம நீதியரசர்), திரு. டபிள்யு. லடுவஹெட்டி (அதிபர்), கி. துரைராசசிங்கம் (தலைவர்)

நிற்போர் (இடமிருந்து வலமாக):

செல்வி சர்மிலா குணநாதன், சின்னத்துரை மயூரன், செல்வி இந்துமதி இலட்சுமணன்.

செயலாளரின் ஆண்டறிக்கை

1992

நாற்பத்திரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து விட்ட சட்ட மாணவர் தமிழ் மன்றத்தினது நிகழ்வாண்டின் நிகழ்வுகளை தொகுத்துத்தருவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

21-02-92 அன்று நடாத்தப்பட்ட 'கால் கோள்' விழாவுடன் எமது மன்ற நடவடிக்கைகள் ஆரம்பித்தன. விழாவின் தொடக்கத்தில்; மறைந்த, எமது விரிவுரையாளர் திரு. ஆர். பல்லேவெல அவர்கட்கு செலுத்தப்பட்ட மௌன அஞ்சலியுடன் விழா ஆரம்பமானது. மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவர், நீதியரசர் திரு. கே. பாலகிட்ணர் அவர்கள் பிரதம அதிதியாக, கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தார்.

இவ்வாண்டின் புதிய மாணவர்களை வரவேற்குமுகமாக நடைபெற்ற சாதாரண பொதுக்கூட்டத்தில் 'திருமணத்தின் பிரதான நோக்கம் உடல் உறவே' என்ற தலைப்பிலான, புதிய மாணவர்கட்கிடையேயான தோழமை விவாதம் முகிய இடத்தைப் பெற்றது.

மன்றத்தின் வருடாந்த உல்லாசப் பயணத்தை மேற்கொண்டு 23-02-92 அன்று ஹிக்கடுவை 'Blue Corals' ஹோட்டலுக்கு சென்று வந்தோம். இப்பயணத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

9-03-92 அன்று நடைபெற்ற சாதாரண பொதுக்கூட்டத்தில் 'பொது இடங்களில் காதல் லீலை புரிவது தடை செய்யப்படல் வேண்டும்' என்ற தலைப்பிலான தோழமை விவாதம் புதிய மாணவர்கட்கும், முதுநிலை மாணவர்கட்கும் இடையே நடைபெற்றது.

24-03-92 அன்று நடைபெற்ற சட்ட மாணவர் தமிழ் மன்ற விவாத அணித்தேர்வுப் போட்டியில் பின்வருவோர் அணியின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு: கி. துரைராசசிங்கம் (தலைவர்) செல்வி: மரீனா மன்சூர் (உப தலைவர்) செல்வி: இந்துமதி இலட்சுமணன், திரு. மயூரன், செல்வி: சர்மிலா குணநாதன். இப் போட்டியின் நடுவர்களாகக் கடமையாற்றிய சட்டத்தரணிகள் திருவாளர்கள் எம். எச். எம். அஸ்ரஃப் (பா. உ) டீ. எம். சுவாமிநாதன், எஸ். சுரேந்திரன் ஆகியோருக்கு தமிழ் மன்றத்தின் இனிய நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

விவாத அணியின் சிறந்த பேச்சாளருக்கான 'அமிர்தலிங்கம் நினைவுச் சவால் கிண்ணம்' அணித்தலைவருக்கு வழங்கப்படும்.

10-07-92 அன்று 'சுவாமிநாதன் நினைவுப் பதக்கத்துக்கான உடனாயத்தப் பேச்சுப் போட்டி நடாத்தப்பட்டது. திரு: ஏ. டபிள்யூ. ஏ. சலாம் (மேலதிக மாவட்ட நீதிபதி) சட்டத்தரணிகள் க. கிருஸ்ண பிள்ளை, எஸ் சிறிஸ்கந்தராஜா (அரச சட்டத்தரணி) ஆகியோர் நடுவர்களாக கடைமையாற்றிய இப்போட்டியில் 1 ஆம், 2ஆம், 3ஆம் இடங்களை முறையே திரு: ஏ. எல். எம். லாபிர், திரு: கி. துரைராசசிங்கம், செல்வி: இந்துமதி இலட்சுமணன் ஆகியோர் வென்றனர்.

28-07-92 அன்று மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட சொற்

பொழிவை 'அடிப்படை உரிமைகளும், அதன் வளர்ச்சியும், தற்போதைய நிலை மையும்' என்ற தலைப்பில் சட்டத்தரணி திரு: வி. தேவசேனாதிபதி அவர்கள் நிகழ்த் தினார். அன்னாருக்கு எமது நன்றிகள்.

31-07-92 இல் சேர். பொன். இராம நாதன் நினைவுப் பதக்கத்துக்கான அறங் கூறும் அவயத்தோர்க்கு உரைத்தற் போட்டிநடாத்தப்பட்டது இப்போட்டியில் செல்வி இந்திரலோஜனி இராஜகோபாலன், திரு. யூ. அப்துல் மௌஜூத், திரு. ஏ. எல். எம். லாபிர் ஆகியோர் முறையே 1 ஆம், 2 ஆம், 3ஆம் இடங்களுக்கு தெரிவாகினர். இப்போட்டியில்நடுவர்களாக பணியாற்றிய சட்டத்தரணிகள் திரு. ந. சிறிகாந்தா, திரு. ஜீ. ஜயகுமார் திரு: றஊப் ஹக்கீம் ஆகியோ ருக்கு மன்றத்தின் நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கின்றேன்.

24-06-92 அன்று நடைபெற்ற, கொழும்புப் பல்கலைக்கழக, சட்ட உதவி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சட்ட விவாதப் போட்டியில் கலந்து கொண்டு எமது கல்லூரி சவால் கிண் ணத்தை வெற்றி கொள்வதற்கு காரண மாயிருந்த சட்ட விவாத குழுவினரான செல்வி கா. லிங்கேஸ்வரி, திரு. எம். ஐ. எம். இஸ்ஹர், திரு. கி. துரைராசசிங்கம், திரு. யூ. அப்துல் மௌஜூத் ஆகியோருக்கு மன்றத்தின் நன்றிகள்.

சட்ட சமூக அறநிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'அடிப்படை உரிமை சம்பந்தப்பட்ட விடயங்களில் தீர்ப்பு வழங் கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்தற்கு மாத்திரமே உரியதாக இருக்கக்கூடாது' என்ற தலைப்பிலான விவாதப் போட்டி யில் மன்றத்தின் விவாத அணி வெற்றி யீட்டியதுடன், சட்டக்கல்லூரி சவால் கிண்ணத்தை பெற்றுக்கொள்ள உதவியா யிருந்தது. மேற்படி போட்டியில் கி. துரை ராசசிங்கம் சிறந்த பேச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஒக்டோபர் சட்டக்கல்லூரிப் பரீட்சை யில், ஒவ்வெரு ஆண்டிலும் ஆகக் கூடிய சராசரிப் புள்ளியைப் பெற்ற மாணவருக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களை பின் வரும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளுகின் றனர்.

1ம் வருடம் : 'திருச்செல்வம்' ஞாப கார்த்த புலமைப்பரிசு :- சர்மிலா குணநா தன்.

2ம் வருடம் : 'செல்வநாயகம்' ஞாப கார்த்த புலமைப்பரிசு :- யூ. அப்துல் மௌஜூத்.

3ம் வருடம் : 'அமிர்தலிங்கம்' ஞாபகார்த்த புலமைப் பரிசு :- கா. லிங் கேஸ்வரி.

இவர்களுக்கு எமது பாராட்டுகள் உரித்தாகுக.

மேலும், பொருளாதார ரீதியில் பின் தங்கிய மாணவர் ஒருவருக்கு 'அமிர்த லிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில்' உதவிப்பணமாக வழங்கப்படும்.

இதுவரைகாலமும் ஆங்கிலத்தில் மட் டுமே இருந்த மன்ற யாப்பினை எமது மன் றம் இம்முறை தமிழ்ப்படுத்தியது. இப் பணிக்கு பேருதவி புரிந்த எமது விரிவுரை யாளரும், உதவி சட்ட வரைஞருமான கா. மகாலிங்கசிவம் அவர்கட்டு எமது மன்றத்தின் நன்றிகளை உரித்தாக்குகின் றோம்.

சகல துறைகளிலும் சிறந்த மாணவ ருக்கான ''மன்றம் 90'' விருது இம்முறை திரு. கி. துரைராசசிங்கத்துக்கும் யூ. அப் துல் மௌஜூத்துக்கும் இணைந்து வழங்கப் படவுள்ளது.

மன்ற நடவடிக்கைகளுக்கு முத்தாய்ப்பு வைப்பது போல், எமது 29 வது வரு டாந்த ''நீதிமுரசு'' வெளியீடும், கலை விழாவும் இன்று (06 - 09 - 1992), புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறுகின் றது.

இறுதியாக, மன்றத்தின் செயற்பாடு கள் சிறப்புற பல்வேறு வழிகளிலும் உதவி

ஒத்தாசைகள் புரிந்த சட்ட மாணவர்கட்கும், நிதி உதவி வழங்கி ஊக்களித்த சகல சட்டத்தரணிகட்கும், நினைவுப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் தந்துதவியோருக்கும் எமது மன்றத்தின் கனிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும், எமக்கு பல்வேறு வழிகளிலும் ஆலோசனையும், ஊக்குவிப்பும் வழங்கிய சகல விரிவுரையாளர்கட்கும், அதிபர் அவர்கட்கும், எமது நன்றிகளை தெரிவிப்பதுடன், இவ்வகையில் தனித்துவமான உதவிகளை வழங்கிய திரு. கா. மகாலிங்க சிவம், திரு. R.சிவகுருநாதன், திருமதி. பா. தளையசிங்கம் (விரிவுரையாளர்கள்) ஆகியோருக்கு எமது விசேட நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

எமது கலைவிழா சிறப்புற நடை பெறுவதற்கு புதிய கதிரேசன் மண்டபத்தை இலவசமாக தந்துதவிய திரு. பழனியப்பா செட்டியார் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

தொடரவிருக்கும் தமிழ் மன்ற செயற் குழுவினருக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் இவ்வாண்டின் தமிழ் மன்றம் இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றது.

யூ. அப்துல் மௌஜூத்
பொதுச் செயலாளர்

கற்பதன் நோக்கம் என்ன?

கற்பதன் நோக்கம் அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதற்கென்பர் சிலர். புகழை வளர்க்கவென்பர் வேறு சிலர். வாக்குவாதம் புரிய என்பர் இன்னும் சிலர். சிலரோ பிழைப்புக்கு என்பர்.

ஆனால், கற்பதன் நோக்கம்: தான் கற்றதை மனித இனத்துக்குப் பயன் நல்கும் வகையிற் பயன்படுத்துவதாய் இருக்கவேண்டும்.

– பேகன்

★ ★ ★

தந்தை : மகனே நமது பசுவை வெள்ளம் அடித்துச் செல்கின்றதடா.

மகன் : தந்தையே கவலைப்படாதீர்கள் நாம் பாலிற் கலந்த நீர்தான் வெள்ளமாக வந்துள்ளது.

★ ★ ★

மனிபத்தினி : நாதா, நீங்கள் அழைத்து வந்த பூதம் வேலை தராவிட்டால் நம்மைத் தின்றுவிடுவதாகப் பயமுறுத்துகின்றதே.

மனிவர் : போய் நமது நாயின் வாலை நிமிர்த்தச் சொல்.

WITH BEST COMPLIMENTS FROM

நவநாகரீக மங்கையர்களின்
உள்ளங்கவர்ந்த தரமான
ஜவுளி வகைகளை பெற்றுக்கொள்ள
தலைசிறந்த இடம்

CENTRIE POINT
PETTAH PLAZA SHOPPING COMPLEX
176, 1/2, First Floor,
2nd, Cross Street,
COLOMBO-11.

With Best Compliments

from

ASOKAS
Tyre Traders
AND
ASOKA VIDEO VISION
No. 8, Gunawardena Building,
HATTON.
T. Phone: 0512 - 4291

Ex mero motu - of his own accord

சட்டத்தால் என்ன பயன்?

எமது சொத்தை அநியாயமாக இழந்துவிட்டோமே!

What is the use of law!

We have unreasonably lost our property?

K. MAHALINGASIVAM *

Five men came out with their complaints before a young Attorney - at - law. First complainant reveals his sad story in his inability to eject a tenant from his premises. The second one exposes his ignorance of the law of Prescription. The third one expresses his fear of one co - owner to oust the other co - owners from the co - owned property. The fourth one is dissatisfied in the capacity as owner with the remedy given by the court in a possessory action. The last one explains how the Prevention of Frauds Ordinance may be used as an instrument to perpetrate a fraud.

Maxim : 'LITTLE LEARNING IS DANGEROUS'.

சட்டக்கல்லூரியில் மூன்று வருடங் களை மிகவும் ஆனந்தமாகக் கழித்துவிட்டு, சட்டத்தரணியாகப் பட்டம் பெற்று ஊருக்கு வந்தார் ஓர் இளைஞர். இவரது ஊர் ஒரு சிறிய கிராமம். இந்த ஊரில் இவர்தான் முதன்முதலாகச் சட்டத்தரணி யாகப் படித்து முடித்தவர். இதனால் இவ ருக்கு ஊரில் ஏகப்பட்ட பெருமை. ஒரு நாள் ஊரவர்கள் இவரிடம் வந்து தாம் ஒழுங்கு செய்துள்ள கூட்டத்துக்கு இவ ரைத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டனர். அது ஒரு வித்தியாசமான விவாதமேடை. பேச்சாளர்கள் ஐந்துபேர். அனைவரும் ஒருபக்க நியாயமே கூறுப வர்களாக இருந்தனர். தலைமை தாங்கிய இளைஞரின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. ''சட்டத்தினால் என்ன பயன்?'' என்றல் லவா ஏகமனதாகக் கேட்டுவிட்டார்கள்.

முதலாவதாகப் பேசிய முதியவர் தனது வீட்டில் தான் அனுபவ ரீதியாகக் கண்ட வற்றை சற்று விளக்கமாக எடுத்துக் கூறி னார். அவரது சோகக் கதையின்படி பல வருடங்களுக்கு முன்னர் தனது வீட்டில் ஓர் அறையை ஒரு குடும்பத்துக்கு வாட கைக்குக் கொடுத்தாராம். அந்த அறை

* B. Sc. LL. B. (Sri Lanka) Attorney - at - Law, Assistant Legal Draftsman. Justice of the Peace, Lecturer, Sri Lanka Law College & Visiting Lecturer, Law Faculty, University of Colombo.

யில் வாடகைக்குக் குடியிருந்த குடும்பம், தான் எவ்வளவோ கேட்டுப் பார்த்தும் இப்பொழுது இடத்தைக் காலி பண்ணுகிறார்கள் இல்லையாம். போகிற போக்கைப் பார்த்தால் அவர்களுக்கு வீடே சொந்தமாகி விடும் போல் தெரிகிறது எனப்பயப்படுகிறார். இதற்காக அவர் சட்டத்தைக் குறை கூறுகிறார். தனது சொத்தை இப்படி அநியாயமாக பிறத்தியாருக்கு இழக்க வேண்டி ஏற்பட்டது தனது துர்ப்பாக்கியமே என்று தன் தலைவிதியை நொந்து கொள்ளுகின்றார்.

ஆனால், இதற்குப் பதிலளித்த தலைவர், பின்வரும் கருத்தைத் தெரிவித்தார். உண்மை நிலையை இவர் நன்கு தெரிந்து கொள்ளவில்லை என்றே எனக்குப் புரிகிறது. இதற்குரிய பரிகாரத்தைக் கூறுமுன்னர், இச்சந்தர்ப்பத்தில் அனைவருக்கும் பொதுவான ஒரு புத்திமதியைக் கூறி வைக்க விரும்புகின்றேன். உதாரணமாக, திடீரென எமது உடலில் ஏதோ ஒரு கோளாறு ஏற்பட்டு விட்டதாக வைத்துக் கொள்ளுவோம். உடனே இதற்குப் பரிகாரம் தேடி வைத்தியரிடம் செல்வோம் அல்லவா? இதைவிடுத்து வேறு எந்த வழியைக் கையாண்டாலும் எமக்கு நிச்சயமாக நிவாரணம் கிடைக்கும் என்று கூறிவிட முடியாது. இதே போலத்தான் எமக்கு எமது சொத்து, நில புலம் தொடர்பாக ஏற்படும் குறைகளுக்கு, அதற்கென உரிய வர்களிடம் சென்று புத்தி கேட்டுத் தீர்வு காண்பதே புத்திசாலித்தனமானது. இது வீண் காலவிரயத்தையும் அலைச்சலையும் தவிர்த்து மன நிம்மதியைத் தரும்.

இதே போன்று இங்கு தனது வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்ற முயலும் ஒரு வீட்டுச் சொந்தக்காரன் தன் தலைவிதியை நொந்து, சட்டத்தில் பிழை சொல்வதை விடுத்து, நீதி தேவதையின் உதவியை நாடினால் நிச்சயம் நீதிகிடைக்கும்! வீடும் கைக்கு வந்து விடும்!!

ஆதனச் சட்டத்தின் ஒரு பகுதியாக அமையும் வாடகைச் சட்டம் வாடகைக் குடியிருப்பாளர்களைப் பாதுகாக்கின்ற அதே வேளையில் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் விமோசனம் கொடுப்பதாக அமைந்துள்ளது. வாடகைக் குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதற்கான பல்வேறு வழி வகைகள் இச் சட்டத்தில் காணப்படுகின்றன. சரியான முறைப்படி சட்டத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்தால், ஒரு போதும் அது உங்கள் சொத்தை பிறர் அபகரிக்க வழி வகுக்க மாட்டாது. உங்கள் சொத்தை நீங்கள் அநியாயமாக இழந்து விடவும் மாட்டீர்கள் என்று கூறி முடித்தார்.

இனி, இரண்டாவதாகத் தனது கருத்துக்களை முன்வைத்த ஓர் அனுபவசாலி தனக்குச் சொந்தமான ஒரு காணியில் இன்னொருவன் குடியிருப்பதாகவும் அவன் பத்து வருடங்களுக்கு மேலாகக் குடியிருந்து விட்டால் அவனுக்கே அது சொந்தமாகி விடும் என்பதனால் தனக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் கவலைப்பட்டுச் சட்டத்தின் மீது பழிபோட்டார். தனக்கு இனி விமோசனம் எதுவும் இல்லை எனவும் சலித்துக்கொண்டார்.

இதற்குத் தலைவர் கூறியதாவது, உண்மையாக இங்கு பிரச்சினைக்குரிய விடயமாக அமைவது ஆட்சியுரிமை பற்றிய சட்டமே. இவரைப் போலத்தான் இதனைப் பலரும் பிழையாக விளங்கிவைத்துக்கொண்டு இருக்கின்றனர். இன்னொருவருக்குச் சொந்தமாக இருக்கும் ஆதனத்தில் எந்த வகையிலாவது உரிமை பாராட்டும் ஒருவர் 10 வருடங்களின் பின் அதற்குச் சொந்தக்காரனாக ஆகிவிடலாம் என்று மொட்டையாகக் கூறுவது பிழையான ஒரு கருத்தாகும். இதனைச் சரிவரத் தெரிந்துகொள்வதற்கு அது தொடர்பான சட்டத்தை விளங்கிக் கொள்ளவேண்டும். ஒருவர் ஆட்சியுரிமை மூலம் சொந்தம் பெறுவதற்கு அதில் கூறப்பட்டுள்ள நியதி, நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகள் அனைத்தையும் பூரணமாகப் பூர்த்திசெய்யவேண்டும்.

வெளிப்படையாகப் பார்க்கும்போது அது சுலபம் போலத் தோற்றினாலும்

ஆட்சியுரிமை மூலம் சொத்தைக் கோருவ தென்பது இலகுவானதொன்றல்ல. 10 வருட ஆட்சி என்று சொல்லும்போது, அது ஏனைய தேவைப்பாடுகளுடன் கூட தொடர்ச்சியானதாக இருக்கவேண்டும். இடையில் எப்போதாவது குழப்பப்பட்டால் பின் அதிலிருந்து 10 வருடங்கள் செல்லவேண்டும். இது கிணற்றில் மூன்றடி ஏற நாலடி சறுக்கும் நத்தையின் கதையைத்தான் நினைவுக்குக் கொண்டுவரும்.

ஆகவே, தனது காணியில் 10 வருடங்களுக்கு மேல் உடைமை கொண்டிருந்து விட்டான் என்பதற்காக, காணி பறிபோய் விட்டதாகவும், ஆதனச் சட்டம் தன்னைப் பாதுகாக்கவில்லை எனவும் சட்டத்தைக் குறை கூறிக் கவலைப்படுவது புத்திசாலி செய்யும் காரியமல்ல. இவருக்கும் உதவுவதற்கு நீதி தேவனை காத்திருக்கிறாள் என்று கூறி முடித்தார்.

மூன்றாவதாகப் பேசியவர் ஒரு மாது. அப்பெண்மணியின் கவலை வேறொரு ரகத்தைச் சேர்ந்தது. அவள், தான் மூன்று சகோதரங்களுடன் பிறந்ததாகவும், தந்தை தனது சொத்துக்களைப் பிரித்து எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாகவும். இப் பொழுது தனது சகோதரர்களில் ஒருவர் தந்தையின் காணியில் தன் விருப்பப்படி பயிர் செய்து வருவதாகவும், இதனால் தனது உரிமை பறிபோய் விட்டதாகவும் புலம்பிச் சட்டத்தின்மீது பழியைப் போடுகின்றாள்.

இங்கு நாம் கவனிக்கவேண்டிய விடயம் இந்நான்கு பேர்களும் கூட்டுச் சொந்தக்காரர் என்ற விவரணத்துள் அடங்குவர் என்பதாகும். ஆகவே கூட்டுச் சொத்துவத்துக் கமைந்த காணியில் ஒருவர் எவ்வளவுதான் முயன்று எப்படித்தான் பாடுபட்டாலும் அக்காணியின் கூட்டுச் சொத்துவத்தன்மையை அவரால் இலகுவில் மாற்றிவிடமுடியாது. இந்நிலையை நிரந்தரமாகமாற்றி விடுவதற்கென்று இருக்கும் வழிதான் பிரிவிடுதல் என்பது.

எனவே இங்கு குறிப்பிட்ட கவலைப்படும் பெண்மணி எந்தவிதக் கவலையும் இல்லாமல், தனது கூட்டுச் சொத்துவக் காணியைப் பிரிவிடல் செய்ய நடவடிக்கை எடுக்கும்போது எல்லா உண்மைகளும் வெளிவரும். ஆகவே சட்டத்தில் பரிகாரத்தை வைத்துக்கொண்டு, என் சொத்தைப் பிறர் அபகரிக்கச் சட்டம் இடங் கொடுத்துவிட்டது என்று புலம்புவது அர்த்தமற்ற செயலாகும் என்று கூறினார் தலைவர்.

நான்காவதாகப் பேசிய பெரியவர் சற்றுக் காரசாரமாகவே தனது குறை பாட்டை எடுத்துக் கூறினார். இவரது முறைப்பாட்டின்படி, தன்னிடம் காணிக்கான உரித்து இருந்தும், உடைமை நிவாரணம் மூலமாக, ஆட்சியில் உள்ள ஒருவன் நீதிமன்றத்தில் தனக்குச் சாதகமாகத் தீர்ப்புப் பெற்றுவிட்டானே என்பதுதான். இதைவிட பேரிடி வேறென்ன காத்திருக்கிறது என்கிறார் அவர்.

இதற்கு மறுமொழியாகத் தலைவர் கூறியதாவது, சரி இவர் கூறுவதும் உண்மைதான். ஆனால் இங்கு சட்டம் அமைதியைப் பேணுவதையே நோக்கமாகக் கொண்டது. எனவேதான் நீதிமன்றம் இவ்வாறு கட்டளையொன்றை ஆரம்பத்தில் ஆக்கிவிட்டது.

உதாரணமாக, உங்களுக்குச் சொந்தமான வீட்டிலோ காணியிலோ ஆட்சியிலிருக்கும் ஒருவரை நீங்கள் பலவந்தமாக வெளியேற்ற முயன்றால், அவர் தான் ஆட்சியிலிருப்பதை நிரூபித்து நீதிமன்றத்

தில் தமக்குச் சார்பாக கட்டளை பெற்று விடுவார். இங்கு உங்கள் பலவந்தமான செயல் சட்டப்படி அமையாத காரணத்தினாலேயே, இத்தகைய தீர்ப்பு வழங்கப்படலாயிற்று. அவ்வாறு வழங்கப்பட்டாலும் அது வெறும் தற்காலிகமானதே என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

கூடிய விரைவில் நீங்கள், உங்களுக்கு உள்ள உரித்தைக்காட்டி, அவருக்கெதிராக உரித்து நிறுவல் வழக்குப் போட்டால், அது நிச்சயமாக உங்கள் பக்கமே வெற்றியைக் கொண்டுவரும். காணிக்கான உறுதி யார் பெயரில் உள்ளதோ அவரே ஏனையவர்களைக் காட்டிலும் காணிக்கு உரித்தாளி ஆவார்.

இவ்வாறு செய்வதை விடுத்து, உங்கள் மனம் போன போக்கில் நடந்து, சண்டித்தனம் செய்துவிட்டுப் பின்னர் சட்டத்தில் குறைகூறுவது மிகவும் தப்பான காரியமாகும் என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஐந்தாவதாகப் பேசிய அன்பர், பாவம், நம்பிக்கை மோசடி செய்யப்பட்டவர். அவருக்கு நேர்ந்தகதி இதுதான். பாவத்துக்கு இரங்கி, தனது காணிகளுள் ஒன்றைக் கஷ்டப்பட்ட ஒருவருக்கு வாய் மூலமாக குத்தகைக்குப் பயிர் செய்யக் கொடுத்தாராம். சில காலம் பயிர் செய்த பின், குத்தகை எடுத்தவரின் நிலைமை சற்று சீர் திருந்தியதும், தனது காணியைத் திருப்பக் கேட்டபோது ''காணிக் கைமாற்றம் எழுத்தில் இருக்கவேண்டும எனபது உமக்குத் தெரியாதா? ஆகவே, இங்கு எழுத்தில் இல்லை – எனவே உமக்கு இதில் எதுவுமே கிடையாது'' என்று கூறி விட்டாராம். ஏமாந்து போன காணிச் சொந்தக்காரன் இங்கு வந்து சட்டத்தில் பிழை கூறுகிறார்.

ஆனால் உண்மை நிலை அதுவல்ல. உள்ளபடி பார்க்கப்போனால் மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதன்படி காணிசம்பந்தமான சகல கொடுக்கல் வாங்கல்களும் எழுத்தில் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலாவது மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டம் என்ற இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி ஒரு மோசடியைச் செய்யப்பார்த்தால், அதற்கு அச்சட்டமோ நீதிமன்றமோ ஒரு போதும் இடங்கொடுக்கமாட்டாது. இவரது நிலைமையும் அது போன்றதுதான். ஆகவே இவருக்கு நிச்சயமாக நிவாரணம் கிடைக்கும். இவரது சொத்து திரும்பவும் இவர் கைக்கு வரும்.

எனவே, முடிவாகப் பார்க்கும்போது பிழை முழுக்க முழுக்க தம் பக்கந்தான் உள்ளது என்பதை மேற்படி ஐந்து பெருமக்களும் தெரிந்துகொள்ளவேண்டும். ஆதனச் சட்டம் உங்கள் ஆதன உரிமைகளையும் உரித்துக்களையும் பாதுகாப்பதற்காக அமைந்துள்ள சட்டமாகும். அதில் காணப்பட்டபடி நீங்கள் ஒழுகினால் ஒரு போதும் அது உங்களுக்குத் தீமையாக அமையமாட்டாது. அவ்வாறு தீமையாக அமைவதாக எண்ணினால் அது பிழை. எது பிழை எது சரி என்று நீங்கள் தெரிந்து கொள்வதற்கு ஒரே வழி, அதுவும் சுலபமான வழி. நீதி தேவதையின் உதவியை நாடுவதே, அவள் அநீதி இழைக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டாள்.

இறுதியாக ஒன்றை மட்டும் கூறி வைக்க விரும்புகின்றேன். இதற்கு அனுகூலமாக ஒழுகவேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு உண்டு. கறை படிந்த கைகளுடன் நீதிதேவதையின் முன் வந்தால், எமக்கு ஒரு போதும் நீதி கிடைக்க வழி பிறக்காது. அரை குறையாக விஷயங்களைத் தெரிந்து வைத்துக்கொண்டு இருப்பதால் ஏற்படும் அபாயத்தை இந்த ஐந்து பேரின் அனுபவத்திலிருந்தும் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? என்று கூறி முடித்தார் தலைமை தாங்கிய அந்த இளம் சட்டத்தரணி. அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பது தெரிகின்றதல்லவா?

Apartment Ownership Law No. 11 of 1973 as amended by the Apartment Ownership (Amendment) Act No. 45 of 1982

A. B. W. JAYASEKERA

The Law is intended for the registration of multi storied buildings divided into units with common elements appurtenant thereto.

இவ்வாறு பிரித்தானிய கம்பனி ஒன் றில் முதலீடு செய்யும் பங்காளர் ஒருவர், பொதுவாக பிரித்தானியாவில் வகைப்ப டுத்தப்பட்ட சாதாரண பங்குகளையோ (Ordinary Share) அல்லது முன்னுரிமைப் பங்கையோ (Preference Share) கொள் வனவு செய்வதன் மூலம் பங்காளராக லாம். பொதுவாக கம்பனிச் சட்டத்தின் கீழ் (1948 – 1961 – 1976) இவ்விரு பங்கு தாரரின் உரிமைகள் வேறுபடுகின்றன.

சுருக்கமாகக் குறிப்பிடின் சாதாரண பங்குதாரர்கள் நிர்வாக உரிமை, பங்கு இலாப ஏற்றத்தாழ்வுத் தாக்கம் (Fluctuation of Dividends), வாக்குரிமை, கம்பனி கலைப்பின் போது இறுதியில் தமது பங்கு த் தொகையை பெறும் உரிமை, கலைப் பின் இறுதியில் இருக்கும் மேலதிக சொத்தை பங்கிடும் உரிமை போன்ற வற்றைக் கொண்டிருக்கும் அதேவேளை யில், முன்னுரிமை பங்குத்தாரர்கள் நிலை யான பங்கிலாபம் பெறும் உரிமை (Fixed Dividend) கம்பனிகலைப்பின் போது முதலில் பங்குத் தொகையை பெறும் உரிமை, வரையறுத்த வாக்குரிமை போன்ற வேறுபட்ட உரிமைகளை கொண் டிருக்கிறார்கள். இவ்வாறு முரண்பட்ட உரிமைகளை இவ்விரு சாராரும் கொண்டி ருப்பதனால் கம்பனி இயக்குனர்களினால் (Dierctors) ஒரு வகுப்பு சார்பாக எடுக் கும் தீர்மானங்கள் மற்றைய வகுப்பைப் பாதிப்பனவாக அமைந்துவிடுவதுமுண்டு.

வகுப்புரிமை மீறல்

இவ்வாறு வகுப்பு உரிமைகள் பாதிக் கப்படுவது பங்காளர்களின் மூதலீட்டு நோக்கில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்து வதனாலும், பங்காளர்கள் இவ்விடயத்தில் மிக்க விழிப்புடன் செயற்படுவதாலும் பிரித்தானிய கம்பனிச் சட்டத்தின்படி பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த நிலை யில் வகுப்புரிமை மீறப்படுவதாக கணிக் கப்படுகின்ற போதும், ஒரு வகுப்பிற்கான உரிமைகள் பொதுவாக கம்பனிச்சட்டத் தினால் கூறப்பட்டாலும் அவ்வகுப்பின் உரிமைகளை நிர்ணயிப்பதில் கம்பனி யொன்றின் புறவிதி, அகவிதி, பங்குதாரர் களின் உடன்படிக்கைகள், பொதுக்கூட்டத் தில் அங்கீகரிக்கப்பட்ட விசேட தீர்மானங் கள் என்பன முக்கிய பங்கை வகிக்கின்றன.

(A) ஏற்கனவே ஒரு வகுப்பில் பங்காளரல் லாத ஒருவருக்கு, அவர் அதே வேளை யில் வேறொருவகுப்புப் பங்குதாரராக இருக்கும் போது, எதிர் வகுப்பு பங்கு களை வழங்கி, அதனால் அக்குறித்த வகுப்பில் வாக்குரிமையில் பலவீ னம்ஏற்படுத்தியிருந்தாலும்,அது வகுப் புரிமை மீறப்பட்டதாக (Variation of Class Rights) கணிக்கப்படமாட்டாது. உதாரணத்திற்கு White Vs Bristol Aeroplane Co – Ltd. என்ற வழக்கில் சாதாரணபங்காளருக்கு முன்னுரிமை, சாதாரணபங்குகள் வழங்கப் பட்டிருந் தன. இதை முன்னுரிமைபங்குத்தாரர் கள் தமது வாக்குரிமை பலவீனப் படுத்தப்பட்டதாக எதிர்த்தார்கள். இறுதியில் இது ஒரு வகுப்புரிமை மீற லல்ல என தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனெ னில் முன்னுரிமைப்பங்குத்தாரர் முன்புபோலவே வாக்குரிமையைப் புதிய பங்கு வழங்கலின் பின்பும் பெற்றிருந்தார்கள்.

(B) ஒரே வகுப்புப் பங்கில் இரு வேறு பட்டபெறுமதிகள் இருக்கும் போது, ஒரு பெறுமதிப் பங்கை உப பிரிவு களாக பிரிக்கும் போது அப்பங்கின் வாக்குரிமை கூடினால் அது மற்

றைய பெறுமதிப் பங்கின் வகுப்புரிமை மீறலாக கருதப்பட மாட்டாது. Green Halgh Vs Arderne Cinemas Ltd, என்ற வழக்கில் குறிப்பிட்ட அக்கம்பனி 50P, 10P பெறுமதிகளில் இரு வேறுபட்ட சாதாரண பங்குகளைக் கொண்டிருந்தது. இரண்டும் ஒருபங்கிற்கு ஒருவாக்குரிமை என்ற விகிதத்தில் இருந்தன. 50P பங்கு பின்பு ஐந்து 10P பங்குகளாக பிரிக்கப்பட்ட போது அது ஐந்து வாக்குரிமைகளை அக்குறித்த பங்குதாரர்களுக்கு வழங்கியதை 10P பங்குகள் கொண்டிருந்த பங்காளர்கள் எதிர்த்தார்கள். ஈற்றில் அதுவகுப்புரிமை மீறல் அல்ல எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனெனில் 10P பங்குதாரர்கள் கொண்டிந்த வாக்குரிமையில் மாற்ற மேற்பட்டிருக்கவில்லை.

(C) கம்பனிக் கலைப்பின் போது ஏற்படும் சொத்துக்களில் பங்கேற்க உரிமையற்ற முன்னுரிமைப் பங்குதாரருக்கு அவர்களின் பங்குத் தொகையை திருப்பியளித்தல் (ஆனால் அவர்கள் கம்பனி கலைப்பின் போது பணம் பெறுவதில் முன்னுரிமை பெற்றிருக்கும் போது) Salt Deen Estate Co. Ltd. என்ற வழக்கில் முன்னுரிமைப் பங்காளரின் தொகை கம்பனி எந்நேரமும் கலைக்கப்படலாம் என்ற நிலையில் திருப்பியளிக்கப்பட்டது. இங்கு மேலதிக சொத்தில் அவர்களுக்கு பங்கு இல்லை எனக் கருதப்பட்டது. இது வகுப்புரிமை மீறலல்ல என தீர்க்கப்பட்டது.

(D) ஏற்கனவே முன்னுரிமைப் பங்குவகை யொன்றை கம்பனி கொண்டிருக்கும் போது இன்னொரு முன்னுரிமைப் பங்குவகை முன்பை விட கூடுதல் முன்னுரிமைகளுடன் வழங்கப்பட்டால் அது வகுப்புரிமை மீறலெனக் கருதப்பட மாட்டாது. Under wood vs London Musical Hall Ltd. என்ற வழக்கில் குறித்த அக்கம்பனி புதிய ஒரு முன்னுரிமைப் பங்கை கூடுதல் முன்னுரிமையுடன் ஏற்கனவே முன்னுரிமைப் பங்கு வகை இருக்கும் நிலையில் வழங்கிற்று. இதை வகுப்புரிமை மீறலென ஏற்கனவே இருந்த முன்னுரிமைப் பங்காளர்கள் குற்றஞ் சாட்டினார்கள். ஆனால் இது வகுப்புரிமை மீறல் அல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனெனில், முன்பிருந்த பங்கு வகையின் உரிமையில் மாற்றம் ஏதும் கொண்டுவரப்படவில்லை.

(E) பங்கிலாபம் செலுத்தும் இடத்தில் ஏதும் மாற்றம் ஏற்பட்டாலும் அது வகுப்புரிமை மீறல் அல்ல. Adelaide Electric Supply Co-Ltd. vs Prudential Assurance Co-Ltd. என்ற வழக்கில் பிரித்தானியாவில் கொடுக்கப்பட வேண்டிய பங்கு இலாபம் அவுஸ்ரேலிய டொலராக அவுஸ்ரேலியாவில் வழங்கப்பட்டது. இதுவும் வகுப்புரிமை மீறலல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேற் காட்டப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் போது ஒரு வகுப்பினப் பங்குரிமையில் நேரடித் தாக்கம் அல்லது வேறுபாடு ஏற்படும் போதே அது வகுப்புரிமை மீறலாக கருதப்படுவதைக் காணலாம். மேற்கூறிய சந்தர்ப்பங்கள் அல்லாத நிலையில் வகுப்புரிமை மீறப்பட்டதாக ஓரினப் பங்காளர்கள் கருதினால் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நிலையில் விசேட தீர்மானம் நிறைவேற்றி 21 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம்.

பங்குதாரரின் வழக்கிடு தகைமை:-

(1) வழக்கு தாக்கல் செய்பவர்கள் வகுப்புரிமை மீறப்பட்டதாக கருதும் பங்கினத்தின் 15%த்தை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(2) அவர்கள் அந்த வகுப்புரிமை மீறலுக்கு சாதகமாக வாக்களிக்காதிருத்தல் வேண்டும்.

நீதி மன்றம் இதை வகுப்புரிமை மீறலாகக் கருதினால் வழங்கப்பட்ட சிறப்புரிமையை ரத்துச் செய்வதுடன் பாதிக்கப்பட்ட பங்காளருக்கு நட்ட ஈடு வழங்கும் படி கம்பனி நிர்வாகத்தைக் கோர முடியும்.

பொதுவாக பிரித்தானிய கம்பனிச் சட்டம் பங்காளருக்கு கூடுதல் சலுகைகளை வழங்கியிருப்பதைக் காணலாம். இதன் மூலம் பிரித்தானியாவில் அபிவிருத்தி மேலோங்கி நிற்கிறது. ''வாணிபம் இல்லா நாட்டில் வளம் இல்லை'' என்பதைக் கருத்திற் கொண்டு அதற்குத் தேவையான சேமிப்பை முதலீடாக்குவதே சாலச் சிறந்ததாகும். இவ்வாறு பங்குகள் தொடர்பான அறிவினைப் பெறுவது பங்குச் சந்தையில் ஈடுபடுவோருக்கு மிகவும் அவசியமானதொன்றாகும்.

With Best Compliments

from

Ceylon Electrical Industries Ltd.

Manufacturers of

QUALITY ELECTRICAL ACCESSORIES

3rd, FLOOR, HEMAS BUILDING - BRISTOL STREET,
COLOMBO - 1.

Tel : 23803, 26906
Telex : 21263 WOOD CE
Fax : 440490

De menimis non curatelex - The Law does not bother with trifles.

அசைவற்ற ஆதனமொன்றை வாங்கும்போது கவனிக்கவேண்டிய முக்கியமான விடயங்கள்

M. KRISHNAPILLAI *

This article deals with the matters which should be taken into consideration, when purchasing any immovable property.

அசைவற்ற ஆதனமென்று சொல்லும் பொழுது சாதாரணமாக நிலத்தையும் நிலத்துடன் சேர்ந்த பயிர்வகைகள், கட்டிடங்களையும் குறிக்கும் பொதுவாக ஒரு ஆதனத்தின் உரிமைப்பற்றி ஆராயும் பொழுது கிராமப்புற ஆதனங்களுக்கும், நகரப்புற ஆதனங்களுக்கும் பொதுவான விதிகளேயிருக்கும் ஆனால், இன்று 'நகர்ப் புற அபிவிருத்தி அதிகாரசபையின்' கட்டுப்பாட்டுக்குள் வரும் நகரப்புற ஆதனங்களுக்கு கூடுதலான விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. அதற்கு புறம்பாக மாநகர சபை எல்லைக்குள் குறிப்பாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் ஆதனங்களுக்கும் விசேட விதிமுறைகள் ஏற்புடையதாகும்.

முதலாவதாக நாங்கள் ஒரு அசைவற்ற ஆதனத்தை வாங்கும் போது என்னென்ன ஆவணங்களை முக்கியமாக பரிசீலிக்கவேண்டுமென்பதைப் பார்ப்போம்.

(அ) உறுதிகள்

(ஆ) காணிக் கந்தோரிலிருக்கும் இருமடிப்புத் தாள்கள் (Extracts of Encumberance Sheets).

(இ) நிலப்படம் (Survey Plan)

(ஈ) உள்ளூராட்சிச் சபைகளினால் வழங்கப்படும். தெரு எல்லைச் சான்றிதழ். (Street Line Certificate)

(உ) உரித்தாளர் பதிவுப் பத்திரம் (Certificate of Ownership)

(ஊ) கட்டிடங்கள் ஒழுங்கான முறையிற் கட்டப்பட்டதற்கான பத்திரம் (Certificate of Confirmity)

(எ) அவ் ஆதனம்எந்தவொரு பொதுத் தேவைக்காகவோ அல்லது, வரிகள் செலுத்தப்படாமைக்காகவோ அரசாங்கத்தினாலோ அல்லது, உள்ளூராட்சிச் சபையினாலோ சுவீகரீக்கப்படவில்லை என்ற அத்காட்சிப்பத்திரம் (Certificate of Non Vesting)

ஒரு ஆதனமொன்றை வாங்க விரும்புபவர் அதன் உரிமையாளருடன் ஆதனத்தைப் பார்வையிட்டு விலைகளைப் பேசித் தீர்மானித்த பின் அவரிடமிருந்து அவ்

* Justice of the Peace, Attorney-at-Law and Notary, Solicitor (Lond & Wales)

ஆதனத்தின் உறுதிகள், நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட படங்கள் மற்றும் அதனுடன் சேர்ந்த ஆவணங்களைத் தனது நொத்தாரிசு மூலம் சொந்தக்காரரிடமிருந்து கோரலாம். உறுதிகளைக் கோரும் பொழுது அவ் உறுதிகளை; விற்பவரின் நொத்தாரிசு திருப்பிக் கேட்கும் சமயத்தில் திருப்பிக் கொடுப்பேனென்றும் அவரின் கட்டளைக்கமைவாக வைத்திருப்பேனென்ற உறுதி மொழியுடன்தான் அவற்றை பெறவேண்டும். மூலப் பிரதிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

'உரிமை' (Ownership) என்ற பதம் எதைக் குறிக்கின்றதென்பதைப் பார்ப்போம்.

'உரிமை' என்பது; ஒருவர் ஒரு ஆதனத்தைப் பாவிப்பதற்கும் அதனால் ஏற்படும் பலா பலன்களை அனுபவிப்பதற்கும் தனக்குத் தேவையெனக் காணும் சந்தர்ப்பங்களில் அவ் ஆதனத்தை விற்பதற்கோ, நன்கொடை கொடுப்பதற்கோ ஈடுவைப்பதற்கோ உரிமையுடையவர் என்பதேயாகும்'' இப்படியான உரிமை ஒருவருக்குப் பல வழிகளில் வரலாம் அதில் முக்கியமானவை; ஒரு சொத்தை இன்னுமொருவரிடமிருந்து அறுதியாக வாங்குவதன் மூலம், அல்லது, இன்னுமொருவரிடமிருந்து நன்கொடையாகப் பெறுவதன் மூலம் அல்லது, ஒருவர் இறக்கும் பொழுது அவரின் வாரிசாகவிருந்து பெறுதல் என்பனவாகும். ஒரு ஆதனத்தின் உரித்து என்னும் பொழுது; அவ் ஆதனத்தின் 'உரித்து வரலாறு' (Pedigree) என்பதை குறிக்கும் இதைச் சாதாரணமாக குறைந்தது, கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்குப் பார்க்கவேண்டும். ஒரு ஆதனத்தில் பலருக்கு பங்குகள் இருக்குமேயானால் அது 'சொரியல்' பங்கு என்று சாதாரணமாக சொல்லப்படுகிறது. இவற்றை விட ஒருவர் ஒரு ஆதனத்தை குறைந்தது பத்து வருடங்களுக்கு எதிர்ப்புக்களோ ஆட்சேபனையோ இன்றி ஆட்சி செய்து வந்தால் அவ் ஆதனம் அவருக்கு ஆட்சிமூலம் சொந்தமானதாகக் கருதப்படும் (Ownership by Prescription) ஒருவர் ஒரு ஆதனத்தை வாங்க விரும்பினால் அவ் ஆதனத்துக்குக் குறைந்தது, 35 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியான உரிமைகள் இருக்கின்றனவா என்பதை ஆராயவேண்டும் மேலும் வங்கிகளிடமிருந்தோ அல்லது, மற்றும் நிதி ஸ்தாபனங்களிடமிருந்தோ இவ் ஆதனத்தை ஈடாகக் கொடுத்து கடன்பெற விரும்பினால் இக் காலத்துக்குட்பட்ட உறுதிகள் மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட வேண்டும்.

ஒரு ஆதனத்தின் உரிமைகளை நுணுக்கமாக ஆராயும் பொழுது பின்வரும் விடயங்கள் ஆராயப்படவேண்டும்.

1. கடந்த 35 வருடங்களுக்குட்பட்ட காலத்துக்கு உறுதிகளின் மூலப் பிரதிகள் இருக்கின்றனவா? இல்லாதிருந்தால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகள் இருக்கின்றனவா? என்று பார்க்கவேண்டும்.

2. காணிக் கந்தோரில் கடந்த 35 வருடங்களுக்கான பதிவேடுகள் பார்வையிடுவதற்காகவும் பிரதிகள் எடுக்கக்கூடிய முறையிலும் இருக்கின்றனவா? என்று பார்க்கவேண்டும்.

3. 'ஆவணப் பதிவுகள் சட்டத்திற்கமைய' ஆவணப் பதிவுகள் ஒன்றுக்கொன்று தொடர்பு படுத்தப்பட்டு சரியான முறையில் 35 வருடங்களுக்குப் பதியப்பட்டிருக்கின்றதாவென்று பார்க்கவேண்டும்.

4. ஆதனம் எந்தவகையிலாவது பாராதீனப்படுத்தப்பட்டு இருக்கின்றதா? என்பதைப் பார்க்கவேண்டும். முக்கியமாக ஈடுகள், குத்தகைகள், மீளளிக்க முடியாத அற்றோணித் தத்துவம் என்பன சரியான முறையில் விடுவிடுவிக்கப்பட்டு அல்லது, அழிக்கப்பட்டுப் பதியப்பட்டிருக்கின்றனவா? என்று பார்க்கவேண்டும்.

5. முடிவுறா வழக்குகள் (Lispendens) ஏதாவது பதியப்பட்டிருந்தால்; அந்த வழக்குகள் முடிவுற்று விட்டனவா? இல்லையா? என்பதை ஆராய வேண்டும். அவ்வழக்கினால் இவ் ஆதனத்தின் உரிமையில் ஏதாவது தாக்கங்கள் இருக்கின்றனவா? என்பதையும் ஆராய வேண்டும். பிரிவிடல் வழக்காகில் இடைக்காலத் தீர்ப்பு, இறுதித் தீர்ப்பு என்பனசரியான முறையில் தொடர்ச்சியாகப் பதியப்பட்டிருக்கின்றனவா? என்று பார்க்கவேண்டும். அச்சந்தர்ப்பங்களில் அவ் வழக்குகளை நீதிமன்ற அலுவலகங்களிற் சென்று பார்வையிடுதல் நன்று.

6. அடுத்ததாக இக்காணி சம்பந்தமாக ஏதாவது தடை எச்சரிக்கை (Caveat) முன்னுரிமை அறிவித்தல் (Priority Notice) கைப்பற்றும் அறிவித்தல் (Seizure Notice) போன்ற எவையேனும் பதியப்பட்டிருக்கின்றவா? என்று காணிக் கந்தோர் ஏடுகளிலிருந்து பார்க்க வேண்டும்.

7. கடந்த 35 வருடங்களுக்குள் இவ் ஆதனம் சரியான முறையில் ஒழுங்கான வரிசைக்கிரமத்தில் கைமாறப்பட்டிருக்கின்றதா? என்பதை ஆராயவேண்டும். இதை ஒரு உரித்து வரலாற்றுத் தொகுப்பு (Pedigree) ஒன்று தயாரிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

8. கடந்த 35 வருடங்களுக்குள் இவ் ஆதனத்தின் சொந்தக்காரர் எவராவது இவ் ஆதனத்தை எவருக்காவது மாற்றாமல் இறந்திருக்கிறாரா? என்பதை பார்க்க வேண்டும். அவ்வாறு இறந்திருந்தால் அவர் மரணசாசனம் எதையாவது விட்டுச் சென்றாரா? அல்லது, மரணசாசனமின்றி இறந்தாரா? என்பதை அறிய வேண்டும். அவர் விட்டுச் சென்ற சொத்துக்களின் பெறுமதி ரூபா 20,000/-துக்கும் அதிகமானால், அவருடைய மரணசாசனம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? என்றும் மரணசாசனமின்றி இறந்திருந்தால் அச் சொத்துக்கள் நீதி மன்றத்தில் பூதல் வழக்கொன்றில் (Testamentary Case) நிர்வகிக்கப்பட்டதாவென்றும் ஆராயப்பட வேண்டும். அப்படியான நீதிமன்ற வழக்குகள் முடிவுற்றுவிட்டனவா? வென்றும் அதில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் முக்கியமாக மனுவும், சத்தியக்கடதாசியும் (Petition and affidavit) நிர்வாகப் பத்திரம் Letters of Administration அல்லது, தத்துவப் பத்திரம் (Probate) சொத்துக்கள் பற்றியவிபரங்கள் (Inventry) இறந்தவரின் சொத்துக்களின் மீதான மரண வரி (Estate duty) கட்டப்பட்டதா? என்பனவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இருக்கின்றனவா? என்று ஆராயப்பட வேண்டும். இதில் ஒரு நிறைவேற்றுனர் கைமாற்று ஆவணம் Executors Conveyance அல்லது நிர்வாகியின் கைமாற்று ஆவணம் (Administrators Conveyance) இருக்குமானால் விரும்பத்தக்கது.

9. அடுத்த முக்கிய அம்சம், இவ் ஆதனத்திற்கு செல்வதற்குப் பிரதான வீதியிலிருந்து வழி இருக்கின்றதா? அப்படி இருக்குமாயின் அவ்வழியைக் காணிச் சொந்தக்காரர் பாவிப்பதற்கு உரிமையுண்டா? என்பதை ஆராய வேண்டும். இவ் ஆதனத்திற்குச் செல்லும் பாதையின் எல்லைகள் சரியான முறையில் இனம் காணப்பட்டுள்ளனவா? பாதையைப்பாவிப்பதில் ஏதாவது பிரச்சனைகள உண்டா? என்பதையும் ஆராயவேண்டும்.

10. ஆரம்பத்தில் இருந்த காணிகள் சிறு சிறு துண்டுகளாக நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட புதிய படத்தின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளனவா? என்று பார்க்கவேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்டால் அவை மாநகரசபை அல்லது, மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்ட விதிகளுக்கு அமைவாகச் செய்யப்பட்டு அவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளனவா என்று பார்க்கவேண்டும்.

11. வாங்கவிருக்கும் ஆதனம் தெருவோரமாகவிருப்பின் அவ் ஆதனத்தின் ஒரு பகுதி அத் தெருவை விரிவாக்குவதற்காக உள்ளூராட்சி மன்றங்களினால் அல்லது வேறு ஸ்தாபனங்களால் எடுக்கப்படவிருக்கின்றனவா? என்றும், அவ்வாறு இருப்பின் எவ்வளவு தூரம் வரை எடுக்கப்படுமென்று நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட படமொன்றில் குறிப்பிடப்பட்டு அத்துடன் அதற்கான ஒரு அத்தாட்சிப் பத்திரமும் (Street-Line certificate) பெறப்பட வேண்டும்.

12. உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ் ஆதனம் சம்பந்தமாக செலுத்தப்பட வேண்டிய வரிகள் யாவும் கடைசித்தவணை வரை கட்டப்பட்டுள்ளனவா? என்று பார்க்க வேண்டும். இதை அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து பெறப்படும். சுவீகரிக்கப்படவில்லை என்ற சான்று (Non Vesting Certificate) மூலமாக அறிந்து கொள்ளலாம்.

13. இவ் ஆதனத்தில் கட்டிடங்கள் இருந்தால் அவை உள்ளூராட்சி மன்றங்களின் விதிகளிற்கு அமைவாக, அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா? என்று அறிய வேண்டும். அதற்கு அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து உறுதிப்படுத்தற் பத்திரம் (Certificate of Confirmity) பெற்றிருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும்.

14. ஆதனத்திற்கு வழங்கப்பட்ட மின்சாரத்துக்கும் தண்ணீருக்குமான கட்டணங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா? என்பதை அறிய வேண்டும்.

15. முக்கியமாக உறுதி எழுதும் பொழுது ஆதனத்தை வெற்று டைமையாக்கித் (Vacant Possession) தருவார்களா? இல்லாவிட்டால், வெற்றுடைமையாச்கித் தருவதில் உள்ள பிரச்சினைகள் என்ன என்பதை ஆராயவேண்டும். அதில் யாராவது வாடகைக்கு குடியிருக்கின்றார்களா? அல்லது, சட்டவிரோதமாகக் குடியிருக்கிறார்களா? அல்லது, சொந்தக்காரரின் அனுமதியுடன் யாரும் இருக்கிறார்களா? அவர்கள் ஆதனத்தை வெற்றுடமையாக்கித் தருவதற்கு என்ன ஒழுங்குகள் செய்துள்ளார்கள் என்பதை ஆராயவேண்டும்.

16. இவ் ஆதனம் அரசாங்கத்தின் அல்லது, உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தித் தேவைகளுக்கோ அல்லது; வீடுகள், கடைகள் கட்டும் திட்டங்களுக்கோ ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் ஆராயவேண்டும். அப்படியிருப்பின் இது சம்பந்தமாக ஏதாவது விசாரணைகள் நடைபெறுகின்றனவா? என ஆராயப்பட வேண்டும்.

17. இவ் ஆதனம் தாழ்ந்த பிரதேசத்தில் இருந்தால் (முக்கியமாக வெறுங்காணி) இக்காணி தாழ்ந்த பிரதேச அபிவிருத்தி சபையினால் நிரப்பிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அங்கீகாரம் வழங்

கப்பட்டுள்ளனவா? என ஆராயப் பட வேண்டும்.

18. ஆதனத்தின் சொந்தக்காரர் இலங்கையில் இருக்கின்றாரா? இல்லாவிடின் அவரின் சார்பில் உறுதியை முடிப்பதற்கு அற்றோ ணித் தத்துவம் பெற்றவர் எவ ரும் இருக்கின்றனரா அவ்வாறு இருந்தால் அற்றோணித் தத்து வம் சரியான முறையில் வரை யப்பட்டு, விற்பதற்கான அதி காரங்கள் கொடுக்கப்பட்டு இருப் பதுடன் அப்பத்திரம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் (Registrar General's Office) பதியப்பட்டு இருக்கின்றனவா? என்றும் ஆராயப்படவேண்டும்.

19. ஆதனத்தில் சொந்தக்காரருக்கு விற்பதற்கான சட்டபூர்வ அதி காரமிருக்கிறதா? என்று ஆராயப் படவேண்டும். சொந்தக்காரர் 18 வயதிற்கு குறைந்திருந்தால் அல்லது, மனநோயால் பாதிக்கப் பட்டுள்ளவராகவிருந்தால் மாவட்ட நீதிமன்றத்தின் அனு மதியையும் பெறவேண்டும்.

20. ஆதனத்தின் சொந்தக்காரர் தேசவழமைச் சட்டத்திற்கு உட் பட்ட பெண்ணாயின் அவரின் கணவரின் சம்மதம் எழுத்துமூலம் பெறப்பட வேண்டும். இது கண வனையும் உறுதியில் ஒரு பகுதி யினராக ஆக்குவதன்மூலம் செய் யலாம்.

மேற்சொல்லப்பட்ட விடயங்கள் போக இக்காணியின் உரித்து எவ்வகையி லாவது பின்வரும் சட்டங்களின் தாக்கங் களுக்கு உட்பட்டுள்ளதா? என்பதையும் கவனத்திற்கெடுக்க வேண்டும்.

1. காணிச் சீர்திருத்தச் சட்டம் (Land Reform Law)

2. வீட்டாதன உச்சவரம்புச் சட்டம் (Ceiling on Housing Law)

3. பிடேகொமிசம் அழிப்புச் சட்டம் (Abolution of Fidecommissium.)

4. நெற்காணிச் சட்டம் (Paddy Lands Act)

மேலும் இவ் ஆதனங்கள் தேசிய வீட மைப்பு ஆணையாளரால் வழங்கப்பட்டி ருந்தால் அவ் ஆதனத்தை விற்பதில் ஏதா வது நியதிகள் கடைப்பிடிக்கப்பட வேண் டியிருக்கின்றனவா? என்று பார்வையிட வேண்டும், அதேபோன்று; அரசாங்க காணிச் சட்டத் (Crown Lands ordinance) தின் கீழ் கொடுக்கப்படும் காணிகளுக்கு விற்பதற்கு உரிமையிருக்கின்றதா? என்று பார்வையிட வேண்டும். இல்லாவிட்டால் யாரிடமிருந்து அதற்கான அனுமதிபெறப் படவேண்டுமென்றும், அவை சரியான முறையில் பெறப்பட்டுள்ளனவா? என்றும் ஆராயவேண்டும்.

ஒரு ஆதனத்தின் உரிமையை எவ் வாறு ஆராயவேண்டுமென்பதற்கு முற்று முழுதான வழிமுறைகளை வகுக்கமுடி யாது. இம்முறைகள் பிற்காலங்களில் இயற்றப்படும். சட்டங்களுக்கும், விதி முறைகளுக்கும் அமைவாக மாற்றமடை யலாம். நாட்டில் நடைமுறையில் இருக் கும் சட்டங்களின் தாக்கங்களிற்கு அமை வாக இவை ஆராயப்படவேண்டும். ஆதன மொன்றை வாங்கும்பொழுது ''வாங்குப வர் கவனமாக விருக்கவேண்டும்'' (Buyers beware) என்ற சட்ட நியதி ஒன்றிருக்கின் றது. ஆகையால் வாங்குபவர் எவ்விதத்தி லாவது விற்பவரால் ஏமாற்றப்பட்டா லன்றி தனது கவலையீனத்தால் அல்லது அசிரத்தையால் ஏதாவது நஷ்டங்கள் ஏற் படுமானால் அதற்கு விற்பவர் பொறுப் பாக மாட்டார்.

மேற்கூறப்பட்டவையாவும் ஒரு ஆத னத்தை வாங்கும்பொழுது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும். இவை தவிர சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வேறு விடயங்களும் கவனிக்கப்படவேண்டி ஏற்ப டலாம். ஆகையால் ஆதனமொன்று வாங் கும்பொழுது ஒரு சட்டத்தரணியும் நொத் தாரிசுமாகிய ஒருவரின் உதவியை பெறு வது மிகவும் விரும்பத்தக்கது.

With Best Compliments

from

UNION ASSURANCE LIMITED

2/15, 2nd FLOOR - LIBERTY PLAZA.

R. A. DE MEL MAWATHA,

COLOMBO 3.

Actio ex delicto - An action arising out of fault or mis conduct.

HUMAN RIGHTS OR FUNDAMETAL RIGHTS

Rights and liberties of an individual are sometimes described as Human Rights and sometimes as Fundamental Rights. These rights are really privileges claimed or enjoyed by a human being simply by virtue of being human. It is said that this concept developed from Roman ideas of "natural law" entailing "natural rights".

Fundamental rights arise from fundamental duties of the State to the people. These duties or obligations of the State to the people have been recognised from time immemorial. The Edicts of Asoka and ancient political works such as that of Kautiliya, Manu and Narada recognise many of the duties of the State.

Almost all the religions have emphasised on human rights although the term 'Human Rights' or 'Fundamental Rights' may not have been used. One of the ten commandments emphases 'Love thy neighbour'. This indicates the importance of recognising the rights of one's neighbour. This might mean the immediate neighbour who is living in the adjoining house, in the adjoining District or the adjoining country.

Over one thousand four hundred years ago, the Prophet of Islam delivering his final sermon from the top of Mount of Mercy in Arafat proclaimed, "You are all equal. Nobody has superiority over others except by piety and good action. Hurt no one so that no one may hurt you ...Return the goods entrusted to you to their rightful owners'.

As regards the rights of women, the Prophet of Islam emphasised unambiguous terms, "Oh! People, it is true that you have certain rights with regard to your women, but they also have rights over you. If they abide by your right, then to them belongs the right to be fed and clothed in kindness. Do treat your women well and be kind to them for they are your partners and committed helpers".

Mr. S. B. C. HALALDEEN
(Final year)

In Sri Lanka, Fundamental Rights have been enshrined in the 1978 Democratic Socialist Republican Constitution as a prominent and important feature. The preamble to the Constitution recites as follows:-

"Assuring all Peoples Freedom, Equality, Justice, Fundamental Human Right and the Independence of the Judiciary as the intangible heritage that guarantees the dignity and well being of succeeding generations of the people of Sri Lanka for the creation and preservation of a Just and Free Society....."

As a matter of fact, the concept of Fundamental Rights was first introduced in the 1972 Republican Constitution. But, it did not lay down any specific procedure for the enforcement of these rights. This was remedied in the 1978 Constitution and fundamental rights are now justiciable. Further, the new Constitution specifically lays down in Article 4 (d), "the Fundamental Rights... shall be respected, secured and advanced by all the organs of the Government and shall not be abridged, restricted or denied....."

Article 17 read with Article 126 of the 1978 Constitution provide a remedy for the enforcement of Fundamental Right and thal right of enforcement itself has been made a guaranteed right. In fact, Article 126 gives teeth to the Fundamental Rights and make them justiciable. The Supreme Court is empowered to protect these rights and grant relief and redress in respect of infringement or imminent infringement, by executive or administrtive action of any Fundamental Right.

Since the horrors of World War II moves have been made to ensure international enforcement of human rights agreements as embodied in the United Nations Universal Declaration of Human Rights (1948). It has spawned various subsequent agreements, such as the Covenants on Civil and Political Rights and Economic, Social and Cultural Rights (1966) which have been accepted by several States.

CRIMANALS

We segregate criminals from society to protect the innocent, but we have not learned how to segregate the newly initiated criminals from the hardened criminals within prison walls. Youngsters are throne into a post-graduate school of crime - They associate with experinced criminals whose regret is only that they are confined and whose dream is freedom to prey again on the society which has punished them - The standard of conduct is depravity, from homo-serellality to hatred of laws and their enforcers.

— **Louis Nizer**

DOUBLE LOSS

The money spent in gambling and drink and lust is a double loss, for you loss your money and also your reputation and health.

- **Mahathma Gandhi**

தாயின் கருப்பையில் உள்ள சேய்

(en ventre sa mere)

ஜீ. எம். சிவபாதம் *

Has an unborn child any right to claim damages for being born disabled. One to no fault of the Child? The another highlights a lacuna in this field of Delictual liability in our Civil Law Legal System.

1. அறிமுகம்

இலங்கையில் நிலவி வருகின்ற தீங்கியல் சட்டத்திலுள்ள 'வெற்றிடங்களுள்' இன்னும் தீர்வு காணப்படாதது மட்டுமல்ல, எங்களது நீதிமன்றங்களில் எதுவித உரிமைக்கோரிக்கைகளும் எழுப்பப்படாதது மான இரண்டு சட்டப் பரப்புகளுள் ஒன்றான நரம்புமண்டலத் தாக்கத்திற்குள்ளாகும் வாதிகளின் நிலையும், தாயின் கருப்பையில் உள்ள சேயிற்கு (en vantre sa mere) ஏற்படுகின்ற ஊறுகளுக்கான தீங்கியல் உரிமைக் கோரிக்கைகளும் கருத்தில் கொள்ளப்படவேண்டியன ஆகும். இவற்றுள் நரம்புமண்டலத் தாக்கத்திற்குள்ளானதால் ஊறுற்ற நபர்களின் உரிமைகள் பற்றிய முன்னைய வெளியீட்டில்[1] அவதானித்தோம். இப்போது இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில், தாயின் கருபையிலுள்ள சேய், தாயின் அல்லது தந்தையின அல்லது மூன்றாம் திறத்தவரது தீங்குமனத்துடனான அன்றேல் கவனயீனமான அன்றேல் அசட்டுத்துணிவுடனான, செய்கையினால் அல்லது செய்யாமையினால் அல்லது மருத்துவக் கவனயீனத்தாலோ அல்லது வேறு தொழில் சார் கவனயீனத்தாலோ ஏற்படும் அழுத்தமிகுதியினால் அத்தாயின் கருப்பையிலுள்ள சேய் அடைவதற்கான உடல்ரீதியான அல்லது உள்ளம் ரீதியான அல்லது இருவகை ஊறுகளுக்குமாய சாத்தியக் கூறுகள், வன் செயல்கள் நிறைந்த இக்காலகட்டத்தில் நிறைய இருப்பதை பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகக் குறிப்பாக மருத்துவத்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாயிலாக எங்கள் ஒவ்வொருவராலும் உணரமுடிகின்றது. எனவே இது தொடர்புடைய சட்டப்பரப்பின் வளர்ச்சியை ஒப்பீட்டளவில் ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பிரபல்யமான ஆங்கில முதுமொழிக் கிணங்க, உலகில் உள்ளவர்களுள் நல்லவர்கள் இரண்டுபேர்கள். ஒன்று இறந்தவர் மற்றயது பிறக்காதவர் (Unborn) ஆவர். எனவே நல்லவர்களாகப் பிறக்க இருக்கின்ற அச்சேய்கள் உடல், உள்ளம் ரீதியாக வல்லவர்களாகவும் வாழுவதற்காய, இயற்கை அளித்த அவர்களுக்கே உரித்தான உரிமையுடனேயே இப்பூவுலகில்

---

* LL.B. (Hons.), சட்டத்தரணி, சட்ட விரிவுரையாளர், சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

பிறக்க உள்ளார்கள். எனவே அவர்களின் உரிமைகளில் தலையீடு செய்கின்ற நபர் தாய், தந்தையர் மருத்துவ ஆலோசனை கூறும் மருத்துவர் உட்பட எவரிடமிருந்து தனக்குக் கருவறையில் இருக்கையில் ஏற் பட்ட தாக்கத்தால் விளைந்த உடல் உள ரீதியாக உற்ற ஊறுகளுக்காய நட்ட ஈட் டினைக் கோருவதற்கு எந்தவித நியதிச் சட்ட தீர்ப்புச்சட்ட ஏற்பாடுகள், எங்கள் நாட்டிலோ அல்லது மூன்றாம் உலக நாடு களிலோ இல்லாது வெற்றிடமாக இருப் பது அவதானிக்கப்பட வேண்டியதொன் றாகும். எனவே இச் சட்டப் பரப்புத் தொடர்பில், அபிவிருத்தியடைந்த நாடு களில் காணப்படும் சட்ட வளர்ச்சியைச் சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலம் இக்குடியியல் உரிமைக் கோரிக்கை சம்பந்தமான வெற் றிடத்தை ஒப்பீட்டளவில் நிரப்புவதற் கான வழிவகைகளை சுருக்கமாக ஆராய் வோம்.

இப்பிரச்சினையை தீர்மானிப்பதற்கு, இரு வினாக்களுக்கான விடை காணப்படு தல் அவசியமாகின்றது. ஒன்று மேற்படி சேயானது சட்ட நபரா? மற்றையது, அச் சட்ட நபர் கொண்டிருக்கும் தீங்கியல் பொறுப்புத் தொடர்பான பரப்பெல்லை யாது? இதற்கான விடைகளை கீழ்க் காணும் சட்டப் பிரிவுகளுக்குள் ஆராய் வோம்.

2. சட்டவியல் நோக்கு

ஸ்கொட்லாந்து மேன்முறையீட்டு நீதி மன்றினால் 28.07.1992 அன்று தீர்க்கப் பட்ட வழக்கில்,[2] தீர்ப்பளித்த மோற்ன் பிரபு (Lord Mortan) அவர்கள், 1987 ஜூன் இல் பிறந்த குழந்தை தொடர்பாக எழுந்த நட்ட ஈட்டுக் கோரிக்கையில், தாயின் கருப்பையில் உள்ள சேய், ஒரு 'சட்டநபர்' எனக் கருதப்பட வேண்டும்என வும் அச்சிசு சார்பாக எதிர்வாதி கொண் டுள்ள தீங்கியல் பொறுப்பின் பரப்பெல் லையையும் நிர்ணயித்துள்ளார். இராணு வக் கோப்ரலும், அவரது மனைவியும், இராணுவ வைத்திய அதிகாரியின் மருத் துவக் கவனயீனத்தின் காரணமாக, 2 மாதங்கள் முன் கூட்டியே, மூளைக்காயத் துடன் பிறந்து, 5 வாரங்களின் பின் மரணித்த தங்களது ஆண் குழந்தை தொடர்பாக நட்டஈடு கோரி பாதுகாப்பு அமைச்சகத்திற்கு எதிராக வழக்கிட்ட போது, நட்ட ஈடாக 17,000 பவுண்ட் (33,000/-) வழங்கப்பட்டது. ஸ்கொட் லாந்துச் சட்டப்படி கருவிலுள்ள சிசு, நபராக கருதப்பட முடியாததால் வழக்கி டுவதற்கு பெற்றார்களுக்கு உரிமை இல்லை என எதிர்வாதம் செய்யப்பட்ட போதிலும் மோற்றன் பிரபு அவர்கள் பின்வருமாறு தீர்ப்பளித்தார். சட்டவியல் கண்ணோட் டத்தில் தாயின் கருப்பையில் உள்ள சேய், சட்டநபராகும், (Legal Person) என்பது டன் உயிருடன் பிறந்த வாழ்ந்த குழந் தையானது, கருப்பையில் உள்ளபோது உற்ற ஊறுகளுக்கான நட்ட ஈட்டினை கோரி வழக்கிட உரிமை கொண்டிருக்கும் எனத் தீர்ப்பளித்தார்.

சட்டவியல் நோக்கில் கருப்பையிலுள்ள சேயானது சட்ட ஆளுமை (Legal Personality) கொண்ட நபராகக் கருதப்படுவதற் கான பல சான்றுகள்[3] உள. உதாரணம் தந்தையொருவன் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு தனது ஆதனத்தினைக் கையளிப்பதை அங்கீகரிக்கிறது. ஒருவன் இறக்கும் தறுவாயில் சொத்துறுதியின்றிச் சொத்துக்களை விட்டு இறந்திருந்தால், அவனது இறப்பின் பின்னர் பிறந்த பிள் ளையானது வழிஉரிமை மூலம் அவ் ஆத னத்தை பெறுவதைப் பொதுச்சட்டமோ, நியதிச்சட்டமோ அங்கீகரிக்கின்றன.

மேலும், தாயின் கருப்பையில் உள்ள சேயானது, சட்ட ஆளுமையுடன், பிறந் துள்ளதொன்றாக கருதக்கூடிய பல நீதியி யல் புனைவுகள் (Legal Fiction) உள்ள தைக் கீழ்க்காணும், ''பிறக்கப்போகின்ற ஒருவர், பிறந்துள்ளவராகவே கருதப்படு வர்'', ('Nasciturus pro iam nato habetui) எனும் உரோமச்சட்ட மூதுரையானது விளக்கி நிற்பதுடன் ஆங்கில சட்டமானது இச்சட்டப் புனைவின் பொருள்கோடலை மையமாகக் கொண்டே வளர்க்கப்பட்டுள் ளதை அவதானிக்கக்கூடியதாய் உள்ளது.

இதற்கு 1871 இல் இங்கிலாந்தில் தீர்க்கப் பட்ட வழக்கில்[3] இருந்து இன்று நிலவும் நியதிச் சட்டங்கள் வரை சான்றாகக் கொள்ளப்படலாம்.

1871 இல் இங்கிலாந்தில் தீர்க்கப்பட்ட தான வழக்கில்[3] 'ஜோர்ஜ் பிரிச்சாட்' இன் கவனயீனத்தால் இக்கப்பல், எலுதேறிய (Eleutheria) உடன் மோதியபோது, 'எலு தேறிய' கப்பலின் மேற்றளத்தில் நின்ற ஒரு தச்சுத்தொழிலாளி கொல்லப்பட்டார். தந்தையின் இறப்பிற்காக வழங்கப் பட்ட நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ள தந்தை இறந்தபின் பிறந்த குழந்தை (Posthumous Child), சட்ட ரீதியாகத் தகுதியுடையது 'கம்பெல் பிரபுவின் சட்டத்தின்' கீழ் (Lord Campbell's Act Fatal Aecidents Act of 1846) தீர்க்கப்பட்டது

மேலும், சிசு ஆனது கருப்பையில் இருக்கும்போது வேண்டுமென்றோ அல்லது கவனயீனத்தின் காரணமாக உற்ற ஊறின் விளைவாக, உயிருடன் பிறந்த குழந்தை இறந்தால், கருவில் இருக்கும்போது சிசு விற்கு ஊறு விளைத்தவர் ஆட்கொலைக் குற்றத்திற்கு இங்கிலாந்தில் 1832[4] இலும் 1848[5] இலும் தண்டிக்கப்பட்டார்.

இறுதியாக, இந்து சட்டவியலில்[6] (Hindu Jurisprudence) கருப்பையில் உள்ள ஆண் சிசுவின் ஆதன உரிமைகளை அங்கீகரித்ததுடன் அவ்வாறு அச்சிசு கருக்கட்டியவுடனேயே அவ்வுரிமை தொடர்கிறது எனவும் அப்பிள்ளை தனது தந்தையின் ஆதனத்தைப் பாராதீனப் படுத்துகைக்கு எதிராக தனது பங்கிற்கான உரிமையை நிலைநாட்டி வழக்கிடலாம் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற் கூறியவற்றில் இருந்து, உயிருடன் பிறந்தபின் இறக்கும் பிள்ளைக்கான சட்ட ரீதியான உரிமைகள், கடமைகளை, கருப் பைக்குள்ளேயே இறந்து பிறக்கின்ற சிசு வுக்கோ அல்லது சுயமாகவே கருக்குலைவு ஏற்பட்ட சிசுவுக்கோ கருப்பைக்குள் இறந்த சிசுவுக்கோ சட்டம் நிவாரணம் வழங்க முன்வராமைக்குக் காரணம், பின்னைய வகுப்பினர்கள் சட்ட ரீதியாக ஆளுமைப் படுத்தப்படாதவர்களாகவே கருதப்பட்டு வந்தமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

3. குற்றவியல் ஒரு நோக்கு

எமது தண்டனைச் சட்டக் கோவை யின்படி ஒரு தாயினது உயிரைப் பாதுகாக் கும் நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்ற கருக்குலைப்பு நீங்கலாக ஏனைய சந்தர்ப் பங்களில் பிறக்கப்போகும் குழந்தையை உயிருடன் பிறக்காமல் தடைசெய்யும் முக மாக அல்லது பிறந்தவுடன் இறக்கச் செய் வதற்கான கருத்துடன் செய்யப்படுகின்ற செயல் பிரிவு 306ன் கீழ் தண்டிக்கப்படக் கூடியது. பிரிவு 307ன்படி, பிறக்கப்போகின்ற பிள்ளையைப் பிறந்த மாத்திரத்திலேயே உடனடியாகக் கொல்லும் செயல் தண்டிக் கப்படக்கூடிய ஆட்கொலையாகும் என எடுத்தியம்புகிறது. மேலும் கருவுற்றிருக் கும் தாயானவள் மீது குற்றத்திற்கான பொறுப்பு பூரணமாக எண்பிக்கப்பட்ட போதிலும், மரணதண்டனைக்கு உட்படுத் தப்படக் கூடாது என பிரிவு 54 ஏற்பாடு செய்துள்ளமை அவதானித்தற் பாலது. இதையொத்த சட்ட ஏற்பாடுகள் இங்கி லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் நடைமுறையில் இருப்பது கருத்திற் கொள்ளப் படக்கூடியது என்பதுடன் பிறக்காத சிசுவின் குற்றவியல் உரிமை களைப் பொறுத்தமட்டில் ஓரளவிற்கேனும் திருப்தியான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள வேளையில் குடியியல் நோக்கில் இத்தகைய திருப்திகரமான நிலை மூன்றாம் உலக நாடுகளில் இல்லாதிருப்பது குறிப்பிடக் கூடியதொன்றாகும்.

4. தீங்கியல் நோக்கு

(1) பொதுச்சட்ட நிலைமை

தீங்கியல் சட்டப்படி, தாயின் கருப் பையில் உள்ள சேய்க்கு ஊறு விழைவிக் கப்பட்டால், அதற்கு தீங்கியல் பொறுப்பு இல்லை என ஆரம்ப கால அயர்லாந்து வழக்கொன்றில்[7] தீர்க்கப்பட்டது இவ்வழக் கில் வாதியாகிய சிறுமியின், தாயானவள்

எதிர்வாதிக்குச் சொந்தமான புகைவண்டியில் பயணம் செய்தபோது எதிர்வாதியின் பணியாளின் கவனயீனத்தால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக வாதியாகிய சிறுமி உடல் ஊனத்துடனும், வேறு குறைபாடுகளுடனும் பிறந்தாள். இது தொடர்பில் தொடுக்கப்பட்ட வழக்கில், நட்ட ஈட்டுக் கோரிக்கைக்கான வழக்கெழுகாரணம் எழுமாட்டாது எனக் கூறியதுடன் அதற்காய இரண்டு காரணங்களையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

1. எதிர்வாதி, வாதியால் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை எதுவும் கொண்டிருக்கவில்லை எனவும் சருப்டையில் இருந்த சேயைப் பொறுத்தமட்டில், எந்தவித ஒப்பந்த உறவு முறையினையும் எதிர்வாதி கொண்டிருக்கவில்லை, ஆதலால் அக்குழந்தை கருப்பையில் இருப்டதைப்பற்றி எதிர்வாதிக்குத் தெரிந்திராத படியால் தீங்கியல் பொறுப்பு ஏற்படாது எனத் தீர்த்தது.

2. வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதியின் செயலே காரணம் என்று மருத்துவச்சான்று மூலம் பூரணமாகச் சொல்ல முடியவில்லை.

1890 இல் தெரிவிக்கப்பட்ட மேற்படி இரு காரணங்களும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையே. ஏனெனில் கவனக்கடப்பாடு எனும் கருத்தேற்பில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஏற்பட்ட நீதியியல் விரிவாக்கங்களும், சமுதாயத்தின் முன்னேற்றமும், சட்டத்தின் வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்து இயங்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், நீதியியல் கொள்கைகள், சமூக பொருளாதார கொள்கைகள் என்பவற்றின் பிரயோகமுமே ஆகும். அடுத்ததாக, மருத்துவ விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வளர்ச்சியுமே எனக் கூறலாம்.

கனடா, உயர் நீதிமன்றத்தால் 1933ல் தீர்க்கப்பட்ட வழக்கொன்றில் [8] எதிர்வாதியின் கவனயீனத்தால் தாயின் கருப்பையில் இருந்த சேய்க்கு ஏற்பட்ட ஊறிற்கு எதிர்வாதி பொறுப்புடையர் எனத் தீர்க்கப்பட்டது. இவ்வழக்கில் எதிர்வாதியின் கவனயீனத்தால் வாதியின் தாய் டிராம் வண்டியிலிருந்து இறங்கும்போது தவறி விழுந்து காயமுற்றதன் விளைவாக, இரண்டு மாதங்கள் கழிந்து கோணற்கால்களையுடைய வாதியைப் பெற்றெடுத்தாள். அதற்காய நட்டஈடு வழங்கப்பட்டது.

அதேபோல், அவுஸ்திரேலியாவில் 1972 இல் தீர்க்கப்பட்ட வழக்கில் [9] எதிர்வாதியின் கவனயீனத்தால் ஊறுற்றதாய் பின்னர் குறைபாடுடைய பிள்ளையைப் பெற்றெடுத்தால், மேற்படி வாதி, முன்னறிவு வரம்பிற்குட்பட்ட உறுகண்ணின் அழுத்தத்தினால் பாதிக்கப்படக்கூடிய நபர்களுள் ஒருவர் எனக்கூறி, நட்டஈடு வழங்கப்பட்டது. ஆனால் இங்கு, வாதியானவர் உயிருடன் பிறக்கும் வரை இத்தலைப்பின் கீழ் வழக்கெழுகாரணம் எழுமாட்டாது என வலியுறுத்திக்கூறப்பட்டது.

அமெரிக்க நீதிமன்றங்களும், இங்கிலாந்தின் போக்கினைப் பின்பற்றியே, இதை ஒத்த நிகழ்வுகளைக் கொண்ட வழக்குகளில் எதிர்வாதி பொறுப்புடையவரல்லர் எனத்தீர்த்துள்ளன தீர்க்கப்பட்ட அமெரிக்க வழக்கொன்றில், [10] பெண்ணின் வயிற்றிலுள்ள கருவை, வெறும் சதை வளர்ச்சி என நினைத்து அழிக்க எதிர்வாதி 'X' கதிர்களை பாய்ச்சியதன் விளைவாக அவளுக்கு உடல் ஊனத்துடனும் பிறவி மந்தத்துடனும் முழுவளர்ச்சியற்ற நிலையில் குழந்தை பிறந்தது. எதிர்வாதி பொறுப்பில்லை எனத் தீர்க்கப்பட்டது. இன்றைய நிலையில் நியதிச்சட்ட, தீர்ப்புச்சட்ட முடிவுகளின்படி மேற்கூறப்பட்ட வழக்கின் தீர்ப்பு கண்டிக்கபட வேண்டியதே.

இங்கிலாந்தில், 1970 இல் இடம்பெற்ற வழக்கொன்றில், [11] தலிடொமைட் சிசுக்கள் (Thalidomide babies Case) சம்பந்த

மாக எழுப்பப்பட்ட, பிரச்சினையின் போது, அதாவது, கருவுற்ற பெண்மணி கள் 'தலிடொமைட்' எனும் மாத்திரை களை உட்கொண்டதால், பார்வையின்றி யும், உடல் ஊனத்துடனும், பிறவி மந் தத்துடனுமான சிசுக்களைப் பெற்றெடுத் தனர். தலிடொமைட் சிசுக்கள் சார்பாக, அம்மருந்தின் உற்பத்தியாளர் மீது வழக் கிடப்பட்டது. இக்குடியியல் பொறுப்புக் கான வழக்கு நடைபெறும்போது எதிர் வாதிகளான அம்மருந்தின் உற்பத்தியாளர் கள், வாதியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டதால் இத்துறையில் சமூகநீதியை அடையத்தகு ஒப்புரவான தீர்ப்பினைக் கூறவோ அன் றேல் மனிதாபிமானத்தையும் ஒழுக்கத் தையும் மேம்படுத்தக்கூடிய புதிய நியதிச் சட்டத்தை முன்மொழிவதற்கான வாய்ப் பினை நீதிமன்றமானது இழந்து நின்றமை நீதிவிரும்பிகளின் மத்தியில் கவலையை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக, தென் ஆபிரிக்கச் சட்ட நிலையை அவதானிப்பின், 1963ல் தீர்க்கப் பட்டவழக்கில் [12]Hiemstra .Jஅவர்கள், கன டிய உயர்நீதிமன்றத் தீர்ப்பில்[8] கைக்கொள் ளப்பட்டதான, உரோமன் சட்டக் கருத் தேற்பானது[17] அங்கீகரிக்கப்பட்டது. அதா வது கருவிலுள்ள சிசுவானது உயிருடன் பிறந்த கணத்திலிருந்து அதுகருவுற்றகாலந் தொட்டு உற்ற ஊறுகளுக்குரிய நிவார ணங்களுக்கான உரிமைகள் உட்பட, ஏனைய பிறந்த சிசுவுக்குள்ளதான சகல உரிமைகளுக்கும் உரித்தாகின்றது எனும் கருத்தினை மன்று ஏற்றுக்கொண்டதாயி னும், இக்குறித்த வாதியாகிய சிசுவுக்கு அடிக்கடி ஏற்பட்ட மூளைக்கலக்கத்திற் கும் (Cerebral Palsy), இச்சிசு பிறப்பதற்கு முன்னதாக அத்தாய்க்கு ஏற்பட்ட ஊறிற் குமான செயற் கோவை அண்மை தொடர்பினை (Chain of Causation and Doctrine of Remoteness of damages) எண் பிக்கும் அளவு போதியதாக இல்லாததால் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டது. மேலும் இவ்வழக்கு மேன்முறையீட்டிற்கு சென்றபோது [13] சட்டக்கருத்தேற்பு பற்றி அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்கப்படா மலே முன்னைய தீர்ப்பு ஊர்ஜிதம்செய்யப் பட்டது.

மேற்கூறியவற்றில் இருந்து, பொதுச் சட்டத்தின் அடிப்படையில் கருப்பையில் உள்ள சிசுவின் குடியியல் உரிமை அங்கீ கரிக்கப்பட்டுள்ளதை தெளிவாக உணரக் கூடியதுடன் அச்சிசுவின் சொத்திற்கு அல் லது புகழுக்கு அவதூறு விளைவிக்கப்பட் டாலும் அச்சிசு உயிருடன் பிறந்த பின் அனுமதிக்கப்பட வேண்டும் எனும் பேராசி ரியர் கீற்றனின் கருத்தான[14] ''அச்சிசுவா னது அவனுக்குரிய உரிமைகளையும் கடமை களையும் நிலை நாட்டக்கூடிய போதிய தான 'அந்தஸ்த்தினை' ('Status') கொண் டிருக்கவேண்டும்'' என்பதற்கு மெருகூட்டு வதும் அவதானிக்கற்பாலது.

II. நியதிச்சட்ட நிலைமை

தாயின் கருப்பையில் வளரும் சேய் தொடர்பில் பிறிதொருவரின் கவனயீனம் அல்லது தீங்குமனம் காரணமாக உடல் ஊறு அல்லது உளஊறு உற்று ஊனத் துடன் பிறக்குமாயின் அக்குழந்தைகளின் குடியியல் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு இங்கிலாந்தில் 22. 7. 1976 இல் நியதிச்சட்டம்[15] அறிமுகப்படுத்தப்பட்டது இதை ஒத்த நியதிச்சட்டம் அயர்லாந்தில் 1961-ல் உருவாக்கப்பட்டதுடன், பிரிவு 58 ன் படி தவறுகள் சம்பந்தமான சட்ட ஏற்பாடுகளை கருவிலுள்ள சிசு ஒன்றுக் குப் பிரயோகிக்கையில் அச்சிசு பின்னர் உயிருடன் பிறக்குமாயின், முற்கூட்டியே பிறந்த பிள்ளைக்கு பாதுகாப்பு கொடுக் கும் விதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என விதிப்பாடு செய்கிறது. மேற்படி சட்ட ஏற்பாடுகள் உரோமன் சட்டக் கருத்தேற்பின் நீதியியல் புனைவினை[17] அப்படியே உள்ளடக்கி இருப்பது அவ தானிக்கப்படக்கூடியது.

மேலும், இங்கிலாந்தில், 1976-ல் அறி முகப்படுத்தப்பட்ட நியதிச்சட்ட[15] ஏற் பாடுகளை சற்று விரிவாக ஆராய்வோம். வலது குறைந்து பிறக்கின்ற குழந்தை

களுக்கான குடியியல் பொறுப்புகளை மேற்படி சட்டத்தின் பிரிவு 1 உம், கர்ப்பவதியான தாயானவள் வாகனத்தை செலுத்தும்போது சேய்க்கு ஏற்படும் பின் விளைவுகளுக்கான பொறுப்பை பிரிவு 2, உம் பொருள்கோடல் சம்பந்தமான ஏற்பாடுகளை பிரிவு 4 உம், இத்தகைய சேய்களின் நட்டஈட்டிற்கான முடி (Crown)யின் பொறுப்புடமைபற்றி பிரிவு 5 உம் எடுத்தியம்புகிறது.

சிசுவானது கருப்பையில் இருந்த போதோ அன்றேல் பிறக்கின்ற வேலையிலோ பிறிதொரு நபரால் செய்யப்பட்ட தவறான செயலினாலோ அன்றேல் சட்டப்படியான செய்யாமையோ தாக்கத்திற் குள்ளாகியிருக்காவிட்டால் அச்சிசு சாதாரண சுகதேகியாகப் பிறந்திருக்கக் கூடுமாயின், அச்சிசு ஊனமுற்றுப் பிறந்ததால் அச்சிசுவிற்கு இயற்கை அளித்த சம உரிமைக்கான வாய்ப்பினை அனுபவிப்பதில் இருந்து எத்துணையளவு தடுக்கப்பட்டதோ, அத்துணைக்கடப்பாட்டினை அச்சிசுவின் குடியியல் உரிமையில் தலையிட்டவரான எதிர்வாதி மீது இந்நியதிச் சட்டம் சுமத்தி நிற்கிறது[18]. மேலும் அச்சிசுவின் தந்தையே எதிர்வாதியாக இருக்கும் சந்தர்ப்பத்தில், உறுகண் பற்றிய விடயப் பொருள் தாய்க்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லாத போது, எதிர்வாதியான சிசுவின் தந்தையானவர் உசிதமான விளக்கத்தை அளிக்கத் தவறும் பட்சத்தில் அத்தந்தை மீதே பொறுப்பு சுமத்தப்படும் எனவும்,[18a] அப்பிள்ளை மூன்றாம் திறத்தவரின் செயலால் வலது குறைந்து பிறக்கும் எனும் உறுகண்பற்றி தாயும் தந்தையும் தனித்தோ அல்லது ஒருமித்தோ முன்னறிவு கொண்டிருப்பார்களாயின் எதிர்வாதி பொறுப்பாக மாட்டார் எனவும் எடுத்தியம்புகிறது. அத்துடன் மேற்படி மட்டுப்பாடானது தந்தை எதிர்வாதியாக இருக்கும்போது விரிவாக்கப்படாமை[18a]குறிப்பிடக்கூடியது.

மேலும், எதிர்வாதியானவர் தொழிற்றுறையைச் சார்ந்தவராக இருந்து அத்தொழிலுக்கு உரியதான நியாயமான கவனத்துடன் அச்சந்தர்ப்பத்தில் தனது கடமைகளை செவ்வனே மேற்கொண்டிருந்தால் அவர் பொறுப்பாக்கப்பட மாட்டார். [18](b) அத்துடன் எதிர்வாதியானவர் தனது நடத்தையால் நட்டம் ஏற்படும் போது, பெற்றோருக்கு ஏற்படும் நட்டத்தின் அளவிற்கு மட்டும் மட்டுப்படுத்துகைக்கு அல்லது பொறுப்பு விலகல் என்பவற்றிற்கு பெற்றாருடன் ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடியும் எனவும் இவ்வொப்பந்த ரீதியான மட்டுப்பாடானது பெற்றார் அடையும் நட்டத்தை விஞ்சக்கூடாது என்பதுடன் அச்சேய் கூறுகின்ற ஊறுக்கான பொறுப்பினை பெற்றார் உட்பட எவரும் ஒப்பந்தமூலம் மட்டுத்தப்படுத்த முடியாது எனவும்[18c] ஏற்பாடு செய்யப்பட்டமை, தலிடோமைட் சேய்கள் வழக்கில்[11] இடம் பெற்ற நிலை மீள ஒரு முறை ஏற்படுவதைப் பூரணமாகத் தடைசெய்வதே ஆகும். அத்துடன் ஊனமுற்று பிறந்த சிசுவுக்கு ஊறினை ஏற்படுத்திய செயற்கோவையில் பெற்றாருக்கும் பங்கு உண்டு எனக்கண்டால், எதிர்வாதியிடமிருந்து கோருகின்ற நட்டஈட்டில் விகிதாசாரமான முறையில், நீதியும் ஒப்புரவுமான பங்கினைக் குறைத்துக் கொள்ள நீதிமன்றத்திற்கு சுற்றுணிபு அதிகாரம் உண்டு எனவும்[18] ஏற்பாடு செய்துள்ளது.

கர்ப்பவதியான, தாயானவள் சிசு சார்பாக நியாயமான கவனத்தினை எடுக்காது வாகனத்தை ஓட்டிச் சென்றதால் ஏற்பட்ட செயலால், சிசுவானது ஊன முற்றுப் பிறந்திருக்குமாயின் அத்தவறான செயல், கவனயீனத்துடன் அச்சிசுவின் தாயினாலேயே செய்யப்பட்டது' எனக் காட்டி பெற்றதாய் மீதே வழக்கிடுவதற்கான சட்ட உரிமையை அச்சிசுவிற்கு இந்நியதிச்சட்டம்[19] d வழங்கிநிற்கிறது.

மேற்கூறியவற்றில் இருந்து தாயின் கருப்பையில் இருக்கும் ஒவ்வொரு சேயும், உயிருடன் பிறக்குமாயின்,[19a]இயற்கையால் அளிக்கப்பட்ட வரப்பிரசாதமான, அரிது அரிது மானிடராதல் அரிது எனும் பெரும் பேற்றின் மகத்துவத்தை மேம்படுத்தும் விதமாக, அச்சிசு உடல், உளக்குறைபாடின்றி வாழ்வதற்கான உரிமையில் எவர் தலையிட்டாலும், அதாவது மூன்றாம்

திறந்தவராக இருந்தாலும்,[18] d தந்தையாக இருந்தாலும் 18(a) தாயாக இருந்தாலும்[19] அரசாக இருந்தாலும்[20] அவருக்கெதிராக வழக்கிட்டு தனது குடியியல் உரிமையை நிலை நாட்டுவதற்காக ஏற்பாடுகள் 22. 7. 1976 இல் இருந்து இங்கிலாந்தில் நிலவி வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இக்கோரிக்கை தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் கீழ் இங்கிலாந்தில் தீர்க்கப்பட்டசில வழக்குகளை ஆராய்வோம்.

மேற்படி சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட வழக்கொன்றில்[21] கேள்விக்குட்படுத்தப்பட்ட சிசுவின் பிறப்பானது, இந்நியச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட முன்னர் (22. 7. 1976) இடம் பெற்றதால், பொதுச் சட்டத்தின் கீழ் அத்தகைய வழக்கிற்கான கோரிக்கையை ஏற்க நீதிமன்று மறுத்தது. இத்தீர்ப்பு, நியதிச் சட்ட ஏற்பாட்டின் அங்கீகரிப்பு மிகைக் கூற்றாகக் கொள்ளப்பட்டமை சட்ட எழுத்தாளர்களால் பலமாக கண்டிக்கப்பட்டமை குறிப்பிடக்கூடியது.[22] தவறிழைக்கப்பட்ட பிறப்பு (Wrongful birth) என்னும் அம்சம் பற்றி 1983-ல் ஆராயப்பட்ட வழக்கொன்றில்,[23] மருத்துவ ஆலோசகர்கள் மீதான அழுத்தத்தை தவிர்க்கவேண்டும் எனும் பொதுக் கொள்கையின் கீழ் நட்டஈடு மறுக்கப்பட்ட போதிலும் பின்னர் 1984 இல் எழுந்த இரு[24] வழக்குகளில் நட்டஈடு வழங்கப்பட்டமை குறிப்பிடக்கூடியது. 1984 இல் தீர்க்கப்பட்ட வழக்கில்[24](b) பொதுக்கொள்கைஎன்றபோர்வையில், சட்டவாக்குனர்களின் நோக்கத்தின் மீது மட்டுப்பாடுகளை விதிக்க நீதிமன்றங்கள் தயார் நிலையில் இருக்கக் கூடாது எனும் ஸ்காமன் பிரபு[25] (Lord Scarman) அவர்களின் கருத்து எடுத்தாளப்பட்டதுடன், இத்தகைய சந்தர்ப்பங்களில் நட்டஈடு வழங்காது விட்டால் பெண்கள், காலத்தால் பிந்திய கருக்குலைப்பினை (Late abortion) ச் செய்ய ஊக்கம் அளித்தவர்களாவோம் எனவும் மேற்படி வழக்கினை தீர்த்த நீதியரசர் வாலர் பிரபு (Weller LJ) சுட்டிக்காட்டியதுடன் சட்ட ஏற்பாடு, சமகால சமூக நீதியை அடையவும் வழிவகுத்தார்.

அடுத்தாக, இத்தகைய கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் அமெரிக்காவின் நிலைமையைச் சற்று ஆராய்வோம். 1966 இல் தீர்க்கப்பட்ட பிரபல்யமான வழக்கில்,[26] மனநோயாளியான தாய்க்கு நிகழ்ந்த பாலியல் தாக்கத்தால் பிறந்த நெறிமுறையற்ற பெண் குழந்தைக்கான நட்டஈடு தொடர்பில் அரசுக்கு எதிராக தொடரப்பட்டபோது (தாயினை அரசு பிரதிநிதித்துவப்படுத்தி) அரசு அவளது தாயை உரிய முறையில் கவனித்து மேற்பார்வை செய்யவில்லை எனச்சார்த்துகை செய்தபோது, கேள்விக்குட்படுத்தப்பட்ட மேற்படி சார்த்துகை, சட்டத்தின் பிரிவு 4 (1) ன் படி 'இயலாமை' (disability) என்ற பதத்தினுள் அடங்கமாட்டாது எனக்கூறி வழக்கெழுகாரணம் எழாது என வழக்கைத் தள்ளுபடி செய்தது.

மேற்படி விடயத்தை ஆராய்ந்த பியசன் ஆணைக்குழு (Pearson Commission) சட்ட ஆணைக்குழுவின் சிபாரிசிற்கு உடன்பட்டு, மேற்குறித்த வழக்கின் அணுகுமுறையை நிராகரித்திருந்ததுடன், கீழ்க்காணும் இருநிலைமைகளை அதாவது தவறிழைக்கப்பட்ட பிறப்பிற்காக நட்டஈட்டினையும் (damage for wrongful birth) தவறிழைக்கப்பட்ட வாழ்விற்காய நட்டஈட்டினையும் (damage for wrongful life) வேறுபடுத்திக் காட்டியதுடன் பின்னைய சந்தர்ப்பத்தில் நட்டஈட்டுக் கோரிக்கைக்கான வழக்கெழு காரணம் எழாது என எடுத்தியம்பியது.

1) மகநோய், எய்ட்ஸ் உள்ள போதான பாலியல் தொடர்பால் ஊனத்துடன் பிறக்கும் குழந்தையின் வழக்கு எழும் எனவும், நட்டஈடு உண்டு என்றும்,

2) சுயமாக ஏற்படுகின்ற கருக்குலைவை (Spontaneaous abortion) தடுக்கும் நோக்குடன் மேற்கொண்ட கவனயீனமான சிகிச்

சையின் பின்விளைவாக ஊன முற்ற குழந்தை பிறந்தால் வழக்கு எழமாட்டாது எனவும் இச்சந்தர்ப் பத்தில் நட்டஈடு வழங்கப்பட மாட்டாது என வும் சட்ட ஆணைக்குழு எடுத்தியம்பியது.

மேற்படி வேறுபடுத்தியமையின் காரணம், 2 வது சந்தர்ப்பத்தில் சுயமான கருக்குலைவானது தடுக்கப்படாதிருந்தால் குழந்தை பிறந்திருக்காது. எனவே, நட்ட ஈடு மறுக்கப்பட்டமையும், 1வது சந்தர்ப்பத் தில் கருக்கட்டலுக்கு முன்னதான தவறுகை (Pre Conception fault) யின் அடிப்படை யில் தவறிழைக்கப்பட்ட பிறப்பிற்கான (Worngful birth) நட்டஈடு வழங்கப்பட்டது. ஆனால், கருக்கட்டலுக்கு முன்னதான தவறு கையானது, தவறிழைக்கப்பட்ட வாழ்க்கை (wrongful life) கிட்டு செல்கின்ற சந்தர்ப் பங்களும் நட்டஈடு வழங்கப்படவேண்டும் என சட்ட ஆய்வாளர்கள் கருத்துத் தெரி வித்துள்ளார்கள். 27

இன்றைய காலகட்டத்தில் கருக் குலைப்பு, தாயின் அடிப்படை உரிமை களுள் ஒன்றாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்கா போன்ற நாடுகளில் எழுந்துள்ளதாலும், மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் மணமாகாத பெண்கள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்து வருகிறது என்பதுடன் கிரா மபபுறங்களில் வசிக்கும் கல்வி அறிவற்ற ஏழ்மை நிறைந்த பெண்கள்தான் இதனால் மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள், ஆத லால், இதன் விளைவாக தமிழ் பண்பாட் டுக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுளளது என வும் 28 பரவலாகக் கருத்துக்கள் அடிபடு வதால் இக்கருக்குலைப்பு, கருக்குலைவு ஆகிய கருத்தேற்புகளுடன் தாயின் கருப் பையில் உள்ள சேய்க்கு உறுகின்ற ஊறு களுக்கான சட்டத் தொடர்பினை ஆராய் தல் பொருத்தமானதே. தாயின கருப்பை யில் உள்ள சேய்க்கு பின்வரும் சந்தர்ப்பங் களில் பாதிப்பு ஏற்படலாம்.

1. சுயமாக ஏற்படுகின்ற கருக்குலைவு (Spontaneous abortion)
2. சுயமாக ஏற்படுகின்ற கருக்குலை வினைத் தடுத்து நிறுத்தமேற் கொண்ட, நடவடிக்கையின் கார ணமாக ஊனமுற்ற சிசு பிறத்தல்
3. வேண்டுமென்று செயற்கையாக கருக்குலைப்பை மேற்கொள்கை யில் வெற்றிகரமாக கருக்குலைவு ஏற்படல்.
4. வேண்டுமென்று செயற்கையாக கருக்குலைப்பை மேற்கொள்கை யில்கவனயீனம் அல்லது வேறு காரணகாரியத் தொடர்பினால் அதுவெற்றி அளிக்காது, ஊன முற்றசிசு பிறக்கக் காரணமா யிருத்தல்.

மேற் கூறிய 2, 4 ஆகிய சந்தர்ப்பங் களுள் 'தவறிழைக்கப்பட்ட வாழ்வு' (wrongful life) எனும் வரைவிலக்கணத்தி னுள் 4வது சந்தர்ப்பத்தில் மட்டுமே நட்ட ஈடு கோரக்கூடியதாக அமையும்.

இறுதியாக அமெரிக்கா, பொதுநல வாய நாடுகளில் நிலவுகின்ற சட்டங்களின் கீழ் தீர்க்கப்பட்ட அதிகார பூர்வமான தீர்ப்புகளில் இருந்து, கருக்கட்டலுக்கு முன்னதான தவறுகை (Pre – Conception fault) இன் அடிப்படையில், குறிப்பாக கவனயீனமான 'X' கதிர், சிகிச்சையின் போது அல்லது குறைபாடுள்ள ஜனனக் கட்டுப்பாடு (birth Control) முறையினால் பெற்றாரின் இனப்பெருக்கத் தொகுதியில் ஏற்படும் பாதிப்புகளின் காரணமாக பின் னர் நிகழ்ந்த கருக்கட்டலின் விளைவாக ஊனத்துடன் பிறக்கும் பிள்ளைகளுக்கான நட்டஈட்டுத் தொகையை வழங்கும் சட்டப் பரப்பெல்லையானது கணிசமான அளவு விரிவாக்கப்பட்டுள்ளது 29 என்பது புல னாகின்றது.

5. முடிவுரை

எமது நாட்டினைப் பொறுத்தமட்டி லும் இந்தியாவைப் பொறுத்தமட்டிலும், இச்சட்டக்கரு இதுவரை கேள்விக்குட்படுத் தப்படாத வெற்றிடமாகவே இருக்கிறது. இச்சட்டப் பரப்பானது சமூக, சமய, ஆத்

மீக, ஒழுக்கக் காரணங்களினால் கட்டுப் படுத்தப்பட்டு வருகிறது என்ற போதிலும், மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்த மட்டில், போதிய கல்வியின்மை மூட நம் பிக்கைகளின் தாக்கத்தாலான அறிவு வள ராமை, சட்டத்தால் வெளிப்படையாகத் தடுக்கப்பட்டாலன்றி ஒழுக்கம் என்பது பின்பற்றப்படவேண்டியதொன்றல்ல என் னும் முரண்பட்ட சிந்தனையுடனானதும், தெற்கு ஆசிய நாடுகளுக்கு பொருத்தமா னதுமான மனப்பாங்கின் ஊடுருவல், ஆத் மீகவளர்ச்சியின்மை, வரதட்சணைக் கொடுமையால் உசிதமான காலத்தில் திரு மணம் நிகழாமை, மற்றும் சினிமா, தொலைக்காட்சி கிராமங்களை ஆக்கிர மித்து கொண்டமை போன்ற இன்னோ ரன்ன காரணிகளின் தாக்கத்தால் சமுதா யத்தில் ஏற்பட்டுள்ள திசைமாறிய போக் கிற்கான காரணத்தை 'சமூக, பொருளா தார அரசியல்' கொள்கையின் விளைவே என சுருக்கமாக குறிப்பிட முடியும். மேலும் ''பழைய ஊன்று கோல்கள் நழு விப் போக புதியவை ஏதும் புலப்படாத தத்தளிப்பில் இன்றைய மூன்றாம் உலக நாடுகளின் பெண்கள் ஏங்கி நிற்கிறார்கள் என்பதுதான் உண்மை'' எனும் கருத்தா னது எங்கள் நாட்டினைப் பொறுத்த மட் டிலும் ஓரளவிற்குப் பொருந்தும் என்றே கூறலாம்.

இறுதியாக, மேலே ஆராயப்பட்ட சட் டவியல், குற்றவியல், தீங்கியல், நோக்கில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நடை முறையில் உள்ள நியதிச்சட்டங்களின் வரம் பெல்லைகளுக்குள்ளும் சமூக நீதியை அடை வதற்காக நியதிச்சட்டப பொருட்கோடல் மீது, 1871[3] தொடக்கம் 1992[2] வரை தீர்க் கப்பட்ட தீர்ப்புச்சட்டங்களையும் கருத் தில் கொண்டு தீங்கியல் சட்ட நூல் ஆசி ரியர்களான, சமண்ட், [30] பிளமிங் [31] பின்பீலட் + ஜோலவிஸ் [30] ஆகியோர் கருத்துக்களைச் சீர்தூக்கிப்பார்த்து, எமது நாட்டின் சமூக, பொருளாதார கொள் கைக்கு உசிதமான நியதிச் சட்டமொன் றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் நல் லவர்களாக பிறக்கப்போகின்ற தாயின் கருப்பையிலுள்ள சேய்கள், வல்லவர்களா கவும் வாழ வழி சமைப்பதுடன், நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்துவரும் இச் சட்டப் பரப்பிற்கு ஒரு உறுதியான அத்தி வாரம் இட்டவர்கள் ஆவோம் என்பதுடன் ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் – ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' எனும் குறளோ வியத்திற்கு உயிரூட்டியவர்களுமாவோம்.

அஃதன்றேல், மேற்படி வகுப்பினரான தாயின் கருப்பையில் உள்ள சேய்களுக் கான தீங்கியல் பொறுப்பு அங்கீகரிக்கப் படாமை, அவர்கள் பிறந்தவுடன் அவர் களுக்கு வாக்குரிமை இல்லை என்பதாலோ? அன்றேல் இவ்வழக்குகளில் எதிர்வாதியை சார்ந்த வகுப்பினரின் வாக்குகளே 'அதி கார தாகத்தை' தீர்மானிக்கும் கணிச மான அளவினதாய் அமைகிறது என்ப தாலோ? போன்ற கேள்விக்கணைகளை இது விடயத்தில் மௌனம் சாதிக்கும் சம்பந்தப்பட்டவர்களை நோக்கி, தொடுக் கும் நிலைமைக்கு இட்டுச் சென்றால் கூட ஆச்சரியமாக அமையாதல்லவா...?

FOOT NOTES :

1. 'Neethi Murasu' - 1989
2. Unreported Case - Daily News of 30.7.1992 Page 7.
3. The George and Richard [(1871) L R 3 Ad E C C 466]
4. R. V. (Senior 1832) 1 Moody C C 344
5. R. V. West (1848) 2. Car & Kir 784
6. Vardachari - Legal Fictions (1979) Chap 12.
7. Walker Vs G N Railway of Ireland. [(1890) 28 L R Ir. 69]
8. Montreal Tramways V. Leveille [(1933) 4. D L R 337]
9. WATT V Rama (1972) V R 353.
10. Smith V Luckhart
11. S. V. Distillers Co. (Bio Chemical Ltd (1970) IWLR 114
12. Pinchin V Santan Insurance Co. Ltd. 1963 (2) SALR 254

13. Pinchin V Santan Insurance Co. Ltd. 1963 (4) SALR 666 (A. D)
14. Prof. Keeton observes, "he must possess Sufficient 'status' to enable him to possess rights and duties 'Elementary Principles of 'Jurisprudence by Prof. Keeton' (1949)
15. The Congential Disabilities (Civil Libility) Act. 1976
16. Civil Libility Act. of 1961. (Ireland)
17. Roman Law Concept – 'Foetus' "Nasciturus pro iam nato habetui" [One who is to be born who is deem to have been born]
18. Sec 1; Sec 1 (2) (a) & Sec 1 (2)(b)
18. (a) Sec. 1 (4)
18. (b) Sec. 1 (5)
18. (c) Sec. 1 (6)
18. (d) Sec. 1 (7)
19. Sec. 2.
19. (a) Sec. 4
20. Sec. 5
21. Mckay V Essex Area Health Authority (1982) Q B. 1166.
22. G. Robertson (1982) MLR 697
23. Udale V Bloomsbury Area Health Authority (1983) 2 AER 522
24. (a) Thake V Maurice (1984) 2 AER 513
24. (b) Emeh V Kensington and Chelsea and Westminister Area Health Authority (1984) 3 AER 1044;
25. Mc Loughlin V O'Brian (1983) 1 AC 410
26. Williams V. State of New York (1966) 18 N 2d. 481
27. I Tedeschi On tort liability for 'Wrongful life' 1966 Israel LR 513 at 531.
28. India – Today – 1990 Oct (6-20) Pp. 52 - 58
29. Cases & Materials (Torts) 3rd Ed by Hepple & Mathews P 118
30. Law of Torts by S.M. Devaratnam P 92
31. Flemings View – Law Torts 1977 ed 5 chap 8

★ தன் துன்பத்தை அனுபவித்துப், பிறர் துன்பத்தை நீக்குவது — அறிவு

ஃ ஃ ஃ

★ அடக்கி வெல்லும் உலகில், அடங்கி வெல்வது — காதல்;

ஃ ஃ ஃ

★ தன்னிலும் குறைந்தவரிடத்திருந்தும் தோல்வியை ஏற்பது — சால்பு

ஃ ஃ ஃ

★ அறிவும், உணர்வும் பண்பட்டோர் காதல் வாழ்வு வாழாமலேயே அன்பை உணர முடியும்.



அமர்ந்துள்ளோர் (இடமிருந்து வலமாக):

திரு. எம். லாஃபீர் [உடனாயத்தப் பேச்சு (தங்கம்) – அறங்கூறும் அவையத்தோர்க்கு உரைதல் (வெண்கலம்)] திரு. ஜி. பி. எஸ். டி. சில்வா (பிரதம நீதிபரசர்), திரு. டபிள்யு. ஜ லுவஹெட்டி (அதிபர்), செல்வி இ. இராஜ கோபாலன் [அறங்கூறும் அவையத்தோர்க்கு உரைத்தல் (தங்கம்)]

நிற்போர் (இடமிருந்து வலமாக):

யு. அப்துல் மெஜீத் [அறங்கூறும் அவையத்தோர்க்கு உரைத்தல் (வெள்ளி) கி. துரைராசசிங்கம் [உடனாயத்தப் பேச்சு (வெள்ளி)] செல்வி இ. இலட்சுமணன் [உடனடியாகப் பேச்சு (வெண்கலம்)]]

மனித உரிமைகள் சட்டமும் மனித நேயச் சட்டமும்

This article deals with how the Human Rights law and Hamanitarian law arose and devoloped throughout the world stages and the present status of them.

செல்வி வாசுகி நடராசா
(ஆரம்பநிலை ஆண்டு)

மனித உரிமைகள் சட்டமானது தனி, நபர்களினதும் குழுக்களினதும் சர்வதேச உத்தரவாதம் பெற்ற உரித்துக்களை அரசுகள் மீறுவதிலிருந்து பாதுகாப்பதும், அவ்வுரித்துக்களை மேம்படுத்துவதும் சம்பந்தமானது, என வரையறுக்கப்பட்டுள்ளது. மனித நேயச் சட்டமானது யுத்தங்களாலும், அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

மனித உரிமைகள் சட்டமும், மனித நேயச் சட்டமும் சர்வதேச சட்டத்தின் இரு பிரிவுகளாகும். சர்வதேச சட்டமென்ற ஒன்று இருப்பதாற்தான் இன்று ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுடன் தொடர்புகள் வைத்திருக்கக் கூடியதாகவும், தூதுவர்கள், மற்றும் ராஜதந்திரிகள் தமது கடமைகளைச் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. 'நாடு' என்ற சொல்லிற்கு வரைவிலக்கணம் தந்ததும் சர்வதேசச் சட்டமே.

மனித உரிமைச் சட்டங்கள் எங்கெங்கு காணப்படுகின்றன

சர்வதேச சட்டத்தைப் போல் மனித உரிமைச் சட்டமானது நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகளாலும், அவர்களுக்கிடையே கடைப்பிடிக்கப்பட்டு வந்த வழக்காறுகளாலும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. மனித உரிமைச் சட்டங்கள் பெரும்பாலும் ஐக்கியநாடுகள் ஸ்தாபனம், சர்வதேச தொழில் ஸ்தாபனம், மற்றும் சர்வதேச நிபுணத்துவம் பெற்ற அமைப்புகளின் மகா நாடுகளில் வரையப்பட்ட பன்னாட்டு உடன்படிக்கைகளில் காணப்படுகின்றன. ஐரோப்பிய சமூகம், அமெரிக்க நாடுகள் அமைப்பு, ஆபிரிக்க ஒற்றுமைக்கான அமைப்பு போன்ற பிராந்திய அமைப்புகளும், மனித உரிமைகள் உடன்படிக்கைகளை ஏற்றுள்ளன. செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் அனுசரணையின் கீழ் ஆக்கப்பட்டுள்ள உடன்படிக்கைகள் மூலமாகவும், மனித உரிமைச் சட்டம் விரிவடைந்துள்ளது.

பன்னாட்டு மனித உரிமைகள் உடன்படிக்கைகள்; சட்டவிதிகளை ஒத்த பொது விதிகளைக் கொண்டுள்ளன அப்பொது விதிகள் நாட்டினால் ஏற்றுக்கொள்ளப்

பட்டு உறுதி செய்யப்பட்டவுடன் அந்த நாட்டைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்தும் தன்மை பெறுகின்றன. இன்று, பல்வேறு சர்வதேச பிராந்திய அமைப்புகளின் அனுசரணையில் கீழ் பெறுமானம் வாய்ந்த சில மனித உரிமைகள் உடன்படிக்கைகள் ஆக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் சட்டத்தைப் பொறுத்தமட்டில் அனைத்துலக ரீதியாக அமுலாக்கப் பெறும் குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடும் (International Covention on civil and political rights) பொருளாதார, சமூக, காலாசார உடன்பாடும் (International Covenant on Economic, Social and cultural rights) முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை இரண்டும் பொதுத்தன்மை கொண்டுள்ளதுடன் மனித உரிமைகள் எவையென்பதையும் எடுத்துக் கூறுகின்றன.

இவற்றைத் தவிர மேலும் குறிப்பிட்ட சில அம்சங்களைப் பற்றியதும், இனப்படுகொலை, இன அல்லது, பால் ரீதியான பாரபட்சம், சித்திரவதை போன்ற குறிப்பிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான உடன்பாடுகளும் உள்ளன. இவ் உடன்பாடுகள் 2ஆம் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்டு இன்று சர்வதேச சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் சில மனித உரிமைகள் நாடுகளினால் நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வழக்காற்றுச் சட்டமாக அங்கீகாரம் பெற்றுள்ளன.

இறைமை

2ம் உலக யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் நாடுகளின் இறைமை என்பது, அந்தந்த நாட்டு அரசுகளின் எதேச்சாதிகார உரிமையையே சுட்டி நின்றது. ஆனால்; ஒரு நாட்டின் இறைமை என்பது, ஒரு நாடு, குடிமக்களின் மனித உரிமைகளை எவ்விதம் பாதிக்கின்றது என்பதைப் பொறுத்தே உள்ளது. செய்காட் (Sieghart) என்ற மனித உரிமைகள் நிபுணர் இதனை கீழ்கண்டவாறு தெளிவுபடுத்தியுள்ளார்.

"1936ம் ஆண்டு ஜேர்மன் யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரம் பற்றி ஹிட்லரிடமோ; அல்லது, சோவியத் யூனியன் குலாத் மக்கள் அழிப்புப் பற்றி ஸ்டாலினிடமோ சென்று முறைப்பாடு செய்திருந்தால் அவர்கள் அம்முறைப்பாடுகளை இறைமையுள்ள ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் முறையற்ற தலையீடு என நிராகரித்திருக்கலாம். அன்றுள்ள சர்வதேச சட்டத்தில் அவர்களின் நிராகரிப்பு சரியானதாகவே இருக்கலாம். ஆனால், இன்று ஒரு இறைமை உள்ள அரசு தனது குடிமக்களை எவ்வாறு நடத்துகிறது. என்பது அந்த அரசு ஏகபோகமாக தன்னிச்சையாக தீர்மானிக்கக்கூடிய ஓர் விடயமன்று, அது எல்லா நாட்டினதும், மக்களினதும் நெறிமுறையான கரிசனைக்குரிய விடயமாகிவிட்டது"

ஐ. நா. சாசனம்

சர்வதேச சமூகத்தில் மேலோங்கி நிற்கும் இந்த உணர்வுகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நோக்கத்தில் ஒன்றாகஇடம் பெற்றுள்ளது. அதன்தனியுரிமை பத்திரத்தில் உறுப்புரை I (3) இல் "இன, பால், மொழிஅல்லது, மத வேறுபாடின்றி எல்லோரினதும் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மேம்படுத்தலும், மதித்து நடக்க ஊக்குவித்தலும்" ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஓர் கடமையாகும் எனக் கூறுகின்றது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து மனித உரிமை

மனித உரிமைகள் சட்டமும் மனித நேயச் சட்டமும்

This article deals with how the Human Rights law and Hamanitarian law arose and devoloped throughout the world stages and the present status of them.

மனித உரிமைகள் சட்டமானது தனி, நபர்களினதும் குழுக்களினதும் சர்வதேச உத்தரவாதம் பெற்ற உரித்துக்களை அரசுகள் மீறுவதிலிருந்து பாதுகாப்பதும், அவ்வுரித்துக்களை மேம்படுத்துவதும் சம்பந்தமானது, என வரையறுக்கப்பட்டுள்ளது. மனித நேயச் சட்டமானது யுத்தங்களாலும், அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

மனித உரிமைகள் சட்டமும், மனித நேயச் சட்டமும் சர்வதேச சட்டத்தின் இரு பிரிவுகளாகும். சர்வதேச சட்டமென்ற ஒன்று இருப்பதாற்தான் இன்று ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுடன் தொடர்புகள் வைத்திருக்கக் கூடியதாகவும், தூதுவர்கள், மற்றும் ராஜதந்திரிகள் தமது கடமைகளைச் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. 'நாடு' என்ற சொல்லிற்கு வரைவிலக்கணம் தந்ததும் சர்வதேசச் சட்டமே.

மனித உரிமைச் சட்டங்கள் எங்கெங்கு காணப்படுகின்றன

சர்வதேச சட்டத்தைப் போல் மனித உரிமைச் சட்டமானது நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகளாலும், அவர்களுக்கிடையே கடைப்பிடிக்கப்பட்டு வந்த வழக்காறுகளாலும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. மனித உரிமைச் சட்டங்கள் பெருமபாலும் ஐக்கியநாடுகள் ஸ்தாபனம், சர்வதேச தொழில் ஸ்தானம், மற்றும் சர்வதேச நிபுணத்துவம் பெற்ற அமைப்புகளின் மகா நாடுகளில் வரையப்பட்ட பன்னாட்டு உடன்படிக்கைகளில் காணப்படுகின்றன. ஐரோப்பிய சமூகம், அமெரிக்க நாடுகள் அமைப்பு, ஆபிரிக்க ஒற்றுமைக்

செல்வி வாசுகி நடராசா
(ஆரம்பநிலை ஆண்டு)

கான அமைப்பு போன்ற பிராந்திய அமைப்புகளும், மனித உரிமைகள் உடன்படிக்கைகளை ஏற்றுள்ளன. செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் அனுசரணையின் கீழ் ஆக்கப்பட்டுள்ள உடன்படிக்கைகள் மூலமாகவும், மனித உரிமைச் சட்டம் விரிவடைந்துள்ளது.

பன்னாட்டு மனித உரிமைகள் உடன்படிக்கைகள்; சட்டவிதிகளை ஒத்த பொது விதிகளைக் கொண்டுள்ளன அப்பொது விதிகள் நாட்டினால் ஏற்றுக்கொள்ளப்

பட்டு உறுதி செய்யப்பட்டவுடன் அந்த நாட்டைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்தும் தன்மை பெறுகின்றன. இன்று, பல்வேறு சர்வதேச பிராந்திய அமைப்புகளின் அனுசரணையில் கீழ் பெறுமானம் வாய்ந்த சில மனித உரிமைகள் உடன்படிக்கைகள் ஆக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் சட்டத்தைப் பொறுத்தமட்டில் அனைத்துலக ரீதியாக அமுலாக்கப் பெறும் குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடும் (International Covention on civil and political rights) பொருளாதார, சமூக, காலாசார உடன்பாடும் (International Covenant on Economic, Social and cultural rights) முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை இரண்டும் பொதுத்தன்மை கொண்டுள்ளதுடன் மனித உரிமைகள் எவையென்பதையும் எடுத்துக் கூறுகின்றன.

இவற்றைத் தவிர மேலும் குறிப்பிட்ட சில அம்சங்களைப் பற்றியதும், இனப்படுகொலை, இன அல்லது, பால் ரீதியான பாரபட்சம், சித்திரவதை போன்ற குறிப்பிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான உடன்பாடுகளும் உள்ளன. இவ் உடன்பாடுகள் 2-ஆம் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்டு இன்று சர்வதேச சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவ்வன. இன்னும் சில மனித உரிமைகள் நாடுகளினால் நீண்ட காலமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வழக்காற்றுச் சட்டமாக அங்கீகாரம் பெற்றுள்ளன.

இறைமை

2ம் உலக யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் நாடுகளின் இறைமை என்பது, அந்தந்த நாட்டு அரசுகளின் எதேச்சாதிகார உரிமையையே சுட்டி நின்றது. ஆனால்; ஒரு நாட்டின் இறைமை என்பது, ஒரு நாடு, குடிமக்களின் மனித உரிமைகளை எவ்விதம் பாதிக்கின்றது எல்பதைப் பொறுத்தே உள்ளது. செய்காட் (Sieghart) என்ற மனித உரிமைகள் நிபுணர் இதனை கீழ்கண்டவாறு தெளிவுபடுத்தியுள்ளார்.

"1936ம் ஆண்டு ஜேர்மன் யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரம் பற்றி ஹிட்லரிடமோ; அல்லது, சோவியத் யூனியன் குலாத் மக்கள் அழிப்புப் பற்றி ஸ்டாலினிடமோ சென்று முறைப்பாடு செய்திருந்தால் அவர்கள் அம்முறைப்பாடுகளை இறைமையுள்ள ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் முறையற்ற தலையீடு என நிராகரித்திருக்கலாம். அன்றுள்ள சர்வதேச சட்டத்தில் அவர்களின் நிராகரிப்பு சரியானதாகவே இருக்கலாம். ஆனால், இன்று ஒரு இறைமை உள்ள அரசு தனது குடிமக்களை எவ்வாறு நடத்துகிறது. என்பது அந்த அரசு ஏகபோகமாக தன்னிச்சையாக நிர்மானிக்கக்கூடிய ஓர் விடயமன்று, அது எல்லா நாட்டினதும், மக்களினதும் நெறிமுறையான கரிசனைக்குரிய விடயமாகிவிட்டது"

ஐ. நா. சாசனம்

சர்வதேச சமூகத்தில் மேலோங்கி நிற்கும் இந்த உணர்வுகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நோக்கத்தில் ஒன்றாகஇடம் பெற்றுள்ளது. அதன்தலையுரிமை பத்திரத்தில் உறுப்புரை I (3) இல் "இன, பால், மொழிஅல்லது, மத வேறுபாடின்றி எல்லோரினதும் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மேம்படுத்தலும், மதித்து நடக்க ஊக்குவித்தலும்" ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஓர் கடமையாகும் எலக் கூறுகின்றது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப் பட்டதைத் தொடர்ந்து மனித உரிமை

கள் பிரகடனம் வரையப்பட்டது. இது 1948 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ம் திகதி ஐ. நா. பொதுச் சபையினால் ஏற்கப்பட்டது. இந்தச் சாசனத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் அதிற் சொல்லப்பட்ட மனித உரிமைகளைத் தமது அரசியல் யாப்பில் ஏற்று, அவற்றை அமுல் செய்யக் கடமைப்பட்டுள்ளன. இலங்கை அரசியல் யாப்பின் மூன்றாம், நான்காம் அத்தியாயங்களில் இந்த உரிமைகளிற் சில இடம் பெற்றுள்ளன. எனினும் இடம் பெற்றுள்ள மனித உரிமைகள் போதுமான அளவு மனித உரிமைகளைப் பாதுகாக்கத்தவறியுள்ளன என்ற கருத்து மனித உரிமை வாதிகளால் தெரிவிக்கப்படுகின்றது. இவ் அடிப்படை உரிமைகளை மறுசீரமைக்க, உத்தேசிக்கப்பட்டுள்ள 17 ம் திருத்தச்சட்டம் தற்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது பற்றியும் குறைபாடுகள் கூறப்படுகின்றன. குறிப்பாக அடிப்படை உரிமைகளுக்கான மட்டுப்பாடுகள். இன, சமய விகிதாசார அடிப்படையில் கல்வி, தொழில் வாய்ப்பு ஆகியவற்றிற்கு வழிவிடும் சட்டங்கள்; அந்நிய நாட்டவருக்கான உரித்துக்கள் போன்ற விடயங்களில் மாற்றங்கள் வேண்டுமென வலியுறுத்துகின்றனர். முல்லேசன் (Myullerson) போன்ற பல வெளி நாட்டு நிபுணர்களால் இது பற்றி கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மனித நேயச் சட்டம்

''மனித நேயச் சட்டமானது போர்க் காலத்தில் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்றது. இச்சட்டமானது சர்வதேச அல்லது, சர்வதேசத் தன்மையற்ற ஆயுத முரண்பாடுகளால் எழும் மனித நேயப் பிரச்சனைகளைத் தீர்க்கவும், முரண்பாட்டின் நிறத்தவர்களின் வழிமுறைகளை மனித நேயக் காரணங்களுக்காக மட்டுப்படுத்தி குடிமக்களையும் அவர் தம் சொத்துக்களையும் பாதுகாக்கவும், நேச உடன்படிக்கையாலும், மதிப்புடைய வழக்கங்களாலும்ஏற்படுத்தப்பட்ட சட்டவிதிகள் தான் மனித மனித நேயச் சட்டமாகும்''எனச் செஞ்சிலுவை சர்வதேசக் குழு வரையறுத்துள்ளது.

மனித நேயச் சட்டத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு. ஒன்று - முரண்பாட்டின் நிறத்தவர்களின் செயல்களை மனித நேயக் காரணங்களுக்காகக் கட்டுப்படுத்துவது; இரண்டாவது – முரண்பாட்டிற் சிக்கிக் கொள்ளும் குடிமக்களைப் பாதுகாப்பது, சிறைப்பிடிக்கப்பட்டவர்களினதும் காயப்பட்டவர்களினதும்; உரிமைகளையும் நலன்மளையும் பேணுவது; பொது மக்களின் உயிர் உடைமை, பாதுகாப்புகள் என்பன பற்றியவையாகும்.

எனவே, மனித உரிமைகள் சட்டமும் மனித நேயச் சட்டமும் சர்வதேசச் சட்டத்தின் பிரிவுகளாயமைந்து இன்றைய இக்கட்டான காலகட்டத்தை ஓரளவிற் கேனும் வழி நடத்துகிறன எனலாம்.

பொதுமக்கள்

பொதுமக்கள் இன்று எதைக் கண் சிவந்து தூக்கி எறிகின்றனரோ, வருங் காலத்தில் ஒலியெழுப்பி அதையே உயர்வென்று முழங்குவர். இன்று கண்ணீர் துளிக்க துயர் மேலிட்டுக் கேட்கும் ஒரு செய்தி வருங்காலத்தில் சிரிப்புக்கும் கேலிக்கும் இலக்காகிவிடும்.

— தாகூர்

With Best Compliments

from

A WELL WISHER

Aliunde (al-i-und) - from another place, from outside the document.

கள் பிரகடனம் வரையப்பட்டது. இது 1948 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ம் திகதி ஐ. நா. பொதுச் சபையினால் ஏற்கப்பட்டது. இந்தச் சாசனத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் அதிற் சொல்லப்பட்ட மனித உரிமைகளைத் தமது அரசியல் யாப்பில் ஏற்று, அவற்றை அமுல் செய்யக் கடமைப்பட்டுள்ளன. இலங்கை அரசியல் யாப்பின் மூன்றாம், நான்காம் அத்தியாயங்களில் இந்த உரிமைகளிற் சில இடம் பெற்றுள்ளன. எனினும் இடம் பெற்றுள்ள மனித உரிமைகள் போதுமான அளவு மனித உரிமைகளைப் பாதுகாக்கத்தவறியுள்ளன என்ற கருத்து மனித உரிமை வாதிகளால் தெரிவிக்கப்படுகின்றது. இவ் அடிப்படை உரிமைகளை மறுசீரமைக்க, உத்தேசிக்கப்பட்டுள்ள 17 ம் திருத்தச்சட்டம் தற்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது பற்றியும் குறைபாடுகள் கூறப்படுகின்றன. குறிப்பாக அடிப்படை உரிமைகளுக்கான மட்டுப்பாடுகள். இனி, சமய விகிதாசார அடிப்படையில் கல்வி, தொழில் வாய்ப்பு ஆகியவற்றிற்கு வழிவிடும் சட்டங்கள்; அந்நிய நாட்டவருக்கான உரித்துக்கள் போன்ற விடயங்களில் மாற்றங்கள் வேண்டுமென வலியுறுத்துகின்றனர். முல்லேசன் (Myullerson) போன்ற பல வெளி நாட்டு நிபுணர்களால் இது பற்றி கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மனித நேயச் சட்டம்

''மனித நேயச் சட்டமானது போர்க் காலத்தில் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்றது. இச்சட்டமானது சர்வ தேச அல்லது, சர்வதேசத் தன்மை யற்ற ஆயுத முரண்பாடுகளால் எழும் மனித நேயப் பிரச்சனைகளைத் தீர்க்கவும், முரண்பாட்டின் திறத்தவர்களின் வழிமுறைகளை மனித நேயக் காரணங்களுக்காக மட்டுப்படுத்தி குடிமக்களையும் அவர் தம் சொத்துக்களையும் பாதுகாக்கவும், நேச உடன்படிக்கையாலும், மதிப்புடைய வழக்கங்களாலும்ஏற்படுத்தப்பட்ட சட்டவிதிகள் தான் மனித மனித நேயச் சட்டமாகும்''எனச் செஞ்சிலுவை சர்வ தேசக் குழு வரையறுத்துள்ளது.

மனித நேயச் சட்டத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு. ஒன்று - முரண் பாட்டின் திறத்தவர்களின் செயல்களை மனித நேயக் காரணங்களுக்காகக் கட்டுப் படுத்துவது; இரண்டாவது - முரண்பாட்டிற் சிக்கிக் கொள்ளும் குடிமக்களைப் பாதுகாப்பது, சிறைப்பிடிக்கப்பட்டவர்களினதும் காயப்பட்டவர்களினதும்; உரிமைகளையும் நலன்மளையும் பேணுவது; பொது மக்களின் உயிர் உடைமை, பாதுகாப்புகள் என்பன பற்றியவையாகும்.

எனவே, மனித உரிமைகள் சட்டமும் மனித நேயச் சட்டமும் சர்வதேசச் சட்டத்தின் பிரிவுகளாயமைந்து இன்றைய இக்கட்டான காலகட்டத்தை ஓரளவிற் கேனும் வழி நடத்துகிறன எனலாம்.

பொதுமக்கள்

பொதுமக்கள் இன்று எதைக் கண் சிவந்து தூக்கி எறிகின்றனரோ, வருங் காலத்தில் ஒலியெழுப்பி அதையே உயர்வென்று முழங்குவர். இன்று கண்ணீர் துளிக்க துயர் மேலிட்டுக் கேட்கும் ஒரு செய்தி வருங்காலத்தில் சிரிப்புக்கும் கேலிக்கும் இலக்காகிவிடும்.

— தாகூர்

With Best Compliments

from

A WELL WISHER

Aliunde (al-i-und) – from another place, from outside the document.

SHORT STORY

தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும்...!

சட்டத்தரணி சூரியகுமார் தர்மத்தை நிலை நிறுத்தச் சட்டத்தின் துணையை நாடினார். நண்பர்கள் எச்சரித்தார்கள் மனைவியோ, சட்டத்தின் இயலாமையைச் சுட்டிக் காட்டினார்.

ஆனால், யாருக்கு இது பிடிக்கவில்லையோ அவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவிட்டனர். ஆம், தர்மத்தின்.....

வசந்தகாலம்! மரங்கள் யாவும் சருகுகளை உதிர்த்து விட்டு புதிய இலைகளான ஆடையைப் போர்த்தியுள்ளன. அரலிப் பூக்களின் வாசனை கோட்டடியில் கமழ்கின்றது. சூரியனின் இளங்கதிகர்கள் உடலைச் சிறிதுசிறிதாகச் சூடாக்கின. இதமான தென்றல், உடலை மெதுவாகத் தழுவி, முத்தமிட்டுக் காதுக்குள் முணுமுணுத்துச் செல்கின்றது. சட்டத்தரணி சூரியகுமாரனின் கார் நீதிமன்ற வளவில் வந்து, ஒரு வட்டமிட்டு நிற்கின்றது. கையில் 'பிரீஃப்கேசுடன்' மறுகையில் அன்றைய வழக்குப் 'பைல்களை' மார்போடு இறுக அணைத்த வண்ணம், சிற்றுண்டிச் சாலையை நோக்கி அவரது கால்கள் வேகமாக அசைகின்றன. கையில் பெட்டி கனக்க, அதைவிட மனதில் எண்ணங்கள் கனத்துக் கடும் போராட்டத்தை நடத்தகைகள் அன்றைய தினசரிப் பத்திரிகையைப் பற்றிக்கொள்கின்றன. அதிலும் வேகம்! மேலோட்டமான பார்வை.

''கண்டிப் பேராதனைச் சந்தியில் இருபத்தேழு இளைஞர்கள் சுட்டுகொல்லப் பட்டு, உடல்கள் சூரியவடிவில் அடுக்கப் பட்டுள்ளன,'' இது தலைப்புச் செய்தி. மண்டையை சூடைந்தது. கன்னச்சதைகள் துடிதுடித்தன.

''தென்பகுதிக் கிராமங்களில் மனிதப் படுகொலைகள் தொடர்கின்றன. நேற்று, மேலும் ஏழு இளைஞர்கள் 'டயர்'களால் மாலையிடப்பட்டுக் கொழுத்தப்பட்டார்கள். அரைகுறையாக எரிந்த ஒரு இளைஞனின் இடது கையையும், வலது தொடையையும் தெருநாய்கள் கடித்துக் குதறி, இழுத்துச் சென்று, தேவாலய வளவில் அரசமரத்தடியில், புத்தரின் காலடியிலேயே போட்டுவிட்டன.'' இது அடுத்த செய்தி.

மனித நேயத்தை நேசிக்கும், போதி மாதவனின் புனிதக் கொள்கைகளைப் பின்

பெ. இராஜதுரை
ஆரம்ப நிலை ஆண்டு

பற்றும் எமது நாட்டில் இப்படி நடப்பதை இனியாவது புத்தர் தெரிந்துகொள்ளட்டும். மீண்டும் தோன்றி முழுமையாய்ப் போதித்துவிட்டுச் செல்லட்டும் என தெருநாய்கள் நினைத்தனவோ, என்னவோ.

''நாசமாய்ப்போன சனியன்கள், ஏன் நாட்டை இப்படி குட்டிச்சுவராக்குகிறார்கள்'' என சட்டத்தரணி சூரியகுமாரன் மனதுக்குள் சபித்தவண்ணம், பத்திரிகை

யின் அடுத்த பக்கத்தைப் புரட்டி, மேலோட்டமாகப் பார்வையை ஓடவிடுகிறார். ஓர் விநோதமான செய்தி. அதில் அவரது பார்வை குத்திட்டு நிற்கிறது.

''இளைஞன் ஒருவனுக்கு ஓடவிடாமல் கால்களைக் கட்டி கழுத்தில் டயரை மாட்டி, பெற்றோலை ஊற்றிவிட்டு, அவனின் கையிலேயே தீப்பெட்டியைக் கொடுத்து, கொளுத்திக்கொள்ளச் சொன்னார்களாம். இளைஞனோ கண்ணீர் விட்டபடி இவ்வளவையும் செய்து விட்டீர்கள், இதையும் நீங்களே செய்து விடுங்கள எனமன்றாடினானாம். உடனே உலகிற்கு இனந் தெரியாதவனும், இளைஞனுக்கு இனந் தெரிந்தவனுமான ஒருவன், இளைஞனருகிற் சென்று, அலட்சியமாகப் பார்த்துச் சிரித்துவிட்டுத் தீப்பெட்டியை எடுத்துப் பற்றவைத்ததுதான் தாமதம், இளைஞன் அவனையுஞ் சேர்த்துக் கட்டியணைத்துக்கொண்டானாம், மறுகணமே, இரண்டு எலும்புக்கூடுகள் வித்தியாசமெதுவும் இன்றித் தரையிற் கிடந்தனவாம்'' இதுதான் செய்தி: வாசித்து விட்டு முகத்தைக் கைக்குட்டையாற் துடைத்துக் கொண்டார்.

மூன்று பெண்கள் அவரிடம் வந்தார்கள். ''ஐயா! சாமி! எனது கணவனை யாரோ தூக்கிக்கிட்டு போயிட்டாங்க, இரண்டு கிழமையாகியும், ஒரு கதையும் இல்லைங்க, அவர எப்படியாவது, கண்டு பிடிச்சுத் தாங்கய்யா, உங்களுக்கு கோடி ''புண்ணியம் கிடைக்கும்'' இது ஏறத்தாழ முப்பது வயதுடைய பெண்ணின் அவலக் குரல் ''அனே, மஹாத்தயா! மகே புத்தாவ கவுறு, தொயே கெனிச்சாத மம தன்னேனே. மகே ரத்தரங் புத்தாவ சொயலா தென்ன மகே தெய்யனே,'' என அழுது புலம்புகிறாள் ஒரு சிங்களத்தாய்.

இவர்கள் இருவரையும் விசாரித்து, விடயங்களைக் கேட்டு 'டயரில்' குறித்துக் கொண்டார். கடந்த சில மாதங்களாக எத்தனையோ பேர் இப்படிப் பல கதைகளைக் கூறிவிட்டார்கள். அவரால் என்ன செய்ய முடியும்? நீதிப்பரிகாரம் பெறச் சட்டத்தைப் பயன்படுத்துகிறார். இது வரையில் முந்நூற்றுக்கு மேற்பட்ட ''ஆட் கொணர் மனுக்களை'' மேன்முறையீட்டு நீதிமன்றத்திற் சமர்ப்பித்துவிட்டார். அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகளும் இழந்து தவிக்கும் இம்மக்கள் சட்டத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கை இவரைப் புளங்காங்கிதமடையச் செய்தது, 'நீதி சாகாது' என நிம்மதியடைந்தார் சட்டத்தரணி சூரியகுமாரன்.

இவர்கள் மத்தியிலும் பணத்தையே குறிக்கோளாகக் கொண்ட பல சட்டத்தரணிகள் இருக்கத் தான் செய்கிறார்கள்.

''என்ன சூரியகுமார், ஒரே யோசனை'' இது சக சட்டத்தரணி ஒருவரின் குரல்.

''ஒன்றுமில்லை என்று சொல்ல முடியவில்லை சுதா நாடு போற போக்கில் நாமும் மிஞ்சுவோமோ தெரியாது!'' என இளைத்த குரலில் கூறுகிறார்.

''எதற்கும் நாமும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது தான் அனைவருக்கும் நல்லது'' எனச் சட்டத்தரணி சுதா கூறியது சூரியகுமாரனைக் குத்திக்காட்டுவது போல் இருந்தது.

''உயிருக்குப் பயந்தால் இந்தத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலுக்குப் போய்விட வேண்டியதுதான். எனக்கென்றால் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க முடியாது'' எனச் சட்டத்தரணி சூரியகுமார் உறுதியான குரலிற் பதிலளிக்கிறார்.

அன்றைய அலுவல்களும் ஆரவாரத்துடன் முடிந்தன. மத்தியானப் பொழுது. காரில் வீடு நோக்கித் திரும்புகிறார். காரைவிட்டு இறங்கியது தான் தாமதம், அருமை மகன் அருணின் பிஞ்சுக்கை அவரின் காற்சட்டையைப் பிடித்து இழுத்த வண்ணம். '' அம்மா '' '' அம்மா '' ''அப்பா வந்துட்டாரம்மா'' என மழலை மொழியில் கத்தியவண்ணம் வீட்டுக்குள் அழைத்துச்சென்றது.

இன்று நாட்டில் எத்தனையோ குழந்தைகள் ''அம்மா, அம்மா அப்பா எங்கேயம்மா'' என்று கேட்பதை நினைத்துக் கொண்டார். சூரியகுமாரன்.

''உடுப்பை மாற்றிவிட்டு சாப்பிட வாங்க'' இது மனைவி சஹானாவின் குரல் அவரும் அவ்விடம் விட்டு நகர்ந்து மனைவியின் அன்புக்கட்டளைக்குக் கீழ்ப் படிந்தார்.

மாலை வெயில் மேற்குவானை மஞ்சளாக்கி விட்டிருந்தது. சூரியனும் அலைந்த களைப்பினைப் போக்க அமைதியாகக் குளித்துக் கொண்டிருந்தது. வானம் முழுவதும் பல்வேறு வடிவங்கள், வெண்பஞ்சுக் கூட்டங்களாய் முகிற் கூட்டங்கள் அசைந்த வண்ணம் இருந்தன. சோபா நாற்காலியில் அண்ணாந்து படுத்திருந்த சூரியகுமார் தலைக்கு மேற்சுற்றிய மின்விசிறியின் சுழற்சியில் லயித்திருந்தார். அதை விட வேகமாக அவருடைய மனதில் எண்ணங்கள் சுழன்றன. மனைவி சஹானா வானொலியை முடுக்கினாள் ஆகாசவாணியின் மாலைச் செய்திகள் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பத்திரிகைச் செய்திகளையே, அதுவும் கூறியது. ஆனால், இறந்தவர்களின் எண்ணிக்கையை அதிகமாகக் கூறியது. ''..... நாட்டின் பல இடங்களில் மேலும் மிருகத்தனமான படுகொலைகள், இளைஞர்களுக்கு டயர் மாலைகள். நாட்டின் மூலை, முடுக்கெல்லாம் எலும்புக்கூடுகளும், அரைகுறையாய் எரிந்த சடலங்களும் காணப்படுகின்றன.'' என வானொலிச் செய்தி கூறியது.

மனம் நிம்மதியாக நிலைகொள்ள மறுத்தது. நிம்மதிக்காக அருகிலிருந்த மனைவியிடம் பேச்சுச் கொடுத்தார். ''சேதி தெரியுமா சஹானா'' என்றவர். அன்றுகாலை பத்திரிகையில் தனது பார்வையிற் குத்திட்டு நின்ற செய்தியைக் கூறினார்.

''அதுவும் சரிதான்! உங்கள் சட்டம் எங்கே, பாதிக்கப்பட்டவர்களுக்கு சாதகமாக இருந்துள்ளது. அதனால்தால் அவனே தண்டனையை வழங்கி விட்டு மாண்டுள்ளான். அந்த நிம்மதியிலாவது அவனது ஆத்மா சாந்தியடையட்டும்.'' என்றாள் மனைவி சஹானா.

''நீ சொல்வது சரிதான்! ஆனால் முழுச் சட்டவுலகமுமே அப்படி இல்லை சஹானா'' என்றார் சட்டத்தரணி.

''ஏன் இல்லை! முழுநாடுமே தீப்பிடித்து எரிகிறது. கணவனை இழந்த மனைவியரின் புலம்பல்கள், அருமைக் குழந்தைகளை அள்ளிச் செல்லக் கொடுத்துவிட்ட பெற்றோர். பெற்றோரைப் பறிகொடுத்த பச்சிளம் பாலகர்கள் அனைவரும் நீதிகேட்டுச் சட்டத்தைத் தானே நாடுகிறார்கள்'' என அவள் கூற, அவர் தொடருகிறார் ''இங்கே பார் சஹானா, சட்டத்தில் சரியான சாட்சியங்கள் நிரூபிக்கப்பட்டாலொழிய, தண்டனை வழங்க முடியாது. ஆம்! ஆயிரம் குற்றவாளிகள் தப்பலாம், ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படவே கூடாது'' ''என்ன? சாட்சியமா! எத்தனை சாட்சியங்கள் வேண்டும். நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் எலும்புக் கூடுகளும், அரைகுறை உடல்களும், பிணவாடையுமே காணப்படுகின்றது. இதனைப் பார்க்க உங்கள் சட்டத்திற்குக் கண்ணில்லையா? மூக்கில்லையா? அல்லது நாட்டின் நாலாதிசையிலும் விடிய விடியக் கேட்கும் வெடிச்சத்தம், உங்கள் சட்டத்தின் காதுகளைச் செவிடாக்கி விட்டனவா? இல்லாவிடில் எல்லாமே பணத்திற்கும் அதிகாரத்திற்கும் விலை போய்விட்டனவா?'' என்று சஹானா ஆவேசமாய் கேள்விமேல் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

நீதிமன்றத்திலே எதிர்த்தரப்பில் வாதாடும் வழக்கறிஞர்களை திக்குமுக்காடச் செய்யும் சட்டத்தரணி சூரியகுமார் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது பெருமூச்சு விட்டார். இரவு வந்தது. முழுநிலாவும், கோடானு கோடி நட்சத்திரங்களும் போட்டி போட்டுக் கொண்டு பூமியைப் பார்த்துக் கண்சிமிட்டி நகைத்தன. இதில் மயங்கிய பூமிதேவி நித்திரை மயக்கத்தில் ஆழ்ந்து போனாள்.

ஃஃ ஃஃ

அதிகாலை மூன்றுமணி. பால் நிலவு எறித்தது. நட்சத்திரங்கள் கண்களைச் சிமிட்டிய வண்ணமிருந்தன. ஊரே மயான அமைதி. காற்று, மெல்லிய ஓசையுடன் வீசியதால், தாவரங்களில் மெல்லிய ஆர வாரம். இடையிடையே நாய்களின் ஓலம் அமைதியைக் குலைத்து ஏதோ நடக்கப் போகிறது என்பதை ஞாபகமூட்டின.

திடீரென ஒரு 'பஜாரோ' ஜீப் வண்டி ஊர் எல்லைக்குள் இலக்கத்தகடுகூட இல் லாது, மின்னல் வேகத்தில் நுழைகிறது. 'பூட்ஸ்' கால்களின் ஒலி சட்டத்தரணி சூரியகுமாரனின் வாசற்படியிற் கேட்டது. கதவு தட்டப்பட்டு சூரியகுமாரன் அழைத் துச் செல்லப்படு முன்னர் ''விடிந்ததும் விசாரணையை முடித்துவிட்டு அனுப்பி விடுவோம்'' என மனைவிக்கு உத்தர வாதம் அளிக்கப்படுகிறது. மீண்டும் வண்டி வந்ததைவிடப் பல மடங்கு வேகத் தில் ஊர் எல்லையைத் தாண்டுகிறது. அந்தவேசத்தால், அருகில் நின்ற செடிகள் பேயாட்ட மாடுகின்றன. அவற்றின் ஒவ் வொரு இலைநுனியிலும்பனிநீர்கண்ணீராக வடிந்தது. நாய்களின் ஓலம் உச்சதாயியில் ஒலித்தது, இவ்வளவையும் மீறி மூன்று வெடிச்சத்தங்கள் தொடர்ந்து கேட்டன. மயான அமைதிகலைந்த நிலை. ஒவ்வொரு நிமிடமும் எத்தனையோ அர்த்தங்களை எடுத்துக்காட்டிக் கழிந்தன.

பொழுது ஆரவாரமாக விடிந்தது. சூரியன் வழமையை விடச் சிறிது நேர காலத்துடனேயே வானில் உதித்தான். ஊர் எல்லையில் ஒரே கூட்டம், கூட்டத் தின் நடுவே துப்பாக்கிக் காயங்களுடன் ஓர் உடல் – நீதிக்காகப் போராடிய உத்த மனின் உடல் வானம் பாராத்துக் கிடந்தது.

''புரக்டர் ஐயாவைச் சுட்டுக்கொன்று விட்டார்கள்'' ஊர்முழுதும் இதே பேச்சு.

மனைவி சஹானாவின் காதுக்கு இந் தச் செய்தி எட்டியதுதான் தாமதம் அவன் சித்தப்பிரமையற்றவளானாள். கணவனின் முகம்பார்த்துக் கதறியழ முயன்றாள். ஆனால் நாவெழவில்லை. உலகமே இருண் டது. மயங்கி மண்பார்த்துச் சாய்கிறாள். .....!

— முற்றும் —

(யாவும் கற்பனை)

குருடனொருவன் இரவில், விளக்குடன் வீதிக்கு வந்தான்..... எதற்காக? மற்றவர்கள் தன்மீது மோதாமலிருப்பதற்காக.

கல்லூரிகள்

மடாலயங்கள் மகான்களை வெறுப்பது போல் கல்லூரிகள் மேதைகளை வெறுக்கின்றன.

கல்லூரிகள் என்றால் என்ன?
கூழாங்கற்களை ஒளிரச் செய்யவும், வைரக் கற்களை ஒளிமங்கச் செய்யவும் கூடிய இடங்கள்தானே.

– இங்கர்சால்

With Best Compliments

from

●

Renoma Textile

Wholesale & Retail Dealers in Textiles (Suitings & Shirtings)

M. A. Kareem Market, 135-B 2. Keyzer Street,

Colombo - 11.

With Best Compliments

from

●

Jayalalitha Jewellery Mart

65, SEA STREET, COLOMBO 11.

Telephone: 422548 — 549177

With Best Compliments
From

New Fashion Side

Dealers in Textiles & Readymade Garments

No. 179, Hettiweediya,
Weligama.
T. P:- 0415 - 221

WITH BEST COMPLIMENTS
FROM

தயா பெலஸ்
ஜுவலர்ஸ்

දයා පැලස
ජුවලර්ස්

DAYA PALACE

Jewellers & Pawn Brokers

Dealers in:
Old Gold, Carat Gold, Silver, Gem Etc.

112 - 112/2, SEA STREET,
COLOMBO-11.

T. P. 20345 26854

With Best Compliments From

Ford Footwear Ltd.

94, 1ST. CROSS STREET,
COLOMBO-11.

WITH BEST COMPLIMENTS
FROM

A WELL WISHER

Acts curiae neminem gravabit — An act of the count prejudice no man.

With Best Compliments

from

The Kumaran Press

FOR QUALITY AND SPEED IN ALL THREE LANGUAGES

201, DAM STREET,
COLOMBO 12.

Telephone: 421388

Coming Soon Gaiety & Sellamahal

— ENGA OORU MAAPILLAI
— MALLU VETI MINOR
— NINAIVE ORU SANGEETHAM

CEYLON THEATRES LTD.

With Best Compliments From

●

Zamson Industries

Manufactures of Diamond Brand and Anchor Brand Elastic Tapes Lacls & Suppliers of Garment Accessories.

No. 175, Galbokka Road,
WELIGAMA.

மிளகாய், கோப்பி. மாசி, பனங் கிழங்கு, தானியவகை, பயறுவகை என்பவற்றை உடனடியாகவும், சுத்த மாகவும் அரைத்துப் பெற நாடுங்கள்.

●

அஸ்மிலா
கிரைண்டிங்மில்

129/58, ஜம்பட்டா வீதி,
கொழும்பு-13.

24 மணிநேர சேவை உண்டு.

Ex nihilo nihil fit ..... from nothing, Nothing Comes

The Unassisted Contracts of Minors in Sri Lanka-

Mrs. P. Samarasinghe*

Minors contracts are divisiblel into two categories' - (1) unassisted contract (2) contracts assisted by parent or guardian. It is with the first category that we are here concerned.

The Legal position is quite differnt in relation to unassisted contracts by minors as compared to minors' assisted contracts. Since minority is patently a species of disability the law has evolved a set of well defined rules relating thereto.

The question whether minors' unassisted contracts were void or voidable was resolved at the beginning of this century. The Supreme Court in **Silva vs Mohamadu**[1] following a South African case[2] held that such contracts were voidable at the minor's instance. Although this view was not followed by another South African case[3] later our cases followed the view that unassisted contracts of minors are voidable.[4]

A minors unassisted contract is in truth, sui generis – a point highlighted by Honore's description of it as "unilaterally void"[5] and Professor Kahn's "unilaterally inchoate"[6] Voet has described the unassisted contract of a as a minor "limping contract." Professor Nadaraja suggests the use of the expression "prima facie void as against the minor" instead of "voidable" in describing a minor's unassisted contract.[7]

The nature of this obligation is brought into relief by the following passage from Maasdorp's Institutes of Cape Law Volume III approved by Schneider J. in **Fernando vs Fernando**[8] "The contract of a minor entered into without the consent of his parents or guardians will be valid to this extent, that it will bind others to him without binding him to others" so too, Van den Heever JA in **Edelstein's Case** explains such contracts as "void in one direction and valid in another."

To this general rule of eneffectiveness as against the minor, there are certain exceptions. They are as follows:-

(A) Ratification –

A minor can ratify an unassisted contract either expressly or impliedly upon attaining majority. In **Stuttaford vs Oberhotzer** case[9] it was held that a minor who upon attaining majority continued to use a motor bicycle purchased during minority impliedly rati ied unassisted contract. A contract by a minor evidenced in a bill of exchange stands on the same footing as any other contract and is capable of ratification by the minor. If in fact he ratifies it then he is liable on the bill of cxchange.[10]

*LL B. (Sri Lanka) Attorney-at-Law, Notary Public senior Assistant Legal Draftsman Visiting Lecturer - Sri Lanka Law College.

When a guardian ratifies an unassisted contract of a minor such ratification would be effective from the date of the contract and such a contract would thereby become an assisted contract.[11]

(B) Beneficial Contracts –

Contracts are considered "beneficial" to a minor not only if the minor gets the best of the bargain but also if the contract was for the minor's benefit considering his position in life and the other circumstances of the case.[12] Such contracts may be entered into without the assistance of the guardian and binds the minor to the extent to which he has benefited from the contract. However a minor will not be held to future performance under the contract even though he has benefited from it.[13]

The burden of proving the benefit to the minor falls on the person who is seeking to enforce the contract.[14] What has to be proved is the fact of benefit rather than whether the contract was entered into for the minor's benefit.[15]

Contracts which are comsidered beneficial to minors are those of service and apprenticeship and contracts for necessaries In **the Attorney-General vs Costa**[16] it was held that where a minor entered into a bond with the crown to follow a course at a training college and thereafter sever the crown for five years, the minor could not repudiate the contract, as the contract was for the benefit of the minor.

A person who supplies necessaries to a minor is entitled to recover a "reasonable price" for the goods supplied. The minor's liability for necessaries is governed by English Law[17] to the exclusion of the common law. Necessaries are not restricted to absolute necessaries such as food and clothing but would include such items which are considered necessary to the conditions in life and status of the minor.[18]

As Dr. Weeramantry aptly observes minority is obviously a protected status. This demands a set of dear rules in order to save them from others – and from themselves.

---

1. 19 New Law Report p 426
2. Breytenbach vs Frankel (1913 A.D. p. 390)
3. Edelstein vs Edelstein (1952) (3) S.A. 1 (A.D.)
4. Wickramaratne vs Josephine Silva 63 New Law Report p. 569.
5. 1958 S.A.L.J.
6. 1959 S.A.L.J.
7. Law of Contract - The Open University of Sri Lanka p. 23.
8. 19 New Law Report p. 193
9. 1921 C.P.D. 855
10. De Canba vs Mitha (1960 (1) SALR)
11. Weeramantry, C.G., The Law of Constract Volume 1 p. 419
12. De Villiers C. J. in Nel vs Divine, Hall and Co. (1891) 8 S. C. 16 at 18.
13. Law of Contract - The Open University of Sri Lanka p. 24
14. Edelstein vs Edelstein (1952) (3) S.A. 1 (A.D.)
15. Tanne vs Foggit 1938 T. P. D. 43
16. 24 New Law Report p. 281
17. Vide:- Section 3 of the sale of Goods Ordinance.
18. Weeramantry, C. G. The Law of Contract Volume 1 p. 421.

With Best Compliments

From

Central Cycle Stores

93, Dam Street,

Colombo-12.

Tele. 432183

With Best Compliments

From

NITHYA GOLD HOUSE

Manufacturers of Guaranteed
Sovereign Gold Jewellery

40/1, 1st Floor, Super Market.

BORELLA.

Tel: 699303

WITH THE BEST COMPLIMENTS

OF

●

RENARSS SUPPLIES CENTRE

No. 130, Wolfendhal Street,
Colombo 13.

Importers - Exporters - Dealers - Agents
for All Brands of Tyres & Tubes.

Tele: 432885/434348

Fax: 445228

With Best Compliments From

Akram Leather Stores

Importers & Dealers in Leather
Goods and Shoe Materials

15, Prince Street, Colombo 11.
Sri Lanka.

Phone: 433065, 541191
Attn; AKRAM
Telex: 21974 Montien CE
Fax: 94 1 430218

Branch:

58, Maliban Street, Colombo-11

Phone: 423633

In pari materia — upon the same matter or subject.

WITH BEST COMPLIMENTS

FROM

For Shorthand and Typing
Also Special English Classes
Contact:

The Director:

U T I

540, Maradana Road,

COLOMBO-10.

Tele: 697086

With Best Compliments From

AMBIGA

JEWELLERS (PTE) LTD.

77, Sea Street, Colombo-11.

Tel: 422839, 434238

With Best Compliments From

★

★

නිත්‍යකල්‍යාණී

ජූවලර්ස්

නො. 40, මහවටි වීදිය, කොළඹ 11.

දුරකථනය: 421617, 29847

With Best Compliments From

Udaya Jewellers(Pvt)Ltd

GUARANTEED SOVEREIGN GOLD

53, 55, Sea Street, Colombo-11.

T'Phone: 25745, 541339

Resi: 522219

Factum probandum — The fact to be proved

INTERVIEW

An Interview on Matters Relating to Labour Law with Mr. V. C. Motilal Nehru

President's Counsel.

Guided by : **K. Mahalingasivam**
Assistant legal Draftsman.

Interviewed and Compiled by : **M. Y. M. Zadurdeen**

Assisted by : **Michael Johnson**

Mr. V. C Motilal Nehru had his education at Chithambara College, Valvettiturai and Jaffna Central College. He took his oaths as an Advocate of the Supreme Court in 1965. He was appointed as President's Counsel in March 1990. He is a Life Member of the Bar Association of Sri Lanka. He is also Member of the Bar Council and The Chairman of the Panel of Professional Purposes Committee of the Bar Association. He is also a Life Member of the organisation of Professionals Association of Sri Lanka.

1. Q. An Employer is conferred with unlimited power of Employing a person on a probationary appointment indefinitely. If the Employer chooses to restrict the rights of such an Employer such errant Employer can refrain from confirming the Employee without making "Malice" ostensible. Is there a protection in law to such employees?

   A. Probation may be defined as a fixed and limited period of time for which an organisation employs a new employee in order to assess his aptitudes, abilities and characteristics and the amount of interests he shows in his job so as to enable employer and employee alike to make a final decision on whether he is suitable and whether there is any mutual interest in his permanent employment. In Sri Lanka, it is usual to fix a period of probation of six months, with the right to extend if the employee's services are unsatisfactory. In the absence of mala fides, the management is the best judge of whether an employee's period of probation has been satisfactory or not. Conflicting views have been expressed on the question as to the status of an employee who is

continued in employment after the expiry period of probation without any express confirmation in his post. The Supreme Court of Sri Lanka has taken the view that a person appointed to a post on probation is not automatically confirmed on the expiry of the period of probation, unless the contract of employment provides for automatic confirmation Hence, if a probationer is allowed to continue on probation after the expiry of the period of probation, he continues in service as a probationer. Therefore, it is evident that there is no protection in law to a probationer.

2. Q. The presently settled law empowers an Employer to suspend the services of an Employee until the performance of an act on the part of such Employee, connected to the contract of employment - such employees are debarred from having recourse to Labour Tribunals. What is the remedy to the Employees in a situation of this nature?

A. Although employees in such situation are debarred from having recourse to the Labour Tribunals, the Industrial Disputes Act provides for Arbitration. An employee could make representation to the Minister of Labour or Commissioner of Labour and the justifiability of the suspension may be made the subject matter of Arbitration.

3. Q. The decided cases reckon moral turpitude as a hindrance to the Employer-Employee relationship. As long as the contract of employment is not hampered with why should moral turpitude be considered as criterion?

A. Moral turpitude on the part of an employee is an act of misconduct. It is considered as an act of grave misconduct. The contract of employment cannot subsist if the employee is guilty of any act involving moral turpitude. Offences in the nature of theft, misappropriation and criminal breach of trust involve moral turpitude. It would be totally undersirable to retain in the employer's services an employee proved to have been guilty of an act of misconduct involving moral turpitude.

4. Q. Termination of services is effected with or without a disciplinary/ domestic inquiry. The Labour Tribunals also either take cognizance of such inquiries or refrain from doing so by making independent orders. Is this situation due to the concept that the impartiality of such inquiries is at stake?

A. Unlike in India, there is no statutory requirement in Sri Lanka necessitating the holding of a domestic inquiry prior to dismissal unless collective agreements or the contracts of employment so provide. An inquiry helps to establish the bona fides of employer and the dismissal without an inquiry may sometime be indicative that the employer has acted arbitrarily.

The duty imposed on a Labour Tribunal in terms of the Industrial Disputes Act is to make an order that is just and equitable. It shall be the duty of the Tribunal to make all such inquiries into the Application made to it and to hear all such evidence as it may consider necessary. In such context, the Tribunal is not concerned whether there was a domestic inquiry or not prior to the dismissal except to take note of the bona fides of the employer if a domestic inquiry was held. Strictly speaking, the Tribunal is not concerned with the impartiality of the domestic inquiry.

5. Q. The Gratuity Act No: 12 of 1983 states that the Employer is required to pay the gratuity to the retired employee within a period of 30 days of retirement. In the event of non-compliance of this relevant section, is there a penal action?

A. Failure to comply with any provision of Payment of Gratuity Act No: 12 of 1983 is an offence under Section 15 (1) of the said Act. On conviction for non-compliance the Employer shall be liable to a fine not exceeding five hnndred rupees or to imprisonment of either description for a period not exceeding six months or to both such fine and imprisonment.

6. Q. When the employees adopt to "Go Slow", "Work to Rule" etc, what are the remedies available to the Employers who tend to lose financially over such sabotage by the employees?

A. A "Go Slow" which is a refusal to work at the normal pace is a technique resorted to by Trade Unions as a substitute for a strike and has generally been characterised as an unfair labour practice. Our Courts have characterised a go-slow as misconduct punishable with dismissal. An employer may without dismissing all those participating in it, select some of them for dismissal subject to the requirement that the selection is done without a motive of victimisation. A "Work-to-Rule" is where the employee insists on strict and detailed compliance with his contract. An employer may make representation to the Commissioner of Labour and arrive at a settlement. If a settlement fails, the Employer may get the issue referred for compulsory arbitration under the Industrial Disputes Act.

7. Q. Are the meagre benefits embodied in the Industrial Disputes Act just and equitable in the case of those Retrenched or Laid Off at the instance of an employer?

A. In regard to retrenchment, the law which is applicable at present is found in the Termination of Employment of workmen (Special Provisions) Act No; 45 of 1971. Wide powers are given to the Commissioner of Labour including continuance in employment. If a workman is retrenched who is not caught up by the Termination Act, he could go before a Labour Tribunal and seek relief.

8. Q. When the employees or the Trade Union on behalf of its members give notice of strike on Industrial Disputes, what is the procedure that should follow thereafter with special reference to the role played by either parties in reaching settlements of such matters and to prevent the proposed strike?

A. If the parties are bound by Collective Agreement, a procedure is invariably found in the said agreement. Otherwise, parties are entitled to make representation to the Minister or Commissioner of Labour If no settlement is arrived at by the Minister or the Commissioner, the demands which give rise to the impending strike, could be referred for settlement by Arbitration under the Industrial Disputes Act. Once the dispute is referred for settlement to an Industrial Court or Arbitrator, the workmen cannot resort to strike before the award has been made. If a strike commences, the workmen commit an offence and they are liable for prosecution under the Industrial Disputes Act by the Commissioner of Labour.

9. Q. What are the ingredients of a legal and illegal strike?

A. Though the right to strike is generally regarded in Sri Lanka as legitimate Trade Union weapon it is subject to certain restrictions. While the Fundamental Rights of freedom of association and the freedom to form and join a Trade Union are guaranteed by the Constitution, the right to strike is neither enshrined as a Fundamental Right in the Constitution nor it is expressly conferred by Statute. If a strike is not subject to the following restrictions, it is a legal strike. The restrictions are:-

(a) A strike in an essential industry must be preceded by a written notice in the prescribed form and such notice must be given to the employer at least 21 days before the date of its commencement.

(b) Strikes which violate Sections 40 (1) (e), (f), (fff), (m) and (o) of the Industrial Disputes Act.

(c) Strikes by members of the Judiciary, the Police, Prisons, Armed Forces and Members of the Agricultural Corps.

(d) Strikes in certain services essential to the community as declared by the President of the Republic in terms of Public Security Ordinance. It should be noted that a strike may be legal but unjustified.

10. Q. When there are inconsistencies between the provisions of a Collective Agreement (Gazetted) applicable to a Trade and the Statute, on a particular issue in dispute, which of the two provisions will prevail over the other?

A. When there are inconsistencies between the two, it is a Statute that will prevail. A Statute is an Act of Parliament. Collective Agreement is not an Act of Parliament. Collective Agreement is Gazetted on approval by the Commissioner of Labour who is only expected to satisfy himself that the terms and conditions set out in the said agreement are not less favourable than those applicable to any other workmen in the same or similar industry in such district.

வியாபாரத்தில் புலமைச்சொத்துரிமைகளை மீறுதலும் நேர்மையற்ற போட்டியும்

Breach of Intellectual Property Rights & Unfair Competition in Trade

KANDIAH NEELAKANDAN *

Intellectual Property Law is basically a novel piece of legislation as far as our country is concerned. In this article, the author analyses the various implications and complexities involved in this modern concept in a methodical and systematic manner.

புலமைச் சொத்து என்பது ஒரு பொருளாதார ஆதனம். அரூ உருவ மற்றதாக இருந்தாலும் அதன் பொருளாதாரப் பெறுமதி காரணமாக சட்டவலுப் பெற்று சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சொத்தாக இன்று விளங்குகின்றது.

பதிப்புரிமை (Copyright) கைத்தொழில் வடிவ அமைப்புகள் (Industaial Designs) ஆக்கவுரிமைகள் (Patents) வியாபாரக் குறிகள் (Trade Marks) வியாபாரப் பெயர்கள் (Trade Names) ஆகியன உள்ளடக்கிய புலமைச் சொத்து (Intellectual Property) சம்பந்தமான சட்டம் ஒரு கோவையாக 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச்சட்டமாக - ஒரு நாட்டின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இரண்டாம் நாள் முதல் அமுலில் இருக்கின்றது. அச்சட்டத்திற்கு 1980 ஆம் ஆண்டின் 30ம் இலக்க, 1983ம் ஆண்டின் 2ம் இலக்க 1990ம், ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டங்களால் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

புலமைச் சொத்துச் சட்டம் மேல் நாட்டில் பெற்ற முக்கியத்துவத்தை, வளர்ந்து வரும் நாடுகளில் இப்போது தான் பெற ஆரம்பித்து இருக்கின்றது. இச்சட்டம் புலமைச் சொத்தினை ஆக்கியோர்களுக்கு மட்டுமல்ல கைத்தொழில் துறைக்கும் வர்த்தகர்களுக்கும் கூடப் பாதுகாப்பு வழங்கும் சட்டமாக வளர்ந்திருப்பதால் உலகளாவிய வர்த்தகத் தொடர்புகள் சர்வதேச ரீதியில் இச்சட்டத்தின் இன்றியமை

* Attorney-at-Law

யாமையை உணரவைத்திருக்கின்றன. கணனி (Computer) மற்றும் நவீன விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும் இன்று புலமைச் சொத்துச் சட்டத்தின் அவசியத்தைச் சகலரும் அறிய வைத்திருக்கின்றன. புலமைச் சொத்துச் சட்டம் அவ்வாறான விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்புடையதாக வளர-மாற வேண்டிய-நிலையும் ஏற்பட்டிருப்பதையும் சட்ட உலகம் புரிந்திருக்கின்ற காலகட்டம் இது.

பதிப்புரிமை, கைத்தொழில் வடிவ அமைப்புகள், ஆக்கவுரிமைகள் ஆகிய புலமைச் சொத்துச் சட்டப்பகுதிகள் குறிப்பாக ஆக்கியோன்களுக்கும் கண்டுபிடிப்பாளர்களுக்கும் பாதுகாப்புத் தருகின்றது என்றால், வியாபாரக் குறியும் வியாபாரப் பெயரும் சம்பந்தமான பகுதிகள் வியாபார உலகிற்கு முக்கியமானவையாக அமைகின்றன. இருந்தும் இந்நாட்டின் வர்த்தக சமூகம் அதனை நன்றாக உணர்ந்திருக்கின்றது என்று சொல்லமுடியாது. எனவே வியாபாரக் குறிகள் வியாபாரப் பெயர்கள் ஆகியோரின் சொந்தக்காரரின் உரிமைகளையும் அதனை மீறுவதால் ஏற்படுகின்ற விழைவுகளையும் கைத்தொழிலும் வணிகத்திலும் நேர்மையற்ற போட்டியிடுவதால் ஏற்படுகின்ற விளைவுகளையும் சுருக்கமாக ஈண்டு சுட்டிக்காட்ட முனைகின்றேன்.

இச்சட்டத்தின்படி 'குறி' என்பது வியாபாரக் குறியொன்றென அல்லது சேவைக் குறியொன்றெனப் பொருள்படும். உதாரணங்கள்: 'சன்லைட்' (சவர்க்காரம் ஒன்றின் வியாபாரக் குறி) 'ஹொலிடே இன்' (ஹோட்டல் ஒன்றின் சேவைக் குறி.)

தங்களுக்கு விரும்பிய அல்லது வேண்டிய பொருளை அல்லது சேவையைப் பொதுமக்கள் குறி மூலம் இனம் கண்டு கொள்ள வழிவகுப்பதே ஒரு குறியின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது. அப்படியான அடையாளம் அல்லது இனம் காண்கின்றமைக்கு மட்டுமல்லாது, அதன் தரத்தைப் பறைசாற்றுகின்ற பெருமையையும் ஒரு குறி பெறுகின்றது. அப்பொருளை அல்லது சேவையை வழங்கும் வர்த்தக தாபனத்திற்கு அக்குறி மூலம் நல்ல பெயரும் தரத்தின் மேன்மையும் கிடைத்து, அதுவும் அத்தாபனத்தின் ஒரு பொருளாதார ஆதனமாகிவிடுகின்றது. அக்குறி அப்பொருளின் அல்லது சேவையின் உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் யார் என்பதனைப் பொதுமக்கள் அறியவைத்து அக்குறி மூலம் அதற்குப் பிரபல்யமும் தேடித் தருகின்றது.

ஒரு குறிக்குச் சட்டவலுவேண்டுமானால் அது புலமைச் சொத்துச் சட்டக் கோவையின் படி ஆக்கவுரிமைகளினதும் வியாபாரக் குறிகளினதும் பதிவாளரினால் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்படாத குறிகள் 'நேர்மையற்ற போட்டி' பற்றிய மேற்கூறப்பட கோவையின் 142ம் பாகத்தின் கீழ் சில பாதுகாப்புகளைப் பெற வாய்ப்புகள் இருந்தபோதும் பிறிதொருவர் அக்குறியைப் பதிவு செய்வதன் மூலம் பெறக்கூடிய முன்னுரிமை மற்றும் பதிவு செய்த குறிக்கு சட்டம் அளிக்கின்ற பிரத்தியேக உரிமைகளையும் வலுமிக்கப் பாதுகாப்புகளையும் கருத்திற் கொள்கின்றபோது தான் பாவிக்கின்ற குறியை இச்சட்டக் கோவையின்படி ஒவ்வொரு கைத்தொழில் நிறுவனமும் வர்த்தகரும் பதிவு செய்வதே புத்திசாலித்தனமாகும். விண்ணப்பங்கள் செய்யப்பட்டும் பதிவுக்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற குறிகள் பற்றிய விளம்பரங்களைப் பதிவாளர் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவார். எனவே ஒவ்வொரு கைத்தொழில் அல்லது வர்த்தக நிறுவனமும் வர்த்தமானியில் குறிகள் பற்றி வெளிவருகின்ற விளம்பரங்களை வாரந்தோறும் பார்வையிட்டுத் தங்களின் குறிகளை மீறும் வகையில் வேறுயாரும் விண்ணப்பங்கள் செய்தால் அதனை எதிர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்குப் பின்னரும் பிரத்தியேக உரிமைகளை புலமைச் சொத்துச் சட்டக் கோவையின் 117ம் பாகம் வழங்குகின்றது:-

1) குறியினைப் பயன்படுத்தல்,

2) குறியின் பதிவினைச் சாட்டுதல் செய்தல் (Assignment) அல்லது மாற்றுதல் (Transmission)

3) உரிம ஒப்பந்தங்களை (Licene Contracts) நிறைவேற்றுதல்

குறியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் சம்மதமின்றி மூன்றாம் திறந்தவர்கள் பின்வரும் செயல்களைச் செய்வதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்:-

அ) குறி, எப்பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அப்பொருட்களுக்கென அல்லது சேவைகளுக்கென, அல்லது வேறு எப்பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பில் அக்குறியின் அல்லது அடையாளத்தின் பயன்பாடு பொதுமக்களைத் தவறாக இட்டுச் செல்லக்கூடியதான சாத்தியக் கூறுள்ளதோ அப்பொருட்களுக்கென அல்லது சேவைகளுக்கென பொதுமக்களைத் தவறாக இட்டுச் செல்லக்கூடியவாறான அத்தகைய வழியில் குறி அல்லது அடையாளம் எதனையும் பயன்படுத்தல்.

ஆ) நியாயமான காரணமின்றியும் குறியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் அக்கறைகளுக்குப் பங்கமேற்படுத்தும் சாத்தியமுள்ள நிலைகளிலும், குறியினை அல்லது குறியினைப் போன்றிருப்பதான அடையாளம் ஒன்றினை அல்லது வியாபாரப் பெயரைப் பயன்படுத்தல்.

எனினும் குறியின் பதிவானது, அதன் சொந்தக்காரருக்கு மூன்றாம் திறத்தவர்களைத் தடைசெய்வதற்கு அளிக்கும் உரிமையை சட்டக்கோவையின் 118 ஆம் பாகம் மட்டுப்படுத்தியுள்ளது. நல்லெண்ணத்துடன் அல்லது சட்டப்படி மூன்றாம் திறத்தவர்கள் செய்யும் சில செய்கைகளுக்கு இம் மட்டுப்படுத்தல் விதிக்கப்பட்டுள்ளது. எனினும் 118ம் பாகம் தெளிவானதாக இல்லை. எனவே இப்பாகம் பொருத்தமான வழக்கொன்றில் உயர்நீதிமன்றத்தினால் வியாக்கியானம் செய்யப்படும் வரை இப்பாகத்தின் அடிப்படையில் செயற்படுவது நன்றன்று.

''ஒரு வியாபாரக் குறியினை அல்லது குறியினைப் போன்றிருப்பதான அடையாளம் ஒன்றினை அல்லது வியாபாரப் பெயரைப் பயன்படுத்தல்'' என்றால் என்ன என்பதனைச் சுருக்கமாகப் பார்ப்போம். 'Lux' என்ற வியாபாரக்குறி சவர்க்கார உற்பத்தியாளர் ஒருவரால் பதிவுசெய்யப்பட்டது. இன்னுமொரு சவர்க்கார உற்பத்தியாளர் 'Rex' என்ற குறியைப்பாவித்தார். 1937 ல் தீர்மானிக்கப் பட்டு புதிய சட்டறிக்கைகள் 39 ம் தொகுதியின் 332 ம் பக்கத்தில் அறிக்கைப் படுத்துப்பட்டுள்ள லீவர் பிரதர்ஸ் எதிர்- இரங்கநாதன்பிள்ளை என்றவழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், 'Rex' என்ற சொல் 'Lux' என்ற சொல்லைப் போன்ற ஒலிப்பைக் கொண்டிருப்பதால் எதிராளி வழக்காளியின் உரிமையை மீறியிருக்கிறார், எனக்கண்டது. சமீபத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட எம். எஸ். ஹெறப்துலா போய் அன் கம்பனி லிமிடெட்-எதிர் றசன் எக்ஸ்போர்ட்ஸ் லிமிடட் என்ற வழக்கில் நீதியரசர்கள் பிரியந்த பெரரா சரத் சில்வா ஆகியோரும் ஏற்றுக் கொண்டு நீதியரசர் கே. பாலகிட்னரால் எழுதப்பட்ட தீர்ப்பில் புதிய சட்டக்கோவையின் 117 ம் பாகம் ஆராயப்பட்டது 'Rabea' என்று ரோமன் எழுத்துக்களில் ஒரு குறிபதிவு செய்யப்பட்டது. Chaiel Rabea' என அராபிய எழுத்துக்களில் ஒரு குறியினைப் பாவிப்பது முதற் கூறப்பட்ட குறியினைப் பதிவு செய்த சொந்தக்காரரின் உரிமையை மீறுவதாகுமா என்ற வினா எழுந்தது. எழுத்துப் பெயர்ப்பு (Transliteration) அல்லது பெயர்ப்பு ஒலிப்பதில் ஒரே மாதிரி அல்லது போன்று

இருப்பது (phonetic Resemblance) ஒரு குறி மற்றுமொரு குறி போன்றிருப்ப தாகக் கருதப்படும் வகையில் இத்தீர்ப்பு அமைந்தது. எடுத்துக்காட்டப்பட்ட பல் வேறு நீதிமன்றங்களின் தீர்ப்புகளை ஆராய்ந்து நீதிமன்றம் இம்முடிவுக்கு வந்தது. அப்படி மேற் கோள் காட்டப்பட்ட தீர்ப்புகளில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:–

(அ) 'ஆண்டாள்' என்ற குறி அம்பாள் என்ற குறி போன்றது எனசின னகிருஷ்ண செட்டியார் – எதிர்–ஸ்ரீ அம்பாள் கம்பனி வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு

(ஆ) தமிழில் சூரியன் என்ற பெயருடன் சூரியனின் படத்தையும் தாங்கிய குறி 'Sunlight' என்ற பதிவு செய்யப்பட்ட குறியைப் போன்றது'.

பொதுமக்கள் என 117 ம் பாகத்தில் சொல்லப்பட்டிருப்பது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்தவரை மட்டும் குறிக்கின்றதா அல்லது பரந்த நோக்கில் அச் சொல் பொருள் கொள்ளப்பட வேண்டுமா என்ற வினாவும் எழுந்தது.வழக்காளிதனது பதிவு செய்யப்பட்ட குறியினைப் பாவித்து சவுதி அரேபியாவுக்குத் தேயிலை ஏற்றுமதி செய்யும் நிறுவனம். எதிராளி அதே போன்ற குறியைப் பாவித்து எகிப்திற்கு தேயிலை ஏற்றுமதி செய்கிறார் என்பதே முறைப்பாடாக இருந்தது. எகிப்திலிருந்து மெக்காப்புனித யாத்திரிகைக்கு சவுதி அரேபியாவுக்குப் போகும் மக்கள் வழக்காளியின் தேயிலையை வாங்கலாம் என்பதுவும் ஒரு வாதமாக இருந்தது. பொது மக்கள் என்று கூறும் போது அச் சொல் பரந்த நோக்கில்பொதுமக்களை – நிகழ்கால, எதிர்கால, எதிர்காலவாய்ப்புள (Prospective) உள்நாட்டு, வெளி நாட்டு மக்களையும் உள்ளடக்கும் என்ற கருத்தில் நீதியரசர் பாலகிட்னர் வியாக்கியானம் தந்து இருக்கிறார். (இத்தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடு உயர்நீதிமன்றத்தில் தாக்கலாகியிருகின்றது)

பதிவு செய்யப்பட்ட குறியின் சொந்தக்காரரின் அக்கறைகளை பங்கப்படுத்த முயல்வது– பொதுமக்களைத் தவறாக இட்டுச்செல்லமுயல்வது–ஏமாற்றுதல்வாணிபத்தில் தவிர்க்கப்பட வேண்டும் என்ற பாணியில் சட்டம் அமைந்திருப்பதையும் அந்தவகையில் நீதிமன்றங்களின் சட்ட வியாக்கியானங்கள் தரப்பட்டிருப்பதையும் மேற்கூறப்பட்டவை எடுத்துக் காட்டுகின்றன.

ஒரு பெயர் அல்லது குறிப்பெயர்:–

(அ) அதன் தன்மை காரணமாக அல்லது கையாளப்படக்கூடிய அதன் பயன்பாடு காரணமாக அது ஒழுக்கத்திற்கு அல்லது பொது ஒழுக்கத்திற்கு முரணாகவிருப்பின் அல்லது

(ஆ) ஏதேனும் சமுதாயத்தின் சமய அல்லது இன உணர்வுகளைப் பாதிக்கக் கூடியதாயிருப்பின் அல்லது

(இ) அப்பெயரால் குறிப்பிடப்படும் தொழில் முயற்சியின் தன்மை தொடர்பில் வியாபார வட்டாரங்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லக் கூடியதாக விருப்பின்

அது வியாபரப் பெயர் ஒன்றாக அனுமதிக்கப்படுதலாகாதுஎனச்சட்டக் கோவையின் 139ம் பாகம் எடுத்துக்கூறுகிறது.

வியாபார பெயர் ஒன்றைப்பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யும் சட்டம் இருந்தும் அவ்வாறு அப்பெயர் பதிவு செய்யப்படாவிட்டாலும் மூன்றாம் திறத்தவர்கள் அப் பெயர் சம்பந்தமாக எந்தவொரு சட்டமுறையற்ற செயலையும் செய்ய முடியாது. அவ்வாறான மூன்றாம் திறத்தவர்கள் பொது மக்களைத் தவறாக இட்டுச் செல்லக் கூடியவாறாக அப்பெயரைப் பயன்படுத்துவதும் சட்டமுறையற்றதாகும்.

கைத்தொழில் அல்லது வணிக விடயங்களிலான நேர்மையான வழக்கங்களுக்கு முரணாக போட்டிச் செயலெதுவும் நேர்மையற்ற போட்டிச் செயலொன்றாக அமையும் என்று சட்டக் கோவையின் 142ம் பாகம் பிரகடனப்படுத்துகின்றது: அப்பாகத்தின்படி நேர்மையற்ற போட்டிச் செயல்கள் (Acts of Unfair Competition) பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) போட்டியாளரொருவரின் தாபனம், பொருட்கள், சேவைகள் அல்லது கைத்தொழில் அல்லது வணிக நடவடிக்கைகள் என்பவற்றுடன் எத்தன்மைத்தானதுமான எவ்வழிகளிலேனும் குழப்பத்தை ஏற்படுத்தும் அத்தகைய ஒரு தன்மையதான எல்லாச் செயல்கள்;

(ஆ) வியாபாரத்தின்போது போட்டியாளரொருவரது தாபனம், பொருட்கள், சேவைகள் அல்லது கைத்தொழில் அல்லது வணிக நடவடிக்கைகள் என்பனவற்றுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தக்கூடிய அத்தகைய தன்மையதான பொய்யான குற்றச்சார்த்தலொன்று;

(இ) பொருட்களின் இயல்பு, உற்பத்திச் செய்முறை, தன்மைகள் அவற்றின் நோக்கத்திற்கு உகந்ததாகும் தன்மை அல்லது அளவு என்பன தொடர்பில் வியாபாரத்தின் போது பொது மக்களைத் தவறாக இட்டுச் செல்லக்கூடியதான மூலம் அல்லது மூலஇடுபெயர் பற்றிய ஏதேனும் குறிப்பீடு;

(ஈ) பொருட்களின் அல்லது சேவைகளின் மூலம் பற்றிய அல்லது அவற்றின் உற்பத்தியாளரை, தயாரிப்பாளரை அல்லது வழங்குநரை அடையாளம் காணுதல் பற்றிய பொய்யான அல்லது ஏமாற்றக்கூடிய குறிப்பீட்டினை நேரடியாக அல்லது மறைமுகமாகப் பயன்படுத்துதல்;

(உ) பொய்யான அல்லது ஏமாற்றக்கூடிய மூல இடுபெயரொன்றை நேரடியாக அல்லது மறைமுகமாகப் பயன்படுத்தல், அல்லது, உற்பத்திப்பொருளின் உண்மையான மூலம் குறிப்பிடப்பட்டிருப்பினும் மூல இடுபெயரொன்றினைப் போலி புனைதல், அல்லது மொழிபெயர்க்கப்பட்ட உருவில் அல்லது ''வகை'' ''இனம்'' ''குறி'' ''போலி'' என்னும் சொற்களுடன் அல்லது அது போன்ற சொற்களுடன் சேர்த்து இடுபெயரினைப் பயன்படுத்துதல்.

ஒருகுறியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் உரிமைகளை மீறுகையும் ஒரு நேர்மையற்றப் போட்டிச் செயலாகவே அமையும். பதிவு பெறாத ஒரு குறியின் உரிமைக்காரர் அல்லது பாவிப்பாளர் தனது குறியை அல்லது அக்குறியைப் போன்ற குறியை இன்னுமொருவர் பாவிப்பதை நேர்மையற்றபோட்டிச் செயல் என்ற முறையில் சட்டத்தின் துணை கொண்டு தடை செய்ய முடியும்;

1980ம் ஆண்டில் புதிய சட்டக்கோவை அமுலுக்கு வரும் முன் ஆங்கிலப் பொதுச் சட்டத்தின் அடிப்படையில் நேர்மையற்ற போட்டிச் செயல்களை போலியாகக் காட்டல் அல்லது போலிவியாபாரம் (Passing off) என்ற சட்டத்தின்படி தடைசெய்ய முடிந்தது. ஆனால் புதிய நேர்மையற்ற போட்டித்தத்துவம் பழைய ஆங்கிலத் தத்துவமான திலும் பார்க்கப் பரந்தது என்பது சட்டவல்லுநர்களின் கருத்து.

''எண்ணற்ற சொற்கள் வார்த்தைகள் சின்னங்களிலிருந்தும் தனது வியாபாரக் குறியைத் தெரிவு செய்து அக்குறிமூலம் தனது பொருளை அல்லது சேவையை அடையாளம் காட்ட ஒரு வர்த்தகருக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது அப்படியான பரந்த எல்லையற்ற தெரிவு செய்கின்ற சந்தர்ப்பம் இருக்கின்றபோது ஓர் எதிராளி வழக்காளியின் குறியைப் போன்ற குறியைப் பாவித்துப் பாவனையாளர்

களிடையே குழப்பம் ஏற்படுத்தி வழக்காளியின் பொருள் அது என அவர்களை ஏமாறவைத்து வர்த்தகம் செய்வது வழக்காளியின் பிரபல்யத்தையும் நல்ல பெயரையும் தனக்கு இலாப மீட்டும் வகையில் தவறான முறையில் பாவிப்பதாகும். அப்படியான பரந்த தெரிவுக்கு வாய்ப்பு இருக்கும் போது, தான் இந்தக்குறியை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்பதனைத் திருப்திகரமாக விளக்க ஓர் எதிரி தவறினால், வேண்டுமென்று ஏமாற்றிப் பிழைக்கவே எதிராளி இதனைச் செய்தார் என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாதது''

மேற்கூறப்பட்ட கூற்று நேர்மையற்ற போட்டியை எடுத்துக் காட்டுவதாக சட்டவல்லுநர்களாலும் நீதி மன்றங்களாலும் அடிக்கடி சொல்லப்படுவதாகும். அவளைத் தொடுவான் ஏன், அவலைப்படுவான் ஏன் என்று சொன்னார்கள். அது போன்று நேர்மையற்ற போட்டி ஏன்; இந்த ஏமாற்றுப் பிழைப்புத்தான் ஏன் என வர்த்தகர்கள் விழிப்பாக இருப்பது நல்லது

புலமைச் சொத்துக் சட்டக்கோவையின் 179ம் பாகத்தில் கூறப்பட்ட வண்ணம் ஒரு குறியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் சொல்லப்பட்ட குறியை ஆளெவரும் மீறுவதாக அச்சுறுத்துகின்றாரென அல்லது மீறிவிட்டாரென அல்லது மீறுகை நிகழக்கூடியதாகச் செய்யக்கூடிய செயல்களைப் புரிகிறாரென நிரூபிக்குமிடத்து, நீதிமன்றம் அத்தகைய மீறுகையைப் புரிவதிலிருந்து அல்லது தொடர்ந்து புரிவதிலிருந்து அல்லது அத்தகைய செயல்களைப் புரிவதிலிருந்து அத்தகைய ஆளெவரையும் தடை செய்யும் தடையீட்டெழுத்தாணை (Injunction) யொன்றை வழங்கலாம். அத்துடன் நட்ட ஈட்டினையும் நீதியானதும் தோதானதுபென நீதிமன்றத்திற்குத் தோன்றும் அத்தகைய வேறு நிவாரணத்தையும் அம்மன்றம் வழங்கலாம். இச்சட்டக் கோவையில் தரப்பட்டிருக்கும் பொருள் கோடலின்படி ''நீதிமன்றம்'' என்பது கொழும்பு மாவட்ட நீதிமன்றம் எனப் பொருள்படும். எனவே இது தொடர்பான வழக்குகள் கொழும்பிற்கு வெளியே எழுந்தாலும், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம்.

அதே வண்ணம் நேர்மையற்ற போட்டிச் செயல்களில் எதனாலும் இடருற்ற எவரேனும் ஆள் அல்லது வியாபாரிகளின் அல்லது உற்பத்தியாளர்களின் அல்லது தயாரிப்பாளர்களின் அல்லது வியாபாரிகளின் சங்கம் அத்தகைய செயல்கள் தொடர்ந்து நடைபெறுவதனைத் தடை செய்வதற்கென கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கலாம். உற்பத்தியாளர்களின் அல்லது தயாரிப்பாளர்களின் அல்லது வியாபாரிகளின் சங்கம் நேர்மையற்ற போட்டிகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க இது ஒரு நல்ல சட்ட நிவாரணமாகும். எனினும் இச்சட்டம் ஒரு தசாப்தத்திற்கு மேலாக அமுலில் இருந்தும் கூட அப்படியான சங்கம் ஒன்று இச்சட்ட நிவாரணத்தை நாடியதாக நாம் அறியவில்லை.

குறிகளை மீறுதல் குறிகள் தொடர்பிலான பொய்யான பகர்வுகள் என்பன சட்டக்கோவையின் 150ம், 151ம் பாகங்களின் கீழ் குற்றங்கள் ஆகும். அது போன்று ஏமாற்றுவழியில் குறிகள் விவரணங்கள் பற்றித் தவறுகள், பொய்ப் பெயர் அல்லது பொய் முதல் எழுத்துக்கள் இதே குறிகளைப் போலி புனைதல், கைக்கடிகாரத்தில் தவறுதலான குறிகள் அவை ஆக்கப்பட்ட நாடுபற்றி தவறான விவரணம் தருதல் போன்றவையையும் சட்டக்கோவை குற்றங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளன. எனவே நேர்மையற்ற வர்த்தகம் — தடையீட்டெழுத்தாணை, நட்டஈடு என்ற விளைவுகளை மட்டுமல்ல குற்றவாளிக் கூட்டிற்கும் தவறு இழைப்பவர்களை இட்டுச்சென்று சிறைக்கும் அனுப்பிவைக்கும் என்பதனையும் கூட்டிக் காட்டி இங்கு அவைபற்றி விபரமாக எழுதுவது சாதகியமாகாது என்பதனால் நேர்மையற்ற செயல்கள் எதுவிலும் இறங்குவது மிகவும் ஆபத்தான செயல் என்பதனை மட்டும் வலியுறுத்தி இக்கட்டுரையினை நிறைவு செய்து கொள்கிறேன்.

Rights and Duties of Illegitimate Children in Sri Lanka

Birth creates a legal relationship between a parent and child. This relationship can be in terms of duty to support & the right to succession. Under the Roman Dutch Law the institution of marriage was vitally important, so much so that the preservation of it cast a special stigma on illegimate children, children who are born out of wed-lock.

The Roman Dutch Law recognizes 3 categories of illegitimate children. They are,

Miss. Shermila Gunanathan
Intermediate year.

1. Simple bastards who are issues of a man & a woman who are both unmarried at the time of the birth of the child.

2. Adulterine bastards are the children who are conceived in adultery.

3. Incestuous bastards are the children of parents who are incapable of marrying each other due to the prohibited relationship by law.

Classical Roman Law attached considerable disadvantages on Adulterine bastards & incestuous bastards & lesser disadvantages on the simple bastards. This situation reflected the attitudes of the society of the day. The status of the illegitimate children in Sri Lanka is centered basically on the RDL principles that the mother does not create an illegitimate child. Such a status was created by the father alone therefore the construction of the law began with the idea that there was no relationship between the father & a child born out of wed-lock.

In the case of a legitimate child the father has the predominant right in terms of guardianship & custody, where as in the case of an illegitimate child such rights are vested in the mother. Natural guardianship comes into existence without a court order, by virtue of the relationship between the parent & child. In the case of illegitimate children it is the mother & not the father who becomes the natural guardian. In such situations the courts even though they are reluctant to exercise it have inherent power to interfere & grant guardianship to a person other than the natural guardian in the best interests of the child.

The English law in comparison places a lesser emphasis on parental rights. Therefore the concept of natural guardianship does not play an important role where as the best interest of the child is considered to be the utmost concern.

The right of supporting illegitimate children in Shri Lanka is not affected by the rights of birth. The decision in A Vs M holds that the duty owed to the illegitimate child is different from that of the duty owed to the legitimate child. On this basis the illegitimate child was entitled only to a basic maintenance. The reason for such a decision was that it was the policy of the law to discourage such visions. This decision

was reviewed and rejected in a later case which held that the obligation of support was distributable between the parents according to their means and this basis is applicable to illegitimate children as well. In Shri Lanka sec 2 of the Maintenance Ordinance lays down the principle that the father is bound to support his children, legitimate and illegitimate. Similarly S 27 of the Married Woman's Property Ordinance of 1923 enacts that a married woman is bound to support her legitimate children as well as her illegitimate children. This statute is lax with regard to the support of children born to an unmarried mother.

Where rights of succession are concerned, where a parent dies without a will the common law recognizes that the illegitimate child is only entitled to inherit from the mother, where as the legitimate child would succeed to both mother and father. This premise of the RDL finds statutary expression in Shri Lanka, in S33 of the Matrimonial Rights & Inheritance Ordinance No. 15 of 1876.

Where testate rights are concerned, under the RDL an illegitimate child is excluded from inheriting from the father and mother. In Shri Lanka 32 of the Will Ordinance No. 21 of 1844 confers complete freedom of testation. The question of which category of illegitimate children were entitled to testate rights was dealt with in the case of Jayahamy v Abeysooriya. The RDL principle is that adulterine and incestuous bastards cannot inherit. It was held in this case that the disabilities of the RDL were only meaningful in a country where adultery and incest are considered crimes. In Shri Lanka adultery is only a ground for divorce and since the policy of punishing adultery does not prevail in Shri Lanka it should not be considered a bar to inheriting in accordance to a will.

However there is no authority on the matter of incestuous bastards. Since incest unlike adultery is a crime, it is possible to take the view that prohibitions may exist in the case of testate succession by incestuous bastards. Yet the freedom afforded by the Wills Ordinance makes it possible to take the view that the statute covers the rights of children who are the issues of an incestuous relationship. Since rights are afforded in the best interests of the child distinguishing between incestuous bastards and other illegitimate children would only amount to an unreasonable act.

The question relating to the right of access to the father has been the issue in many cases, where it has been held that the father can claim access like any other 3rd party since he has no right of custody to the illegitimate child. This claim will be granted only if such access would be in the best interest of the child. The father only has a duty to maintain the illegitimate child. The common law does not recognize any other form of right or duty between the father and the illegitimate child.

Under the English law situation regarding illegitimate children is entirely different from that of Shri Lanka since the rights and duties of illegitimate children are found entirely in the statute law. A special and commendable feature in English law that is not found in Shri Lanka is that when there is a breach of an obligation, the State assumes the obligation of support and recovers it from the parent. This method is advantageous in that the child is supported even if the father defaults in providing maintenance. Another advantageous position in the English law is with regard to intestate succession where unlike in Shri Lanka an illegitimate child can claim rights to a share of the fathers assets.

Therefore comparing and contrasting the situation of illegitimate children in Shri Lanka with those in the United Kingdom one ean say that it would be more advantageous to the child in concern if more statutary provisions could be made with regard to the support of child. A child born out of wed-lock not only bears the social stigma of being a bastard but also goes without the bare necessities when the father defaults in the payment of mainterance a common occurrence in Shri Lanka. Therefore it is a grave necessity that some sort of statutary safe-guard is made to protect these children. Another very desolute fact is that the Shri Lankan law is very conservative on the issue of rights and duties of the father, in that, it refuses to recognize the fact that a relationship does exist between the father and the child. It also refuses to acknowledge such a relationship in situations where the father wants to participate in the upbringing of the child.

Therefore it will be beneficial if rights and duties of illegitimate children can be enshrined in statute law for on the basis of the child's best interests alone. An illegitimate child unless it is adopted or its parents decide to tie the nuptial knot will always carry the social stigma of illegitimacy thrust on it by society. The least that could be done to such children is to see that they are given the required support and the right to live a normal life.

LAUGHTER

It was once remarked to Lord Chesterfield that man is the only creature endowed with the power of laughter.

"True" said the peer "and you may add, perhaps, that he is the only creature that deserves to be laughed at"

WITH BEST COMPLIMENTS

FROM

●

M. Muthuweera

Tele:- 438271

WITH BEST COMPLIMENTS
FROM

ALLIED TRADES INTERNATIONAL

A place none to match in the field of Steam & Boiler. Fittings Valves and Water Works Materials etc.
General Hardware Merchants and also Agents & Stockists.
301, Old Moor Street, Colombo 12. Shri Lanka.
HAFIZ I. AHAMED
Marketing Manager.
Tel: 446439, 435180, 25719 Resi: 541036
Fax: 94-1-435180 or 94-1-540950
Tel: 21583 or 22561 TELE CO CE
Attn. ALLIED Trades

WITH OUR GOOD WISHES

for your requirement of:-

CHILDRENS ENGINEERING — LAW — MEDICAL — COMPUTER — ACCOUNTANCY-EDUCATIONAL BOOKS. FASHION MAGAZINES ETC., VISIT

BOOK CENTRE

371, DAM STREET,
(Adjoing Courts Post Office)
COLOMBO 12.

(Props: ALL CEYLON DISTRIBUTERS INVESTMENTS LTD.)

BRANCHES
100 - upper Ground Floor
Peoples park,
Colombo - 11.
81 - Armour Street,
Colombo - 13.

Phone: 434529, 541099
Telex: 22703 ACDILLE
FAX: (941) 541099
Cable: KENNADIES

The true function of lawyer is to unite parties driven asunder.
— **M. Gandhi** — Life and Works

எமது நிறைவணி '92

ஆரம்பநிலை ஆண்டு

திரு. எம். எஸ். அஹமட் ரிஃபாய்
செல்வன் எம். எச். எம். ஹாரிஸ்
செல்வன் பெ. இராஜதுரை
திரு. எம். ஐ. எம். ரவூ(f)ப்
திரு. டீ. இரவீந்திரன்
செல்வி இ. இராஜகோபாலன்
செல்வன் வீ. கிருஷ்ணமூர்த்தி
செல்வி இ. இலட்சுமணன்
செல்வன் சு. ச. ஜெயராம்
திரு எச். எம். ஜமால்டீன்
செல்வி மோ. வண்ணியசிங்கம்
செல்வன் எஸ். சிவகுமார்
செல்வன் கு. சாந்தகுமார்
செல்வன் சி. மயூரன்
திரு. எஸ். எச். எம். மனாருடீன்
திரு. எம். ஐ. எம். முபாரக்
செல்வி ம. மன்சூர்
செல்வி பா. தாஹா
செல்வி வா. நடராஜா
செல்வன் எம். வி. எம். நஸீர்
செல்வி ரா. ராஜு
செல்வன் செ. அருள்குமார்
செல்வன் எஸ். ரவிக்குமார்
செல்வன் அ. உதயகுமார்
செல்வன் மு. சிறாஜ்
செல்வன் சி. சலாஹுடீன்
செல்வன் ரா. தில்லைராஜன்
செல்வன் மு. சலீம்
செல்வன் ப. புவனேந்திரன்
செல்வன் எம். மாலீக்

இடைநிலை ஆண்டு

செல்வன் வி. தேவதாஸ்
செல்வி ச. குணநாதன்
செல்வன் எம். வை. எம். இர்சாடீன்
திரு. கே. ஜீ. ஜோண்
செல்வி ப. கதிர்காமத்தம்பி
திரு. எம். எச். எம். (Z)செகி
திரு எம். லாஃபீர்
திரு. எம்.ஷஹீட்
செல்வன் ஏ. டபிள்யூ. எம். ஃபஸ்லின்
செல்வன் வி. எம். எஸ். ஜோன்சன்
செல்வன் எம். காமில்ஹசன்
செல்வன் பெ. ரவீந்திரன்

இறுதிநிலை ஆண்டு

செல்வன் எம். வை. எம். சதூர்டீன்
செல்வன் எம். ரம்சீன்
செல்வன் கி. துரைராசசிங்கம்
திரு. சி. ஹலால்டீன்
செல்வன் ப. சிறீதரன்
செல்வன் அ. மௌஜூத்
செல்வி வி. சண்முகராஜா
செல்வி ச. சிவதாஸன்
செல்வி ரு. தாஹிர்
செல்வி ம. சோமசுந்தரம்
செல்வி சு. பாலசுப்பிரமணியம்
செல்வன் எஸ். எம். எம். நிலாம்
செல்வன் வீ. தியாகேஸ்வரன்
திரு. எஸ். சற்குணராஜா

பயிலுனர் ஆண்டு

செல்வி லி. காசிப்பிள்ளை
செல்வன் இ. மு. இஸ்ஹர்
செல்வன் டி. கேசவன் முதலி
செல்வன் மு. ரவூஃப்
திரு. வி. தட்சணாமூர்த்தி
செல்வி ல. மாணிக்கவாசகர்
திரு. மு. பாறூக்

எதிர்காலம்

துள்ளித் திரியும் பருவம் இது
துன்பமில்லை துயரமில்லை
வாழ்க்கையிது வசந்தமென
தொடர்ந்து வந்தால் இன்பம்தான்.

அள்ளித் தெளித்த கனவுகள்
நெஞ்சில் பதிந்த உறுதிகள்
பொங்கி வரும் வெள்ளமது
அடித்துச் சென்றால் துன்பந்தான்.

சட்டங்களும், திட்டங்களும் கற்றுவந்து
பாரினில் யுகமொன்று படைக்கவந்தோம்
நடைமுறை உலகில் ஏற்படும் சவால்களை
முறியடித் திடவே திடம் கொள்வோம்.

வாழ்க்கையின் போக்கு எப்படி அமையினும்
வாழ்வது எமது கடனன்றோ
தாழ்ச்சியும் உயர்ச்சியும், ஏற்படும் திருப்பம்
தடையற்ற பயணம் தொடர்கின்றோம்.

மின்மினி, விண்மீன், விளக்குடன், நிலவும்
எம் பயணத்தில் இடங்கொள்ளும்
பின்னிரவதனைப் பிளம்பெனக் கதிர்கள்
பிளந்திடும், ஜொலிக்கும் எதிர்காலம்.

— றுமைஷா தாஹிர்
இறுதி நிலை ஆண்டு

மனித உரிமைகளை அங்கீகரிக்கும் நாடுகளிலேயே 'சட்ட ஆட்சி' நிலவுகிறது

Rule of Law is a very intricate Political Concept It thrives bestin countries which reconize Human Rights. An indepth analysis on this topic is presented Here.

ஒருநாடு அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை கொண்டு இயங்குவதினாலோ அந்நாட்டுப் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களை கொண்டு பரிபாலிக்கப்படுவதாலோ அந்நாட்டில் சட்ட ஆட்சி நிலவுகிறது என்று கூறமுடியாது. எந்தவொரு நாடு மனித உரிமைகளை மதித்து சட்டங்களை இயற்றி ஆட்சி புரிகிறதோ அந்த நாட்டையே சட்ட ஆட்சி நடைபெறும் நாடு எனக் கூறலாம். இதனாலேயே தென்னாபிரிக்காவும், ஏனைய இராணுவ ஆட்சி நடைபெறும் நாடுகளும் சட்ட ஆட்சிக்கு அச்சுறுத்தலான நாடுகள் என அழைக்கப்படுகின்றன. எனவே 'சட்ட ஆட்சி' என்பது சட்டத்தின் ஆதிக்கம் என்பதைவிட மிகப் பரந்த பொருளைக் கொண்டது எனலாம்.

சட்ட ஆட்சியின் தொடக்கம்

சட்ட ஆட்சியின் கீழ் சகலருக்கும் சமமான நீதியொன்று இருக்கும். எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டிய ஒரு விதியை யாராவது மீறினால் சட்டம் அவர்களைத் தண்டிக்கும். உண்மையில் இந்தக் கோட்பாட்டை மனிதகுலத்தின் தோற்றகாலத்திலிருந்தே சமுதாயம் கடைப்பிடித்து வருகிறது எனலாம். விவிலியத்தில் தீண்டத்தகாத கனியை ஏவாள் தீண்டியதையும் அதற்கு அவள் தண்டனை பெற்றதையும் இங்கு நினைவு கூரும்போது மேற்கூறிய உண்மை வெளிப்படுகிறது. இக் கோட்பாடு காலவரையில் வளர்ச்சி பெற்றுக் காலத்திற்குக் காலம் வெவ்வேறு விதமாகப் பொருள் கோடலுக்கு உள்ளாகியது.

''டைசி'' என்பவரின் பொருள் கோடலே சட்ட ஆட்சிக்குச் சிறந்த

கே. ஜீ. ஜோண்
(இடைநிலை ஆண்டு)

பொருள் கோடலாகக் கொள்ளப்பட்டு வந்தது. அவரது கருத்துப்படி 'சட்ட ஆட்சி' என்பது பின்வரும் அம்சங்களைக் கொண்டு விளங்கவேண்டும்.

அ) சட்டத்தை மீறினாலொழிய நாட்டின் எந்தக் குடிமகனும் எவ்வகையிலும் தண்டிக்கப்படக் கூடாது; அத்தகைய தண்டனையும் முறைசார் நீதிமன்றங்களிலேயே வழங்கப்படல் வேண்டும்.

ஆ) எவரும் சட்டத்திற்கு மேற்பட்டவராக இருக்க முடியாது; சட்டத்திற்கு முன்னர் சகலரும் சமன்.

டைசியின் இந்த விளக்கம் அவர் வாழ்ந்த காலத்துச் சூழ்நிலைக்கும் ஆங்கிலேய நாட்டின் அரசியல் பாரம்பரியத்திற்கு இயைந்ததாக விருந்தது. காலப் போக்கில் டைசியின் விளக்கத்திற்கு விமர்சனங்கள் எழத்தொடங்கின. அவற்றை சுருக்கமாக கூறுவது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாகிறது.

டைசியின் வாக்கும் இன்றைய போக்கும்!

'சட்டத்தை மீறினாலொழிய நாட்டின் எந்தக் குடிமகனும் தண்டிக்கப்படமாட்டான். அந்தத் தண்டனையைக்கூட முறைசார் நீதிமன்றங்களே வழங்கவேண்டும்' என்ற கருத்துக்கு எதிராக பல சம்பவங்களை இன்று நாம் காணலாம். டைசியின் கருத்துப்படி பாராளுமன்றம் ஆக்குகின்ற சட்டமே சட்டமாகும். ஆனால் இன்றைய உலகில் பாராளுமன்றம் மட்டுமல்ல தன்மதி அதிகாரம் கொண்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள், அரச அதிகாரிகள் என்போர் பல்வேறு விதிகளை ஆக்குகின்றனர். அவை சட்ட வலுக்கொண்டவையாகக் கருதப்படுகின்றன. அவற்றை மீறும்போது அச்சபைகளே மக்களைத் தண்டிக்கின்றன. உதாரணமாக வீட மைப்பு அதிகாரசபை, ஒரு வீடு எப்படி அமையவேண்டும் என்றும், எங்கே அமைய வேண்டுமென்றும் விதிகளை ஆக்கியிருக்கிறது. இதற்கு முரணான முறையில் கட்டப்படும் வீடுகளை இடிக்கும் உரிமை இச்சபைக்குண்டு. வாடகைச் சபையின் தீர்மானத்திற்கு வாடகையாளரும் உரிமையாளரும் சட்டுப்படல் வேண்டும். உல்லாசப் பயணிகள் சபைச் சட்டத்திற் கமையவே கடற்கரையோரங்களில் மக்கள் நடமாடவேண்டும். இராணுவத்தினர் இராணுவ சபையின் தீர்மானத்திற்குக் கட்டுப்படல் வேண்டும். மீறுபவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

இன்றும் சில நாடுகளில் அதிகாரிகளின் தன்மதி அகாரத்தைக் கேள்விக்குட்பட்படுத்த நீதிமன்றங்களால் முடியாது. உதாரணமாக எமது நாட்டில் பாதுகாப்புச் செயலாளர் விடுக்கும் தடுப்புக்காவல் உத்தரவை ஒரு குறித்த காலத்திற்கு நீதிமன்றத்தில் கேள்விக் குட்படுத்த முடியான இங்கு காட்டலாம். இயற்கை நீதிக் குப்புறம்பாக கூட சில அதிகாரிகளுக்கு தன்மதி அதிகாரங்கள் அவசரகால நிலையில் வழங்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது டைசியின் முதலாவது அம்சம் தற்கால உலகில் பெருமளவில் பொருந்துவதாயில்லை என்பதைக் கண்டுகொள்ளலாம்.

டைசியின் இரண்டாது அம்சமும் கூட விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது ''சட்டத்தின் முன் சகலரும் சமன்'' என்பது 'சமமானவர்களிடையே சமன்' என்று தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும், சில சந்தர்ப்பங்களில் சட்டத்திற்கு மேற்பட்ட அந்தஸ்தும் சிலருக்கு வழங்கப்படுகின்றன. உதாரணமாக ''அரசன் பிழைசெய்வதில்லை'' என்றதொரு கோட்பாடு உண்டு. இந்த கோட்பாட்டிற்கு ஒத்துப்போவதானால் அரசன் செய்யும் எத்தச் செயலும் சரியானதாகவே கொள்ளப்படல் வேண்டும். அவனைத் தண்டிக்கக்கூடாது. இதனையே இலங்கையரசியலமைப்பின் 35-ம் பிரிவில் காண்கிறோம்.

''எவரேனும் ஆள் சனாதிபதி என்ற பதவியை வகிக்கின்றபோது அவரது பதவி முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் அவருக்கெதிராக வழக்கு நடக்கை தொடுக்கப்படுதல் அல்லது, தொடர்ந்து நடத்தப்படுதல் ஆகாது''

இந்த விதி சட்டத்தை விட சனாதிபதி உயர்ந்தவர் என்ற ஒரு விளக்கத்தையும் கொடுக்கிறது.

ஒருவனின் நற்பெயருக்கு, புகழுக்கு கேடுவிளைவிக்கும் கூற்றுக்களைத் தீய மனத்துடன் கூறுகின்றவனுக்கு சட்டப்படி

தண்டனை உண்டு. ஆனால், பாராளு மன்ற அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் தியநோக்குடன் யாரை வேண்டுமானாலும் இகழலாம் அல்லது, நிந்திக்கலாம். நீதிமன் றத்தில் ஒன்றுமே செய்யமுடியாது.

இந்த விடுபாட்டுரிமையானது. சாதா ரண நீதிக்கு அவர்கள் கட்டுப்பட்டவர் களல்லர் என்ற கருத்தை எமக்குத் தரு கிறது.

ஒரு நாட்டில் இருக்கும் நூதுவர்கள் அந்நாட்டின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப் பட்டவர்களல்லர். உதாரணமாக முன்னர் பர்மாவின் இலங்கைத் தூதுவராக இருந்த பூன்வார்ட் அவர்கள் தனது மனைவியை சுட்டுக் கொன்ற போதும் அவரை கைது செய்யவோ எமது நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து தண்டனை வழங்கவோ முடியாதிருத்தை இங்கு காட்டலாம்.

முரண்பாடுகளுக்கான சமாதானம்

டைசியின் கோட்பாடுகள் விமர்சனத் துக்குள்ளாகியபோதும் எந்தவொரு சட்ட வியலாளரும் அவரது கோட்பாட்டை முற் றாக நிராகரிக்கவில்லை. அதற்குப் பதி லாக பின்வரும் அம்சங்களைக் கொண்ட ஒரு விளக்கத்தை டைசியின் விளக்கத் திற்கு அமைந்ததாக கொண்டால் அவரது விளக்கம் சிறந்தது. என்றனர்.

1. தற்கால அரசுகள் தன்மதி அதிகா ரத்தை இயன்றளவு கட்டுப்படுத்த வேண்டும்.

2. பேரளிப்புச் சட்டங்களைப்பற்றி மக் களுக்குத்தெரியப்படுத்துவடன்அதனை இயன்றளவு கட்டுப் படுத்த வேண் டும்.

3. தனிமனித உரிமைகள் சுதந்திரமான பாதுகாப்பான நீதிமன்றங்களால் மட் டுமே கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

4. சாதாரண சட்டத்தின் மூலம் அடிப் படை உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

சட்ட வியளாளர்களின் மேற்கூறிய கருத்துக்களை ஒரு அரசு ஏற்று நடப் பது சிரமம். தற்கால உலகில் பேரளிப் புச் சட்டங்களும், தன்மதி அதிகாரமும், நியாயசபைகளும் அவசியமாகின்றன. அர சின் கடமைகள் பரந்து பட்டதாக விடுப் பதால் இவை தேவைப்படுகின்றன. எனவே, டைசியின் கருத்துக்கும் அரசின் தேவைப் பாடுகளுக்குமிடையே ஒரு சமநிலையை எவ்வாறு உண்டாக்கலாம்? என்ற பிரச் சினை சட்ட வியளார்களிடையேயும் அர சியல் அறிஞர்களிடையேயும் பலமாக எழத் தொடங்கியது. அதன்பிரதிபலிப் பாக 1959ம் ஆண்டு டெல்லியில் சர்வ தேச சட்டவல்லுனர் ஆணைக்குழு மகா நாடு ஒன்று நடத்தபட்டது.

டெல்லி மகாநாட்டுத் தீர்மானம்

டெல்வியில் நடந்த மகாநாட்டுத்தீர்மானம் மகாநாட்டில் சட்ட ஆட்சிக் கோட்பாடு சக்தி வமய்ந்ததாகவும் சுதந்திர சமூகத் தில் உள்ள மனிதனின் அரசியல், குடியுரி மைகளை பாதுகாப்பதோடு அதனை விருத்தி செய்வதற்கும் உதவவேண்டு மெனவும் ஒரு பிரகடனம் வெளிபிடப் பட்டது. சட்ட ஆட்சிக் கோட்பாடு பாது காக்கப்பட வேண்டுமெனில் பின்வரும் செயல்முறையிலான பாதுகாப்புக்கள் அளிக்கப்படவேண்டுமென மகாநாடு தீர் மானித்தது;

(அ) பாராளுமன்றங்கள் இன, மத ரீதி யான சட்டங்களை இயற்றக் கூடாது.

(ஆ) பாராளுமன்றங்கள் அடிப்படை உரிமைகளை மதித்தே சட்டங்களை இயற்றவேண்டும்.

(இ) நிறைவேற்றுத் துறையின் அதிகாரங்கள் கட்டுப்பட்டவையாக வேண்டும். தன்னிச்சைப்படி கைது செய்தல், தடுப்புக்காவலில் வைத்தல் என்பன நீக்கப்படல் வேண்டும்.

(ஈ) ஊகம், பேன்முறையீட்டிற்கான உரிமை, அடிப்படை உரிமைகளுக்கான உத்தரவாதம் என்பன இருக்க வேண்டும்.

(உ) நீதித்துறையில் சுதந்திரம் நிலவ வேண்டும். நீதிபதிகளின் நியமனம், இடமாற்றம், விலக்கல் என்பன சுதந்திரமான குழுவால் செய்யப்படல் வேண்டும். நீதிபதிகளின் உரிமைக்கு அரசியலமைப்பில் உத்தரவாதம் செய்யப்படல் வேண்டும்.

பல நாடுகள் இச்சிபார்சுகளை ஏற்றுதமது நாட்டில் சட்ட ஆட்சிக்கோட்பாட்டை அங்கீகரித்துள்ளன. எமது நாடும் அதனை அங்கீகரித்துள்ளது.

எனவே ''சட்டஆட்சி'' என்பதற்கு கொடுக்கப்படும் விளக்கம் மனித சமுதாயத்துடன் இயைந்ததாக இருப்பதுடன் டைசியினால் விரிவு படுத்தப்பட்டது என்றும் கூறுவதுடன் அக்கோட்பாடு காலத்திற்கேற்றவாறு மாறுதலடைந்து இன்று மனித உரிமைகளை மதிக்கும் சட்டங்களுக்கும் நாடுகளுக்குமே பொருந்துவதாக விளங்குகிறது என்றும் கூறலாம்.

பசி வந்திட...

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி தாளாண்மை – தேனின் கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் பசி வந்திடப் பறந்தது போம்.

வல்லவனுக்கு வல்லவன்

அயல்வீட்டுக்காரர் : ஐயா, ஒரு வீட்டு நாய் பக்கத்து வீட்டுக் கோழியைப் பிடித்தால் என்ன செய்யலாம்.

வழக்கறிஞர் : பக்கத்து வீட்டாரிடம்நட்ட ஈடு பெறலாம்.

அயல்வீட்டுக்காரர் : எவ்வளவு?

வழக்கறிஞர் : கோழியின் பெறுமதியைப் பொறுத்து.

அயல்வீட்டுக்காரர் : ஐயா நாநூறு ரூபா தருகின்றீர்களா? உங்கள் நாய்தான் எனது நான்கு கோழிகளைக் கொன்று விட்டது.

வழக்கறிஞர் : அப்படியா, ஆலோசனை சொன்னதற்கான பணத்தைக் கழித்து, மிகுதி முந்நூறு ரூபாவையும் தந்துவிட்டுப்போம்.

வாழையடி வாழையென . . .

1950இல் நடப்பட்ட 'இலங்கைச் சட்டக் கல்லூரித் தமிழ் மன்றம்' வாழையடி வாழையெனத் தொடர்ந்து, 1990இல் 'சட்ட மாணவர் தமிழ் மன்றம்' எனப் பரிணமித்து 1992ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது.

இதன் முன்னணி உறுப்பினர்களது முழுமையான பட்டியல் எமக்குக் கிடைக்கவில்லை. 1975இல் இருந்து இன்றுவரையிலான பட்டியலைக் கீழே வரிசைப்படுத்துகின்றோம்.

தமிழ் மன்றத்தை வழி நடத்தியோர்

	தலைவர்	செயலாளர்
1975	கே. இராஜகுலேந்திரா	எஸ், சுரேந்திரன்
1976	த. ஸ்ரீபதி	இரா. வசந்தசேனன்
1977	அ. இராஜகாரியர்	ஏ. ஸ்ரீகரன்
1978	ஆர். சி. கருணாகரன்	எஸ். எவ். எம். ஹாலித்
1979	கே. வி. தவராஜா	கே. எஸ். பாலகிருஷ்ணன்
1980	ஆர். செல்வஸ்கந்தன்	சண்முகராஜா
1981	—	—
1982	ஏ. ஆர். எச். ஹக்கீம்	எஸ். குமாரநாதன்
1983	ஏ. ரீ. பாலசுப்பிரமணியம்	ஆர். ராஜேஸ்வரன்
1984	எஸ். அசோகன்	எஸ். தனஞ்செயன்
1985	ஈ. எஸ். ஹரிச்சந்திரா	எஸ். முத்துலிங்கம்
1986	எஸ். அப்பாசி	ந. இரவிராஜ்
1987	மா. நல்லரத்தினம்	திலீப்நவாஸ்
1988	சிக்கான் கனகசூரியம்	பாலேந்திரன் சசிமகேந்திரன்
1989	ஆ. ஜெகசோதி	எம். சி. அப்துல் அஸீஸ்
1990	வி. புவிதரன்	ந. இரத்தினசிவா
1991	எஸ். எம். எம். நிலாம்	கா. லிங்கேஸ்வரி
1992	வி. எம். எஸ். ஜோன்சன்	உ. அப்துல் மௌஜூத்

வாழையடி வாழையென வந்ததமிழ் மன்றம்
வாழியவே, வாழியவே, வாழியவே என்றும்!

விவாத அணி

	தலைவர்	உப தலைவர்
1968	சி. ஆர். ஜெகதீசன்	செல்வி சாந்தினி லோகிதராஜா
1969	ஆ. தம்பாப்பிள்ளை	க. நீலகண்டன்
1970	எம். எச். எம். அஷ்ரப்	ந. ஸ்ரீகாந்தா
1971	க. வே. மகாதேவன்	கனக மனோகரன்
1972	ந. ஸ்ரீகாந்தா	சு. வினோதன்
1973	ந. ஸ்ரீகாந்தா	பூ. ஞானகரன்
1975	சு. க. மகேந்திரன்	கனக மனோகரன்
1976	கு. இராஜகுலேந்திரன்	கனக மனோகரன்
1977	த. ஸ்ரீபதி	மனோ ஸ்ரீதரன்
1978	சீ. எஸ். சோமசுந்தரம்	செல்வி கௌரி சங்கரி
1979	வி. ருத்திரகுமாரன்	எஸ். செல்வஸ்கந்தன்
1982	ஆர். செல்வஸ்கந்தன்	வி. விமலேஸ்வரன்
1983	என். நவநீதன்	எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா
1984	எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா	என். நவநீதன்
1985	சி. நிஜமுடீன்	எஸ். அப்பாசி
1986	ஐ. நிஸாம் றஸ்ஸாக்	திலீப் நவாஸ்
1987	மொஹமட் லபார்	என். எம். பிஸ்ருல் அமீன்
1988	என். எம். பிஸ்ருல் அமீன்	மொஹமட் லபார்
1989	ம. அ. சுமந்திரன்	எஸ். எம். எம். நிலாம்
1990	ம. அ. சுமந்திரன்	செல்வி லிங்கேஸ்வரி காசிப்பிள்ளை
1991	கி. துரைராசசிங்கம்	எம். எச். எம். சிறாஜ்
1992	கி. துரைராசசிங்கம்	செல்வி மரீனா மன்சூர்

உடனாயத்தப் பேச்சுப் போட்டி

	முதலாம் இடம்	இரண்டாம் இடம்
1968	மு. திருநாவுக்கரசு	ஜௌபர்
1969	க. சி. கமலசபேசன்	வி. சச்சிதானந்தன்
1970	ந. ஸ்ரீகாந்தா	பெரி. சுந்தரலிங்கம்
1971	ந. ஸ்ரீகாந்தா	ஏ. எஸ். மகேந்திரா
1972	செ. அம்பிகைபாலன்	செ. க. மனோகரன்
1973	செ. க. மனோகரன்	எம். எச். எம். அஷ்ரப்
1975	சு. க. மனோகரன்	கனக மனோகரன்
1076	கனக மனோகரன்	எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா
1977	த. விக்னராஜா	த. ஸ்ரீபதி
1978	வி. ருத்திரகுமாரன்	க. ஸ்ரீஸ்கந்தராஜா
1979	வி. ருத்திரகுமாரன்	செல்வி கௌரி சங்கரி
1981	ஏ. ஆர். எச். ஹக்கீம்	செல்வி பத்மா நாகேந்திரம்
1982	என். எம். மஃரூப்	ஆர். செல்வஸ்கந்தன்
1985	சி. நிஜாமுடீன்	திலீப் நவாஸ்
1986	திலீப் நவாஸ்	ஜூட் உதயகுமார்
1987	நிஸாம் றஸ்ஸாக்	எம். லபார்
1988	எஸ். துரைராஜா	எம். லபார்
1989	S, M. M. நிலாம்	வி. புவிதரன்
1990	ரஷீத் M. இம்தியாஸ்	ம. அ. சுமந்திரன்
1991	ம. அ. சுமந்திரன்	M.H.M. சிராஜ்
1992	A. L. M. லாஃபீர்	K. துரைராசசிங்கம்

அறங்கூறும் அவையத்தோர்க்கு உரைத்தற் போட்டி

முதலாம் இடம்	இரண்டாவது இடம்
1968 எஸ். சுந்தரலிங்கம்	தே. சுவாமிநாதன்
1969 தே. சுவாமிநாதன்	செ. அம்பிகைபாலன்
1970 ஆர். தம்பாப்பிள்ளை	க. சி. கமலசபேசன்
1971 சி. ஆ. ஜெகதீசன்	செல்வி இ. இராஜநாயகம்
1972 பூ. ஞானாகரன்	செல்வி வ. செல்லையா
1973 செல்வி ச. லோகிதராஜா	எம். எச். எம். அஷ்ரப்
1976 ஏ ஸ்ரீதரன்	செல்வி எஸ். லோகிதராஜா
1978 ஐ. ஞானதாசன்	வி. ருத்திரகுமாரன்
1979 ஐ. ஞானதாசன்	வி. ருத்திரகுமாரன்
1985 செல்வி எஸ். பாலகிருஷ்ணன்	—
1986 திலீப் நவாஸ்	எஸ். துரைராஜா
1987 ஆ. ஜெகசோதி	ஐ. நிஸாம் றஸ்ஸாக்
1988 செல்வி சுரம்யா பாலச்சந்திரன்	ஐ. நிஸாம் றஸ்ஸாக்
1989 மொஹமட் லபார்	M. M. N. B. அமீன்
1990 M. M. N. B. அமீன்	எம். இளஞ்செழியன்
1991 S. M. M. நிலாம்	K. துரைராசசிங்கம்
1992 செல்வி R. இந்திரலோஜினி	U. அப்துல் மௌஜூத்

"மன்றம் 90'' விருது

1991 செல்வி கா. லிங்கேஸ்வரி

1992 துரைராசசிங்கம் & யூ. அப்துல் மௌஜூத்

அமிர்தலிங்கம் ஞாபகார்த்த புலமைப் பரிசு

1990 செல்வி கா. லிங்கேஸ்வரி

1991 யூ. அப்துல் மௌஜூத்

திருச்செல்வம் ஞாபகார்த்த புலமைப் பரிசு

1990 யூ. அப்துல் மௌஜூத்

1991 செல்வி சர்மிலா குணநாதன்

செல்வநாயகம் ஞாபகார்த்த புலமைப் பரிசு

1990 கா. பேரின்பராஜா

1991 கா. லிங்கேஸ்வரி

எமக்கு கடந்த பல வருடங்களாக அறங்கூறும் அவையத்தோருக்கு உரைத்தற் போட்டி, உடனாயத்தப் பேச்சுப் போட்டி என்பவற்றிற்குத் தங்கப் பதக்கங்களைத் தந்துதவும் சட்டத்தரணி டீ. எம். சுவாமிநாதன் அவர்கட்கு எமது உளமார்ந்த நன்றி களைச் சமர்ப்பிக்கின்றோம்.

THE ANNUAL REPORT OF THE THAMIL MANTRAM 1992

I take a great pleasure in forwarding the Annual Report of the Mantram for the year 1992 as being its General Secretary.

Thamil Mantram deserves to be congratulated for its existance for the last 42 years and the opportunity it has provided to the students of Law College who comes from all walks of life specially those in Thamil Medium.

Thamil Mantram commenced its activities with the Inaugural Meeting held on 21. 02. 92 under the distinguished presence of Justice K. Palakidnar, President of the Court of Appeal, as the Chief Guest. In the above meeting we observed 2 minutes silence to mark respect for our lecturer late Mr. R. Pallewala.

As a measure to evalute the inherent talents of the fresher students, the Mantram organized a friendly debate among the freshers on the topic being "Having sexual intercourse is the main purpose of marriage."

The Annual trip of the Mantram was organized on 23. 02. 92 to a hotel at Hikkaduwa. We thank all the 73 students who joined with us in this trip.

On 9. 03. 92 another debate in the series was organized between Senior and Fresher students on the topic being "Making love at public places should be prohibited."

The contest for the selection of the Thamil Debating Team for this year was held on 24. 03. 92. The judges who officiated this contest were Hon. M. H. M. Ashraff M.P., Mr. D M. Swaminathan and Mr. Surendran, Attorneys-at-law. We congratulate Mr. K. Thurairasasingam (Captain), Miss. M. Marina, (Vice Captain) Miss. L. Inthumathi, Mr.S. Mayooran, Miss G. Sharmila for their being selected for the Debating Team. Mr. K. Thurairasasingam was adjudged as the winner of the "Amirthalingam Challenge Trophy".

The Extempore speech contest for the Swaminathan Memorial Gold Medal was held on 10. 07. 92. I thank Mr. A. W. A. Salam, Addl. District Judge, Mr. K. Krishnapillai, Att-at-law, Mr. S. Sriskandarajah, State Counsel for being the judges for this contest and I congratulate Mr. A L. M. Lafir, Mr. K. Thurairasasingam, Miss. L. Inthumathi who were placed 1st, 2nd and 3rd respectively.

A guest lecture was organized for the benefit of the students on the topic "The present developments and its effects on Fundamental Rights" delivered by Mr. V. Thevasenathipathi, Att-at-law.

The Address to the Jury contest for Sir. Pon Ramanathan Gold Medal was held on 31. 07. 92. We congratulate Miss. R. Indralojini, Mr. U. Abdul Mawjooth, Mr. A. L. M. Lafir who secured 1st, 2nd and 3rd places respectively. We express our sincere thanks to

Mr. N. Srikantha, Mr. G. Jayakumar, Mr. Rauf Hakeem, Attorneys-at-law for being the judge for the above contest.

On 24th June, the Thamil Mantram Mooting Team which comprises Miss. K. Lingeswary, Mr. M. I. M. Ishar, Mr. K. Thurairasasingam, Mr. U. Abdul Mawjooth contested the Inaugural Mooting Competetion organized by the Legal Aid Centre of the University of Colombo and won the above enabling the Law College to secure the Challenge Trophy.

The Thamil Mantram Debating Team participated in a Debating Competetion organized by the Law & Society Trust and won it securing the Challenge Trophy for Law College, Mr. K. Thurairasasingam was adjudged as the best speaker at this competition.

We congratulate the following students who have obtained the best average in the previous October Examinations in Thamil Medium and will be honoured with the respective scholarships this year:

1st year: "Thiruchelvam Memorial Scholarship" to Miss. G. Sharmila.

2nd year: "Chelvanayagam Memorial Scholarship" to Mr. U. Abdul Mawjooth.

3rd year: "Amirthalingam Memorial Scholarship" to Miss. K. Lingeswary.

Further, Mantram intends to award the Amirthalingam Memorial Scholarship for economically deserved students.

Mantram also made efforts to translate the constitution of the Mantram into Thamil. We thank Mr. K. Mahalingasivam Asst. Legal Draftman who extended fullest support for this effort.

This year the "Mantram 90" award for the All Rounding Student will be awarded jointly to Mr. K. Thurairasasigam and Mr. U. Abdul Mawjooth.

The crowning event of all the activities of the Mantram will be the publication of the 29th issue of our Annual Magazine "NEETHI MURASU" and the Art Festival "KALAI VIZHA" which will be held on the 6th of September 1992, at the New Kathiresan Hall.

Finally, I take this opportunity to thank all those who took keen interest and efforts to make the activities of the Mantram a reality. Our special thanks are due to our lecturers Mrs. F. Thalayasingam and Mr. K. Mahalingasivam who gave us timely advice without any hesitation. At last but not least I extend a big thank you for all the Committee Members, of the Mantram.

I hope that the secretaries to come in office in the future will carry out their duties best to their ability and will lead our Mantram in a successful way.

U. ABDUL MAWJOOTH
General Secretary.

FREEDOM

Freedom is an undivisible word – If we want to enjoy it and fight for it, we must be prepared to extend it to everyone, whether they are rich or poor, whether they agree with us or not, no matter what their race or the colour of their skin.

— W. L. Willkie



அமர்ந்துள்ளோர் (இடமிருந்து வலமாக):

பெ. ரவீந்திரன் (செயலாளர்), திரு. ஜி. பி. எஸ். டி. சில்வா (பிரதம நீதியரசர்), செல்வி ச. சிவதாசன் (தலைவர்), திரு. டபிள்யு. லடுவஹெட்டி (அதிபர்), செல்வி கு. பாலசுப்பிரமணியம் (பொருளாளர்).

நிற்போர் (இடமிருந்து வலமாக):

செல்வி வி சண்முகராஜா (உதவிச்செயலாளர்), பெ. ராஜதுரை (உறுப்பினர்), கி. துரைராச சிங்கம் (உப தலைவர்), வி. தேவதாஸ் (கணக்காய்வாளர்), செல்வி ப. கதிர்காமதம்பி (உறுப்பினர்).

சமுகமளிக்காதவர்: செல்வி ம. சோமசுந்தரம் (மலராசிரியர்).

சட்ட மாணவர் இந்து மகாசபை 1992

LAW STUDENTS' HINDU MAHASABHA 1992

தலைவர் :

செல்வி ச. சிவதாசன்

உப தலைவர் :

திரு. இ. துரைராசசிங்கம்

பொதுச்செயலாளர் :

திரு. பெ. ரவீந்திரன்

உதவிச்செயலாளர் :

செல்வி வி. சண்முகராஜா

பொருளாளர் :

செல்வி கு. பாலசுப்பிரமணியம்

கணக்காய்வாளர் :

திரு. வி. தேவதாஸ்

இதழாசிரியர் :

செல்வி ம. சோமசுந்தரம்

செயற்குழு உறுப்பினர் :

செல்வி ப. கதிர்காமத்தம்பி

திரு. பெ. ராஜதுரை

ஆண்டறிக்கை

ஆதியும், அந்தமும் அறியமுடியாத தொன்மையும் தூய்மையும் கொண்ட இந்து சமயத்தின் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் வளர்க்கும் நோக்குடன் சட்ட மாணவர் இந்து மகாசபை தாபிக்கப்பட்டது. இச்சபை சுமார் 30 வருட காலமாக பல இன்னல்களுக்கு மத்தியிலும் தன் கொள்கையை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

1992ம் ஆண்டிற்கான அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் 23-02-1992 அன்று கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் விசேட அதிதியாக எமது முன்னாள் விரிவுரையாளரும், கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதியுமான திரு. C. V. விக்னேஸ்வரன் அவர்கள் வருகை தந்திருந்தார்கள். அவர் ''சட்டமும் சமயமும்'' என்ற தலைப்பில் சிறந்த, கருத்தாழமிக்க சொற்பொழிவு ஒன்றை ஆற்றினார்.

ஆதியும் அந்தமும் அற்றவரே கடவுள் என உலக மக்களுக்கு உணர்த்திய தினமே சிவராத்திரி தினமாகும். ஒவ்வொரு வருடமும் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினப் பகல் பூஜை எமது கல்லூரி இந்து மகா சபையின் அனுசரணையுடன் நடைபெறுவது வழக்கம். இவ்வருடமும் இப்பூஜை வெகு சிறப்பாக நடாத்தி வைக்கப்பட்டது. எமது இப் பூஜையில் பிரதம நீதியரசர் திரு. G. P S. de சில்வா, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் திரு. K. பாலகிட்ணர், இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு. P. P. தேவராஜ், எமது கல்லூரி அதிபர், மற்றும் விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள் ஆகியோருடன் எமது சகமாணவர்களும் இனமத பேதமின்றி கலந்து கொண்டனர்.

12-07-1992 அன்று எமது மாணவர்கள் கண்டி, பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயத்துக்கு புனித யாத்திரையை மேற்கொண்டு அங்கு விசேட பூஜையில் கலந்து கொண்டனர். அத்துடன் கல்லூரியிலுள்ள எமது சபையின் அறிவித்தல் பலகையையும் புதுப்பித்துள்ளோம்.

இவ்வருடம் மூன்றாந் தவணையில் சொற்பொழிவொன்றை ஏற்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளோம் எமது நிதிவசதி இடமளிப்பின் அனாதைகளுக்கு உதவித் தொகை வழங்கவும் எண்ணி உள்ளோம்.

மிகக் குறைந்த உறுப்பினர்களையுடைய இம்மன்றத்தின் செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்ற பல்வேறு வழிகளிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து உறுதுணையாய் நின்ற சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள், சகமாணவர்கள் அனைவருக்கும் நன்றி.

எதிர்வரும் ஆண்டுகளிலும் இவ்வாதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

பெ. இரவீந்திரன்
பொதுச் செயலாளர்

With Best Compliments

from

●

Raji Stationery

No 1. Wholesale Dealers in Stationery

No· 598, Aluthmawatha Road,

Colombo - 15.

With Best Compliments

from

●

Victoria Bakery & Groceries Ltd

148, Justice Akbar Mawatha, Colombo-2.

Telephone: 440695

De menimis non curate lex—
The law does not bother with trifles.

"In the name of Allah, the most Beneficent, the most Merciful"

Law Students' Muslim Majlis

Sri Lanka Law College,
Hulftsdorp,
Colombo 12,
Sri Lanka.
Tel: 23759

1992 - 93

President ;
M. F. M. ANOOZER

Vice Presidents :
S. M. M. NILAM
Miss. S. RUMAIZA THAHIR

General Secretary :
M. R. M. RAMZEEN

Asst. Secretary:
Mrs. SUMMAIYA
MACAN MARKAR

Treasurer :
MOHAMED S. SULTAN

Asst. Treasurer :
M. SHIHAN NAGOOR

Editors :
SAABIR SAWAAD
FAZLIN WAHID
Miss. NAZLI BUHARY

Unofficial Committee Member :
NADVI NAVAVI
ANAS ELIYAS
Miss. FAHIMA THAHA
Miss. AZRA ABOOBUCKER

PROGRESS REPORT - 1992 - 93

The present executive committee of the Law Students' Muslim Majlis was elected to office in the month of March 1992 and it set up on doing its work according to a well planned programme At the time of publication most of our activities would be outstanding.

The Majlis commenced its activities in the first term itself with supplying food for the Muslim students residing in the hostel during the month of "Ramzan".

The Inaugural meeting of the Muslim Majlis for the year 1992-1993 was held on the 9th June 1992, at the Law College Main Hall. The Chief Guest for the occasion was Honourable K. M. M. B. Kulathunga Judge of the Supreme Court.

The Impromptu speech contest for the Justice Akbar memorial Trophy was successfully held in the month of July.

A Law entrance seminar is scheduled to be held on the 5th and 6th of September 1992.

A Law moot which is a long cherished tradition of the Law College will be held at the beginning of next year.

Creative writing competitions, on topics of Muslim Law to enhance the knowledge of the rich body of Islamic Jurisprudence will be held at the end of this year.

The Sir Razik Fareed Foundation and another private trust have pledged to donate two scholarships each on a regular basis for those needy Muslim Students.

We have also decided to collect basic necessities such as clothes and dry rations for distribution among the refugees.

There will be public lectures organised by the Majlis which are of general importance.

The crowing event of the Majlis will be the publication of the "Meezan" magazine at the end of our period.

We are very thankful to the Principal, the Law Students Union and all others for co-orperating with us in our activities.

M. R. Mohamed Ramzeen
General Secretary.

With Best Compliments

from

Showroome : 323, Galle Road, Bambalapitiya.

105, Kotugodella Vidiya, Kandy.

Actio personalis moritur cum persona - A personal right of an action dies with the person.

WITH THE BEST COMPLIMENTS
FROM

★

Najumiyas Shoping Centre

Dealers In Textile & Ready Made Garment

No. 98, Beliatta Road,
Dickwella

WITH BEST COMPLIMENTS
FROM

Karshan Trade Centre

Specialist in Radio, Video and
T. V Spares

**88/18, FIRST CROSS STREET,
COLOMBO - 11.**

WITH BEST COMPLIMENTS
FROM

M. B. Swampillai & Co.

No. 14, Wolfendhal Street,
COLOMBO-13.

With Best Compliments
From

EVERX

247-Duplication Road,
KOLPITIYA.
T. P. 576378

Expressio unius est exclusio aiterius — Expression of one thing is the exclusion of another.

WITH BEST COMPLIMENTS FROM

Brilliant - Bonn Institute,

136, Sangamitha Mawatha,

COLOMBO 13.

With Best Compliments From

Lanka Pen Company

Estd 1960

ලංකා පෑන් සමාගම

லங்கா பேனா கம்பனி

Importers of Ball Point Pens, Fountain Pens, Stationery Items,
All Types of Ball Point Pen Refills & Toys.

Sole Agents For: Paper Queen, Doctor & Omega, Writing Instrument and Office Stationery Items.

44, Second Cross Street,
COLOMBO - 11.

Phone : 24921 Fax: 448636

The Kumaran Press, 201, Dam Street, Colombo-12.

With Best Compliments

from



LAK POHORA

A GREAT SOURCE OF NOURISHMENT TO CROPS

AND

PROSPERITY TO FARMERS

LAK BIMATA - LAK POHORA

CEYLON FERTILIZER CORPORATION,

294, GALLE ROAD,

COLOMBO 3. Tele : 574100

Actio ex delictio — An action arising out of fault or mis conduct.

அகல்வாயில்

படித்து முடித்து விட்டீர்களா?

'என்ன பக்கங்களைக் காணோமே!' என்கிறீர்கள் அப்படித்தானே? அது ஒரு பெரிய கதை. 'மே' மாதம் முதற்தேதியன்றே கட்டுரைகள் தருமாறு வேண்டுகோள் விடுத்தோம். நீதியரசர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள் அனைவருமே வேலைப்பழு மிக்கவர்கள். அடிக்கடி தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தோம். அச்சிடுவதற்கென அச்சகத்துக்குக் கொடுத்த பின்கூடக் கட்டுரைகள் கிடைத்தன. கடைசிநேரக் கட்டுரைகளும் இதிலே உண்டு. இதனால் பக்கமிட்டு அச்சிடமுடியவில்லை.

'எழுத்துப் பிழைகள்.. ...?' என்று இழுக்கின்றீர்களா? 'ஒப்பு நோக்குதல்' ஒருகலை. அந்தக் கலையைக் கற்று முடிப்பதற்குள் புத்தகம் அச்சிடப்பட்டுவிட்டது–அவ்வளவுதான்

இம்முரசு முழுமைபெற உதவி, ஒத்தாசைகள் புரிந்தவர்கள் பலர்.

* தேவையான சகலஆலோசனைகளையும், ஆற்றுப்படுத்தல்களையும் வழங்கினார்கள் விரிவுரையாளர்கள்; திருமதி: தளையசிங்கம், திரு: கா. மகாலிங்கசிவம், திரு: ஆர். சிவகுருநாதன் ஆகியோர்.
* ஆக்கங்களைத் தந்துதவினார்கள் நீதியரசர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள், மன்ற அங்கத்தினர்கள்.
* நேர்முகங்கள் தந்தார்கள்:
  இளைப்பாறிய சட்டமா அதிபர், திரு. சுனில் டி சில்வா அவர்களும்;
  திரு. மோதிலால் நேரு (சனாதிபதி சட்டத்தரணி) அவர்களும்.
* 'சட்டம் ஒரு இருட்டறை அங்கு விளக்கேற்றுவோர் சட்டத்தரணிகள்' என்ற கருத்தினை ஓவியமாக்கி அட்டையை ஒளிரச்செய்துள்ளார். எமது கல்லூரி, இடை நிலை ஆண்டு மாணவர் ஜனரஞ்சன.
* விளம்பரங்கள் தந்தார்கள் வர்த்தகப் பிரமுகர்கள்.
* நிதியுதவி வழங்கினார்கள் சட்டத் தரணிகளும், நலன் விரும்பிகளும்.
* அவ்வப்போது தேவையான உதவி, ஒத்தாசைகள் புரிந்து தோளோடு தோள் நின்றனர் மன்ற உறுப்பினர்கள்.
* நீதிமுரசுக்கு நிறை உருவமளித்தனர் குமரன் அச்சக உரிமையாளர், முகாமையாளர், தொழிலாளச் சகோதரர்கள்-

அனைவருக்கும் சட்டமாணவர் தமிழ் மன்றத்தின் மனநிறை நன்றிகள் உரித்தாகுக.

'என்ன... என்னை மறந்துவிட்டாயா?' என்கிறீர்களா—இல்லவே இல்லை, நடுநின்று நீங்கள் நல்கும் விமரிசனங்கள் எமக்குத் தேவை—

நன்றி, சென்று வாருங்கள், உங்கள் மீள்வரவுக்காய் நுழைவாயில் என்றுமே திறந்து தான் இருக்கும்.

— மலராசிரியர்

With Best Compliments From:-

V.MANICKAM & BROTHER

Importers, General Merchants & Commission Agents

34, 4th Cross Street,
Colombo-11.

28, 4th Cross Street,
Colombo -11.